# ஆருட நூல்



தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

**சரசுவதி மகால் நூலகம்**

தஞ்சாவூர்.

தஞ்சாவூர் சரசுவதி மகால் வெளியீட்டு எண் : 488

श्रीः

नारायणसिद्धप्रणीतम्

# प्रश्न तन्त्रम्

நாராயணஸித்தர்

என்பவரால் இயற்றப்பட்ட

# ஆரூட நூல்

பதிப்பாசிரியர்:

**சு. சுவாமிநாத சாஸ்த்ரி,** சிரோமணி

ஒய்வு பெற்ற வடமொழிப் பேராசிரியர்

அரசர் கல்லூரி, திருவையாறு.

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

**சரசுவதி மகால் நூலகம்**

தஞ்சாவூர்.

2006 விலை : ரூ. 80-00

# நூற்பதிப்பு விளக்கக் குறிப்பு


| | |
|---|---|
| நூற்பெயர் | : ஆரூடநூல் |
| பதிப்பாசிரியர் | : சு. சுவாமிநாத சாஸ்த்ரி |
| வெளியிடுபவர் | : இயக்குநர், சரசுவதி மகால் நூலகம் |
| வெளியீட்டு எண் | : 488 |
| மொழி | : சம்ஸ்கிருதம் - தமிழ் |
| பதிப்பு | : முதற் பதிப்பு |
| வெளியீட்டு நாள் | : 2006 |
| தாள் | : TNPL 18.6 kgs. |
| நூல் அளவு | : 21 x 14 c.m. |
| பக்கங்கள் | : 220 |
| படிகள் | : 1000 |
| எழுத்து | : 16 & 12 |
| அச்சிட்டோர் | : சரசுவதி மகால் நூலக அச்சகம் |
| புத்தகக்கட்டு | : மெலிந்த அட்டை |
| பொருள் | : சோதிடம் |
| விலை | : ரூ. 80- 00 |

# வெளியீட்டாளர் முகவுரை

உலகின் அறிவுநூல் களஞ்சிய மையங்களில் ஒன்றாகவும், ஒப்புயர்வற்றதாகவும் திகழுகின்ற சிறப்புடைய நிறுவனம் சரசுவதி மகால் நூலகம் ஆகும்.

பல மொழிகளைச் சார்ந்த ஏராளமான அரிய பனையோலைச் சுவடிகள், காகிதச் சுவடிகள், பல மொழித்துறைகள், அருங்காட்சியகம் முதலியவற்றைத் தன்னகத்தே கொண்டு, எண்ணற்ற ஆய்வாளர்களையும், வாசகர்களையும், சுற்றுலாப் பயணிகளையும் எட்டுத் திக்கிலிருந்தும் தன் பக்கம் திரும்பிப் பார்க்க வைத்து அறிவுச் செல்வத்தை அள்ளித் தருவது இந்நூலகம்.

இங்கு, பாரதி கூறுமாப்போல் 'செப்பு மொழி பதினெட்டுடையாள் எனின்; சிந்தனை ஒன்றுடையாள்' என பன்மொழிச் சுவடிகள் பல்வேறு கருத்துக்களைக் காட்டும் வண்ணம் மிளிர்கின்றன. சமயம், தத்துவம், இலக்கியம், இலக்கணம், நாட்டியம், இசை, மருத்துவம், சோதிடம், மந்திரசாத்திரம், சிற்பக்கலை முதலிய பொருண்மை கூறும் சுவடிகள் உள்ளன.

நம் நூலகத்தில் சமஸ்கிருதப்பிரிவில் உள்ள சோதிட நூல்களில் **B. 4313, D. 11516** என்ற எண்கொண்ட சுவடியை அடிப்படையாகக் கொண்டு ஆரூடநூல் எனும் தலைப்பில் பதிப்பிக்கப்பட்டிருக்கிறது. இந்நூல் வானவியல் சாத்திரத்தைப்பற்றிக் கூறுவது. ஆரியபட்டர் இத்துறையில் மூழ்கி அறிவியல் முத்துக்களைக் கொணர்ந்து வானசாத்திரத்தைப்படைத்து உலகுக்கு வழங்கினார். ஆரியபட்டருக்குப்பின் வந்தவரும், சூரியன் முதலான பதினெண்மரும் ஒருவரான வராகமிகிரர் என்பார் சோதிட நூல்களை நன்காராய்ந்து அவைகளில் சாரமானவைகளைத் தேர்ந்தெடுத்து முறைப்படுத்தி பஞ்சசிந்தாந்திகா என்னும் கணித நூலையும், ப்ருகத்ஜாதகம், ப்ருகத் ஸம்ஹிதை,

ப்ருகத்யாத்திரை முதலான சோதிட நூல்களையும் இயற்றியுள்ளார்.

இந்நூலை திருவையாறு அரசர் கல்லூரி ஓய்வுபெற்ற வடமொழிப் பேராசிரியர் சிரோமணி திரு. சு. சுவாமிநாத சாஸ்திரிகள் அவர்கள் அரிதின் முயன்று பல நூல்களுடன் ஒப்பிட்டு பதிப்பித்து உள்ளார். இந்நூலின் மன்னர்கள் அண்டை நாடுகளின் மேல் படையெடுப்பது, தலைநகரை முற்றுகை யிடுதல், போரிடுதல், பகை அரசனை போரில் வென்று, அவனது நாட்டைக் கைப்பற்றுதல் போன்றவை விரிவாக விளக்கப்பட்டுள்ளது. இதற்காக மன்னர்கள் கேட்ட ஆருடத் தத்துவங்கள் கூறப்பட்டுள்ளன.

இந்நூலின் பதிப்பாசிரியர் இந்நூலுக்கு ஆதாரமாக எடுத்துக்கொண்ட பிருகத்ஜாதகம், தாஜிக நூல் ஆகியவற்றை ஒப்பிட்டு, அவற்றில் உள்ள பாக்களை இணைத்து தமிழில் மொழிபெயர்த்து பதிப்பித்துள்ளது பாராட்டுக்குரியது. ஆருடம் சொல்வதைத் தொழிலாகக் கொண்டவர்களும், ஆரூடம் கற்க விழைவோரும் இந்நூலால் பெரிதும் பயனுருவர் என்பதில் ஐயமில்லை.

இந்நூல் வெளிவர நிதி உதவி நல்கிய நடுவண் அரசுக்கும், நிருவாக அலுவலர் மற்றும் வெளியீட்டு மேலாளர் (பொறுப்பு) திரு. சாமி. சிவஞானம் அவர்களுக்கும், இந்நூல் கணினி அச்சில் வெளிவர கணினிப் பிரிவில் பணிபுரியும் அனைவருக்கும் என் இனிய பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**சா. விஜயராஜ் குமார்**, இ. ஆ. ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும்
இயக்குநர்,
சரசுவதி மகால் நூலகம்.

தஞ்சாவூர்
**4 - 9 - 2006**

# முகவுரை

*தொட்டனைத்தூறும் மணற்கேணி -மாந்தர்க்கு*
*கற்றனைத்து ஊறும் அறிவு* (திருக்குறள்)

நம் முன்னோர்களான பேரறிஞர்கள் தங்களது தவவலிமையினால், விண்வெளியின்கண்பல ஆயிரம் மைல்கட் கப்பால் விளங்கும் இராசி மண்டலங்களையும், கதிரவன் முதலான கோள்களையும், அச்விநீ முதலான விண்மீன் களையும் கண்டார்கள். ஆரியபட்டர் என்கிற கணித மேதை, முன்னோர்களால் அறிந்து கொள்ளப்பட்ட, இராசி மண்டலங் களின், இடைவெளிகளையும், சஞ்சாரம் முதலானவை களையும் ஆராய்ந்து அயனம் முதல் திதிகள் வரையிலான கால அளவுகளை நிர்ணயித்துச் சிறந்ததொரு வானசாத்திரத்தைப் (Astronomy) படைத்து உலகுக்கு வழங்கினார். இவ்வரிய வானசாத்திரத்தின் வாயிலாக அறிந்துகொள்ளப்பட்ட மேடம் முதலான இராசி மண்டலங்களையும், அவைகட்குரிய செவ்வாய் முதலான கோள்களையும், அச்வினீ முதலான விண்மீன்களையும் இராசிமண்டலங்களில் நிற்கும் கோள்களின் சேர்க்கை, பார்வை, நட்பு, பகை, உச்சநிலை, நீசநிலை முதலானவைகளையும் நன்கு ஆராய்ந்து, அவைகட்கும் உலகில் வாழும் மனிதர்கள் முதல் கால்நடைகள், பறவைகள் வரையிலான ஜீவராசிகள் அனைத்துக்கும் உள்ள தொடர்பையும் அதனால் ஏற்படும் நன்மை தீமைகளையும் ஆராய்ந்து சூரியன் முதலான பதினெண்மர் பல சிறந்த சோதிட நூல்களை இயற்றியுள்ளார்கள். அச்சிறந்த சோதிட நூல்கள், கணித ஸ்கந்தம், ஜாதகஸ்கந்தம், சாகாஸ்கந்தம் என மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தன என்று தெரிகிறது. இம்மூன்றனுள் சாகாஸ்கந்தம் என்னும் நூலில் ப்ரச்ன (ஆரூட) காலத்தில் உதயமான லக்னத்தையும் அதை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்ட இராசி சக்கரத்தில் ஆங்காங்கே நிற்கும் கோள்களின் பலாபலங்களையும் இராசி மண்டலங் களில் ஒன்றுக்கு மேற்பட்ட கோள்கள் நிற்பதாலும், பார்வை முதலானவைகளாலும் ஏற்படும் சுபாசுப பலன்கள் விரிவாகக் கூறப்பட்டிருக்கின்றன. ஆரியபட்டருக்குப்பின் வந்தவரும் முன்கூறப்பட்ட சூரியன் முதலான பதினெண்மருள் ஒருவரான வராஹமிஹிரர் என்பார், சூரியன் முதலான பதினெண்மர்களால்

இயற்றப்பட்ட சோதிடநூல்களை நன்காராய்ந்து அவைகளுள் சாரமானவற்றைத் தேர்ந்தெடுத்து முறைப்படுத்தி, பஞ்சஸித்தாந்திகா என்னும் கணித நூலையும், பிருஹத் ஜாதகம், பிருஹத் ஸம்ஹிதை, பிருஹத் யாத்திரை முதலான சோதிட நூல்களையும் இயற்றி யுள்ளார். அவற்றினுள் பிருஹத்யாத்திரை என்னும் நூலில் இராசிபேதம் முதலானவைகளும் சிறப்பாக ஆருடம் சம்பந்தப்பட்டவைகளும் விரிவாகக் கூறப் பட்டிருக்கிறது. இது போன்று யவனர்களும் இயற்றி யிருக்கும் தாஜிகம் என்னும் நூலில் பிரச்னம் (ஆருடம்) சம்பந்தப்பட்ட விஷயங்கள் விரிவாகக் கூறப்பட்டிருப்பதைக் காணலாம். இந்நூலாசிரியரின் முதல் அத்தியாயம் பொதுவிதி, இரண்டாவது பாட்டிலிருந்து முகுந்தர் என்பாரும் ஆருடம் சம்பந்தப்பட்ட நூலை இயற்றியுள்ளார் எனத்தெரிகிறது. ஆனால் அந்நூல் கிடைக்கப்பெறவில்லை.

சாத்திரங்களைக் கற்றவரும் சிறந்த வித்வானும், யதுநாதனான ஸ்ரீகிருஷ்ணபகவானிடம் மிகுந்த பக்தியுடைய வருமான ஸ்ரீபிரும்மதாஸர் என்பார் இந்நூலாசிரியரின் தந்தையார் என்றும், இவரின் பெயர் நாராயாண ஸித்தர் என்றும் இவர் இந்நூலை, வராஹர், யவனர்களான தாஜிகர், முகுந்தர் இவர்களது நூல்களை நன்கு ஆராய்ந்து இயற்றியிருக்கிறார் என்றும் தெரியவருகிறது.

இந்நூல் தஞ்சை சரஸ்வதி மஹால் நூல்நிலையத்தில் சேமித்து வைக்கப்பட்டிருக்கிறதும், ஸம்ஸ்க்ருதப் பிரிவிலுள்ள சோதிட நூல்களுள் B.4313- D.11516 என்ற இலக்கங்களைக் கொண்டதுமான சுவடியை ஆதாரமாகக் கொண்டு பதிப்பிக்கப் பட்டிருக் கிறது. இச்சுவடியில் ஆருடம் சம்பந்தப்பட்ட விஷயங் களுடன் ஆருடத்துக்கு சம்பந்தமில்லாத பலவிஷயங் களும் எழுதப்பட்டிருக் கின்றன. இருப்பினும் இந்நூல் இச்சுவடியின் முதற் பகுதியில் உள்ளதும் ஆருட நூலுக்கு சம்பந்தப்பட்டதுமான பாக்களைமட்டில் தேர்ந்தெடுத்து, வராஹர், தாஜிகர் இவர்களது நூல்களையும் ஒப்பிட்டுப்பார்த்து முறைப்படி எப்படி அமைக்கப்பட வேண்டுமோ அவ்வாறு அமைத்து உருவாக்கப்

பட்டிருக்கிறது. சிறப்பாக இந்நூலாசிரியர் பெரும்பாலும் தாஜிகர் எழுதியிருக்கும் நூலையே பின்பற்றி இந்நூலை இயற்றியிருக்கிறார் என்பதை ஆங்காங்கே தாஜிக நூலில் கூறப்பட்டுள்ள யோகங்களையும், ராசிகளின் உருவம் முதலான வைகளையும், கருத்துக்களையும், ஏற்று பாக்களை இயற்றி யிருப்பதுடன் அந்நூலிலுள்ள பாக்களின் சில சொற்றொடர்களை இந்நூலிலுள்ள பாக்களில் சேர்ந்து அமைத்திருப்பதிலிருந்தும் அறிய முடிகிறது. இந்நூலுக்கு ஆதாரமான B.4313- D.11516 என்ற இலக்கங்களைக் கொண்ட சுவடியின் தலைப்பில் "வைஷ்ணவப்ரச்ன சாஸ்த்திரம்" என்றும், "முகூர்த்த சூடாமணி" என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்நூலின் முதல் அத்தியாயம் 31வது பாட்டிலிருந்து இவர் இந்நூலுக்கு இட்ட பெயர் "வைபவ சாஸ்த்திரம்" என்றும் தெரிய வருகிறது.

त्रैलोक्य नाथेन जनार्दनेन
स्वयं दिनेशाय च सर्वमुक्तम् ।
मया दिनेशाच्च गृहीतमेत-
त्तस्मादिदं वैभवसंज्ञकं स्यात् ॥ (प्र.अ.अ.श्लो.3)

மூவுலகுக்கும் நாதனான ஜனார்த்தனன் (ஸ்ரீமந்நாராயணன்) சூரியனின் பொருட்டு ஆரூடம் சம்பந்தப் பட்டவைகளனைத்தையும் முழுமையாக உபதேசித்தார். நான் சூரியனிடமிருந்து இச்சாஸ்த்திரத்தை அறிந்துகொண்டேன். ஆதலினால் இந்நூல் வைபவ சாஸ்த்திரம் என்னும் பெயருடைய தாகும் என்பது கருத்து. இருப்பினும் இந்நூல் ஆரூடம் சம்பந்தப் பட்டவைகளையே கூறுவதால் இந்நூலுக்கு "ப்ரச்னதந்த்ரம்" என ஸம்ஸ்கிருதத்திலும், ஆரூடநூல் எனத் தமிழிலும் தலைப்புக் கொடுப்பதே பொருத்தமாக இருக்கும் என்பது என்னுடைய கருத்து.

நாட்டை மன்னர்கள் ஆண்ட காலத்தில், மன்னர்கள் அண்டை நாட்டின் மேல் படையெடுப்பதும், தலைநகரைச் சுற்றிலும் முற்றுகையிடுவதும், போரிடுவதும், பகையரசனை போரில் வென்று அவனது நாட்டைக் கைப்பற்றுவதும், திக்விஜயம் செய்வதும், மேலும் பல நாடுகளைக் கைப்பற்றுவதும்,

பொருள்களைக் கவருவதும் வழக்கமாதலால், இந்நூலில் சிறப்பாக முற்றுகையிடுதல் முதலானவைகளைப்பற்றி விரிவாகக் கூறியுள்ளாராயினும், தற்காலத்தில் மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்டவர்களால், குடியாட்சி முறைதான் நடைபெறுவதால், கிராமப் பஞ்சாயத்து முதல் நாடாளுமன்றம் வரையிலான பதவி கட்குத்தேர்தல் நடக்கும்பொழுது அதில் பங்குபெறும் பலதிறப் பட்ட கட்சிக்காரர்கள் தேர்தலில் வெற்றிபெற வாய்ப்புண்டா என்பது முதலானவைகளை அறிய விரும்பி ஆரூடம் கேட்கப் பட்டால், அவர்கள் ஆரூடம் கேட்கப்பட்ட நேரத்தை அடிப்படையாகக்கொண்டு முன்பு கூறுப்பட்டதுபோல் இராசி சக்கரத்து இராசி மண்டலங்களில் நிற்கும் கோள்களின் பலாபலங்களையறிந்து பலன் சொல்வதற்கும், திருட்டுபோன பொருள், உடன்பிறப்பு, தாய், தந்தையர்கள், மக்கட்பேறு, தொழில், பயம் முதலானவைகளைப்பற்றியும் கூறமுடியும். மேலும், இந்நூலாசிரியர் இந்நூலுக்காதாரமாக எடுத்துக்கொண்ட தாகக் கூறப் பட்டுள்ள பிருஹத்ஜாதகம், தாஜிகநூல் இவைகளையும் ஒப்பிட்டுப்பார்த்து, ஆங்காங்கே தாஜிக நூல் முதலான வைகளில் உள்ள பாக்களையும் இணைத்து, தமிழ் மக்கள் அனைவரும் எளிதில் கற்பதற்கேற்றவாறு மூலம் வட மொழியிலிருந்தாலும், தமிழில் மொழிபெயர்க்கப் பட்டு பதிக்கப்பட்டிருப்பதால், ஆரூடம் சொல்வதையே தொழிலாகக் கொண்டவர்களும், கற்க விரும்புவோரும் இந்நூலைப் பெற்று பயனடைவார்கள் என்பதில் ஐயமில்லை.

இந்நூலைப் பதிப்பிப்பதற்கு ஆணையிட்டருளிய உயர்திரு மு. சதாசிவம் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தஞ்சாவூர்

பதிப்பாசிரியர்,

**S. சுவாமிநாத சாஸ்த்ரி.**

# प्रश्नशास्त्रम्

(गुसादि नृपति नारायणसिद्धसप्रणीतम् )

## सामान्यविधिः

# ஆரூட நூல்

मेषादिद्वादशराशीनां स्वरूपस्वभावादयः (यथा ताजिकम्)

## मेषराशिः

पुमांचरोऽग्निः सुदृढश्च तुष्पाद्रत्कोष्णपित्तोऽतिखोऽद्रिरुग्रः ।
पीतो दिनं प्राग्विषमोदयोऽल्पसङ्गप्रजोरुक्षनृपः समोऽ(अ)जः ॥

**अर्थः** -मेषराशि अयंपुरुषराशिः, चरसंज्ञकः(चरराशिः) अग्निराशिः - दृढाङ्गः चतुष्पात् रक्तवर्णः, उष्णस्वभावः, पित्तस्वभावः, महाशब्दः, पर्वतचारी, क्रूरः पीतवर्णः, दिवाबली, पूर्वदिक्स्वामी, विषमोदयः, स्वल्प्पस्त्रीसङ्गः, स्वल्पप्रजश्च, कान्तिरहितः, क्षत्रियवर्णः, समाङ्गः, अजः ॥

## பொதுவிதிகள்

*மேஷராசி முதலான 12 ராசிகள் உருவம், இயல்பு முதலியவைகளை அறிந்துகொள்ளுதல்*

## மேஷராசி

பொருள் : மேஷராசி : - ஆண் ராசி - சரராசி என்றழைக்கப்படுவது. நெருப்பின் தன்மையைக் கொண்டது. உறுதியான உடலமைப்பைக் கொண்டது. நாற்கால் பிராணி. சிவந்த நிறமுடையது. உஷ்ண

ஸ்வபாவமுடையது. பித்தஸ்வபாவமுடையது. (பித்த தாதுவை அதிகம் உண்டுபண்ணுவது) மிக அதிக அளவில் ஒலியையுடையது. (ஒலியில் விருப்பங் கொண்டது) மலைகளில் ஸஞ்சரிக்கும் ஸ்வபாவ முடையது. க்ரூரன் எனப்பெயர் கொண்டது. மஞ்சள் நிறங்கொண்டது. பகற்பொழுதில் பலம் பெற்றது. கிழக்குதிசைக்கதிபதி. விஷமராசி எனப்பெயர் கொண்டது. பெண்களிடத்தில் குறைந்த அளவு தொடர்புடையது. (பெண்களை அதிகம் விரும்பும் தன்மையற்றது). குறைந்த அளவு மக்கட்பேற்றை யுடையது. ஒளியற்றது. அரசவகுப்பைச் சேர்ந்தது. ஸமமான உடலமைப்பையுடையது. ஆட்டின் வடிவமுடையது. காலபுருஷனுடைய தலையாக அமையப்பெற்றது.

யவனேச்வரர் போன்ற பெரியோர்கள், இந்த ராசியை குகை - திருடன் வசிக்குமிடம் - உஷ்ணமான பூமி - இரும்பு செம்பு போன்ற தாதுவர்க்கங்கள் உண்டாகுமிடம். பொற்சுரங்கம். இரத்னம் விளையும் நிலம் இவைகளில் சஞ்சரிக்கக்கூடியது என்று கூறியுள்ளார்கள்.

குறிப்பு: மேஷம் முதல் 12 ராசிகளுடைய ஸ்வரூபம்-குணம் இவைகளைக் கூறியிருப்பது. இவ்விராசிகளை, சந்திர லக்னமாகவோ அல்லது ஜன்ம லக்னமாகவோ கொண்டு பிறந்தவர்களின் உருவம் முதலியவற்றை அறிந்துகொள்வதற்காகவே. மேலும் ப்ரச்ன காலத்தில் அமையும் உதய லக்னம் இவ்விராசிகளில் எவையேனும் ஒன்று அமையுமானால் அதைக் கொண்டு திருட்டுபோனபொருள் பற்றியும், மற்றும் யாத்திரை, போர், திருமணம் போன்ற விஷயங்களைப் பற்றி ப்ரச்னம் கேட்கும்பொழுதும், இவ்விராசிகளின் உதயமான லக்னத்தைக்கொண்டு பலன்களைச்

சொல்லமுடியும். இது போன்று மற்ற ராசிகளுக்குக் கூறப்பட்டிருப்பதையும் தெரிந்துகொண்டு பலன் கூறவேண்டும்.

❁❁❁❁

## वृषभराशिः

वृषः स्थिरः स्त्रीक्षिति शीतरूक्षोयाम्येत् सुभूर्वायु निशा चतुष्पात् ।
श्वेतोऽतिशब्दो विषमोदयश्च मध्यप्रजासङ्ग शुभोऽपि वैश्यः ॥ 2

**अर्थः** – वृषभराशिः अयं स्थिरसंज्ञकः स्त्रीराशिः – भूमिराशिः – शीतलस्वभावः – कान्तिरहितः – दक्षिणदिक्स्वामी – शोभनभूमिसञ्चारस्वभावः – वायुप्रकृतिः – रात्रिबली – चतुष्पात् – शुभ्रवर्णः – महाशब्दः – विषमोदयः – मध्यमस्त्रीसङ्गः – शुभः – वैश्यवर्णः श्लथाङ्गः ॥

## இடபராசி

பொருள் : வ்ருஷபம் என்னும் இவ்விராசி ஸ்திரராசி என்று கூறப்படுவது. ஸ்திரீ ராசி - பூமி ராசி - குளிர்ந்த ஸ்வபாவத்தையுடையது. ஒளியற்றது - தெற்கு திசைக்கதிபதி - சிறந்த பூமியில் சஞ்சாரம் செய்வது. வாயுதாதுவின் குணத்தையுடையது. இரவில் பலங் கொண்டது. நாற்கால்பிராணி - வெண்மை நிறம் கொண்டது. அதிகமான ஒலியையுடையது. விஷம உதயமானது நடுத்தர வகுப்பைச் சேர்ந்த பெண்களுடன் தொடர்புடையது. சுபமானது - வியாபாரம் செய்யும் தொழிலையுடையது. வைசிய இனத்தைச் சேர்ந்தது. (உறுதியான உடலமைப்பில்லாதது)

யவநர் :- காளையின் வடிவமுள்ளது. பிரசித்தி பெற்றது. கால புருஷனுடைய கழுத்தாகவும் அமையப் பெற்றது. மலை, காடு (யானைகள் வசிக்குமிடம்) பசுக்கள் மேய்கின்ற நிலம் - வேளாண்மைத் தொழிலில் ஈடுபடுபவர்கள் வசிக்குமிடம் இவைகளில் ஸஞ்சரிக்கக் கூடியது.

****

## मिथुनराशिः

प्रत्यक्समीरः शुकभा द्विपान्ना द्वन्द्वो द्विमूर्तिर्विषमोदयोष्णः ।
मध्यप्रजासङ्गवनस्य शूद्रो दीर्घस्वनः स्निग्धद्विनेट्तथोग्रः ॥ 3

**अर्थः** - मिथुनराशिः अयं पश्चिमदिक्स्वामी - वायुराशिः - शुकवत् हरितकान्तिः - द्विपात् - पुरुषराशिः - चरस्थिरस्वभावात्मकः - (पूर्वार्धेस्थिरस्वभावः उत्तरार्धे चरस्वभावः) विषमोदयः उष्णस्वभावः मध्यमजः मध्यमस्त्रीसङ्गश्च - वनचारी - चतुर्थवर्णः दीर्घस्वनः (उच्चैः शब्दोच्चारणस्वभावः) चिक्कणकान्तियुक्तः - दिने बलवान् - क्रूरस्वभावः शलभाङ्गः ॥

### மிதுனராசி

பொருள் : மிதுனம் என்னும் இந்த ராசி : - மேற்கு திசைக்கதிபதி - வாயுதாதுவின் குணத்தையுடையவன் - பச்சைக்கிளியினுடையது போல் பச்சைநிறம் கொண்டது. இரண்டு கால்களையுடையது. புருஷராசி - ஆண்-பெண் இரண்டும் சேர்ந்த உருவத்தை உடையது. சரம்-ஸ்திரம் என்னும் இரண்டு ஸ்வபாவங்களை உடையது (அதிலும் முன்பாதி ஸ்திரஸ்வபாவமும்

பின்பாதி சரஸ்வபாவமும் கொண்டது). விஷமராசி - உஷ்ணஸ்வபாவமுடையது. நடுத்தர வகுப்பைச் சேர்ந்தது. நடுத்தர வகுப்பைச் சேர்ந்த பெண்களை மணக்கும் இயல்புடையது. காட்டில் திரியும் ஸ்வபாவமுடையது. நான்காம் வருணத்தையுடையது. மிகவும் உரக்கக்கூச்சலிடும் தன்மையைக் கொண்டது. பசுமையானது (அழகுடையது) - பகலில் பலம் கொண்டது. கொடூரமான ஸ்வபாவமுடையது - உறுதியற்ற உடலமைப்பைக்கொண்டது.

யவனர் போன்ற பேரறிஞர்கள் :- மிதுனம் என்னும் இராசி - கதையையுடைய ஆணும், வீணையைக் கொண்ட பெண்ணும் சேர்ந்த ஆண் பெண் சேர்ந்த வடிவமாயுள்ளது. காலபுருஷனுடைய தோள்பட்டையாக அமையப்பெற்ற நாட்டியமாடுகிறவன். பாடுகிறவன் - கைத்தொழில் செய்பவன் - பெண்கள் - இவர்கள் வசிக்குமிடம், விளையாடும் ஸ்தலம் - சயனகிருஹம் (Bed room) - சூதாடுமிடம் ஆகிய இவைகளில் சஞ்சரிக்கும் இயல்புடையது என்பர்.

✿✿✿✿

## कर्कटकराशिः

बहुप्रजासङ्गपदः कुलीरश्चरोऽङ्गना पाटलहीनशब्दः ।
शुभः कफी स्निग्धजलाम्बुचारी समोदयो विप्रनिशोत्तरेशः ॥

**अर्थः** – कर्कटकराशिः कुलीरसंज्ञकः – अयं बहुप्रजः, बहुस्त्रीसङ्गः –बहुचरणः –चरसंज्ञकः (चरराशिः) स्त्रीराशिः – श्वेतमिश्रितरक्तवर्णः – हीनशब्दः अथवा निश्शब्दः – शुभः – कफप्रकृतिः – स्निग्धः – जलराशिः जलचरः – समोदयः –ब्राह्मणवर्णः – रात्रीबली – उत्तरदिक्पतिः श्लभाङ्गः ॥

## கற்கடகராசி

பொருள் : கற்கடகம் என்னும் இந்த ராசி குளீரன் என்னும் பெயருடையது. சரராசி மிக அதிக அளவில் மக்களை (குழந்தைகளை)யுடையது. பல பெண்களுடன் தொடர்புடையது. அதிகமான கால்களையுடையது. பெண்ராசி. வெண்சிவப்பு நிறம் கொண்டது. தாழ்ந்த குரலில் பேசும் இயல்புடையது. அல்லது ஒலியற்றது. சுபமானது (நன்மை விளைவிப்பது). கபதாதுவை யுடையது. பசுமையுடையது - ஜலராசி - தண்ணீரில் ஸஞ்சரிப்பது. ஸமமான உதயத்தையுடையது. பிராம்மண வகுப்பைச் சேர்ந்தது. இரவில் பலமுடையது. வடக்கு திசைக்கதிபதி. உறுதியற்ற உடலமைப்பைக்கொண்டது.

யவனேச்வரர் முதலானோர் :- நண்டின் வடிவ முடையது. சதுப்பு நிலங்களில் (கடல்- ஆறு - குளம் - வயல் இவைகளின் கரையோரங்களில் உள்ள தண்ணீர் வடிந்த இடங்களிலுள்ள சிறு சிறு வளைகளில்) வசிப்பது. கோயில் - தாசிகள் வீடு அழகுமிக்க விளையாடுமிடம் இவைகளில் சஞ்சாரம் செய்யக் கூடியது. (இந்த குறிப்பிட்ட இடங்களைக்கொண்டு கடகராசியில் பிறந்தவர்களின் குணத்தைக்கண்டுகொள்ள வேண்டும்). காலபுருஷனுடைய மார்பாக அமையப் பெற்றது.

❀❀❀

## सिंहराशिः

पुमान्स्थिरोऽग्निर्दिनपीतरूक्षः पित्तोष्णपूर्वेशदृढश्चतुष्पात् ।
समोदयो दीर्घरवोऽल्पसङ्गप्रजो हरिः शैलनृपोग्रधूम्रः ॥

**अर्थः** -हरिसंज्ञकः सिंह राशिः - अयं पुरुषः स्थिरराशिः अग्निराशिः दिवाबली - पीतवर्णः कान्तिरहितः -

पित्तप्रकृतिः – उष्णस्वभावः – पूर्वदिक्स्वामी – दृढांगः – चतुष्पात् – समोदयः – महाशब्दः – स्वल्पस्त्रीसंगः – स्वल्पप्रजः – पर्वतचारी – क्षत्रियवर्णः – क्रूरः धूम्रवर्णः (पीतमिश्रित धूम्रवर्णः)

❀❀❀

## *சிம்மராசி*

பொருள் : *சிங்கம் என்னும் பெயருடைய இந்த ராசி ஆண் ராசி - ஸ்திர - ராசி - நெருப்பானது. (அக்னிராசி) பகற்பொழுதில் பலம்பெற்றது. மஞ்சள் நிறங்கொண்டது. ஒளியற்றது. பித்ததாதுவையுடையது. உஷ்ணஸ்வபாவமுடையது. கிழக்கு திக்குக்கதிபதி. உறுதியான உடலமைப்பைக் கொண்டது. நாற்கால் பிராணி. ஸமமான உதயத்தையுடையது. மிக அதிகமான ஒலியையுடையது. அதிகம் பெண்களிடத்தில் தொடர்பற்றது. குறைந்த அளவே குழந்தைகளை யுடையது. மலைகளில் திரிவது. அரச இனத்தைச் சேர்ந்தது. கொடியது. மஞ்சள் கலந்த கருஞ்சிவப்பு நிறம் கொண்டது. (மஞ்சள் நிறங்கொண்டது என்று முன்பு கூறப்பட்டது. விடியற்காலையில் உதயமாகும்பொழுது இருக்கக்கூடியதாகக் கருத்தில் கொள்ளவேண்டுமெனத் தோன்றுகிறது)*

யவனர் :- *மலைப்பகுதியை வாசஸ்தலமாகவுடையது. மேலும் காடு, குகை (பிறர் பிரவேசிக்க முடியாத நிலையிலுள்ளவைகளாக இருத்தல் வேண்டும்) இவைகளில் நிரந்தரமாக இருப்பது. காலபுருஷனுடைய ஹ்ருதயமாக அமையப்பெற்றது.*

❀❀❀❀

## कन्याराशिः

पाण्डुर्द्विपात्स्त्री द्वितमुर्यमाशा निशा मरुच्छीतसमोदय क्ष्मा ।
कन्याऽर्धशब्दा शुभभूमिवैश्या रुक्षाल्पसंगप्रसवा शुभा च ॥

**अर्थः** - कन्याराशिः - इयं पिङ्गलवर्णा -द्विपात् - स्त्रीराशिः द्विस्वभावः - (चरस्थिरस्वभावात्मिका) दक्षिण दिक्स्वामिनी - रात्रिबला - वायुप्रकृतिः - शीतस्वभावा - समोदया - भूमिराशिः - अर्धशब्दा - शुभभूमिः - वैश्यवर्णा - कान्तिरहिता - अल्पसङ्गा - अल्पप्रसवा च - शुभा ॥

## கன்யாராசி

பொருள் : கன்யா என்னும் பெயருடைய இந்த இராசி மஞ்சள் நிறமுடையது. மனித வர்கத்தைச் சேர்ந்தது. பெண் ராசி. சரம் ஸ்திரம் என்னும் இரு ராசிகளின் தன்மையைக்கொண்டது. தெற்கு திக்குக்கு யஜமானீ. இரவில் பலங்கொண்டது. வாயுதாதுவைக் கொண்டது. குளிர்ந்த தன்மையையுடையது. ஸமமான உதயத்தையுடயது. பூமி ராசி. முழுமைபெறாத ஒலியையுடையது. (ஒலிக்கும்பொழுது பாதியிலேயே நின்றுவிடுவது. (சிலர் பேசும்பொழுது பாதி வார்த்தையை விழுங்கிவிடுவார்கள். முழுமையாகப் பேசும் இயல்புடையவர்களாக இருக்கமாட்டார்கள் என்பது குறிப்பாகத்தெரிகிறது). நல்ல நிலமுடையது. வைச்ய வகுப்பைச்சேர்ந்தது. ஒளியற்றது. ஒரு சிலரிடம் மட்டுமே தொடர்புடையது. குறைந்த அளவு குழந்தைகளை யுடையது. சுபமானது. (நல்லதைச் செய்வது).

யவனர் :- இந்த இராசி கையில் விளக்குடன் தண்ணீரில் ஓடத்திலிருக்கின்ற ஒரு கன்னிப்பெண்ணின் வடிவம் கொண்டது. இளம்புல் தரை, பெண்கள் வசிக்குமிடம் - படுக்கையறை - கைத்தொழில் செய்கின்ற இடம் இவைகளில் ஸஞ்சாரம் செய்யக்கூடியது. காலபுருஷனுடைய வயிறாக அமையப்பெற்றது.

## तुलाराशिः

पुमांश्चरश्चित्र समोदयोष्णः प्रत्यङ्मरुत्स्निग्धरवोनवन्यः ।
स्वल्पप्रजासङ्गमशूद्र उग्रस्तुलोद्युवीर्यो द्विपदः समानः ॥

**अर्थः** -तुलाराशिः - अयं पुरुषराशिः - चरराशिः नानाविधवर्णः समोदयः - उष्णस्वभावः पश्चिमदिक्स्वामी - वायुराशिः - स्निग्धः - निश्शब्दः -वनचारी - स्वल्पप्रजः - स्वल्पस्त्रीसङ्गश्च - शूद्रवर्णः - क्रूरः दिवाबली - द्विपात् - समांगः श्लभाङ्गः ॥

## துலாராசி

பொருள் : துலா என்னும் இந்த இராசி ஆண் ராசி - சரராசி - பலதிறப்பட்ட நிறங்களைக்கொண்டது. ஸமமான உதயத்தைப் பெற்றது. உஷ்ணமான தன்மை உடையது. மேற்கு திசைக்கு அதிபதி. வாயுதாதுவை உடையது. பசுமையுடையது. ஒளியற்றது. காட்டில் ஸஞ்சரிப்பது. குறைந்த அளவு குழந்தைகளையுடையது. பெண்களிடத்தில் அதிகம் தொடர்பில்லாதது. அல்லது அதிக அளவில் பெண்களிடத்தில் தொடர்பில்லாதது. நான்காவது வகுப்பைச் சேர்ந்தது. கொடூரமானது.

பகற்பொழுதில் பலம்பெற்றது. மனித இனத்தைச் சேர்ந்தது. ஒரே மாதிரியான (ஸமமான) உடலமைப்பைக் கொண்டது. உறுதியற்ற உடலமைப்பைக்கொண்டது.

யவனர் : துலாம் என்ற இராசி கையில் தராசுடன் நிற்கின்ற மனிதனின் வடிவமுள்ளது. வியாபாரம் செய்து சேமிக்கப்பட்ட சொத்து - கடைத்தெரு - கடை - நகர ரஸ்தாக்கள் - வியாபாரிகள் வசிக்கும் ஸ்தலம் - உயர்வான பிரதேசம் வயல் இவைகளில் ஸஞ்சரிக்கக் கூடியது. இது கால புருஷனுடைய இடை உந்தி மூத்திராசயம் இவைகளாக அமையப்பெற்றது.

❋❋❋

## वृश्चिकराशिः

स्थिरः सितः स्त्रीजलमुत्तरेशो निशा रवोनो बहुपात् कफी च ।
समोदयो वारिचरोऽतिसङ्गप्रजः शुभः स्निग्धतनुर्द्विजोऽलिः ॥

**अर्थः** – अलिसंज्ञकःवृश्चिकराशिः अयं स्थिरसंज्ञकः – शुभ्रवर्णः – स्त्रीराशिः – जलराशिः – उत्तरदिक्स्वामी – रात्रिबली – निश्शब्दः – बहुचरणः – कफप्रकृतिः – समोदयः जलचरः – बहुस्त्री सङ्गः – बहुप्रजश्च – शुभः स्निग्धतनुः – द्विजः शलभाङ्गः ॥

## விருச்சிகராசி

பொருள் : அலி என்னும் பெயருடைய விருச்சிக ராசி - ஸ்திரராசி - வெண்மை நிறங்கொண்டது - பெண்ராசி - ஜலராசி - வடக்குதிக்குக்கதிபதி - இரவில்

பலம் பெற்றது. ஒலியற்றது. பல கால்களையுடையது. கபதாதுவையுடையது. ஸமமான உதயத்தையுடையது. நீரில் ஸஞ்சரிப்பது. பல பெண்களுடன் தொடர்புடையது. அதிக அளவில் குழந்தைகளையுடையது. சுபமானது. பசுமையானது. (அழகுடையது). பிராம்மண வகுப்பைச் சேர்ந்தது. உறுதியற்ற உடலமைப்பைக் கொண்டது.

யவனர்: தேளின் வடிவமுள்ளது. குகை - ஓட்டை - படுகுழி - நச்சு மிகுந்த இடம் - கருங்கற்சுவர் - கரையான்புற்று - புழுக்கள் நிறைந்த இடம் - மலைப்பாம்பு போன்ற பாம்புகள் ஊரும் இடம் இவைகளில் ஸஞ்சரிக்கக்கூடியது. காலபுருஷனுடைய ஆண்குறி - குதம் இவைகளாக அமையப்பெற்றது.

## धनुर्राशिः

नास्वर्णभाः शैलसमोदयोऽति शब्दो दिनं प्राग्दृढरूक्षपीतः ।
राजोष्णपित्तोधनुरल्पसूतिसङ्गो द्विमूर्तिर्द्विपदोऽग्निरुग्रः ॥

**अर्थः** - धनुर्राशिः अयं - पुरुषराशिः - स्वर्णकान्तिः - पर्वतचारी- समोदयः महा शब्दः - दिवाबली - पूर्वदिक्स्वामी - दृढाङ्गः - कान्तिरहितः - पीतवर्णः - क्षत्रियवर्णः - उष्णस्वभावः - पित्तप्रकृतिः - स्वल्प-स्त्रीसङ्गः - स्वल्पप्रजश्च - चरस्थिरस्वभावात्मकः - द्विपात् (तत्रापिश् पूर्वार्धे द्विपदत्वं - उत्तरार्धे चतुष्पदत्वं ज्ञेयं) अग्निराशिः क्रूरः - द्विवर्णः (सुवर्ण वर्णः पीतवर्णश्च)॥

## தனுர் ராசி

பொருள் : தனுஸ் என்னும் இந்த இராசி ஆண் ராசி. பொன்நிறங்கொண்டது. மலைகளில் ஸஞ்சரிப்பது. ஸமமான உதயத்தையுடையது. மிக்க ஒலியையுடையது. பகற்பொழுதில் பலம் பெற்றது. கிழக்கு திசைக்கு அதிபதி. உறுதியான உடலமைப்பைக் கொண்டது. ஒளியற்றது. மஞ்சள் நிறமுடையது. அரச வகுப்பைச் சேர்ந்தது. உஷ்ணமான தன்மையையுடையது. பித்த தாதுவையுடையது. அதிகமான பெண்களிடத்தில் தொடர்பில்லாதது. (ஒரு சில பெண்களிடம் மட்டில் தொடர்புடையது) குறைந்த அளவு குழந்தைகளை யுடையது. சர ராசி ஸ்திர ராசி என்ற இரண்டு ராசிகளின் தன்மையையுடையது. இரண்டுகால் பிராணி (அதிலும் முன்பாகம் இரண்டு கால்களையும் பின்பாகம் நான்கு கால்களையுமுடையது) நெருப்பு ராசி. கொடியது. இரண்டுவிதமான நிறங்கொண்டது. (பொன்னிறம், மஞ்சள் நிறம்)

யவனர் : தனுஸ் என்ற இராசி முன்பாகத்தில் வில்லேந்திய மனிதனின் வடிவமும் - பின்பாதி (இடைக்குக்கீழ் பாகம்) குதிரையின் வடிவமுள்ளது. பலதிறப்பட்ட குதிரைகள் வசிக்குமிடம், மிக்க வலிவுடைய வில்லாளிகள் தங்குமிடம், யாகசாலை, வண்டிப்பேட்டை, குதிரைலாயம் இவைகளில் ஸஞ்சரிக்கக்கூடியது. இது காலபுருஷனுடைய இரு துடைகளாக அமையப்பெற்றது.

✿✿✿✿

## मकरराशिः

मृगश्चरः क्ष्माऽधरवोयमाशा स्त्रीपिङ्गरूक्षः शुभभूमिशीतः ।
स्वल्पप्रजासङ्गसमीररात्रिरादौ चतुष्पाद्विषमोदयो विट् ॥

**अर्थः** - मकरराशि संज्ञकः अयं - चरसंज्ञकः भूमिराशिः अर्धशब्दः - दक्षिणदिक्स्वामी - स्त्रीराशिः - पिङ्गलवर्णः - कान्तिरहितः - शुभः भूमिचारी - शीतलस्वभावः -स्वल्पस्त्रीसङ्गः स्वल्पप्रजश्च - वातप्रकृतिः रात्रिबली - आदौ चतुष्पात् - पूर्वार्धे चतुष्पदत्वं उत्तरार्धे मकरसंज्ञकमत्स्याकृतिः विषमोदयः वैश्यवर्णः ॥

### மகரராசி

பொருள் : மகரம் என்னும் பெயருடைய இந்த ராசி சரராசி என்னும் ஸம்ஞையை உடையது. பூமிராசி. முழுமை பெறாத ஒலியையுடையது. தென்திசைக்கு அதிபதி. பெண்ராசி. பிங்கள(வெண்சிவப்பு) நிறங் கொண்டது. கொடூரமானது. சுபமான தன்மையை யுடையது. ஒளியற்றது. நிலத்தில் ஸஞ்சரிப்பது. குளிர்ந்த தன்மையையுடையது. பலபெண்டிர்களுடன் இல்லாமல் ஒருசில பெண்களுடன் தொடர்புடையது. குறைந்த அளவு குழந்தைகளையுடையது. வாததாதுவை யுடையது. இரவில் பலம்பெற்றது. முன்பாதி நாற்கால் பிராணியின் வடிவமும் பிற்பகுதி மீனின் வடிவமும் கொண்டது. ஸமமில்லாத உதயத்தையுடையது. வைச்ய வகுப்பைச் சேர்ந்தது.

யவனர்: மகரராசி இடைக்கு மேல் மான் வடிவமும், இடைக்குக்கீழ் மகரம் என்னும் மீன் வடிவமுள்ளதாக அமைந்துள்ளது. ஆறு, குளம் முதலிய நீர்நிலைகளிலும், ஈர நைப்புள்ள மணல்பாங்கான இடம்(படுகை) பொந்து இவைகளில் ஸஞ்சரிக்கக் கூடியது. கால புருஷனுடைய இரு முழங்கால்களாகவும் அமையப்பெற்றது.

## कुम्भराशिः

कुम्भोऽपदो ना दिन मध्यसङ्गप्रसूःस्थिरः कर्बुरवन्यवायुः ।
स्निग्धोष्णखण्डस्वरतुल्यधातुः शूद्रः प्रतीची विषमोदयोग्रः ॥

**अर्थः** -कुम्भराशिसंज्ञकः- अयं चरणहीनः पुरुषराशिः - दिवाबली मध्यमस्त्रीसङ्गः - मध्यप्रसवश्च - स्थिरराशिः - चित्रवर्णः - वनसञ्चारी - वायुराशिः - स्निग्धः- उष्णस्वभावः - अर्धस्वरः - समवातपित्तकफप्रकृतिः - शूद्रवर्णः - पश्चिमदिक् स्वामी -विषमोदयः - क्रूरः ॥

## கும்ப ராசி

பொருள் : கும்பம் என்னும் பெயருடைய இந்தராசி கால்களற்றது. ஆண் ராசி. பகலில் பலம் பெற்றது. நடுத்தர வகுப்பைச் சேர்ந்த பெண்களுடன் தொடர்புடையது. மிகவும் அதிகமாக இல்லாமலும் மிகவும் குறைவாகவு மில்லாமல் மிதமான குழந்தைகளையுடையது. ஸ்திரராசி. பல நிறங்கொண்டது. காட்டில் திரிவது. வாயு ராசி. பசுமை யானது. (அழகுடையது) உஷ்ணஸ்வபாவமுடையது. முழுமைபெறாத ஒலியையுடையது. வாதம், பித்தம், சிலேஷ்மம் என்று சொல்லப்படுகிற மூன்று தாதுக்களையும் ஸம அளவில் உடையது. நான்காவது வகுப்பைச் சேர்ந்தது. மேற்கு திசைக்குக்கதிபதி. ஸமமில்லாது மாறுபட்ட உதயத்தையுடையது. க்ரூர ஸ்வபாவமுடையது.

யவனர்: கும்பம் என்ற இராசி குடத்தை தோளில் வைத்துக்கொண்டிருக்கிற மனிதனின் வடிவமுடையது. பாழுங்கிணறு, குளம், சிறு நீர்நிலை, தர்ப்பைப் புல்

முளைத்திருக்கும் இடங்கள், பறவைகள், பெண்கள் வாசம் செய்யும் இடங்கள், சூதாடுபவர்கள் இருக்குமிடம், கள்ளுக்கடை இவைகளில் ஸஞ்சரிக்கக்கூடியது. இதுகாலபுருஷனின் இரண்டு கணுக்கால்களாக அமையப்பெற்றது.

❋❋❋❋

## मीनराशिः

मीनोऽपदः स्त्रीकफवारि - रात्रि - निश्शब्दः - बभ्रुर्द्वितनुर्जलस्थः ।
स्निग्धोऽतिसङ्ग प्रसवोऽपि विप्रः शुभोत्तराशेड्विषमोदयश्च ॥

**अर्थः** -मीनराशिः अयं - चरणहीनः स्त्रीराशिः कफप्रकृतिः जलराशिः - रात्रिबली - शबदरहितः पिंगलवर्णः - चरस्थिरस्वभावात्मकः जलचरः - स्निग्धः बहुस्त्रीसङ्गः बहुप्रजः(बहुसन्तानयुक्तः)ब्राह्मणवर्णः -शुभः - उत्तरदिक्स्वामी - विषमोदयश्च ॥

## *மீனராசி*

பொருள் : *மீனம் என்னும் பெயருடைய இந்த ராசி கால்களற்றது. பெண்ராசி. கபதாதுவையுடையது. தண்ணீரில் சஞ்சரிப்பது. இரவில் பலம் பெற்றது. ஒலியற்றது. மஞ்சளும் சிவப்பும் கலந்த நிறம். சரராசி-ஸ்திரராசி என்னும் இரண்டு ராசிகளின் பெயரைக் கொண்டது. ஜலராசி-பசுமையானது(அழகுடையது) பல பெண்களுடன் தொடர்புடையது. மிக அதிக அளவில் குழந்தைகளையுடையது. பிராம்மண வகுப்பைச் சேர்ந்தது. சுபமானது. (நன்மைப்பயப்பது). வடக்கு திசைக்கு அதிபதி. ஸமமில்லாது மாறுபட்ட நிலையில் விஷமமான உதயத்தையுடையது.*

யவனர்: இரு மீன்கள் - அவைகளின் வால் மற்றொன்றின் தலைப்பக்கம் இருக்குமாறு அமைந்திருக்கும் நிலையில் உள்ள வடிவமுள்ளது. தேவதைகள், பிராம்மணர்கள், நல்ல புண்ணிய தீர்த்தங்கள், நதிகள், சமுத்திரம் மிகப்பெரிய நீர் நிலைகள் ஆகிய இவ்விடங்களில் ஸஞ்சரிக்கக்கூடியது. இது காலபுருஷனுடைய இரு பாதங்களாக அமையப் பெற்றது.

குறிப்பு: ப்ரச்ன சாஸ்திரத்திற்கு மேஷம் முதல் மீனம் வரையிலான 12 ராசிகளின் உருவம், குணம் முதலியவைகளைப்பற்றிய அறிவு இன்றி யமையாதது. அப்பொழுதுதான் ப்ரச்னம் கேட்க வந்தவனுடைய தனபாவம், களவு, திருமணம், அரசபதவி, போரில் வெற்றி பெறுதல் முதலானவைகளைப் பற்றிய வினாக்களுக்கு தக்க விடை சொல்ல முடியும். அந்தந்த ராசிகளின் உருவம், திக்கு, பலம் முதலானவைகளைக் கொண்டுதான் சொல்லமுடியுமாதலால் இங்கு அவைகளைப் பற்றிய முழுவிபரங்களும் கொடுக்கப் பட்டிருக்கிறது. இது போன்று கோள்களின் தன்மையையும் தெரிந்துதான் ப்ரச்னம் கேட்பவனுக்கு விடை சொல்ல முடியும் என்ற காரணத்தால் கோள்களின் உருவம் குணம் முதலானவைகளும் கொடுக்கப்பட்டிருக்கிறது.

## अथ ग्रहाणां दिक्स्वरूपस्वभावादयः

### रविः

पूर्वः सत्वं नृपस्तातक्षत्रं ग्रीष्मोऽरुणश्चलः ।
मधुदृक् पैतिको धातुः शूरः सूक्ष्मकचो रविः ॥

- ताजिके ग्रहस्वरूपाध्याये 11 श्लोकः

मधुपिङ्गलदृक् चतुरश्रतनुः पित्तप्रकृतिस्सविताऽल्पकचः ॥

- बृहजा - ग्रहयोनिः अ. 8 श्लो. पूर्वार्धः

## கோள்களின் திசை, குணம் முதலானவைகள்

### கதிரவன்

பொருள் : கதிரவன் கிழக்குதிசைக்கதிபன். ஸத்வ குணமுடையவன். அரச வகுப்பைச் சேர்ந்தவன். அரசன், பித்ருகாரகன். (தந்தையைப் பற்றிய விபரங்களை அறிவதற்கு கதிரவனின் நிலை இன்றியமையாதது. கதிரவன் தந்தைக்குக் காரணமானவன் என்று பொருள்) உஷ்ணஸ்வபாவமுடையவன். சிவந்த நிறங்கொண்டவன். சஞ்சல ஸ்வபாவமுடையவன். தேனின் நிறங்கொண்ட கண்களையுடையவன். பித்ததாதுவையுடையவன். சூரன்(மிக்க பலங்கொண்டவன்). குறைந்த கேசங்களை யுடையவன். ப்ருஹஜ்ஜாதகத்தில் இவ்வாறான குணங்களைக் கூறப்பட்டிருப்பதுடன் □ நான்கு மூலை களையுடைய சதுரவடிவில் உடலமைப்பைக் கொண்டவன் என்றும் கூறப்பட்டிருக்கிறது.

----❖----

## विधुः

कफो वर्षोमृदुर्माता पयो गौरश्चसात्विकः ।
जीवो वैश्यश्चरो वृत्तो मारुतांशो विधुः सुदृक् ॥

- ताजिके ग्रहस्वरूपाध्याये 12 श्लोकः

तनुवृत्ततनुर्बहुवातकफो विबुधश्चशशी मृदुवाळ्छुभदृक् ॥

- बृह - ग्रहयोनिः अ. 8 श्लो. उत्तरार्धः

## சந்திரன்

பொருள்: கபதாதுவையுடையவன். மழைக்கதிபதி. ம்ருதுவானவன். தாய்க்குக்காரணமானவன். நீரின் தன்மையையுடையவன் வெண்மை நிறங்கொண்டவன். ஸாத்விகமான ஸ்வபாவத்தையுடையவன். உயிரின் அம்சமாக உடையவன். வைச்ய ஜாதியைச் சேர்ந்தவன். ஸஞ்சரிப்பவன். வட்டவடிவமானவன். வாயுதாதுவை உடையவன். அழகிய கண்களை உடையவன். ப்ருஹஜ் ஜாதகத்தில் முன் கூறப்பட்டவைகளே கூறப் பட்டிருப்பினும் மிக்க அறிவுடையவன் என்று அதிகமாகக் கூறப்பட்டிருக்கிறது.

## अङ्गारकः

ग्रीष्मः क्षत्रतमे रक्ते याम्यः सेनाग्रणीश्चरः ।
युवा धातुश्च पिङ्गाक्षः क्रूरः पित्तं शिखी कुजः ॥

- ताजिके ग्रहस्वरूपाध्याये 13 श्लोकः

क्रूरदृक् तरुणमूर्तिरुदारः पैत्तिकस्सुचपलः कृशमध्यः ।

- बृह - ग्रहयोनिः अ. 9 श्लो. पूर्वार्धः

## செவ்வாய்

பொருள் : செவ்வாய் க்ரீஷ்ம ருதுவுக்கதிபன். அரச வகுப்பைச்சேர்ந்தவன். சிவந்த நிறமுடையவன். தெற்கு திசைக்கதிபன். சேனைகளுக்கதிபதி. சஞ்சல ஸ்வபாவ முடையவன். யௌவன வயதுடையவன். லோகங்களில் விருப்பமுடையவன். மஞ்சளும் சிவப்பும் கலந்த கண்களையுடையவன். கொடூரமானவன். பித்ததாதுவை உடையவன். கூந்தல் அதிகம் உடையவன்.

செவ்வாய் கொடூரமான பார்வையுடையவன். காளைப்பருவம் உடையவன். கொடையாளி. பித்த ஸ்வபாவமுடையவன். சஞ்சலஸ்வபாவமுடையவன். குறுகிய இடையை உடையவன் என்பது ப்ருஹஜ் ஜாதகம்.

****

## बुधः

शरदीशो हरिर्दीर्घः षण्डो मूलं कुमारकः ।
लिपिज्ञ उत्तरेशश्च शूद्रः सौम्यस्त्रिधातुकः ॥

- ताजिके ग्रहस्वरूपाध्याये 14 श्लोकः

श्लिष्टवाक्सततं हास्यरुचिर्ज्ञः पित्तमारुतकफप्रकृतिश्च ॥

- बृह - ग्रहयोनिः अ. 9 श्लो. उत्तरार्धः

## புதன்

பொருள் : புதன் - சரத் காலத்திற்கதிபதி. பச்சை நிறங்கொண்டவன். நீண்ட சரீரத்தை உடையவன். அலி. கிழங்குகளுக்கதிபதி. அரசகுமாரன். சிறந்த எழுத்தாளி. நான்காம் வகுப்பைச் சேர்ந்தவன். வடக்குதிசைக்கதிபதி.

வாதம், பித்தம், ச்லேஷ்மம் என்னும் தாதுக்களை யுடையவன்.

திக்கித்திக்கிப் பேசும் இயல்புடையவன். ஹாஸ்ய ப்ரியன். வாதம், பித்தம், கபம் என்னும் மூன்று தாதுக்களையுமுடையவன் என்பது ப்ருஹஜ்ஜாதகம்.

★ ★ ★ ★

## गुरुः

सत्वं वित्तो हिमः श्लेष्मादीर्घो मन्त्री द्विजो नरः ।
मध्यैशानीकफी जीवो मधुपिङ्गलहक्तथा ॥

– ताजिके ग्रह. अ. 14 श्लोकः

बृहत्तनुः पिङ्गलमूर्धजेक्षणो बृहस्पतिः श्रेष्टमतिः कफात्मकः ।

– बृह – ग्रहयोनिः अ. 10 श्लो. पूर्वार्धः

## ப்ருஹஸ்பதி (குரு)

பொருள்: ப்ருஹஸ்பதி ஸத்வகுணத்தையுடையவன். தனமுடையவன். குளிர்ந்த தன்மையுடையவன். கப தாதுவையுடையவன். நீண்ட உருவத்தையுடையவன். அமைச்சன். பிராம்மண வகுப்பைச் சேர்ந்தவன். மனிதவர்க்கத்தைச் சேர்ந்தவன். (ஆண்க்ரஹம்) நண்பகலில் பலம் பெற்றவன். ஈசான்யதிக்குக்கதிபதி. தேன்போன்று சிவந்த கண்களையுடையவன்.

பருத்த உடலமைப்பைக் கொண்டவன். செம்பட்டை நிறங்கொண்ட தலைமயிரையும் கண்களையுமுடையவன். தர்மத்தில் பற்றுடையவன். கபதாதுவையுடையவன் என்பது ப்ருஹஜ்ஜாதகம்.

------- ✦ -------

## शुक्रः

शुक्रश्शान्तो द्विजोनारी वश्यो मन्त्री चरस्सितः ।
आग्नेयीदिक्कफश्चाम्लः कुटिलासितमूर्धजः ॥

भृगुस्सुखी कान्तवपुस्सुलोचनः कफानिलात्माऽसितवक्रमूर्धजः ॥

– बृह – ग्रहयोनिः अ. 10 श्लो. उत्तरार्धः

## சுக்கிரன்

பொருள்: சுக்கிரன் சாந்தமான ஸ்வபாவமுடையவன். பிராம்மண வகுப்பைச் சேர்ந்தவன். பெண்க்ரஹம். எளிதில் வசப்படக்கூடிய தன்மையை உடையவன். அரக்கர்களின் அமைச்சன். சஞ்சல ஸ்வபாவ முடையவன். வெண்மை நிறங்கொண்டவன். தென்கிழக்கு மூலைக்கதிபதி. கபதாதுவையுடையவன். புளிப்பான சுவையில் விருப்பங் கொண்டவன். கருப்பான சுருண்டு சுருண்டிருக்கிற தலைமயிரை யுடையவன். (சுகானுபவமுடையவன் அழகான உடலமைப்பு, கண்கள் இவைகளையுடையவன். கபம், வாதம் என்னும் தாதுக்களையுடையவன். கருமை யானதும் சுருண்ட தலைமயிரையுடையவன் என்பது ப்ருஹஜ்ஜாதகம்).

------ ♦ ------

## शनिः

कृष्णस्तमः वृद्धः कृशो षण्डो मूलान्त्यजोऽलसः ।
शिशिरः पवनः क्रूरः पश्चिमो वातुलश्शनिः ॥

मन्दोऽलसः कपिलदृक्कृशदीर्घगात्रः ।
स्थूलद्विजः परुषरोमकपोऽनिलात्मा ॥ – बृह – ग्रहयोनिः अ. 11 श्लो.

## சனி

பொருள் : சனி - கருமை நிறங்கொண்டவன். பாப க்ரஹம். பலமற்றவன். வயதானவன். அலி. கிழங்கு, மிலேச்சர் இவர்களுக்கு அதிபதி. (நான்காம் வகுப்பைச் சேர்ந்தவன்). சோம்பலுள்ளவன். சிசிர ருதுவுக்கு (பின்பனிக்காலம்) அதிபதி. வாயுதாதுவையுடையவன். கொடூரமானவன். மேற்கு திசைக்கதிபதி. காற்றின் தன்மையையுடையவன். (சோம்பலுள்ளவன். சிவந்த கண்ணுள்ளவன். இளைத்ததும், உயரமானதுமான உடலமைப்பைக் கொண்டவன். பருத்த பற்களை உடையவன். தடித்த தலைமயிரும் உடலிலும் மயிர்களை உடையவன். வாததாதுவையுடையவன் என்பது ப்ருஹஜ்ஜாதகம்).

····◆····

## राहुः

राहुस्स्वरूपं शनिवान्निषादजातिर्भुजङ्गोऽस्थिप नैर्ऋतीशः।
राहुर्धातुः शिखी मूलं शेष मन्यच्च मन्दवत् ॥

## ராகு

பொருள் : ராகு - வேடஜாதி. பாம்பின் உருவம். எலும்புகட்கதிபதி. தென்மேற்கு திசைக்கு அதிபதி. வெண்மையான தாதுப்பொருட்களுக்கு அதிபதி. சிகையையுடையன். கிழங்குகளுக்கு அதிபதி. மற்றவை சனிக்குக் கூறியதை எடுத்துக்கொள்ளவேண்டும்.

* * *

## केतुः

केतुः शिखी तद्वदनेक रूपः खगस्स्वरूपात्फलमूह्यमित्थम् ॥

## கேது

பொருள் : பலவித நிறங்கொண்டவன். மற்றவை சனிக்குக் கூறியதை எடுத்துக்கொள்ளவேண்டும்.

குறிப்பு: ராசிகளின் ஸ்வரூபம், அவைகள் ஸஞ்சாரம் செய்யுமிடங்கள் கூறப்பட்டது. பிரச்ன காலத்தில் உதயமான ராசிகளைக்கொண்டு காலம், திசை, நாடு, தொழில், திருட்டுபோன பொருள், நோய் முதலியவற்றை ஊகித்து அறிந்துகொள்ள முடியும் எனக் கூறப்பட்டது. அது போன்று கோள்களின் ஸ்வரூபம், குணம் முதலியவற்றைத் தெரிந்து கொண்டு, ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னம் அதில் நிற்கும் கோள், ஏனைய ராசிகளில் நிற்கும் கோள்கள் முதலியவற்றையும் ஆய்ந்து பலன் சொல்ல வேண்டுமென்பதற்காக கோள்களின் உருவம் முதலானவைகள் கூறப்பட்டிருக்கிறது. குறிப்பாக பிரச்ன காலத்தில் வலுவுள்ள கோள்கள் நிற்குமிடம், அவைகளின் குணம் முதலானவை களையும் அவைகளுடன் நிற்கும் ஏனைய கோள்களின் தன்மை இவைகளையும் மனதிற் கொண்டு பலன் கூறவேண்டும்.

---

## षोडशयोगः

प्रागिक्कवालोऽपर इन्दुवारस्तथेत्थशालोऽपर ईसराफः ।
नक्तं ततः स्याद्यमया मणा ऊकबूलतो गैरिकबूलमुक्तम् ॥
खल्लासरं रद्दमथो दुफालि कुत्थं च दुत्थोत्थदि वीर नामा ।
तंबीरकुत्थौ दुरफश्चयोगाः षोडशैषां कथयामि लक्ष्म ॥

प्रथमः इक्कवालः, २. इन्दुवारः, ३. इत्थशालः, ४. ईसराफः, ५. नक्तं, ६. यमयः, ७. मणाऊ, ८. कम्बूलं, ९. गैरिकबूलं,

१०. खल्लासरं, ११. रद्दं, १२. दुफालिकुत्थं, १३. दुत्थोत्थदिवीरं, १४. तंबीरः, १५. कुत्थः १६. दुरफः, आहत्य षोडशयोगाः ॥

## பதினாறு விதமான யோகங்கள்

இக்கபாலம் 1, இந்துவாரம் 2, இத்தசாலம் 3, ஈஸராபம் 4, நக்தம் 5, யமயம் 6, மணஊ 7, கம்பூலம் 8, கைரிகபூல 9, கல்லாஸர 10, ரத்த 11, துபாலிகுத்த 12, இத்தோத்ததிவீர 13, தம்பீர 14, குத்த 15, துரப 16 ஆக பதினாறு யோகங்கள்.

## इक्कवाल इन्दुवारयोगयोर्लक्षणम्

चेत्कण्ठके पणफरेच खगाः समस्ताः
स्यादिक्कवालइति राज्यसुखाप्तिहेतुः ।
आपोक्लिमे यदि खगाः स किलेन्दुवारो
नरस्याञ्छुभः क्वचन ताजिकशास्त्रगीतः ॥

यदि समस्ताः स्वगाः कण्टके, पणफरे वा स्युः तदा इक्कवालः स्यात् । अयं राज्यसुखाप्तिहेतुर्भवति । यदि समस्ताः स्वगाः आपोक्लिमेस्युः तदा इन्दुवारः स्यात् । सकिल (निश्चयेन) कुत्रापि जन्मसमये प्रश्नसमयेऽपि वा शुभो न स्यात् इति ताजिकशास्त्रगीतः योगः ॥

கோள்களனைத்தும் கண்டகம் என்னும் பெயருடைய 1, 4, 7, 10ஆமிடங்களிலோ அல்லது பணபரமான 2, 5, 8, 11 ஆமிடங்களிலோ நின்றால் இதற்கு இக்கவால யோகம் என்று பெயர். இந்த யோகம் ராஜ்ய லாபம், எல்லாவிதமான ஸுகங்களையும் கொடுப்பதாகும். கோள்களனைத்தும் ஆபோக்லியம் என்று சொல்லப்படுகிற 3, 6, 9, 12ஆமிடங்களில் நின்றால் இதற்கு இந்துவார யோகம் என்று பெயர். இது ஜன்ம ஸமயத்திலோ (ஜாதகரீதியாகவோ) அல்லது ப்ரச்னம் கேட்கப் படுகின்ற ஸமயத்திலோ இவ்வாறான யோகமமைந்தால் சுபபலனை கொடுப்பதாகாது.

குறிப்பு: முன் கூறப்பட்ட 1,4,7,10, 2,5,8,11, 3,6,9,12 ஆமிடங்களில் ஒரு சேர கோள்களனைத்தும் இருப்ப தென்பது அரிது. ஆதலின் கோள்களில் பெரும்பாலானவைகள் நிற்குமானால் என்று கொள்ளல் தகும்.

## इत्थशालयोगः (मुथशिलम्)

शीघ्रोऽल्पभागैर्घनभागमन्देऽग्रस्थे निजं तेज उपाददीत ।
स्यादित्थशालोऽयमथो विलिप्ता लिप्तार्धहीनो यदिपूर्णमेतत् ॥

ययोर्द्वयोर्ग्रहयोर्मध्ये यस्य अधिकागतिः (शीघ्रगतिः) ग्रहः, अल्पभागैः स्वल्पांशैरुपलक्षितो भवति, घना बहवः, भागाः अंशाः यस्य असौ घनभागः तादृशे बह्वंशे मन्दे-मन्दगतिग्रहे अग्रतरस्थे सति एतदुक्तं भवति । (शीघ्रगतिग्रहस्य भागापेक्षया मन्दगतिग्रहस्य अधिकभागा भवन्ति तदा शीघ्रगति ग्रहः स्वीयं तेजः सामर्थ्यं, मन्दगतिग्रहाय उपाददीत ददाति । तर्हि अयं "इत्थशालाख्यो" योगः स्यात् । अस्यैव नामान्तरं मुथशिलमिति । शीघ्रग्रह दीप्तांशान्तर्गतान्तरभागैरधिके मन्दे मुथाशिलयोग इति पर्यवसितोऽर्थः । पूर्णमुथशिलस्तु यदि शीघ्रगतिग्रहः मन्दगतिग्रहात् विलिप्ता एकविकलामात्रन्यूनोऽथवा लिप्तार्धहीनः त्रिंशद्विकलान्यूनोऽपि भवेत्तदा - मुथशिलयोगः पूर्णः स्यात् । यदा द्वयोर्विकलान्तावयवेन तुल्यता भवति तदा पूर्णमुथशिलमिति पर्यवसितम् ।

## இத்தசால (முதசில) யோகலக்ஷணம்

பொருள் : ஒரே ராசியில் நிற்கின்ற இரு கோள்களுள் ஒன்று விரைவாகச் செல்லும் தன்மையையுடைய தாகவும் மற்றொன்று மெதுவாகச் செல்லும் தன்மையை யுடையதாகவும் இருக்குமானால் விரைவாகச் செல்லும் தன்மையையுடைய கோள் மெதுவாகச் செல்லும் தன்மையையுடைய கோளுக்குத் தன்னுடைய

வலிமையைக் கொடுக்க நேரிடும். அப்பொழுது அவ்விரு கோள்களினுடைய (இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட கோள்களும் இருக்கலாம்) சேர்க்கையை "இத்தசால யோகம்" என்று கூறப்படும் இதற்கு "முதசிலம்" என்னும் பெயருண்டு.

குறிப்பு: விரைவாகச் செல்லும் தன்மையையுடைய கோளின் வலுவான பாகங்களின் உட்பிரிவின் பாகங்களைக் காட்டிலும் அதிகமான பாகங்களைக் கொண்டதாக மந்தமான கதியை யுடைய கோள் இருக்குமானால் அதற்கு "இத்தசாலயோகம்" எனப்பெயர். இவ்விதமான இத்தசால யோகத்தையடைந்த இருகோள்களுள் விரைவாகச்செல்லும் தன்மையைக் கொண்ட கோள் மந்தமாகச் செல்லும் தன்மையை யுடைய கோளைக்காட்டிலும் ஒரு விகலை அல்லது குறைந்தது 30 விகலைக்குக் குறைவாக இல்லாமல் இருக்குமானால் அப்பொழுது "முதசிலம்" என்னும் பெயர்கொண்ட இந்த யோகம் பூர்ண இத்தசாலம் அதாவது பூர்ண முதசிலமாகும். இது சுபமான பலனையளிக்கும்.

கோள்கள் அனைத்திலும் வேகமான கதியை யுடையவன் மதி. மதியைக்காட்டிலும் குறைந்த வேகத்தையுடைய கதியையுடையவன் புதன். புதனுடைய கதியை விட சுக்கிரனுடைய கதியும், சுக்கிரனுடைய கதியைக் காட்டிலும் சூரியனுடைய கதியும், சூரியனுடைய கதியைக் காட்டிலும் செவ்வாயினுடைய கதியும், செவ்வாயினுடைய கதியைக்காட்டிலும் குருவினுடைய கதியும், குருவினுடைய கதியைவிட சனியினுடைய கதியும் வேகத்தில் குறைந்தது. (சந்திரனை விட செவ்வாயும் செவ்வாயைவிட புதனும் புதனைவிட குருவும், குருவைவிட சுக்கிரனும், சுக்கிரனைவிட சனியும்

கதியில் குறைந்த வேகத்தையுடையவன் என்று கூறுகிறார்). இக்கோள்களுள் இரண்டோ அல்லது அதற்கு மேற்பட்டவைகளோ ஒரே ராசியிலோ அல்லது ஒரே நக்ஷத்திரத்திலோ அல்லது நக்ஷத்திரத்தின் காலிலோ ஸஞ்சரிக்க நேரிடும் பொழுது வேகமான கதியையுடைய கோளினால் அதற்கடுத்திருக்கும் கோள் முன்பாக அல்லது பின்பாக இருக்கும் கோள்களிடமிருந்து பலம் பெறும் வாய்ப்புண்டு. அடுத்த ராசியில் இருக்கும் கோளுக்கும் இத்தன்மை உண்டு. ஆதலால் மந்த கதியுடைய ஏதாவது ஒரு கோள் வேகமான கதியையுடைய கோளுடன் சேர்ந்திருந்தாலும் அடுத்த ராசியில் இருந்தாலும் பலம் பெற்று நல்ல பலனைக் கொடுக்கும் என்பது கருத்து.

## ईसराफ योगः

शीघ्रो यदा मन्दगतेरथैकमप्यंशमभ्येति तदेसराफः ।
कार्यक्षयो मूसरिफेखलोत्थे सौम्ये न हिल्लाजमतेन चिन्त्यम् ॥

**अर्थः** –यदा मन्दगतिग्रहस्यैकमप्यंशं शीघ्रगतिग्रहोऽभ्येति – अतिक्रम्य अग्रे गच्छति तदा ईसराफः । अस्यैव नामान्तरं "मूसरिफ" इति । शीघ्रमन्दगतिग्रहयोः द्वयोः पापसंबन्धेन जाते मूसरिफयोगे सति वाञ्छितकार्यनाशः भवेत् । तस्मिन्नीसराफ योगे शुभग्रहोत्पन्ने कार्यसिद्धिः, नैव कार्यनाशः । इदं हिल्लाजमतम् ।

பொருள் : **வேகமான கதியையுடைய யாதேனும் ஒரு கோள், மந்தமான கதியையுடைய கோளின் கலைகளில் ஒருபாகத்தையாவது ஏற்றுக்கொள்ளுமானால் அதாவது**

வேகமான கதியையுடைய கோள் மந்தமான கதியை யுடைய கோளைத் தாண்டிச்செல்லுமானால் அதற்கு "ஈஸராப யோகம்" என்று பெயர். இதற்கு "மூஸரிபம்" என்ற பெயரும் உண்டு. வேகமான கதியையுடையதும் மந்தமான கதியையுடையதுமான இருகோள்களும் பாபக்ரஹ ஸம்பந்தம் பெற்றுவிட்டால் நல்ல பலனை அளிக்கக்கூடியவையல்ல. என்பதை தெரிந்துகொள்ள வேண்டும். இதற்கு ஹில்லாஜமதம் என்று பெயர்.

## नक्तयोगः

लग्नेशकार्याधिपयोर्न दृष्टिर्मिथोऽथ तन्मध्यगतोऽपि शीघ्रः ।
आदाय तेजो यदि पृष्टसंस्थान्न्यसेद्तथान्यत्र हि नक्तमेतत् ॥

**अर्थः** -लग्नाधिपः कार्याधिपयोर्नदृष्टिश्चेत्, तयोर्मध्यगतः शीघ्रगतिकः भवति, सः (मध्यगतः) पृष्ठसंस्थाच्छीग्रग्रहात्तेजः आदाय अन्यस्मिन्मन्दग्रहे अर्पयति चेत् सः नक्तनामाख्यो योगः ॥

## நக்தயோகம்

பொருள் : லக்னாதிபனும் கார்யாதிபனும் ஒருவருக் கொருவர் பார்த்துக்கொள்ளாமல் இருக்கும் நிலையில், அவைகளுக்கு நடுவில் நிற்கும் வேகமான கதியை யுடைய கோள் அதற்குப் பின்னால் நிற்கும் கோளின் பொருட்டு தனது ஒளியைக் கொடுக்குமானால் அதற்கு நக்த யோகம் என்று பெயர்.

## यमयो योगः

अन्तःस्थितो मन्दगतिस्तु पश्येद्दीप्तां शकैद्धविथ शीघ्रतरस्तु ।
नीत्वा महो यचछति मन्दगाय कार्यस्य सिद्ध्यै यमयः प्रदिष्टः ॥

**अर्थः** - लग्नधिपकार्याधिपौ च द्वौ परस्परं न पश्यतः, अनयोर्मध्ये वर्तमानः मन्दगतिग्रहः स्वदीप्तांशैः लग्नाधिपकार्याधिपौ यदि स्थान दृष्ट्या पश्येत् - तदा मन्दगतिग्रहः शीघ्रगतिग्रहात् तेजः गृहीत्वा(अन्यस्मै) मन्दगतिग्रहाय यच्छति ॥ लग्नाधिपकार्याधिपयोर्मध्ये यः मन्दगतिग्रहः तस्मै शीघ्रगतिग्रहः स्वतेजः यदि यच्चति तदा यमयोख्यो योगः । वांच्छितकार्यसिद्ध्यै अयं योगः ॥

## யமயோ யோகம்

பொருள் : லக்னாதிபனும் 10மிடத்துக்குரிய கார்யாதிபனும் பரஸ்பரம் ஒருவருக்கொருவர் பார்த்துக் கொள்ளாமல் இருக்கின்ற நிலையில் அவர்களின் நடுவில் நிற்கும் மந்தமான கதியையுடைய யாதேனும் ஒரு கோள் வேகமான கதியையுடைய கோளிடமிருந்து அதனுடைய ஒளியைப் பெறுமானல் இதற்கு 'யமயோ யோகம்' எனப் பெயர். இந்த யோகத்தைக் கொண்டு ப்ரச்னம் கேட்பவன் ராஜ்ய லாபத்தை பற்றி கேட்பானே யானால் அதற்கு உரிய பலனைச் சொல்ல பயன்படும்.

## मणऊ योगः

वक्रश्शनिर्वा यदि शीघ्रखेटाचपश्चात्पुरस्तिष्ठति तुर्यदृष्ट्या ।
एकर्क्ष सप्तर्झ भुवा दृशा वा पश्यन्नथांशैरधिकोनकैश्चेत् ॥

तेजो हरेत्कार्यपदेत्थशाली स्थितोऽपि वाऽसौ मणऊ शुभो न ॥

**अर्थः** - अस्मिन्मणऊ योगे लग्नाधीश कार्याधीशयोः परस्परं स्थान दृष्टिरावश्यकी। यदि लग्नाधीशकार्याधीशयो - र्मध्ये शीघ्रगतिग्रहः तिष्ठति, तस्मात्पश्चात्पुरतः(अग्रे)

वा अंशैरेव वक्रो भौमः शनिर्वातिष्ठति तादृशो भौमः शनिर्वा चतुर्थस्थानदृष्टया अथवा एकराशिजातया दृष्टया, अथवा सप्तमस्थानजातया दृष्टया वा अंशैः अधिकः मणऊयोगः ।। तद्यथा - शीघ्रग्रहस्य भागापेक्षया अधिकैरंशैः शीघ्रगतिग्रहस्य दीप्तांशमध्य-वर्तिभिः ग्रहैः पश्यन्सन्शीघ्रगतिग्रहस्य तेजः हरेत् यथा - कार्यस्थानाधीशेन सह मुथशिलयोगं प्राप्तवतोऽपि अयं मणऊयोगः कार्यकर्ता शुभफलदः न भवेदित्यर्थः ।।

### மணஊ யோகம்

பொருள் : *மணஊயோகம் என்று கூறப்பட்ட இந்த யோகத்தில் லக்னாதிபனுக்கும் கார்யாதிபனுக்கும் (10மிடத்துக்குடையவன்) பரஸ்பரம் பார்வை மிகவும் இன்றியமையாதது. ஒரே ராசியில் லக்னாதிபனும், 10மிடத்துக்குடையவனான கார்யாதிபனும் இருக்கும் நிலையில் இவர்களுக்கு நடுவில் வேகமான கதியை யுடைய கோள் ஏதேனுமொன்று நிற்கும் பொழுது அதற்கு முன்னாலும், பின்புறமும், கொஞ்சம் வக்ர கதியையுடைய செவ்வாயோ அல்லது சனியோ நிற்குமானால், இவைகள் நான்காமிடப் பார்வை (இது செவ்வாய்க்கு மட்டுமே)யாகவோ அல்லது ஒரே ராசியில் நிற்பதால் ஒருவரையொருவர் பார்த்துக் கொள்வதாலோ அல்லது 7மிடத்தில் நின்று 7ம் பார்வையாகப் பார்ப்பவர்களாக இருந்தால் இதற்கு மணஊ யோகம் என்று பெயர்.*

குறிப்பு: *ஒரே ராசியில் மூன்று கோள்கள் நின்று நடுவில் நிற்கும் கோள் வேகமான கதியையுடையதாகவும், மற்ற இரு கோள்களும் மந்தமான கதியையுடையவை களாக இருந்து, நடுவில் நிற்கும் வேகமான*

கதியையுடைய கோளின் அதிகமான அம்சங்களைப் பெறுவதுடன் ஒன்றையொன்று பார்த்துக்கொள்ளுமே யானால் இதற்கு மணஊ யோகம் என்று பெயர். உதாரணமாக ஒரே ராசியிலே அல்லது 7ஆமிடத்திலோ, 10ஆமிடத்திலோ சனியும் செவ்வாயும் சேர்ந்து நின்றாலும், சனி 7லும் செவ்வாய் பத்திலும் நின்று லக்னத்தில் வேக கதியையுடைய கதிரவன், சுக்கிரன், குரு இவர்கள் நின்றாலும், இவ்வாறு நிற்பதால் அடையக்கூடிய முதசிலம் என்னும் யோகத்தை யடைந்திருந்தாலும் வேகமான கதியையுடைய கோள்களின் கிரணங்கள் சனி செவ்வாயால் ஏற்றுக் கொண்டபடியால் மணஊ யோகத்தையடைந்த சூரியன், சுக்கிரன், குரு இவர்கள் நல்ல பலனை யளிக்க வல்லவர்கள் அல்ல என்பது கருத்து.

## कम्बूलयोगः (सामान्यलक्षणम्)

लग्नकार्येशयोरित्थशालेऽतोन्द्वित्थशालतः ।
कम्बूलं श्रेष्ठमध्यादिभेदैर्नानाविधं स्मृतम् ॥

**अर्थः** -लग्नाधीशकार्याधीशयोर्मध्ये केनचिदेकेन चन्द्र-मुथशिले कम्बूलनामको योगः । यथा - निशाकर-श्चन्द्रः योगकरग्रहेभ्यः एकेन इत्थशालं(मुथशिलं) करोति चेत्तदा कंबूलयोगः ॥

## **கம்பூலயோகம்** (பொதுவிதி)

பொருள் : **லக்னாதிபன் 10மிடத்துக்குடையவன் இவர்களுள் எவருடனாவது மதி தொடர்பையுடைய வனாக இத்தசாலம் என்னும் யோகத்தையடைந்த வனாக இருந்தால் இதற்குக் கம்பூல யோகம் எனப்**

பெயர். அதாவது. மதி நல்ல யோகத்தைத் தரக்கூடிய இரு கோள்களுள் ஏதேனுமொன்றுடன் சேர்ந்து நிற்பானே யானால் இதற்கு கம்பூல யோகம் என்று பெயர்.

## उत्तमोत्तमकम्बूलयोगः

मेष रविः कुजो वापि वृषे कर्केऽथवा शशी ।
तत्रोत्थशाली कम्बूलमुत्तमोत्तमकार्यकृत् ॥

**अर्थः** -मेष लग्नाधिपः भौमः सः स्वगृहे, मेषलग्नात्पञ्चम अपत्यस्थानाधिपः सूर्यः तस्य उच्चग्रहभूते मेषे भौमेन सहस्थितिः एवं अनयो र्मेषे र्योगे इत्थशाल योगः (मुथशिलयोगः) एवं इत्थशाल योगं प्राप्ते सति चन्द्रस्य उच्चस्थानंवृषभं, स्वगृहं कर्कटकम्। वृषभकर्कटयोर्मध्ये अयं चन्द्रः यदि मुथशिलयोगंकरोति तदा उत्तमकंबूलयोगः॥ अयं अपत्यविषयकप्रश्ने अत्यन्तं शुभदायको भवति ॥

## மிகவும் உத்தமமான கம்பூல யோகம்

பொருள் : மேஷராசி செவ்வாயின் சொந்த ராசி. மேஷ ராசிக்கு ஐந்தாமிடமான புத்திர ஸ்தானத்திற்கு அதிபதியான கதிரவனும் அவனுடைய உச்ச ராசியான மேஷத்தில் நிற்கும்போது மதியின் உச்ச ராசியான வ்ருஷபத்திற்கும், சொந்த ராசியான கடகத்திற்கும் நடுவில் இத்தசால யோகம் அல்லது முதசில யோகத்தை யடைந்திருந்தால் இது மிகவும் உத்தமமான கம்பூல யோகமாகும். பிள்ளைப்பேறு விஷயமாக ப்ரச்னம் கேட்கும் சமயம் இவ்வாறாக லக்னம் மேஷமாக அமைந்து கம்பூலயோகத்துடன் கூடியதாக அமையு மானால் மிகவும் சுபமான பலனை அளிப்பதாக இருக்கும். ப்ரச்னம் கேட்பவனுக்கு புத்திரபிராப்தி உண்டு என்பதை உறுதியாகக் கூறலாம்.

குறிப்பு: பதினாறு விதமான யோகங்கள் கூறப்பட்டிருபினும் இந்நூலில் எடுத்தாளப்பட்ட யோகங்கள் மட்டில் விளக்கப்பட்டிருக்கிறது.

## प्रश्नकालिक लग्नादि द्वादशभावा ज्ञेयाः विषयाः

### लग्नभावः (शरीरादि ज्ञानम्)

सौख्यमायुर्वयोजातिरारोग्यं लक्षणं गुणम् ।
क्लेशाकृतीरूपवर्णस्तनोश्चिन्त्या विचक्षणैः ॥

**अर्थः**-प्रश्नोत्थिताल्लग्नात्- शरीरं - सुखं - आयुः-अवस्था - जातिः - आरोग्यं - गुणः - क्लेशः - आकृतिः रूपं - वर्णश्च ज्ञेयः ।

### ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னம் முதலான 12 பாவங்களைக்கொண்டு அறிந்துகொள்ள வேண்டிய விஷயங்கள்

### (1)லக்னம்

பொருள் : ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னத்தைக் கொண்டு 1ம் பாவம் (லக்ன பாவம்) ப்ரச்ன கேட்பவனின் அல்லது எது விஷயமாக கேட்கப்படுகிறதோ அவைகளின் சரீரம், ஸுகம், ஆயுள், செயல், இனம், ஆரோக்யம், குணம், வருத்தம், உடலமைப்பு, உருவம், நிறம் இவைகளை ஊகித்துக் கூறவேண்டும்.

### द्वितीयः (धनभावः)

मुक्ताफलश्च माणिक्यं रत्नधातुधनाम्बरम् ।
हयकार्याध्वविज्ञानं वित्तस्थानाद्विलोकयेत् ॥

**अर्थः** -धनं, मुक्ताफलं, माणिक्यं, रत्नं, धातु, वस्त्रं, अश्वं, कर्म फलं, अध्वगामिनः, गमागमनफलश्च धनस्थानात् (द्वितीयस्थानात् ) ज्ञेयम् ।

**இரண்டாம் பாவம்(தனஸ்தானம்)**
**தனத்தைப்பற்றியறிதல்**

பொருள்: *முத்து, மாணிக்யம், ரத்நம், தாதுப் பொருள்கள், உலோகங்கள், ஆடை, குதிரை, பிரயாணத்தின்போது வழியில் நேரிடும் சுப அசுப பலன்கள். மனிதனுடைய குணம் இவைகளை ஊகித்துக் கூறவேண்டும்.*

**तृतीयः(सहोदरभावः) (यथा भुवनदीपकम् )**

भगिनी भ्रातृभृत्यानां दासकर्मकृतामपि ।
कुर्वीत वीक्षणं विद्वान्सम्यग्दुश्चिक्य वेश्मतः ॥

**अर्थः** -भगिनी, भ्राता, भृत्यः, दासस्य कर्म च तृतीयाज्ज्ञेयम् ।

**மூன்றாம் பாவம்(ஸஹோதரஸ்தானம்)**

பொருள்: *ஸஹோதரி, ஸஹோதரன் வேலைக்காரன், அடிமை இவர்களைப் பற்றி மூன்றாமிடத்தைக் கொண்டு ஊகித்துக் கூறவேண்டும்.*

**चतुर्थभावः (यथाभुवनदीपकम् ) वाटिकादि ज्ञानं**

वाटिकाखलक क्षेत्रमहौषधिनिधीनपि ।
विवरादि प्रवेशश्च पश्येत्पातालतो बुधः ॥

**अर्थः** -वाटिका, खलकः, क्षेत्रं, महौषधिः, निधिः, विवरादिप्रवेशः इमे चतुर्थभावात् ऊहनीयाः ।

### நான்காம் பாவம்

பொருள் : தோட்டம், பானை செய்பவன், நிலம், ஔஷதிகள், புதையல், குகைகளில் பிரவேசிப்பது முதலானவைகளை நான்காம் பாவத்தைக் கொண்டு ஊகித்துக் கூறவேண்டும்.

## पञ्चमभावः (गर्भाऽपत्यादि ज्ञानम् )

गर्भापत्यविनेयानां मन्त्रसन्धानयोरपि ।
विद्याबुद्धि प्रबन्धानां सुतस्थाने विनिर्णयः ॥

**अर्थः** -गर्भः - अपत्यं - विनेयः -(इतस्ततः सञ्चरणशीलः अथवा आचार्यः) मन्त्रः मैत्रीकरणं - विद्या - बुद्धिः - चरित्रविचारः इमे पञ्चमभावाज्ज्ञेयाः ॥

### ஐந்தாம் பாவம்
*(மக்கட்பேற்றைப்பற்றியறிதல்)*

பொருள் : கருவுற்றிருத்தல், மகப்பேறு, ஊரூராகச் செல்லும் ஸ்வபாவமுடையவன் அல்லது ஆசிரியர், மந்திரம், தூது செல்லுதல், மாறுபட்ட கருத்துடைய இருவர்களை சமாதானப்படுத்தி ஒன்று சேர்த்தல், கல்வி, புத்தி(அறிவு) நூலாசிரியர் இவர்களைப் பற்றி ஐந்தாம் பாவத்தைக் கொண்டு ஊகித்துக் கூறவேண்டும்.

## षष्ठ भावः (चोरादि ज्ञानम् )

चौरभीरिपुसंग्रामखरोष्ट्रक्रूरकर्मणाम् ।
मातुलातंकभृत्यानां रिपुस्थानाद्विनिर्णयः ॥

**अर्थः**-चोरः अथवा चौर्यं -शत्रुः - युद्धं - खरः उष्ट्रः क्रूरकर्म - मातुलः - आतङ्कः - भृत्यः - इमे षष्ठस्थानाज्ज्ञेयाः ॥

**ஆறாம் பாவம்**

பொருள் : **திருடன் அல்லது திருட்டு, பகைவன், போர், உடலில் ஏற்படும் ரணம் அல்லது அடிபடுவதால் ஏற்படும் காயம், ஒட்டகம், கொடிய செயல், மாமன், வருத்தம், வேலைக்காரன் இவைகளைப் பற்றி ஆறாம் பாவத்தைக்கொண்டு ஊஹித்துக்கூற வேண்டும்.**

## सप्तमभावः (कलत्रक्रयविक्रयादि ज्ञानम्)

वाणिज्यं व्यवहारश्च विवादश्च समं परैः ।
गमागमकलत्राणि पश्येत्प्राज्ञः कलत्रतः ॥

**अर्थः** -क्रयविक्रय व्यापारः - व्यवहारः - विवादः - परेण साकं विवादः - गमनागमनं - कलत्रं इमे विषयाः सप्तम भावाज्ज्ञेयाः ॥

**ஏழாம் பாவம்**

*(மனைவி முதலானவற்றையறிதல்)*

பொருள் : **வியாபாரம், குறிப்பிட்ட கேஸ் விஷயமாகக் கோர்ட் நடவடிக்கை எடுப்பது. பிறருடன் தனக்குச் சமமான படித்த அறிவாளியுடன் ஒரு விஷயத்தைப் பற்றி ஆராய்வது பிரயாணம், மனைவி இவைகளைப் பற்றி ஏழாம் பாவத்தைக்கொண்டு ஊஹித்துக் கூறவேண்டும்.**

## अष्टमःभावः(दुर्गादि विषयज्ञानम्)

नद्युत्तारेऽध्ववैषम्ये दुर्गे शात्रवसंकटे ।
नष्टे दुष्टे रणे व्याधौ छिद्रे छिद्रं निरीक्षयेत् ॥

**अर्थः** -नदीतरणसमये मध्येमार्गे सम्भावितसङ्कटः दुर्गस्थलगमनं शत्रोस्सञ्जातभयः - नष्टधनान्वेषणे सञ्जातं युद्धं - व्याधिः (रोगः) गुप्तकार्यलोचनं च इमे विषयाः अष्टमभावाज्ज्ञेयाः ॥

**எட்டாவது பாவம்**

பொருள் : **ஆறு முதலான பெரிய நீர்நிலைகளைத் தாண்டும்பொழுது (படகு முதலிய கடலில் செல்லும் வாகனங்களில் செல்லும்பொழுது) நேரிடக் கூடிய தொல்லைகள், குகை, சுரங்கப்பாதைகளில் செல்வது. எதிரியிடமிருந்து ஏற்படக்கூடிய பயம், கெட்டுப்போன பொருளைத் தேடுவது. அது சமயம் ஏற்படக்கூடிய சண்டை சச்சரவுகள், நோய், ரகசியமான காரியங்களைப் பற்றி மந்திராலோசனை செய்வது இவைகளை எட்டாம் பாவத்தைக்கொண்டு ஊஹித்துக் கூறவேண்டும்.**

## नवमभावः (यात्रादि ज्ञानम्)

वापीकूपतडागादि प्रपादेवगृहाणि च ।
दीक्षां यात्रां मठं धर्मं धर्माज्ञिश्चित्य कीर्तयेत् ॥

**अर्थः** -वापी - कूपः - तडागः - प्रपा - देवगृहाणि - दीक्षा - यात्रा-मठः-धर्मः इति इमे विषयाः नवमभावाज्ज्ञेयाः ।

**ஒன்பதாம் பாவம்**

பொருள் : **பெருங்கிணறு (கடிலம்) சிறிய கிணறு, குளம், தண்ணீர்ப்பந்தல், கோயில்கள். திருமணம் செய்வதற்கு முன் முடிவளர்த்தல் (இதுபோன்று சில நற்காரியங்கள் செய்யுமுன்பும், மனைவி கருவுற்றிருக்கும் காலத்தில் கணவன் முடி வளர்த்தல் போன்றவைகள்)**

**பிரயாணம், மடம், சாமியார்கள் தங்குமிடம், தர்மம் இவைகளைப் பற்றிய விஷயங்களை 9ம் பாவத்தைக் கொண்டு ஊஹித்துக் கூறவேண்டும்.**

## दशमो भावः (राजयोगज्ञानम्)

राज्यं मुद्रां परं पुण्यं स्थानं तातं प्रयोजनम् ।
वृष्ट्यादि व्योमवृत्तान्तं व्योमस्थानान्निरीक्षयेत् ॥

**अर्थः** -राज्यं -मुद्रा(धनप्राप्तिविशेषः) पुण्यं - स्वाभीष्टस्थानं - पिता - स्वकृतकर्मणः प्रयोजनं - फलप्राप्तिः वृष्ट्यादि व्योम(आकाशविषयक) वृत्तान्तः इमे व्योमाख्य दशमभावाज्ज्ञेयाः ।

**பத்தாவது பாவம்** *(ராஜயோகமறிதல்)*

பொருள்: *ராஜ்யம்-ராஜ்ய ஸம்பந்தமான விஷயங்கள் தனப்ராப்தி விஷயமானவைகள், புண்யம், தான் விரும்பிய இடத்தைப் பெறுதல். தந்தையைப் பற்றியவைகள். தான் எடுத்துக்கொண்ட முயற்சி, வேலை இவைகளுக்குக் கிடைக்கும் பலன். மழையைப் பற்றியதும், மழையைப் பற்றி அறிவதற்காதாரமான விண்வெளியைப் பற்றிய அறிவு முதலான வைகளை பத்தாவது பாவத்தைக் கொண்டு ஊஹித்துக் கூறவேண்டும். (அரசர்களுக்கு திக்விஜயத்தின் போதும் அல்லது மற்ற விஷயங்களில் அவர்கள் எதிர்பார்க்கும் தனலாபமறிதல்).*

## एकादशोभावः

गजाश्वयानवस्त्राणि सस्यकाञ्चनकन्यकाः ।
विद्वान्विद्यार्थयोर्लाभं लक्षयेल्लाभलग्नतः ॥

**अर्थः** -गजः -अश्वः -यानं-वस्त्रं सस्यं-काञ्चनं-कन्यका - विद्वान् - विद्या - अर्थलाभश्च - इमे विषयाः एकादश भावाज्ज्ञेयाः ॥

### பதினொன்றாவது பாவம்

பொருள் : *யானை*, குதிரை இவைகளைப் போன்ற மற்ற வாஹனங்களையும், ஆடை, பயிர், தங்கம், பெண், புலவன், கல்வி, பொருள் கிடைக்கும் வழி, லாபம் இவைகளைப் பற்றியவைகளை பதினொன்றாம் பாவத்தைக் கொண்டு ஊஹித்துக் கூறவேண்டும்.

## द्वादशोभावः

त्यागभोगविवादेषु दानेष्टकृषिकर्मसु ।
व्ययस्थानेषु सर्वेषु विद्धि विद्वद् व्ययं व्ययात् ।

**अर्थः** -त्यागः कार्यविशेषस्य त्यागः भोगः सुखं, विवादः, सभामध्ये अथवा मन्त्रालोचने, परस्परं विवादः, दानं, द्रव्य त्यागः, स्वाभीष्ट कृषिकर्मज्ञानं, द्रव्य व्ययं च व्ययात् , द्वादश भावाज्ज्ञेयाः विषयाः ।।

सामान्यविधिप्रकरणं समाप्तम्

### பன்னிரண்டாவது பாவம்

பொருள்: த்யாகம்(செலவு)போகம்(சுகம்) இவைகளைப் பற்றிய விவாதங்களை (பொருளைச் செலவு செய்யும் விஷயத்தில் எவை எவைகளுக்காக செலவு செய்ய வேண்டும். எவைகளுக்காக செலவு செய்யக்கூடாது என்பது பற்றியும், இல்லற இன்பத்தையனுபவிப்பது பற்றியும் எழும் ஐயப்பாடுகளைப் பற்றி ஒருவருக் கொருவர் கருத்து பரிமாற்றம் செய்துகொள்ளுதல் என்பது கருத்து). பிறருக்கு தானமாகக் (இனாமாக) கொடுப்பது. ஒருவன் விரும்பிய வேலையைச் செய்வது தொடர்பான விஷயங்கள் அல்லது ஒருவன் விரும்பிய பயிர் சாகுபடி செய்வது தொடர்பான விஷயம். ஒரு

குறிப்பிட்ட செயலைச் செய்வதற்கு அல்லது பரஸ்பரம் விருத்தமான இருவிஷயங்களில் ஒன்றைத் தக்க ஆதாரங்களுடன் நிர்ணயிப்பது. பொருள் நஷ்டம். இவைகளைப் பற்றி பன்னிரண்டாம் பாவத்தைக் கொண்டு ஊஹித்துக் கூறவேண்டும்.

குறிப்பு: ஒருவர் சோதிடரை அனுகி ப்ரச்னம் கேட்டால் சோதிடர் ப்ரச்னம் கேட்கப்பட்ட வேளையை ஆதாரமாகக் கொண்டு லக்னத்தையமைத்து, லக்னம் முதல் ஏனைய பன்னிரண்டு பாவங்களையும் அவைகளில் நிற்கும் கோள்களையும் அறிந்து ராசி சக்கரத்தை அமைத்து நவக்ரஹங்களையும் இஷ்ட தெய்வத்தையும் வணங்கிவிட்டு, கேட்கப்பட்ட விஷயம் எந்தபாவத்தைச் சேர்ந்தது என்பதைத் தெரிந்துகொண்டு, அந்த பாவம் எத்தினையாவது பாவம் அதில் நிற்கும் கோள்கள் மற்ற ராசிகளில் நிற்கும் கோள்கள். அவைகளின் நிலை, பார்வை, சேர்க்கை, பலாபலம் இவைகளனைத்தையும் மனதிற் கொண்டு பலன் கூறவேண்டும் என்பதற்காக முதன் முதலாக ராசிகள், கோள்கள் இவைகளின் லக்ஷணம் கூறப்பட்டபின் எந்தெந்த பாவங்கள் உதயமானால் எந்தவிதமான பலன் கூறவேண்டும், அந்த பாவங் களைக்கொண்டு எந்தவிதமான விஷயங்களை கேட்பவனுக்கு ஊஹித்துக் கூறவேண்டும் என்பதற்காக 12 பாவங்களிலிருந்தும் அறியக் கூடிய விஷயங்களையும் சுருக்கமாக தாஜிக நூலை ஆதாரமாகக்கொண்டு கூறப்பட்டிருக்கிறது. ப்ருஹஜ் ஜாதகத்தில் கூறப்பட்டவைகளையும் ஆங்காங்கே தேவையான இடங்களில் சேர்க்கப்பட்டுள்ளன.

***பொது விதிப்ரகரணம் நிறைவுற்றது***

## கிரஹங்களின் சத்ரு, மித்திரன், ஸமன் இவைகளைக் காட்டும் சக்கரம்

| | சூரியன் | சந்திரன் | செவ்வாய் | புதன் | குரு | சுக்கிரன் | சனி |
|---|---|---|---|---|---|---|---|
| சூரிய னுக்கு | - | மித்ரன் | மித்ரன் | சமன் | மித்ரன் | சத்ரு | சத்ரு |
| சந்திர னுக்கு | மித்ரன் | - | சமன் | மித்ரன் | சமன் | சமன் | சமன் |
| செவ்வா யிக்கு | மித்ரன் | மித்ரன் | - | சத்ரு | மித்ரன் | சமன் | சமன் |
| புத னுக்கு | மித்ரன் | சத்ரு | சமன் | - | சமன் | மித்ரன் | சமன் |
| குரு வுக்கு | மித்ரன் | மித்ரன் | மித்ரன் | சத்ரு | - | சத்ரு | சமன் |
| சுக்கிர னுக்கு | சத்ரு | சத்ரு | சமன் | மித்ரன் | சமன் | - | மித்ரன் |
| சனிக்கு | சத்ரு | சத்ரு | சத்ரு | மித்ரன் | சமன் | மித்ரன் | - |

श्रीः

# ॥ प्रश्नशास्त्रम् ॥

(नारायणसिद्धप्रणीतम्)

## प्रथमोऽध्यायः

### प्रार्थना

नारायणं परमपूरुषमादिदेवं
ज्योतिर्मयं शुभकरञ्च चराचरेशम् ।
शान्तं प्रणम्य शिरसा द्विजपुङ्गवानां
प्रश्नाय वैष्णव महं प्रकरोमि शास्त्रम् ॥

### ग्रन्थकर्तुः प्रतिज्ञा

श्रीब्रह्मदासनयजा तनयः सुविद्वान्
श्रीमान्गुसाधिनृपतिर्यदुनाथभक्तः ।
वाराहताजिकमुकुन्दमतं समीक्ष्य
नारायणः परमशास्त्रमिदं चकार ॥

## ஆரூட நூல்

குஸாதி ந்ருபதியினால் இயற்றப்பட்டது

### கடவுள் துதி

(இ-ள்): ஜ்யோதிர்மயமான உருவத்தையுடையவனும் சராசரங்களாகிய உலகமனைத்துக்கும் ஈச்வரனும் நன்மையைச் செய்பவனும் சாந்த ஸ்வரூபனும் ஆதிதேவனும், பரம்பொருளான ஸ்ரீமந்நாராயணனை வணங்கி த்விஜச்ரேஷ்டர்களும் கடவுளிடம் ஈடுபாடு உடையவர்களுமான பெரியோர்களின் வினாக்களுக்கு விடையளிக்கவல்ல ப்ரச்னநூலை (ஆரூட சாத்திரத்தை) விரிவாகவும் விளக்கமாகவும் செய்(ய இருக்) கிறேன்.

நூன்முகம்(அவையடக்கம்)

சோதிடநூல் முதலான பல சிறந்த நூல்களை அறிந்திருக்கின்ற ப்ரும்மதாஸர் நயஜா தம்பதிகளின் புதல்வரும், சிறந்த கல்வியாளரும், கிருஷ்ண பக்தருமான குலாதிந்ருபதியான நாராயணன் என்பவர் வராஹர், தாஜிகர், முகுந்தர் இவர்களின் கருத்துக்களை நன்கு ஆராய்ந்து இச்சிறந்த சாஸ்த்திரத்தை (ஆருட சாத்திரத்தை) இயற்றி யுள்ளார்.

குறிப்பு: ப்ரச்ன சாஸ்திரம் என்பது ஒருவர் தாம் விரும்பிய ஒன்றைத் தெரிந்துகொள்ள விரும்பி சோதிட வல்லுநரை அணுகி கேட்பாராகில் அவருக்கு அவர் கேட்கும் காலத்தையே ஆதாரமாகக்கொண்டு லக்னம் முதலான 12 ராசிகளை அமைத்து அவைகளில் நிற்கும் கோள்களின் தன்மையை அறிந்து பலன் சொல்லுவதற்கான கருத்துகளைக் கொண்ட நூல் ஆகும். (ஆருட நூல் எனக் கூறலாம்).

## ज्यौतिषकलक्षणं - प्रशंसा च

दशभेदं ग्रहगणितं जातकमवलोक्यनिरवशेषमपि ।
यः कथयति शुभमशुभं तस्य न मिथ्या भवेद्वाणी ॥(उत्पलः - 7)

சிறந்த சோதிடரின் இலக்கணம்

(இ.ள்) : கோள்களின் மிக்க ஒளியையுடைய தன்மை, பன்னிரண்டு பாவங்கள் முதலானவைகளை கணித சாஸ்திரப்படி அறிந்து சோதிடர் ஒருவனுடைய ஜாதகத்தை ஆராய்ந்து பலன் சொல்வாரேயானால் அந்த சோதிடருடைய வாக்கு பயனற்றதாகாது. பயனுள்ள தாகவே இருக்கும் என்பது உத்பலர் என்ற அறிஞரின் அறிவுரை. ஆதலின் நன்கு சோதிடநூலைக் கற்றுணர்ந்திருக்கும் சோதிடரையே அணுகவேண்டும் என்பது கருத்து.

सम्यग्विचार्य लग्नं ब्रूयात्प्रश्नं सकृद्यथा शास्त्रम् ।
यस्त्वेकं ब्रूतेऽसौ तस्य न मिथ्या भवेद्वाणी ।।(चण्डेश्वरप्रश्नतन्त्रे 6 श्लोकः)

**अर्थः** -प्रष्टा एककाले प्रश्नमेकमेव कुर्यात् । तदा ज्यौतिषिकः यथाशास्त्रं लग्न भावं समीक्ष्य फलं ब्रूयात् । तथा यदि प्रष्टा ज्यौतिषिको वा कुर्यात् तदानीं ज्यौतिषिकस्य वाणी न मिथ्या भवेत् ।।

(இ.ள்) : ப்ரசனம் கேட்பவர் தான் அறிய விரும்பும் விஷயத்தைத் தெரிந்துகொள்ளுவதற்கு ஒரு தடவை மட்டில் ப்ரச்னத்தைக் கேட்க வேண்டும். அப்பொழுது சோதிடர் ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னத்தைக் கொண்டு சாஸ்திரப்படி நன்கு ஆராய்ந்து பலன் கூற வேண்டும். சோதிடரால் அவ்வாறு சாஸ்திரப்படி ஆராய்ந்து கூறப்பட்ட பலன் பயனற்றதாக இருக்காது. பயனுள்ளதாகவே இருக்கும் என்று சண்டேச்வரர் ப்ரச்ன தந்திரத்தில் கூறப்பட்டிருக்கிறது. (ப்ரச்னம் கேட்பவன் ஒரே சமயத்தில் ஒரு முறைதான் கேட்கவேண்டும் என்பது கருத்து).

## प्रश्न प्रकारः

*प्रष्टा प्रणम्य हरि(मभीहरिमिन्द्रककुप्मुखस्यो
ज्योतिर्विदं सकलशास्त्रकलाविदग्धम् ।
आहूयसाङ्गविदितं फलपुष्परत्न-
हस्तः प्रसन्नवचनै सकृदेव पृच्छेत् ।। 5

*तस्माञ्नृपः कुसुमरत्नफलाग्रहस्तः प्रातः प्रणम्य वरयेदपि प्राङ्मुखस्थः ।
होराङ्गशास्त्रकुशलन्हितकारिणश्च संहृत्य दैवगणकान्सकृदेव पृच्छेत् ।।
- ताजिके, प्रश्नतन्त्रे 3 श्लोकः ।

## ப்ரச்னம்(ஆரூடம்)கேட்கப்படவேண்டியமுறை

பொருள் : ப்ரச்னம் கேட்க விரும்பும் எவரும் தாம் விரும்பிய காரியத்தை அறிவதின் பொருட்டு ஸ்ரீமந்நாராயணனை முதலில் வழிபட்டுப் பின்பு அங்கங்களோடு கூடின அடிப்படை சாஸ்திரங்கள் அனைத்தையும் (வேதங்கள் வேதாங்கங்களான சிக்ஷை, ஜ்யோதிஷம் முதலான நூல்களை) அறிந்திருக்கும் சிறந்த சோதிடநூல் வல்லுநரை பழம், புஷ்பம், தனம் இவைகளுடன் அணுகி மிக்க மகிழ்ச்சியுடன் தான் விரும்பிய விஷயத்தையறிவதற்கு ஒரு முறை மட்டும் சோதிடரைக் கேட்கவேண்டும்.

## युगपत् बहूनां प्रश्नानां सम्भवे निरूपणप्रकारः

आदिमं लग्नतो ज्ञानं चन्द्रस्थानाद्द्वितीयकम् ।
सूर्यस्थानात्तृतीयं स्यात्तुर्यं जीव गृहाद्भवेत् ॥

बुधभृग्वोर्बलीयः स्यात्तद्गृहात्पञ्चमं पुनरित्यादिरुक्तः ॥

(चण्डेश्वरप्रश्नतन्त्रे 5 श्लोकः)

**अर्थः**-यद्यपि वराहवाक्यानुसारतः पूर्वं प्रष्टा सकृदेव पृच्छेदि-त्युक्तं तथापि एकस्मिन्नेव समये - एकः अथवा बहवः आगत्य बहुप्रकारेण प्रश्नेकृते कथं प्रश्नस्योत्तरं देयं इति वदति अस्मिन्श्लोके यथा - प्रथमं पृष्टस्य प्रश्नस्य प्रश्नकालोत्थितलग्नतो द्वादश भावानां स्थित्यादिकं ज्ञात्वा उत्तरं देयम् द्वितीयस्य चन्द्रलग्नात् तृतीयस्य सूर्यस्य स्थानाच्छतुर्थस्य जीवस्य (गुरोः) स्थानात् पञ्चमस्य तु बुधगुर्वोः मध्ये यः बलीयान् तस्य सम्स्थानाद्भावादित्यादि क्रमेण पुनः पुनः एवं क्रमेणैव प्रश्नानामुत्तरं देयम् ।

## ஒரே சமயத்தில் ஒருவரோ அல்லது பலரோ பல வினாக்களை கேட்டால் பலன் சொல்லும்முறை

பொருள் : முதல் மூன்றாவது சுலோகத்தில் தான் விரும்பியதைக் கேட்டு அறிந்துகொள்ள விருப்பமுடையவன் சோதிடரை அணுகி ஒருமுறை (ஒரு தடவை) தான் கேட்க வேண்டும் என்று கூறப்பட்டிருப்பினும், ஒருவரே பல வினாக்களை எழுப்புவதும் இயற்கை, அல்லது பலர் வந்து கேட்கவும் கூடுமாதலால் அவ்வாறான நிலையில் சோதிடர் முதன்முதலில் கேட்கப்பட்ட ப்ரச்னத்திற்கு ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னத்தைக் கொண்டும், இரண்டாவது ப்ரச்னத்திற்கு மதியிருக்கும் ராசியை லக்னமாகக்கொண்டு அதிலிருந்தும், மூன்றாவது ப்ரச்னத்துக்கு சூரியன் நிற்கும் ராசியைக் கொண்டும், நான்காவது ப்ரச்னத்துக்கு குரு நிற்கின்ற இராசியைக் கொண்டும் ஐந்தாவது ப்ரச்னத்துக்கு புதன்-சுக்கிரன் இவர்களுள் எவர் பலமுள்ளவரோ அவர் நிற்கின்ற இராசியைக் கொண்டும், லக்னம் முதலியவைகளை அமைத்துக் கொண்டு பலன் கூறவேண்டும். இவ்வாறு மேலும் மேலும் கேட்கப்படுகின்ற ப்ரச்னங்களுக்கு விடையளித்தல் வேண்டும் என்று சண்டேச்வர ப்ரச்னத்தில் கூறப்பட்டிருக்கிறது.

## प्रश्नकालिकलग्नादि द्वादशभावाज्ज्ञेयाः सामान्यविषयाः

यो यो भावः स्वामी दृष्टो युतो वा सौम्यैर्वास्यात्तस्य तस्यास्ति वृद्धिः ।
पापैरेवं तस्य भावस्य हानिर्निर्देष्टव्या पृच्छतो जन्मतो वा ॥

सौम्ये विलग्ने यदि वा स्ववर्गे शीर्षोदये सिद्धिमुपैति कार्यम् ।
अतो विपर्यस्तमसिद्धिहेतुः कृच्छ्रेण संसिद्धिकरं विमिश्रम् ॥ (षट्पञ्चाशिकायां)

**अर्थः** -प्रश्नकालोत्थितः यो यो भावः तत्स्वामि दृष्ठः युतो वा, तथा सौम्यैः शुभैर्दृष्टः युतो वा स्यात् तस्य भावास्य वृद्धिः भवेत् पापैः दृष्टः युतो वा यदि स्यात्तदा तस्य भावस्य हानिः भवेत् । एवं प्रश्नकालोत्थितलग्ने सौम्यैर्युक्तेऽथवा स्वर्गे अथवा शीर्षोदय राशिषु मिथुन, सिंह, कन्या, तुला, वृश्चिक धनूराशिषु यस्मिन्कस्मिन्नपि शुभे सति प्रष्टुः कार्यासिद्धि-विपर्यये नैव कार्यसिद्धिः अथवा विमिश्रं स्यात् ॥

### ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னம் முதலான 12 பாவங்களைக் கொண்டு அறிய வேண்டிய பொதுப் பலன்கள்

பொருள் : *ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னம் முதல் 12 பாவங்களுள் எந்தெந்த பாவங்களில் அதனதன் பாவாதிபதிகள் நிற்கின்றானோ அல்லது அவனால் பார்க்கப்பட்டதாக இருக்கின்றனவோ இதுபோன்று சுபக்கிரஹங்களுடன் கூடியவைகளாகவோ அல்லது பார்க்கப்பட்டவைகளாக இருக்கின்றனவோ அந்த பாவங்களுக்கு விருத்தியை செய்கின்றவைகளாக அமையும். சுபபலன்கள் ஏற்படும். இதற்கு மாறாக பாபர் நின்றாலும் பாபர்களால் பார்க்கப்பட்டாலும் அந்தந்த பாவங்களிலிருந்து சுப பலன்கள் கிடைக்காது. ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னத்தில் சுபர்கள் நின்றாலும் அல்லது அவைகளினுடைய வர்க்கத்தில் நின்றாலும் அல்லது சீர்ஷோதய ராசிகளான மிதுனம், ஸிம்மம், கன்னி, துலாம், விருச்சிக ராசிகளில் ஏதாவது ஒரு ராசியில் சுபர்கள் நின்றாலும் ப்ரச்னம் கேட்பவ னுடைய காரியம் ஸித்திக்கும். இதற்கு மாறுபட்டு பாபர்கள் நின்றாலும் முன் கூறப்பட்ட ராசிகளைத் தவிர மற்ற ப்ருஷ்டோதயராசிகளில் நின்றாலும் சுப பலனையளிக்கமாட்டார்கள்.*

## प्रत्येकभावप्रश्ननिरूपणम्

### सामान्यविधिः

भूतं भविष्यन्मम किं कथयति जातपृच्छायाम् ।
लग्नपतेः शशिनो वा बलमन्वेष्यं बलाभावे ॥ 1

दृष्ट्वा नवांशबलं शुभदृग्योगं च सर्व कालेषु ।
प्रष्टुः शुभमादेश्यं विपरीतं व्यत्ययादेषा ॥ 2

लग्नेशो मूसरिफो यस्मादतीतमाख्येयम् ।
येन युतस्तस्माद्भवदेष्यं योक्ष्यते तस्मात् ॥ 3

यदि लग्ने लग्नपतिः सौम्य युतो वा विलोकितः सौम्यै : ।
तत्प्रष्टुर्व्याकुलता शरीरदोषा विनश्यन्ति ॥ 4

पापो यदि लग्नपतिस्तदा कलिव्याधिधननाशाः ।
सौम्ये निर्वृतिबुद्धिर्द्रव्याप्तिः सौख्य मतुलश्च ॥ 5 (प्रश्नतन्त्रम्)

### ஆரூடம் கேட்கப்படும்பொழுது பலன் சொல்லும் முறை

### பொதுவிதி

பொருள் : ப்ரச்னம் கேட்கும் ஒருவன் அவன் எடுத்துக்கொண்ட காரியம் அல்லது செய்யப் போகிற காரியம் இவைகளைப் பற்றி கேட்டால் முதலாவதாக ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னத்துக்குடையவனுடையதோ அல்லது மதியினுடையதான பலத்தை அறியவேண்டும். லக்னாதிபனோ அல்லது மதியோ பலமற்றவர்களாக இருந்தால் நவாம்சத்தில் இவர்களது பலம் எவ்வாறு உள்ளது என்பதை அறிவதுடன், இவர்களுக்கு சுபர்களின் சேர்க்கை அல்லது பார்வை இருக்கிறதா என்பதையும் அறிந்து ப்ரச்னம் கேட்பவனுக்கு சுப பலன் கூற வேண்டும். லக்னாதிபனோ

அல்லது மதியோ பலமற்றவர்களாகவும் சுபர்களின் பார்வை அல்லது சேர்க்கையை பெறாமலும் அல்லது நவாம்சத்திலும் பலமற்றவர்களாக இருந்தால் முன்கூறப் பட்ட சுபபலன்கள் நடைபெறாது என்பதைக் கூற வேண்டும்.

ப்ரச்ன காலத்தில் லக்னாதிபன் "இத்தசாலம்" என்னும் யோகத்தை அடைந்தவனாக இருந்தால் நடைபெற்ற காரியத்தைப் பற்றியது எனத் தெரிந்து கொள்ளவேண்டும். லக்னாதிபன் எந்தக் கோளுடன் சேர்ந்து இத்தசாலம் என்னும் யோகத்தை அடைந் திருக்கிறானோ அதைக்கொண்டு நடக்கிற நடக்கப் போகிற செயல் அதனுடைய பலாபலன்களை அறிந்து கூறவேண்டும். ப்ரச்ன காலத்தில் லக்னாதிபன் லக்னத்தில் சுபர்களுடன் சேர்ந்தோ அல்லது பார்க்கப் பட்டோ இருந்தால் ப்ரச்னம் கேட்பவனுடைய சரீர தோஷம்(வியாதி), வியாகுலம் எல்லாம் மறைந்து விடும் என்றறிய வேண்டும். லக்னாதிபன் பாவியாக இருந்தால் ப்ரச்னம் கேட்பவனுக்கு பிறருடன் கலஹமும், நோய்வாய்படுதலும், தனநாசமும் ஏற்படும் என்று அறிய வேண்டும். சுபனாகில் மன அமைதி, அறிவு, சுகம், பணவரவும் ஏற்படும் என்றறிய வேண்டும்.

## लग्नभावः

## प्रश्नकालिकचरलग्नोदयः भावफलम्

लग्ने चरे हतलाभ ऋणास्पदार्थ-
लाभो गदक्षय गमागमबन्धमोक्षाः ।
प्रष्टुर्भवन्ति परचक्रमुपैति शीघ्रं
कल्याणवृद्धि(:)कलहोपशमाश्च सन्ति ॥

# ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னத்தைக்கொண்டு பலன்அறிதல்

## ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னம் சரராசியானால் ஏற்படும் பலன்

(இ.ள்) : ஒருவன் தான் விரும்பியதை அறிவதற்காக சோதிடரை அணுகி கேட்கப்பட்டபொழுது உதயமான லக்னம் சரராசியாகில் கேள்வி கேட்கப்பட்டவனுடைய திருடுபோன பொருள் மீண்டும் கிடைத்துவிடும். கடன் வழங்கப்பட்ட பணம் கடன்காரரிடமிருந்து திரும்பவும் வந்துவிடும். (பெற்றுவிடுவான்) வியாபார நிமித்தம் முதலீடு செய்யப்பட்ட பணத்திற்கு நல்ல வருவாய் கிடைக்கும். உடலிலுள்ள நோய் நீங்கிவிடும். வெளியூர் சென்றிருப்பவன் மீண்டும் நல்லபடியாகத் திரும்பி வருவான். பிறரிடம் (பகைவரிடம்) கட்டுப்பட்டிருப்பவன் அவனிடமிருந்து விடுபடுவான். (சிறைச்சாலையில் இருப்பவன் சிறையிலிருந்து விடுவிக்கப்படுவான் என்றும் கொள்ளல் தகும். அரசனாகில் பகைவனைப் போரில் அவனது படைகளை முறியடித்து வெற்றி கொள்வான். குடும்பத்தில் திருமணம் போன்ற மங்களகரமான நிகழ்ச்சிகள் மேன்மேலும் நடைபெறும். குடும்பத்தில் அல்லது வெளியுலகில் கலகங்கள் தோன்றியிருக்குமானால் அவைகள் நீங்கி சமாதானம் ஏற்படும். (என்பனவற்றையறிந்து கூறவேண்டும்).

## स्थिरलग्नभावफलम्

लग्ने स्थिरे परहतवस्त्वथास्पदार्थ
लाभो गदक्षयगमागमबन्धमोक्षाः ।
न स्युर्नचैतिपरचक्रमनर्थनाशः
कल्याणवृद्धिः कलहोपशमाश्च न स्युः ॥

## ஸ்திர ராசி உதயமானால் ஏற்படும் பலன்

ஒருவன் தான் விரும்பியதை அறிவதற்காகச் சோதிடரையணுகிக் கேட்கப்பட்ட பொழுது உதயமான லக்னம் ஸ்திர ராசியானால் முன்பு சரராசிக்குக் கூறப்பட்ட பயன்கள் எதுவும் நடைபெறாது. அதாவது கள்வனால் அல்லது மற்றொருவராலாவது களவிடப் பட்ட பொருள் கிடைக்காது. முதலீடு செய்யப்பட்ட பணத்திற்கு லாபம் கிடைக்காது. நோய்வாய்ப் பட்டவன் குணமடைவதும், வெளியூர் ப்ரயாணம் செய்தவன் மீண்டும் வருவதும், சுற்றத்தாருடன் ஏற்படும் உறவும், குடும்ப பாரத்திலிருந்து விடுபடுவதும், மேலும் அரசனாகில் பகைவனின் சேனையை முறியடித்து வெற்றி கொள்வதும், திருமணம் போன்ற நற்காரியங்கள் எதுவும் நடைபெறாது. (எனத்தெரிந்து கூறவேண்டும்).

## उभयलग्नभावफलम्

द्वयङ्गोदये हृतधनाप्तिरभीष्टवस्तु
ज्ञप्तिश्चिरेण गमागमबन्धमोक्षाः ।
प्रष्टुर्भवन्ति परचक्रमुपेत्य शीघ्रं
रोगी च जीवति श्रममनुभूय भूयः ॥

## உபயராசி(இரட்டைப்பட்டராசி) உதயமானால் ஏற்படும் பலன்

(இ.ள்) : இரட்டைப்பட்ட ராசிகளுள் (மிதுனம், கன்னி, தனுஸ், மீனம்) ஏதேனுமொன்று உதயமானால், அதில் சரராசி உதயமானால் சரராசிக்குக் கூறப்பட்ட பலனும், ஸ்திர ராசி உதயமானால் ஸ்திர ராசிக்குக் கூறப்பட்ட பலனும் ஏற்படும். (இரட்டைப்பட்ட ராசியில் முதற் பாதி பகுதி ஸ்திர ராசி. பின்பாதி பகுதி சர ராசி எனத் தெரிந்துகொண்டு பலன் கூறவேண்டும்.)

## प्रश्नकालिकचरस्थिरोभयेषु चन्द्रस्थितिफलम्

चरोदये शीतकरे चरे तथा
स्थिरोदये चन्द्रमसि स्थिरे स्थिते ।
द्वन्द्वोदये द्वन्द्वगते च हिमांशौ
फले विशेषाः खलु स्वयमूहनीयाः ॥ 8

ப்ரச்ன காலத்தில் உதயமான சரம்-ஸ்திரம்-உபயம் இவ்விராசிகளில் மதி நின்ற பலன்

(இ.ள்) : ***ப்ரச்ன காலத்தில் உதயமான சர ராசியிலோ, ஸ்திர ராசியிலோ, இரட்டைப்பட்ட ராசியிலோ மதி நின்றால் அந்தந்த ராசியின் தன்மையையும் மற்ற அம்சங்களையும் ஆய்ந்து சோதிடர் பலனைக் கூறவேண்டும்.***

## भुवनप्रदीपे

लग्नपतिर्यदिलग्नं कार्याधिपतिश्च वीक्षते कार्यम् ।
लग्नाधीशः कार्यं कार्येशः पश्यति विलग्नम् ॥

लग्नेशः कार्येशं विलोकयेल्लग्नपं तं कार्येशः ।
शीतगुदृष्टौ सत्यां परिपूर्णा कार्यसिद्धिः ॥

(இ.ள்) : ***லக்னாதிபன் லக்னத்தையும், கார்ய ஸ்தானமான 10க்குடையவன் 10மிடத்தையும் (அவனவனுடைய ஸ்தானத்தைப்) பார்த்தாலும், இது போன்று 10மிடத்துக்குடையவன் லக்னத்தையும் லக்னாதிபன் 10மிடத்தையும் பார்த்தாலும், லக்னாபதி 10மிடத்துக்குடையவனையும், 10மிடத்துக்குடையவன் லக்னாதிபதியையும் பார்த்தாலும், மதி லக்னத்தையோ, லக்னாதிபதியையோ காரியஸ்தானமான 10மிடத்தையோ***

10மிடத்துக்குடையவனையோ பார்த்தால் ப்ரச்னம் கேட்பவனுடைய காரியம் முழுமையாக வெற்றி பெறும்.

## केन्द्रादिषु सौम्यानां पापानां च ग्रहाणां स्थितिफलम्

सौम्यैर्ग्रहैर्नवमकर्म(पञ्चम)कण्ठकस्थैः
पापैस्तथाऽष्टमचतुष्टयवर्जितैश्च ।
सर्वार्थकार्यसुखसिद्धिरभीष्टलाभो
ध्वस्तं भवेत्सकलमेव विपर्ययेण ॥

### கேந்திரங்கள் முதலான ஸ்தானங்களில் சுபர்களும் அசுபர்களும் நிற்பதினால் ஏற்படும் பலன்

(இ.ள்) : ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னம் 1, 4, 5, 7, 9, 10ஆமிடங்களில் சுபர்கள் நின்று, முன் கூறப்பட்ட திரிகோண, கேந்திரங்களான 1, 4, 5, 7, 9, 10ஆமிடங்கள் நீங்கலாக ஏனைய 3, 6, 8, 11, 12ஆமிடங்களில் பாபர்கள் நின்றால் ப்ரச்னம் கேட்பவனுடைய (அவன் நினைத்த) காரியங்கள் அனைத்தும் சுபமாக நிறைவேறும். இவ்வாறில்லாமல் 3, 6, 8, 11, 12 ஆமிடங்களில் சுபர்களும் மற்ற 1, 4, 5, 7, 9, 10ஆமிடங்களில் பாவிகள் நின்றால் ப்ரச்னம் கேட்பவன் நினைத்த காரியங்கள் நடைபெறாது.

குறிப்பு: குரு, சுக்கிரன் இவர்கள் 1, 4, 7க்குடையவர்களாக இருந்து, 1, 4, 7ஆமிடங்களுள் ஏதேனுமொன்றில் நின்றால் நல்ல பலனை அளிக்கமாட்டார்கள். புதனுக்கும் இந்த தோஷம் உண்டு. குரு, சுக்கிரர்கள் கேந்திராதிபத்யம் அடையாதவர்களாக இருந்து (3, 6, 8, 11, 12க்குடையவர்களாக) 1, 4, 7, 10ஆமிடங்களில்

நின்றால் சுப பலனையளிப்பார்கள். ச்லோகத்தில் முதல் வரியில் 'கர்ம' என்ற சொல் கண்டகம் என்ற சொல்லாலேயே கிடைப்பதால் அதற்குப்பதில் 'பஞ்ச' பஞ்சம என்ற சொல்லை அடைப்புக்குறிக்குள் கொடுக்கப்பட்டிருக்கிறது.

## चरलग्नस्थितगुरुसूर्योफलम्

गुरौ विलग्ने तपने चरस्थे

प्रष्टापुमान्सौख्यजयौ च राज्यम् ।

स्वकार्यसिद्धिं क्षितिवस्त्रयान-

भोज्यास्पदार्थान्लभतेऽनुरूपान् ॥ 7

ப்ரச்ன காலத்தில் சரராசி உதயமாகி
அதில் குருவும் கதிரவனும் நின்றபலன்

(இ.ள்) : ப்ரச்னம் கேட்கப்பட்ட சமயம் உதயமான லக்னத்தில் குருவும், சரராசியாக ஏதேனுமொன்றில் கதிரவனும் நின்றால் ப்ரச்னம் கேட்ட மனிதன் அவன் எடுத்துகொண்ட காரியத்தில் வெற்றியையும், ஸௌக்கியத்தையும், அரசனாகில் போரில் வெற்றியையும் ஸௌக்கியத்தையும், பூமி, ஆடைகள், வாகனங்கள், தானியங்கள், முதலீடு செய்யப்பட்ட பணம் அல்லது அதற்குரிய வட்டி, இவைகளை அவரவர்களுடைய தகுதிக்கேற்றவாறு அடைவார்கள்(அவரவர்களுடைய காரியம் ஸித்தியடைந்ததாகிறது).

குறிப்பு: இங்கு முதல்வரி குரு லக்னத்திலும், யாதேனுமொரு சரராசியில் கதிரவனும் என்று பொருள் கூறும்படி அமைந்திருப்பினும் ப்ரச்ன காலத்தில் உதயமானது சரராசியாகில் ஏற்படும் பலன் கூறப்படவேண்டிய நிலையில் லக்னத்தை வேறாகக் கூறும்படி

அமைந்திருப்பது சரிதானா ? என்று தோன்றுகிறது. உதயமான லக்னமே சரராசியாகவிருந்து அதில் குருவும் கதிரவனும் நின்றால் என்று பொருள் கொள்வது உசிதமாக இருக்குமென்பது என் கருத்து.

## स्थिरलग्ने शीतांशु शुक्रसुरार्चितानां स्थिति अथवा दृष्टिफलम्

शीतांशुशुक्र(इज्यो )सुरार्चिताना-
मेको यदा स्वभवनं प्रपश्येत् ।
लग्ने स्थिरे स्थानसुखार्थलाभा-
न्समुन्नतिञ्चाशुलभेत मर्त्यः ॥

### ப்ரச்ன காலத்தில் ஸ்திரராசி உதயமாகி அதை மதி, சுக்ரன், புதன் இவர்கள் பார்ப்பதாலும் அல்லது நிற்பதாலும் ஏற்படும் பலன்

(இ.ள்): **ப்ரச்ன காலத்தில் ஸ்திரராசிகளுள் யாதேனும் ஒன்று உதயமாகி அதை சுக்கிரனோ, புதனோ, மதியோ பார்த்தால் ப்ரச்னம் கேட்பவன் பூமி, பொருள், மேன்மேலும் பதவி உயர்வு போன்றவைகளை அடைவதன் மூலம் சுகத்தையடைவான்.**

குறிப்பு: ஸ்திரராசி உதயமானால் அதுவே லக்னமாகும். அதை மதியோ, சுக்கிரனோ, புதனோ பார்க்க வேண்டு மானால், ஸ்திர லக்னத்துக்கு 7ஆமிடத்திலிருந்துதான் பார்க்க முடியும். ஸ்திர லக்னத்துக்கு 7ஆமிடம் ஸ்திர ராசியாகத்தானிருக்கும் என்பதால், ஸ்திர ராசியில் நிற்கும் சுக்கிரன், மதி, புதன் என்று கொள்ள வேண்டும். புதனுக்கு 5ம் பார்வை உண்டாகிலும் அதுவும் ஸ்திர ராசியாகவே இருக்குமென்பதை அறியலாம்.

## उभयलग्ने स्थितं बुधगुर्वोस्स्थितिफलम्

युग्मे विलग्ने शशिजश्च इज्यो
मेषं गतो भूमिसुतो यदा स्यात् ।
प्रष्टा पुमान्वित्तजयौ च राज्ये
स्थितां च सौख्यं लभते तदानीम् ॥ 12

## உபயராசி உதயமாகி அதில் புதனும் குருவும் நின்ற பலன்

(இ.ள்): ப்ரச்ன காலத்தில் உபய ராசிகளுள் ஏதேனுமொன்று உதயமாகி அதில் புதனும் குருவும் நின்று மேஷ ராசியில் அதற்குரிய செவ்வாய் நின்றால் ப்ரச்னம் கேட்பவன் பொருளையும் அவன் எடுத்துக்கொண்ட காரியத்தில் வெற்றியையும் அரசனாகில் போரில் வெற்றியையும் பொருளையும் பெற்று, இராஜ்யத்தில் ஸ்திரமாக இருந்துகொண்டு ஸுகானுபவங்களையும் பெறுவான்.

## मित्रगृहस्थितशुभग्रहफलम्

मित्रेक्षितो मित्रगृहे विलग्ने
शुभग्रहश्चाशु करोति पुंसाम् ।
स्वकार्यसिद्धिं विजयं समृद्धिं
नष्टार्थलाभं परमाश्च मैत्रीम् ॥ 13

## நட்புராசி உதயமாகி அதில் சுபர் நின்ற பலன்

(இ.ள்): ப்ரச்ன காலத்தில் எந்த ராசி உதயமாகிறதோ அதை எந்தக்கோள் பார்க்கிறதோ அந்தக் கோள் உதயமான ராசிநாதனுக்கு நட்புடையதாகவும், அந்த ராசியும் நட்புடையவனது ராசியாகவும் இருந்து அந்த

ராசியை பார்க்கும் கோள் சுபனாகவும் இருக்குமானால் ப்ரச்னம் கேட்பவன் தான் ஆரம்பித்த காரிய ஸித்தியையும், வெற்றியையும், இழந்த பொருளையும் அடைகிறான். நல்லவர்களுடன் சிறந்த நட்பையும் பெறுகிறான்.

குறிப்பு: ப்ரச்ன காலத்தில் உதயமான ராசியில் நிற்பவன் சுபனாகவோ அல்லது பார்ப்பவன் சுபனாகவோ இருந்து பார்க்கப்படும் ராசி பார்ப்பவனின் மித்திரனின் ராசியாக இருக்கவேண்டுமென்பது கருத்து. கோள்களில் மித்ரன், சத்ரு, ஸமன் என்ற நிலையையும் நட்பு முதலானவைகளை முன்பு அமைக்கப்பட்டிருக்கும் கட்டங்களிலிருந்து தெரிந்து கொண்டு பலன் கூறவேண்டும்.

## लग्नस्थितगुरोःशुक्रस्य च फलम्

लग्ने गुरौ स्थानसुखाम्बरार्थ
लाभस्सुविद्याऽथ सुखे तु इन्दुजे ।
शुक्रे विलग्नेऽर्थसुखास्पदाप्तिः
सूर्ये सदा कार्यविनाशरुग्भयम् ॥ 14

### ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னத்தில் குரு சுக்கிரன் நின்ற பலன்

(இ.ள்): ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னத்தில் குருவும் நான்காமிடமான ஸுக ஸ்தானத்தில் புதனும் நின்றால் ப்ரச்னம் கேட்பவன் நல்ல கல்வி, வாசஸ்தலம், ஆடை, பொருள்(தனம்), ஸுகம் இவைகளை அடைவான். சுக்கிரன் நின்றால் பொருள், ஸுகம், தான் ஈட்டி பாதுகாக்கப்பட்ட (பிறரிடம் கொடுத்து வைக்கப்பட்ட) தனம், இவைகளை யடைவான். சூரியன் நின்றால் ப்ரச்னம் கேட்பவன் எடுத்துக் கொண்ட காரியம் நிறைவேறாது போவதுடன் நோய்வாய்ப் படுவதும், பயமும் உண்டாகும்.

## लग्नस्थिताङ्गारकफलम्

लग्नस्थितं भूमिजमर्कपुत्रः
पश्येद्यदा शत्रुदृशा तदा स्यात् ।
चोराद्भयं रोगभयं विपत्तिः
स्त्रीभिः कलिर्वाऽग्निभयाभिघातः ॥ 15

## ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னத்தில் செவ்வாய் நின்ற பலன்

(இ.ள்) : ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னத்தில் செவ்வாய் நின்று அவனை சூரியனின் மகனான சனி சத்ருவாக இருந்துகொண்டு பார்த்தால் அப்பொழுது ப்ரச்னம் கேட்பவனுக்கு திருடனிடமிருந்தும், நோய்வாய்ப்படுதலின் காரணமாகவும் பயமும், ஆபத்தும், பெண்களால் கலகமும் நெருப்பினால் பயமும் அடிவாங்குதலும் ஏற்படும்.

குறிப்பு: *சனிக்கு 3, 7, 10ம் பார்வை உண்டு. ஆதலின் இந்த பாட்டுப்படி லக்னத்தில் நிற்கும் செவ்வாயை சனி பார்க்கவேண்டுமானால் லக்னத்துக்கு 4, 7, 11 ஆமிடங்களில், சனி நிற்கவேண்டும் என்று ஏற்படுகிறது.*

## लग्नस्थितमन्दराह्वोः फलम्

मन्दे विलग्नेऽर्ककुजेन्दुदृष्टे
विरोधकार्यार्थविनाशरोगाः ।
राहौ विलग्ने शशिसूर्यभौमैः
दृष्टेऽभिघातः कलहो भयं स्यात् ॥ 16

## ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னத்தில் சனி ராகு இவர்கள் நின்ற பலன்

(இ.ள்): ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னத்தில் சனி நின்று அவன் கதிரவனாலும் செவ்வாயினாலும் அல்லது மதியினாலும், அல்லது மூவரும் ஒரிடத்தில் நின்று அவர்களால் பார்க்கப்பட்டால் பிறரிடம் விரோதம், தான் எடுத்துகொண்ட காரியம் முற்றுப் பெறாமல் போவதுடன் பொருள் நஷ்டமும் நோய்வாய்ப்படுதலும் ஏற்படும். முன்கூறப்பட்ட லக்னத்தில் ராகு நின்று அவன் மதி, கதிரவன், செவ்வாய் இவர்களால் தனித்தனியே பார்க்கப்பட்டாலும், ஒரே இடத்தில் நின்று பார்க்கப்பட்டாலும், விரோதியிட மிருந்து அடிவாங்குதலும் கலஹமும் பயமும் ஏற்படும்.

குறிப்பு: கதிரவனுக்கு ஏழாமிடம், ஐந்தாமிடம் பார்வை உண்டு என்பதால் லக்னத்துக்கு 7ல் அல்லது 9மிடத்தில் நிற்பவனாக இருக்கவேண்டும். செவ்வாய்க்கு 4, 7, 8ம் பார்வை உண்டு என்பதால் லக்னத்துக்கு 6, 7 அல்லது 10மிடத்தில் நிற்கவேண்டும். மதிக்கு 7மிடம் பார்வை மட்டில்தான் என்பதால் 7மிடத்தில் நிற்பவனாக இருக்கவேண்டும் என்பது ஏற்படுகிறது. 3 கோள்களும் நிற்கக்கூடிய ராசி 7வது ராசி மட்டிலுமே. மற்ற ராசிகளில் கதிரவன் முதலானோர் தனித்தனியேதான் நின்று பார்ப்பவர் களாக இருக்க முடியும். ஆதலின் அவர்கள் நிற்குமிடத்தையும் மனதிற்கொண்டு பலனை ஊஹித்துக் கூறவேண்டும். ராகுவுக்கும் இந்த முறையைக்கொண்டு பார்த்துச் சொல்ல வேண்டும்.

## लग्नस्थितसूर्यचन्द्रयोःफलम्

लग्नस्थितं चन्द्रमथोष्णरश्मिं
पश्येद्यदा सूर्यसुतस्तदानीम् ।
कार्यार्थनाशो भयमुग्रमुग्र-
रोगा भवेयुः खलु पृच्छकानाम् ॥ 17

## ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னத்தில் கதிரவனும் மதியும் நின்று சனியினால் பார்க்கப்பட்ட பலன்

(இ.ள்): ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னத்தில் கதிரவனும் மதியும் நின்று சனியினால் (4, 7, 11மிடத்தில் நின்ற) பார்க்கப்பட்டால் ப்ரச்னம் கேட்பவன் எடுத்துக் கொண்ட காரியம் முற்றுப் பெறாமல் போவதுடன் பொருள் நஷ்டமும் மிக்க பயமும் பயங்கரமான நோய் ஏற்படுதலும் உண்டாகும்.

## पापैः दृष्टलग्नस्थचन्द्रफलम्

पापो नभस्थो मदनस्थितो वा
लग्नस्थितं शीतकरं प्रपश्येत् ।
प्रष्टुस्तदा स्थानसुखार्थनाशः
रोगोऽथवा मृत्युभयाभिघातः ॥ 18

## ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னத்தில் நிற்கும் மதியை பாவிகள் பார்ப்பதால் ஏற்படும் பலன்

(இ.ள்): ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னத்தில் நின்ற மதியை பாவியான கோள் 7, 10ஆமிடங்களுள் ஏதேனுமொன்றில் நின்று பார்த்தால் ப்ரச்னம் கேட்பவன் தனது ஸ்தானத்தை (பதவியை) இழந்தவனாகவும் உடல் நலக்குறைவு, பொருளழிவு, நோய்வாய்ப்படுதல் அல்லது மரணம் ஏற்படுதல் இவைகளை அடைவான்.

குறிப்பு: 10ஆமிடம் நின்று லக்னத்தைப் பார்ப்பவன் செவ்வாய் ஒருவனாகவே இருக்க முடியும். அவன் ஒருவனுக்குத்தான் 4ஆமிடப் பார்வை உண்டு. 10ஆமிடமிருந்து லக்னம் 4ஆமிடமாகும். மற்ற கோள்களுக்கும் செவ்வாய்க்கும் 7ஆமிடப்பார்வை உண்டு. ஆதலின் 7, 10ஆமிடங்களுள் ஏதேனும்

*ஒன்றில் நின்ற செவ்வாயினாலோ அல்லது 7ல் நின்ற பாவியினாலோ, செவ்வாய் அல்லது மற்ற பாவியினாலோ பார்க்கப்பட்டால் என்று பொருள் கொள்ளவேண்டும்.*

## लग्नादि द्वादशभावेषु स्थितानां पापानां फलम् - I

क्रूरग्रहाः द्वादशधामसंस्थाः
सर्वेऽथवा लाभगता बलाढ्याः ।
विलग्नजामित्रविनाशगा वा
सर्वार्थकार्यास्पदनाशदाःस्युः ॥ 19

## லக்னத்துக்கு 1, 7, 8, 11, 12ஆமிடங்களில் பாபர்கள் நின்ற பலன்

(இ.ள்) : *பாபக்ரஹங்கள் லக்னம் 7, 8, 11, 12ஆமிடங்களில் தனித்தனியாகவோ அல்லது ஒன்று சேர்ந்தோ இருந்தால், ப்ரச்னம் கேட்பவன் எடுத்துக் கொண்ட காரியம் முற்றுப் பெறாது போவதுடன் பொருள் நஷ்டமும் கௌரவம் குறைதலும் ஏற்படும்.*

குறிப்பு: *3, 6, 11ஆமிடங்களையடைந்த பாவிகள் நல்ல பலனையே அளிப்பார்கள். ஆனால் இப்பாட்டில் 11ல் பாவிகள் நின்றால் எல்லாம் அழிந்துவிடும் என்று கூறியிருப்பது ஆராய்வதற்குரியது.*

## लग्नादिषु स्थितानां पापग्रहाणां फलम्

लग्नास्तधर्म हिबुकात्मजरन्ध्रकर्म-
दुश्चक्यगा वा बलाढ्याश्चाशुभग्रहेशाः ।
कार्याभिघातमशुभं सुखवित्तनाशं
कुर्युर्विरोघं कलहं परिपृच्छकानाम् ॥ 20

**ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னம் முதலான இடங்களில் பாப கிரஹங்கள் நின்ற பலன்**

(இ.ள்): *ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னம் 3, 4, 5, 7, 8, 9 அல்லது 10ஆமிடங்களுள் ஏதேனுமொன்றில் பாபக்ரஹம் நின்றால் ப்ரச்னம் கேட்பவன் எடுத்துக் கொண்ட காரியம் முற்றுப்பெறாது. பொருளழிவும் ஏற்படும். உடல்நலக்குறைவும், பிறருடன் விரோதமும் கலஹமும் ஏற்படும்.*

குறிப்பு: *பாபக்ரஹங்கள் 3, 6, 8, 11ல் நின்றால் சுப பலனை அளிப்பார்கள். சுபர்கள் நின்றால் நல்ல பலனை அளிக்க மாட்டார்கள் என்பது நியதி. அவ்வாறிருக்க 3, 8ல் அசுபர்கள் நின்றால் அசுப பலனை கொடுப்பதாகக் கூறியது எங்ஙனம் ?*

## लग्नादिषु स्थितानां, शुभदृष्टिहीनानां पापानां फलम्

**1**

लग्नाष्टवित्तात्मजकण्टकस्थाः
पापा न सौम्यैस्सहितेक्षिता वा ।
कार्याभिघातं जयवित्तनाश-
मिष्टार्थनाशश्च भयं प्रकुर्युः ॥

**ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னம் முதலான இடங்களில்(சுபர்களுடன் சேர்ந்தோ அல்லது பார்க்கப்படாமல் இருக்கும்)பாபர் நின்ற பலன்**

(இ.ள்): *ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னம் 2, 4, 5, 7, 8 அல்லது 10மிடங்களுள் ஏதேனும் ஒன்றில் பாபக்ரஹம் நின்று அதை சுபர்கள் பார்க்காவிட்டாலும் சுபர்களுடன் சேர்ந்து நிற்காவிட்டாலும், ப்ரச்னம்*

கேட்பவன் எடுத்துக்கொண்ட காரியம் நிறைவேறாமல் நின்றுவிடுவதுடன், பகைவனிடம் தோற்றுப் போவதுடன், பொருள் அழிவும், தான் விரும்பிய பொருள் நாசமடைதலும், பயமும் ஏற்படும்.

**2**

पापैस्तनुस्थैःकलहोऽङ्गपीडा-
जामित्रसंस्थैः गमनावरोधः ।
कर्मक्षयःकर्मगतैःसुखस्थैः-
विरोधसौख्यक्षयसद्मभेदाः ॥ 22

**முன்கூறப்பட்டதின் இரண்டாவது ப்ரபேதம்**

(இ.ள்): ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னத்தில் பாவிகள் நின்றால், கலஹமும், சரீர பீடையும் 7மிடத்தில் நின்றால் பிரயாணத்துக்கு தடை ஏற்படுதலும், 10மிடத்தில் நின்றால் காரிய நாசமும் 4மிடத்தில் நின்றால் உடல்நலக் குறைவும் வாசஸ்தலத்தை இழப்பதும் ஏற்படும்.

**3**

चरोदये पापयुते च पापैः
दृष्टे स्वकार्यार्थसुकास्पदानाम् ।
नाशो भवेत्सर्वशुभक्रियाणां
प्रष्टुस्तदा स्थैर्यगुणप्रणाशः ॥ 23

**முன்கூறப்பட்டதின் 3வது ப்ரபேதம்**

(இ.ள்): ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னம் சரராசியாகவிருந்து பாபர்கள் நின்றோ அல்லது

பாபர்களால் பார்க்கப்பட்டதாகவோ இருக்குமானால் ப்ரச்னம் கேட்பவன் எடுத்துக்கொண்ட காரியம் முற்றுப்பெறாமல் போவதும் உடல்நலத்தையும் கௌரவம், செல்வம் இவைகள் போவதுடன், எந்த நற்காரியங்கள் செய்ய முற்பட்டாலும் அவைகள் நடைபெறாமல் போவதும், தைரியத்தன்மை அழிந்து போவதும்(கோழைத்தனம் ஏற்படுவதும்)உண்டாகும்.

**4**

लग्ने गुरौ स्थानसुखार्थलाभः
बुधे तु विद्याधनधीसुखाप्तिः ।
शुक्रे तु लग्ने शुभकार्यसिद्धिः
स्त्रीभोगसौख्यास्पदवित्तलाभः ॥ 24

**முன்கூறப்பட்டதின் 4வது ப்ரபேதம்**

(இ.ள்): *ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னத்தில் குரு நின்றால் பதவி, ஸுகம், பொருள் வரவும், புதன் நின்றால் படிப்பும் பொருளும், நல்ல அறிவும் சுகமும், சுக்கிரன் நின்றால் நற்காரியங்கள் ஈடேறுதலும் ஸ்த்ரீபோகமும், சுகமும் புகழும் பொருளும் கிடைக்கும்.*

## नीचभावप्राप्तानामथवास्तमितानां ग्रहाणां फलम्

नीचस्थितास्चास्तमिताश्च पाप-
युक्तास्तथा शत्रुजिता विरूक्षाः ।
बलेन हीनास्त्वणु प्रमाणं वा (वा प्रमाणं ?)
कर्तुं न शक्ताः सुकार्यसंपदः ॥ 25

## ப்ரச்ன காலத்தில் நீசத்தன்மை அல்லது அஸ்தமனத்தையடைந்த கோள்களின் பலன்

(இ.ள்): ப்ரச்ன காலத்தில் எந்தக் கோளாவது நீசபாவத்தையடைந்திருந்தாலும் அந்தந்த தோஷத்தை அடைந்திருந்தாலும், பாபர்களுடன் சேர்ந்திருந்தாலும் அல்லது பாபர்களால் பார்க்கப்பட்டாலும் சத்ரு கோளினால் ஜயிக்கப்பட்டதாக இருந்தாலும், உக்ரமான தன்மையை உடையதாகவும் பலமற்றதாகவும் இருக்குமானால் அந்தக் கோள்கள் அணு அளவுகூட நற்காரியங்களைச் செய்பவைகளாகவும் ஐச்வர்யங்களைக் கொடுக்கும் சக்தியுடையவைகளாகவும் இரா.

குறிப்பு: சூரியன் முதலான 9 க்ரஹங்களுக்கும் உச்சவீடு - நீசவீடு என்று ஏற்பட்டிருக்கிறது. சூரியனுக்கு மேஷம், சந்திரனுக்கு ரிஷபமும், குருவுக்குக் கடகமும், சனிக்கு துலாமும், செவ்வாய்க்கு மகரமும், புதனுக்கு கன்னியும், சுக்ரனுக்கு மீனமும் (ராகுவுக்கு விருச்சிகமும் கேதுவுக்கு ரிஷபமும்) உச்சவீடுகள். உச்சவீட்டுக்கு 7வது ராசி நீசராசி. ஸூரியனில் எந்த க்ரஹம் மறைந்திருக்கின்றதோ அதை அஸ்தங்கதம் என்றும் கூறுகிறது. சூரியன் முதலிய ஏழு கிரஹங்களின் உச்சம், நீச்சம் முதலியவைகளைக் காட்டும் அட்டவணையிலிருந்து தெரிந்து கொள்ளவும்.

## मदीयां कार्यं कदा सिद्धिं गमिष्यतीति प्रश्ने

पश्येद्विलग्नं यदि लग्नाथः
कार्याधिपः कार्यगृहं प्रपश्येत् ।
कार्येश्वरो लग्नगतश्च पश्ये-
द्लग्नेश्रं सिद्धिमुपैति कार्यम् (शीघ्रम्) ॥ 26

## என்னுடைய காரியம் எப்பொழுது நிறைவுபெறும் என்று கேட்டால்

(இ.ள்): ப்ரச்னம் கேட்பவன் அவன் எடுத்துக் கொண்ட காரியம் எப்பொழுது நிறைவேறும் என்று கேட்கின்ற சமயம் உதயமான லக்னத்தை அந்த லக்னத்துக்குடையவன் பார்த்தாலும், கார்யாதிபன் (10க்குடையவன்) அவனது வீட்டைப் பார்த்தாலும், அல்லது 10க்குடையவன் உதயலக்னத்தையடைந்து லக்னாதிபனைப் பார்த்தாலும் ப்ரச்னம் கேட்பவனுடைய காரியம் விரைவில் நிறைவேறும்.

குறிப்பு: கோள்கள் எல்லாம் அவைகள் நிற்கும் ராசியிலிருந்து 7வது ராசியைப் பார்க்கும் தன்மையையுடையவர்கள். சிறப்பாக குரு 7மிடத்தைத் தவிர 5, 9ஆமிடங்களையும் செவ்வாய் 4, 8மிடங்களையும், சனி 3, 10மிடங்களையும், சூரியனும் புதனும் 5மிடத்தையும் பார்க்கும் தன்மையுடையவர்கள். ஆகவே, சூரியன், செவ்வாய், புதன், குரு, சனி நீங்கலாக சந்திரன், சுக்கிரன், இவ்விரு கோள்களுக்கு மட்டிலும் 7மிடப் பார்வை ஒன்றுதான் உண்டு. ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னத்தை அந்த லக்னத்துக்குடையவன் பார்க்க வேண்டுமானால் சூரியன் முதலான ஏழு க்ரஹங்களும் லக்னத்துக்கு 7மிடம் நின்று பார்ப்பவர்களாவார்கள். இது போன்று 10க்குடையவன் 10மிடத்தைப் பார்க்கவேண்டுமானால் 10ஆமிடத்துக்கு 7ஆமிடத்தில் நின்றவர்களாக இருந்தால் பார்ப்பார்கள். சிறப்பாக, சூரியனும் புதனும் 9மிடத்தில் நின்றவர்களாக இருந்தால், குரு 5லும் - 9லும், செவ்வாய் 6லும் - 10லும், சனி 4லும் - 11லும், நின்றவர்களாக இருந்தால் லக்னத்தைப் பார்ப்பவர்களாவார்கள். இது போல் 10ஆமிடத்துக்கும் கண்டுகொள்ளவேண்டும். மேலும் இப்பாட்டில் 10க்குடையவன் ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னத்தில் நின்று, அந்த லக்னத்துக்கு

உரியவனைப் பார்த்தாலும், ப்ரச்னம் கேட்பவனுடைய காரியம் விரைவில் நிறைவேறும் என்று கூறப் பட்டிருக்கிறது. இங்கு கவனிக்கப்படவேண்டிய முக்கியமான விஷயம்:- ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னம் மேஷமாக இருக்குமானால் அதற்கு பத்தாமிடம் மகரம். அதற்குடையவன் சனி லக்னத்தை(மேஷத்தை) அடைந்து, மேஷராசிக்குரிய(லக்னத்துக்கு) செவ்வாயைப் பார்க்கவேண்டுமானல் செவ்வாய் லக்னத்துக்கு 3, 7, 10மிடங்களுள் ஏதேனுமொன்றில் நிற்க வேண்டும். சனிக்கு 3, 7, 10மிடம் பார்வை உண்டென்பதை முன்பு கூறப்பட்டிருக்கிறது. இதுபோன்று, விருஷபம் உதயமானால் 10க்குடையவன் சனி. லக்னத்திலும்(ரிஷபத்திலும்) லக்னாதிபன் சுக்கிரன் லக்னத்துக்கு 3, 7 அல்லது 10ல் நிற்பவனக இருக்கவேண்டும். மிதுனம் உதயமானால் 10க்குடைய குரு லக்னத்திலும்(மிதுனத்திலும்) புதன் லக்னத்துக்கு 5, 7 அல்லது 9திலாவது நிற்கவேண்டும். கடகம் உதயமானால் 10க்குடைய செவ்வாய் லக்னத்தில்(கடகத்தில்) நின்று லக்னாதிபன் சந்திரன் 4, 7, 8ல் நிற்கவேண்டும். சிங்கம் உதயமானால் 10க்குடைய சுக்கிரன் லக்னத்தில்(சிங்கத்தில்) நின்று லக்னாதிபன் சூரியன் 7ல் நிற்கவேண்டும். கன்னி உதயமானால் 10க்குடைய புதன் லக்னத்தை(கன்னியை) அடைந்து லக்னாதிபன் புதன் 5 அல்லது 7ல் நிற்கவேண்டும். இவ்விதி கன்னி ராசிக்குப் பொருந்தாது. லக்னாதிபனும் 10க்குடையவனும் ஒருவனாகவே(புதன்) இருப்பதால் ஒரே சமயம் இரண்டு இடங்களில் நிற்பது சாத்யமற்றது. துலாம் உதயமானால் 10க்குடையவன் சந்திரன் லக்னத்திலும் லக்னாதிபனான சுக்கிரன் 7லும் நிற்க வேண்டும். விருச்சிகம் உதயமானால் 10க்குடையவன் சூரியன் லக்னத்திலும், லக்னாதிபன் செவ்வாய் 5 அல்லது 7லும் நிற்க வேண்டும். தனுசு உதயமானால் 10க்குடைய புதன் லக்னத்திலும் லக்னாதிபனான குரு 5

அல்லது 7லும் நிற்கவேண்டும். மகரம் உதயமானால் 10க்குடைய சுக்கிரன் லக்னத்திலும், லக்னாதிபன் சனி 7லும் நிற்கவேண்டும். கும்பம் உதயமானால் 10க்குடைய செவ்வாய் லக்னத்திலும், லக்னாதிபன் சனி 4, 7 அல்லது 8ல் நிற்க வேண்டும். மீனம் உதயமானால் 10க்குடைய குரு லக்னத்திலும் லக்னாதிபனான குரு 5,7 அல்லது 9ல் நிற்க வேண்டும். இந்த விதி மீன ராசிக்கு பொருந்தாது. லக்னாதிபனும் 10க்குடையவனும் ஒருவனாகவே (குரு) இருப்பதால் ஒரே சமயத்தில் இரண்டிடங்களில் நிற்பது சாத்யமற்றது. ஆகவே கன்னி, மீனம் இவ்விரு ராசிகளைத் தவிர மற்ற ராசிகளுக்குப் பொருந்தும். செவ்வாய் சனி விஷயத்திலும் இது பொருந்தாது. சனி, செவ்வாய் இவ்விரு க்ரஹங்களும் எந்த பாவத்தில் சேர்ந்து இருக்கிறார்களோ அந்த பாவத்திற்கு நாசத்தையே செய்வார்கள். பார்வை ஏற்பட்டாலும் காரியத்தை நாசம் செய்பவர்களாகத்தான் இருப்பார்களாதலின் சனி செவ்வாய் விஷயத்தில்(மேஷம் உதயமானால்) பொருந்தாது.

## भुवनप्रदीपे

लग्नपतिर्यदिलग्नं कार्याधिपतिश्च वीक्षते कार्यम् ।
लग्नाधीशकार्यं कार्येशः पश्यति विलग्नम् ॥ 3

लग्नेशः कार्येशं विलोकयेल्लग्नपं तु कार्येशः ।
शीतगु दृष्टौ सत्यां परिपूर्णा कार्यसंसिद्धिः ॥ 4

**(இ.ள்): ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னத்தை அந்த லக்னத்துக்குடையவன் பார்த்தாலும், 10க்குடையவன் அவனுடைய ஸ்தானத்தை 10மிடத்தை பார்த்தாலும், லக்னாதிபதி 10மிடத்தையும், 10க்குடையவன் லக்னத்தையும், லக்னாதிபன்**

10க்குடையவனையும், 10க்குடையவன் லக்னாதிப னையும் பார்த்தாலும், ப்ரச்னம் கேட்பவனுடைய காரியம் நிறைவேறும். முன்கூறப்பட்ட லக்னம், 10மிடம் லக்னாதிபன் அல்லது 10க்குடையவன் இவர்களை மதி பார்த்தால் ப்ரச்னம் கேட்பவனுடைய காரியம் முழுமையாக வெற்றி பெறும். (புவனப்ரதீபே 3, 4வது செய்யுள்).

முன் செய்யுளுக்குக் கூறப்பட்ட விளக்க உரையை இதற்கும் ஏற்றுக்கொள்ளலாம்.

## दशमे स्थितग्रहाणां फलम्

कार्ये स्थितौ चन्द्रविलग्ननाथौ
शुभोक्षिता कार्यकरौ भवेताम् ॥
लग्नस्थितौ लग्नपकार्नाथौ
कार्यस्य सिद्धिं कुरुतस्तदानीम् ॥ 27

(இ.ள்): ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னத்துக்கு 10மிடத்தில் மதியும் அந்த லக்னத்துக்குடையவனும் நின்று சுபர்களால் பார்க்கப்பட்டால் ப்ரச்னம் கேட்பவனுடைய காரியம் நிறைவேறும். இதுபோன்று லக்னத்தில் லக்னாதிபனும் 10க்குடையவனும் நின்றால் காரியம் நிறைவேறும்.

कार्यस्थितौ लग्नपकार्यनाथौ
चन्द्रान्वितौ चेत्कुरुतस्तदानीम् ।
तत्कार्यसिद्धिं शुभवीक्षितौ चे
त्पापारि दृष्टौ विबलतदाल्पम् ॥ 28

(இ.ள்): ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னத்துக்கு 10மிடத்தில் லக்னாதிபனும் 10க்குடையவனும் மதியுடன் சேர்ந்து நின்று, சுபர்களால் பார்க்கப்பட்டும் இருந்தால் ப்ரச்னம் கேட்பவனுடைய காரியம் நிறைவேறும் அவ்வாறில்லாமல் பாபர்களாலோ, சத்ரு க்ரஹங்களாலோ பார்க்கப்பட்டவர்களாகவும், பலமற்றவர்களாகவும் இருந்தால் காரியம் முழுமையாக நிறைவேறாது.

लग्नेशदर्शने सति पश्यन्तः पूर्णयोगकराः ।
क्रूरावेक्षणवर्ज्यश्चन्द्रः सौम्याश्च खेचरालग्नम् ॥

– भुवनप्रदीपं-8 श्लो.

(இ.ள்): ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னத்தை பாபர்களுடன் சேர்ந்திராத சந்திரனும் சுபர்களும் பார்த்தால் ப்ரச்னம் கேட்பவனுடைய காரியம் முழுமையாக நிறைவேறும்.

अमुकं गदेति कार्यं कदा भविष्यत्यमुत्र पृच्छायात् ।
लग्नाधिपतिः कार्यं लग्नं कार्याधिपः पश्येत् ॥

लग्नस्थः कार्येशः पश्यति चेल्लग्नं तदैव भवेत् ।
तत्कार्यं यद्यन्यस्थितं तदा सत्वरं न स्यात् ॥ (समरसिंहे - 10 - 11)

(இ.ள்): ப்ரச்னம் கேட்பவன் நான் எடுத்துக் கொண்டிருக்கும் காரியம் எப்பொழுது நிறைவேறும் என்று கேட்கும் சமயம் உதயமான லக்னாதிபன் 10மிடத்தையும், 10க்குடையவன் லக்னத்தையும் பார்த்தாலும் லக்னத்தில் 10க்குடையவன் நின்று லக்னாதிபனைப் பார்த்தாலும் ப்ரச்னம் கேட்பவனுடைய காரியம் உடனடியாக நிறைவேறும். லக்னாதிபனும் 10க்குடையவனும் வேறு இடத்தில்

நின்றால் காரியம் உடனடியாக நிறைவேறாது. (ஸமரஸிம்ஹம் 10 - 11வது பாட்டு).

पश्यति तदा च लग्नं द्रक्ष्यति चन्द्रं विलग्नपं च यदा ।
लग्ने कार्ये च यदा द्वयोश्च योगे यदा सिद्धिः ।

यदि लग्नपं च पश्यति कार्याधीशो विलग्नमथ तस्य ।
कार्यस्य हानिरुक्ता लग्नमृते किमपि नो वाच्यम् ॥ (स्मरसिंहे, 12,13)

(இ.ள்): ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னத்தையும் மதியையும் லக்னாதிபனையும் 10க்குடையவன் பார்த்தாலும், உதயமான லக்னத்தில் மதியும் பத்துக்குடையவனும் அல்லது லக்னாதிபனும் நின்றாலும், ப்ரச்னம் கேட்பவனுடைய காரியம் நிறைவேறும். இவ்வாறு லக்னாதிபனும் 10க்குடையவனும் லக்னத்தில் நிற்காமல் வேறு ராசிகளில் நின்றாலும் பார்த்துக்கொண்டாலும் ப்ரச்னம் கேட்பவனுடைய காரியம் நிறைவேறாது.

(ஸமரஸிம்ஹம் - 12,13)

## प्रश्नकालिकलग्नस्थितकार्यनाथलग्नाधिपयोः फलम्

यस्मिन्नहन्युदयमेति च कार्यनाथो
पश्यत्यथोदयपतिं युगपच्च कार्यम् ।
कार्येश्वरोदयपतेश्च यदेच्छशालं
तस्मिन्दिने खलु भविष्यति कार्यसिद्धिः ॥ 29

(இ.ள்): என்று ஒருவன் ப்ரச்னம் கேட்கிறானோ அன்று உதயமான லக்னத்தையடைந்து 10க்குடையவன் லக்னாதிபனையும் 10ஆமிடத்தையும் பார்த்தாலும்,

*10க்குடையவனும் லக்னாதிபனும் "இச்சசாலம்" என்னும் யோகத்தையடைந்திருந்தாலும் ப்ரச்னம் கேட்கப்பட்ட அன்றய தினமே அவனது காரியம் நிறைவேறும்.*

कार्येश्वरो नेक्षति चे लग्ननाथं
लग्नञ्च वा कार्यविनाशमादिशेत् ।
विचिन्त्य सर्वांत्विह पृच्छकानां
फलं वदेत्पूर्वमुदीक्ष्य सर्वम् ॥ 30

(இ.ள்): ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னத்தையோ அல்லது லக்னாதிபனையோ 10க்குடையவன் பார்க்காவிட்டால் ப்ரச்னம் கேட்பவனுடைய காரியம் நிறைவேறாது. ப்ரச்னம் கேட்கும் பொழுது பலன் சொல்லுமுன் கோள்களின் நிலை, சேர்க்கை, பார்வை முதலான யாவற்றையும் நன்கு கவனித்துப் பலன் கூறவேண்டும்.

**स्वेनकृतग्रन्थस्य नामकरणं, कारणञ्च**

त्रैलोक्यनाथेन जनार्दनेन
स्वयं दिनेशाय च सर्वमुक्तम् ।
मया दिनेशाश्च गृहीतमेत-
तस्मादिदं वैभवं संज्ञकञ्च ॥

*(மூலத்தில் உள்ளது)*

मया निदेशाद्ग्रथितं सुशास्त्रं
त्रैलोक्यनाथस्य जनार्दनस्य ।
स्वयं मुकुन्देन च सत्यमुक्तं
तस्मादिदं वैष्णवसंज्ञमासीत् ॥

(இ.ள்): மூவுலகங்களுக்கும் ஈச்வரனான ஜநார்த்தனன் கதிரவனின் பொருட்டு இப்பரச்ன சாஸ்த்திரத்தை உபதேசித்தார். நான் கதிரவனிடமிருந்து இந்நூலை அறிந்துகொண்டேன். ஆதலினால் இந்நூலுக்கு வைபவ சாஸ்த்திரம் என்னும் பெயர்.

इति श्रीब्रह्मदासपुत्रनारायणदाससिद्धविरचिते (प्रश्नशास्त्रे)
वैभवशास्त्रे लग्नभावनिरूपणशुभाशुभकार्यसिद्धिर्नाम
प्रथमोऽध्यायः ॥

இத்துடன் ப்ருஹ்மதாஸரின் மகனான நாராயணதாஸ ஸித்தரால் இயற்றப்பட்ட வைபவ சாத்திரத்தில் லக்நபாவத்தைப் பற்றிய விஷயங்களை நிரூபணம் செய்யப்படுவதின் மூலம் நல்லவை அல்லது கெட்டவைகளான காரியங்கள் நிறைவேறுதலை அறிவிக்கும் முதல் அத்தியாயம் நிறைவுற்றது

# अथ द्वितीयोऽध्यायः

## द्वितीयस्थानविषयकः

## धनलाभप्रश्नः

लग्नाधिनाथेन हिमांशुना वा
यदीच्छशालं कुरुते धनेशः।
स्वोच्छादिगः सौम्ययुतेक्षितो वा
प्रष्टुस्वलाभं सहसा प्रकुर्यात् ॥ 1

## இரண்டாம் அத்தியாயம்

## இரண்டாம் பாவம்

### தனம் கிடைப்பது பற்றிய ப்ரச்னம்

(இ.ள்): ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னத்துக்கு இரண்டாமிடமான தன ஸ்தானத்திற்கதிபன். உதயமான லக்னாதிபனுடனோ அல்லது மதியுடனோ சேர்ந்து இச்சசாலம் என்னும் யோகத்தையடைந்தவனாக இருந்தாலும், தனஸ்தானாதிபன் அவனுடைய வீட்டிலேலோ அல்லது உச்ச வீட்டிலோ நின்று சுபர்களுடன் சேர்ந்தோ அல்லது சுபர்களால் பார்க்கப் பட்டவனாகவோ இருந்தால் ப்ரச்னம் கேட்பவன் விரைவில் அவன் விரும்பிய தனத்தையடையவன். 1

शीतांशुलग्नेश्वरवित्तनाथाः
परस्परं संयुताऽथवीक्षिता वा ।
धनत्रिकोणोदयगा यदास्यु-
स्तदार्थलाभं प्रवदेन्नराणाम् ॥ 2

(இ.ள்): ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னாதிபனும் 2மிடத்துக்குடையவனும் மதியும் சேர்ந்து ஒரே ராசியில் நின்றாலும் அல்லது

ஒருவருக்கொருவர் பார்த்துக்கொண்டாலும், இரண்டாம் இடத்திலோ (தனஸ்தானம்) 5, 7, 9மிடங்களுள் ஏதேனும் ஒன்றிலோ அல்லது உதய லக்னத்திலோ சேர்ந்திருந்தால் ப்ரச்னம் கேட்பவன் அவன் விரும்பிய தனத்தை அடைவான். 2

शशाङ्कजीवज्ञसिता बलढ्याः
विलग्न धर्मात्जकण्ठकस्थाः ।
स्वोच्चादिगास्स्युर्न च पापयुक्ताः
कुर्वन्ति लाभं प्रचुरं च शीघ्रम् ॥ 3

(இ.ள்): ப்ரச்ன காலத்தில் மதி, குரு, புதன், சுக்கிரன் இவர்கள் பலம் பொருந்தியவர்களாக லக்னம் 4, 5, 7, 9 அல்லது 10மிடங்களுள் ஏதேனுமொன்றில் நிற்பவர்களாகவோ, பாபர்களின் ஸம்பந்தமற்றவர்களாகவோ அவரவர்களுடைய உச்சவீட்டிலாவது நிற்பவர்களாக இருந்தால் ப்ரச்னம் கேட்பவனுக்கு விரைவிலேயே அவன் விரும்பிய தனம் கிடைக்கும். 3

लग्नेश्वरस्स्वर्क्षगतो विलग्ने
निरीक्ष्यमाणो गगनाधिपेन ।
कुर्यान्नृपाल्लाभमिह प्रभूतं
दृष्टोऽशुभैः पापस्वगैस्तथाऽल्पम् ॥ 4

(இ.ள்): ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னத்தில் அந்த லக்னத்துக்குடையவன் அவனுக்குரிய நக்ஷத்திர பாதங்களில் (அவனுக்குரிய ராசியே லக்னமாக அமைந்து அதில்) நின்று பத்தாமிடத்துக்குடையவனால் பார்கப்பட்டவனாகவும் இருந்தால் ப்ரச்னம் கேட்பவன் அரசனிடமிருந்து அதிக அளவில் தனத்தைப் பெறுவான். லக்னாதிபன் பாவிகளாலும் அல்லது சத்ரு க்ரஹங்களாலும் பார்க்கப்பட்டால் மிகவும் குறைவாகவே அரசனிடமிருந்து தனத்தைப் பெறுவான்.

குறிப்பு: இச்செய்யுளில் முதல் வரியில் ஸ்வருக்ஷகத: விலக்நே என்றிரு பதங்கள் உள்ளன. இதற்கு ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னத்தில் அந்த லக்னத்துக்குடையவன் அவனுக்குரிய நக்ஷத்திர பாதங்களில் (அவனுக்குரிய ராசியே லக்னமாக அமைந்து அதில் என்று)பொருள் கூறப்பட்டிருக்கிறது. ருக்ஷம் என்ற சொல்லுக்கு ராசி என்றும் நக்ஷத்திரம் என்றும் பொருள் உண்டு. ப்ரச்ன காலத்தில் எந்த ஒரு ராசி உதயமாகிறதோ அதையே லக்னமாக வைத்துக் கொண்டால் அந்த ராசிக் குரியவன் அந்த ராசியிலேயே நிற்பவனாக இருந்தால் என்று பொருள் கொள்வதில் தவறு எதுவும் இல்லை. என்று கருதுகிறேன். அவ்வாறில்லாமல் ருக்ஷ என்ற சொல்லுக்கு நக்ஷத்திரம் என்ற பொருள்கொண்டு ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னத்தில் அந்த லக்னத்துக்குடையவன் நின்று என்று பொருள் கொண்டுவிட்டால் ருக்ஷ என்ற சொல் அர்த்தமற்றதாகி விடுவதால் ருக்ஷ என்ற சொல்லுக்கு நக்ஷத்திரம் என்ற பொருளைக்கொண்டு ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னத்தில் அந்த லக்னத்துக்குடையவன் அவனுடைய நக்ஷத்திர பாதங்களுள் ஒன்றில் நின்றால் என்று பொருள்கொள்வது பொருந்தும். அவ்வாறாயின் ஸிம்மம், மீனம் இவ்விரு ராசிகள்தான் லக்னமாக அமைந்து அவைகளுக்குரிய கதிரவனும், குருவும், கதிரவன் சிங்கத்தில் உத்திரம் 1லும் குரு மீனத்தில் பூரட்டாதி 4லும் நிற்கின்றவர்களாக இருந்து சிங்கத்துக்கு 10மிடமான ரிஷபத்துக்கு அதிபனான சுக்கிரனால் பார்க்கப்பட்டால் என்றும் மீனத்துக்கு 10ஆமிடமான தனுசுக்கு அதிபனான குருவினால் பார்க்கப்பட்டால் என்றும் பொருள் கொள்ளவேண்டும். சுக்கிரன் - சூரியன் பகைவர்கள். ஆதலால் சுக்கிரனால் கதிரவன் பார்க்கப்பட்டால் நல்ல பலன் கிடைக்காது. லக்னத்தில் நிற்கும் குருவை குரு வேறு ராசியில் நின்று பார்க்கவும் முடியாது. ஆதலின் ப்ரச்ன காலத்தில்

உதயமான லக்னம் அந்த லக்னாதிபதிக்குரிய ராசியாகவிருந்து அதில் அந்த ராசிக்குடையவன் நின்று 10க்குடையவனால் பார்க்கப்பட்டால் என்று பொருள் கொள்வதுதான் பொருந்தும். 4

शीतांशुलग्नेश्वरवित्तपानां
कंबूलयोगे प्रचुरार्थलाभः ।
स्वोच्चे स्वगेहे च सुहृद्गृहेऽल्पं(च)
नीचेऽरिभे स्वल्पतरं न वा स्यात् ॥ 5

(இ.ள்): ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னத்துக்கு அதிபன், மதி, 10க்குடையவன் இவர்கள் கம்பூல யோகத்தை அடைந்தவர்களாக இருப்பார்களேயானால் ப்ரச்னம் கேட்பவனுக்கு மிக அதிக அளவில் தனம் கிடைக்கும். இம்மூவரும் அவரவர்களுடைய சொந்த வீட்டிலோ உச்சவீட்டிலோ அல்லது நட்பு வீட்டிலோ இருந்தால் குறைந்த அளவு தனம் கிடைக்கும். அவரவர்களுடைய நீச வீட்டிலோ சத்ரு வீட்டிலோ இருந்தால் மிகவும் குறைந்த அளவே தனம் கிடைக்கும். அல்லது கிடைக்காமலே இருந்தாலும் இருக்கலாம்.

குறிப்பு: இச்செய்யுளில் லக்னாதிபனும் மதியும் 10க்கு உடையவனும் கம்பூல யோகத்தையடைந்திருந்தால் என்று மட்டிலும் முதல் இருவரிகளுக்கும் பொருள் கொள்ளப்பட்டது. ஆனால் இவர்கள் எந்த எந்த ராசியில் கம்பூல யோகத்தை அடைந்திருந்தால் என்று கூறவில்லை. லக்னாதிபனும், மதியும், 10க்கு உடையவனும் அவரவர்களுடைய வீட்டிலோ, உச்சவீட்டிலோ அல்லது மித்திரன் வீட்டிலோ இருந்தால் குறைவாக என்றும் பொருள் கொள்ளப் பட்டது. பொதுவாக எந்த க்ரஹமும் அதனதனுடைய வீட்டிலோ, உச்ச வீட்டிலோ அல்லது மித்திரனுடைய வீட்டிலோ இருந்தால் நல்ல பலனையே

அளிப்பார்கள். அதற்கு மாறாக இங்கு குறைவாகத்தான் தனம் கிடைக்கும் என்று பொருள் கூறும்படி 3வது வரி அமைந்திருக்கிறது. 4வது வரி பொருத்தமான பொருளைக் கொண்டதாக இருக்கிறது. ஆகையால் ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னாதிபனும், மதியும், 10க்குடையவனும் லக்னத்திலோ, ஒருவருடைய உச்ச வீட்டிலோ அல்லது மித்ரனுடைய வீட்டிலோ இருந்தால் மிக அதிக அளவில் தனம் கிடைக்கும் என்று பொருள் கொள்வது உசிதமாக இருக்கும் என்று நினைத்து 3வது வரியில் அடைப்புக்குள் (च)என்னும் எழுத்தை அமைத்திருக்கிறேன். ஆதலால் ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னத்துக்கதிபன், மதி, 10க்குடையவன் இவர்கள் மூவரும் அவரவர்களுடைய வீட்டிலோ உச்சவீட்டிலோ அல்லது மித்திரன் வீட்டிலோ கம்பூல யோகத்தையடைந்தவர் களாக இருந்தால் ப்ரச்னம் கேட்பவனுக்கு மிக அதிக அளவில் தனம் கிடைக்கும் என்று பொருள் கொள்ள வேண்டுமெனத் தெரிகிறது.

वित्तेश्वरो लग्नगतः कुटुम्बे
लग्नेश्वरस्स्याद्धनदो नराणाम् ।
लग्नार्थपौ वित्तगतौ विलग्ने
वित्तोदयेशौ सुखवित्तदौ स्तः ॥ 6

(இ.ள்): ப்ரச்ன காலத்தில் உதயமான தனாதிபதியான 2மிடத்துக்குடையவனும் 2மிடத்தில் லக்னாதிபனும் (பரிவர்த்தனை யோகத்தை அடைந்து) இருந்தால் ப்ரச்னம் கேட்பவனுக்கு தனத்தைக் கொடுப்பவர்களாக இருப்பார்கள். லக்னாதிபனும் தனாதிபனும் தனஸ்தானத்தில் நின்றாலும், லக்னத்தில் தனாதிபனும் லக்னாதிபனும் நின்றாலும் சுலபமாக தனம் கிடைக்கும். சரீர சுகம், தனம் இவைகளைப் பெறுவார்கள்.

लग्नेश्वरस्स्वर्क्षगतो विलग्ने
लाभे विधुर्लाभपसंयुतस्स्यात् ।
शीघ्रं प्रकुर्यात्परिपूर्णदेहः
कार्यार्थसिद्धिं सुखवित्तलाभान् ॥ 7

(இ.ள்): ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னத்துக்கதிபன் அதே லக்னத்தில் அவனுக்குரிய நக்ஷத்திரக் காலில் நின்று மதி 11மிடத்தில் 11மிடத்துக்கு உடையவனுடன் நிற்பதுடன் முழுமதியாக இருப்பானே யானால் (பௌர்ணமியுடன் கூடிய நாளாக இருத்தல் வேண்டும்) ப்ரச்னம் கேட்பவன் அவன் எடுத்துக் கொண்ட காரியத்தில் வெற்றியையும் லாபம், தனம், சரீர சுகம் இவைகளையும் அடைவான்.

குறிப்பு: இந்த ச்லோகப்படி ப்ரச்னம் கேட்பவன் பௌர்ணமியன்று கேட்பவனாக இருக்கவேண்டும். மேலும் உதய லக்னம் சிங்கமாக இருந்து அந்த லக்னத்துக்குடைய சூரியன் உத்திரம் முதல் பாதத்தில் நின்று மதி 11ல் நிற்க வேண்டும். அல்லது மீனம் உதய லக்னமாக அமைந்து அந்த லக்னத்துக்குடைய குரு பூரட்டாதி 4ம் பாதத்தில் நின்று மதி 11ல் நிற்பவனாக இருக்கவேண்டும். இந்தமாதிரியான சூழ்நிலை ஏற்படுமானால் இச்சுலோகத்தில் கூறியபடி பலன் உண்டாகும். நேருவதற்கு வாய்ப்பு உண்டா என்தை ஆராயவேண்டும்.

लग्नेश्वरो लाभगतो विलग्ने
लाभेश्वरो लग्नगतावुभौ चेत् ।
आयोदयेशावथ लाभसंस्थौ
द्वौवित्तलाभं कुरुतोऽर्थदौस्तः ॥ 8

(இ.ள்): ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னத்துக்கு உடையவன் 11மிடத்திலும் 11மிடத்துகுடையவன் லக்னத்திலும் அல்லது இருவரும் லக்னத்திலோ அல்லது 11மிடத்திலோ சேர்ந்து நின்றால் ப்ரச்னம் கேட்பவன் விரைவிலேயே தனத்தைப் பெறுவான். 8

लग्नेशवित्ताधिपती विलग्ने
निरीक्ष्यमाणौ गुरुचन्द्रमोभ्याम् ।
शुभौ च तौवीर्ययुतौ विशेषा-
ल्लाभं प्रभूतं कुरुतो नराणाम् ॥ 9

(இ.ள்): ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னத்தில் அந்த லக்னத்துக்குடையவனும் 2மிடத்துக்குடையவனும் நின்று குருவினாலும், மதியினாலும் பார்க்கப்பட்டவர் களாகவும், லக்னாதிபனும், தனாதிபனும் சுபர் களாகவும் பாபர்களாகவும் கூடியவர்களாக இல்லாமல் பொருந்தியவர்களாகவும் இருந்தால் ப்ரச்னம் கேட்பவன் மிகவும் சிறப்பாக அதிக அளவில் தனலாபத்தை யடைவான். 9

शीतांशुवित्तेशविलग्ननाथाः
वित्तस्स्थितास्स्युर्बलिनो विशेषात् ।
लग्नेशवित्तेश्वरयो नक्तयोगे
ऽन्यमर्त्याद्धनमेति पृच्छकः ॥ 10

(இ.ள்): ப்ரச்ன காலத்தில் மதியும், தனாதிபனும் (2மிடத்துக்குடையவனும்) லக்னாதிபனும் பாபர்களால் தொடர்பில்லாமல் பலம் பொருந்தியவர்களாக தனஸ்தானமான இரண்டாமிடத்தில் நின்று லக்னாதிபனும் தனாதிபனும் நக்தயோகத்தை யடைந்திருந்தால் ப்ரச்னம் கேட்பவன் பிறரிடமிருந்து தனத்தைப் பெறுவான்.

குறிப்பு: நக்தயோகம் - லக்னாதிபனும், 10க்குடையவனும் ஒருவரையொருவர் பார்த்துக்கொள்ளாவிட்டாலும், இவர்களுக்கு (லக்னாதிபன்-பத்துக்குடையவன்) மத்தியில் நிற்கும் கோள்களுள் எந்தக் கோள் வேகமான கதியையுடையதாக இருக்கிறதோ அது அதற்கு பின்னால் நிற்கும் வேகமான கதியையுடைய கோளின் ஒளியை எடுத்து அதற்கு அடுத்து முன்பாக நிற்கும் மந்தமான கதியையுடைய கோளுக்கு கொடுத்தால் இது "நக்த" யோகம் எனப்படும். இந்த யோகம் ஒருவன் தான் விரும்பிய பெண்ணை யடையும் விஷயத்தில் பயன்படுவது. தனலாப விஷயத்திலன்று. இருந்தாலும் ஆதாயம் பெறும் விஷயம் என்பதால் இங்கு நக்த யோகத்தை ஆசிரியர் குறிப்பிட்டிருப்பதாகக் கொள்ளவேண்டும்.

वित्तं च विन्देऽथ यथोक्तयोगे
द्वयोश्च पापार्दितयोर्न वित्तभाक् ।
प्रष्टुः प्रकुर्युः प्रचुरार्थलाभं
वित्तेऽथजीवस्सित इन्दुजो वा ॥ 11

(இ.ள்): தனலாப விஷயமாக ஒருவன் ப்ரச்னம் கேட்கும்பொழுது முன்சுலோகத்தில் கூறியபடி தனலாபம் கிடைத்தாலும், லக்னாதிபனுக்கும், தனஸ்தானாதிபனுக்கும் பாபர்கள் ஸம்பந்தம் ஏற்பட்டு விட்டால் தனலாபம் கிடைக்காது. பொதுவாக தனஸ்தானத்தில் தனஸ்தானாதிபதியும் குருவும் சுக்கிரனும் அல்லது புதனும் நின்றால் ப்ரச்னம் கேட்பவன் தனத்தையடைவான் என்று அறிய வேண்டும். 11

पूर्णश्शशाङ्को वृषकर्कसंस्थितो
निरीक्षितो वा सहितश्शुभैर्ग्रहैः ।
पापैर्विहीनो गगनार्थलाभगः
प्रष्टुः प्रभूतार्थसुखास्पदप्रदः ॥ 12

(இ-ள்): ப்ரச்னம் கேட்கப்படும் சமயம் முழுமதி(பூர்ணிமையன்று) விருஷப ராசியிலோ அல்லது மதிக்குரிய கடகத்திலோ சுபர்களுடன் சேர்ந்து நின்றாலும் அல்லது சுபர்களால் பார்க்கப்பட்டவனாக இருந்தாலும், பாபர்களின் சேர்க்கையில்லாமல் 2, 10 அல்லது 11மிடத்தில் நின்றாலும் ப்ரச்னம் கேட்பவன் மிக்க அதிக அளவில் தனத்தையும் சரீர சுகம் இருப்பிடம் இவைகளையும் அடைவான். 12

(देवेड्य) चन्द्रात्मजभार्गवाणा-
मेकोऽपि तुङ्गेस्वगृहे बलाढ्यः ।
लग्ने धने कर्मणि वा त्रिकोणे
स्थितः प्रकुर्यात्सत्हसार्थलाभम् ॥ 13

(இ-ள்): ப்ரச்னம் கேட்கப்படும் சமயம் குரு, புதன், சுக்கிரன் இவர்களுள் எவரேனும் ஒருவர் அவரவர்களுடைய உச்ச வீட்டிலோ, அவரவர்களுக்குரிய வீட்டிலோ, ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னத்திலோ, தனஸ்தானமான இரண்டாமிடத்திலோ, 10மிடத்திலோ அல்லது த்ரிகோணங்களான 1, 5, 9 இவைகளுள் ஏதேனுமொன்றிலோ (பாபர்கள் சம்பந்தமில்லாமல்) பலம் பொருந்தியவர்களாக நின்றால் ப்ரச்னம் கேட்பவன் விரைவில் தனத்தை அடைவான் என்றறிய வேண்டும்.

குறிப்பு: குருவுக்கு சொந்த வீடு தனுசு, மீனம். உச்சவீடு கடகம். மதிக்கு சொந்தவீடு கடகம், உச்சவீடு ரிஷபம். சுக்கிரனுக்கு சொந்த வீடு ரிஷபம், துலாம். உச்சவீடு மீனம். இவைகளில் நின்றால் என்று பொருள்.

स्वोच्चे स्वग्रहे बलवान्सुदेहः
शुक्रो बुधो देवगुरुर्यदास्यात् ।
चन्द्रेक्षितो वा लाभगृहं प्रयातः
प्रष्टुः प्रकुर्याद्बहुवित्तलाभम् ॥ 14

(இ.ள்): ப்ரச்னம் கேட்கப்படும்பொழுது சுக்கிரனோ, புதனோ அல்லது குருவோ பாபர்கள் சம்பந்தம் இல்லாமல் பலம்கொண்டவர்களாக அவரவர்களுடைய சொந்த வீட்டிலோ அல்லது உச்சவீட்டிலோ நின்றாலும் அல்லது 11மிடத்தை அடைந்தவர்களாக மதியினால் பார்க்கப்பட்டவர்களாக இருந்தாலும் ப்ரச்னம் கேட்பவன் அதிக அளவில் தனத்தைப் பெறுவான். 14

शुभग्रहाः केन्द्रगताबलान्विताः
सद्योऽर्थलाभाय स्वकार्यसिद्ध्ये ।
पापग्रहाः पञ्चमधर्मकेन्द्रगाः
दरिद्र्यदुःखाय भवन्ति पृच्छताम् ॥ 15

(இ.ள்): ப்ரச்னம் கேட்கப்படும் சமயம் சுபர்கள் பாபர்களின் ஸம்பந்தத்தைப் பெறாமல் பலம் பொருந்தியவர்களாக கேந்திர ஸ்தானமான 1, 4, 7 அல்லது 10மிடங்களுள் ஏதேனுமொன்றில் நின்றால் ப்ரச்னம் கேட்பவனுக்கு தனலாபத்தையும் அவன் எடுத்துக் கொண்டகாரியத்தையும் நிறைவேற்றுபவர்களாக இருப்பார்கள். பாவிகள் 1, 4, 5, 7, 9 அல்லது 10மிடங்களுள் ஏதேனுமொன்றில் நின்றால் நற்பலனை அளிக்கமாட்டார்கள். வறுமையையும், துக்கத்தையும் அளிப்பவர்களாக இருப்பார்கள். 15

शुभेक्षिते धर्मगृहेऽथ संयुते
लाभो भवेत्प्रष्टुरभीष्टवस्तुनाम् ।
अचिन्तितानामचिरेण दैवतः
पापग्रहैस्तत्र गतैस्तु संक्षयः ॥ 16

(இ.ள்): ப்ரச்னம் கேட்கப்படும் சமயம் உதயமான லக்னத்துக்கு 9மிடம் சுபர்களால் பார்க்கப் பட்டதாகவோ

அல்லது சுபர்களுடன் கூடினதாகவோ இருந்தால் ப்ரச்னம் கேட்பவனுக்கு அவன் விரும்பிய தனம் அவன் அதைப் பற்றிய நினைவுடன் இல்லாமல் இருக்கும் நிலையில் கடவுள் அருளால் திடீரென்று கிடைத்துவிடும். பாவிகளால் பார்க்கப்பட்டோ அல்லது பாவிகளுடன் கூடினதாகவோ 9மிடம் இருந்தால் தனநாசம் ஏற்படும். *16*

वित्तेश्वरो लग्नमुपेत्य लग्न-
नाथे इत्थशालं कुरुते यदा वा ।
सौम्यैर्ग्रहैश्चापि निरीक्षितस्स्या-
त्प्रष्टुस्तदा सर्वधनस्य लाभः ॥ 17

(இ.ள்): ப்ரச்னம் கேட்கப்பட்டபொழுது உதயமான லக்னத்துக்கு இரண்டாமிடமான தனஸ்தானாதிபன் உதய லக்னத்தையடைந்து லக்னாதிபனுடன் இச்சசாலம் என்னும் யோகத்தை அடைந்திருந்தவனாக சுபர்களால் பார்க்கப் பட்டவ னாகவும் இருந்தால் ப்ரச்னம் கேட்பவன் அவன் விரும்பிய தனம் முழுமையாகக் கிடைத்துவிடும். *17*

लग्नेशवित्तेश्वरयोर्नक्त
योगेऽन्यमर्त्याद्धनमेतिप्रष्टा ।
वित्तश्चविन्देऽथ यमयाख्य योगे
पापार्दितौ तौ चेन्नवित्तलाभः 18

(இ.ள்): ப்ரச்னம் கேட்கப்பட்டபொழுது உதயமான லக்னத்துக்கதிபனும் தனஸ்தானமான இரண்டாம் இடத்துக்குடையவன் "நக்த" யோகத்தை அடைந்திருந்தால் வேற்று மனிதனிடமிருந்து தனத்தையடைவான். இவ்விருவர் களும் "யமயா" என்னும் யோகத்தையடைந்தவர்களாக பாவிகளின் சேர்க்கையால் பலமிழந்தவர்களாகவும் இருந்தால் ப்ரச்னம் கேட்பவனுக்குத் தனம் கிடைக்காது. *18*

குறிப்பு: நக்த யோகத்தைப் பற்றி 10வது செய்யுளுக்கு உரை எழுதப்பட்ட இடத்தில் விளக்கம் கூறப்பட்டிருக்கிறது. "யமயா" யோகம் லக்னாதிபனும் 10க்குடையவனும் ஒருவருக்கொருவர் பார்த்துக் கொண்டிருக்கும் நிலையில் இவ்விரு கோள் களுக்கும் நடுவில் நிற்கும் மந்தகதியையுடைய கோளை தங்களுடைய கிரணங்கள் அதை வலுவடையச் செய்வதால் இவர்கள் வலுவற்றவர் களாக இருப்பார்கள். இதற்கு "யமயா" யோகம் என்று பெயர். இந்தயோகம் ராஜ்யலாப விஷயமாகக் கேட்கப்படும்பொழுது பார்க்கப்பட வேண்டியது. 48

लाभेश्वरो लाभमुपेत्य लग्न-
नाथे इत्थशालं कुरुते तदा स्यात् ।
विनष्टदा स्यार्थसुमित्रलाभो
भूयाच्च मानार्थहयाम्बराप्तिः ॥ 19

(இ.ள்): ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னத்துக்கு அதிபன் 11மிடத்துக்குடையவன் இச்சசாலம் என்னும் யோகத்தையடைந்திருந்தால் ப்ரச்னம் கேட்பவன் அவன் இழந்த பொருள், நண்பன், வேலைக்காரி இவர்களை மீண்டும் பெறுவதுடன் அரசனிடமிருந்து கௌரவத்தையும் (விருதுகளைப்பெறுதல்) தனம், குதிரை, விலையுயர்ந்த ஆடை இவைகளையும் பெறுவான். 19

लग्नेशवित्तेश्वरयोः पृथक्
क्रूरेत्थशालस्थितयोर्न(र)सद्ग्रहैः ।
बलान्वितैस्संयुतदृष्टयोस्तदा
प्रष्टुर्धनाप्तिर्मरणं क्वचिद्भवेत् ॥ 20

(இ.ள்): ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னத்துக்கு அதிபனும், தனாதிபனும், வேறு இடங்களில் பாப

க்ரஹங்களுடன் கொடிய இத்தசாலம் என்னும் யோகத்தை அடைந்திருந்து பலம் பொருந்திய கோள்களுடன் சேர்ந்தோ அல்லது பார்க்கப்பட்டோ இருந்தால் ப்ரச்னம் கேட்பவனுக்கு தனலாபம் கிடைக்கும். ஆனால் சில சமயம் மரணம் ஏற்படலாம். **20**

குறிப்பு: கொடிய இத்தசாலம் சுபக்ரஹங்கள் பாபக்ரஹங்களால் பார்க்கப்பட்டோ அல்லது அவைகளுடன் சேர்ந்தோ இருந்தால் இதை கொடிய இத்தசாலம் எனக்கொள்ளல் வேண்டும்.

क्रूरैर्धनस्थैः शुभदृष्टयुक्तैः
दूरेचिरादल्पधनस्य लाभः ।
पापैक्षितैर्वित्तगतैश्च पापैः
धनस्य नाशश्चिरसञ्चितस्य ॥ 21

(இ.ள்): ப்ரச்னம் கேட்கப்பட்ட சமயம் உதயமான லக்னத்துக்கு 2மிடமான தனஸ்தானத்தில் பாவிகள் நின்று சுபர்களால் பார்க்கப்பட்டோ அல்லது அவர்களுடன் சேர்ந்தோ இருந்தால் ப்ரச்னம் கேட்பவனுக்கு வெகு தொலைவிலிருந்து தனம் கிடைக்கும். 2மிடத்தில் பாவிகள் நின்று அவர்களை பாவிகள் பார்த்தால் வெகு காலமாக சேர்த்து வைக்கப் பட்ட தனம் அழிந்துவிடும். **21**

लग्नेशवित्ताधिपतीत्थशालो
यस्मिन्हि भावे शुभवीक्षितस्स्यात् ।
तन्वर्थसभ्रातृसुहृत्सुतारि-
जायासुतद्धारकृतोऽर्थलाभम् ॥ 22

(இ.ள்): ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னத்துக்கு அதிபனும் தனாதிபனும் எந்த பாவத்தில் இத்தசாலம் என்னும்

யோகத்தையடைந்தவர்களாகவும், சுபர்களால் பார்க்கப் பட்டவர்களாகவும், இருக்கிறார்களோ அப்பொழுது ப்ரச்னம் கேட்பவனுக்கு அவனுடைய ஸஹோதரன், நண்பன், நண்பனின் மகன் பகைவன், மனைவி, சொந்த மகன் இவர்கள் மூலம் தனம் கிடைக்கும். இத்தசால யோகத்தை யோகங் களைக் கூறும் அத்யாயத்தில் காண்க. 22

धर्मोऽथ धर्माद्गगने क्षितीशा-
ल्लाभं स्वमित्राद्व्ययगे(व्यये सः) ।
लग्नेशवित्ताधिपतीत्थशाले
रन्धो धनाप्तिर्वधबन्धमुद्धात् ॥ 23

(இ.ள்): *ப்ரச்னகாலத்தில் உதயமான லக்னத்துக்கு அதிபனும் தனாதிபனான 2க்குடையவனும் 9மிடத்திலோ, 10மிடத்திலோ இத்தசாலம் என்னும் யோகத்தை அடைந் திருந்தால் முறையே தர்மமான வழியிலும், அரசனிடமிருந்து ப்ரச்னம் கேட்பவன் பெறுவான். 12க்குடையவன் 12மிடத்தில் லக்னாதிபனுடன் அல்லது தனாதிபனுடன் இத்தசாலம் என்னும் யோகத்தை யடைந்திருந்தால் ப்ரச்னம் கேட்பவனுக்குத்தனம் (எவரிட மிருந்தும்) கிடைக்காது. (இத்தசால யோகத்தை யோகத்தைப் பற்றி கூறப்பட்டிருக்கும் அத்யாயத்தில் காண்க).*

## धनलाभविषयकद्वितीयस्थानप्रश्नः

**(ताजिकप्रश्नतन्त्रे):**

धनलाभस्य प्रश्ने लग्नेशेनेन्दुनाऽथ धननाथः ।
कुरुतेयदीत्थशालं शुभयुतिदृष्ट्या भवेल्लाभः ॥ 6

क्रूरग्रहैर्धनस्थैर्दूरे लाभोऽन्यदप्यशुभम् ।
क्रूरमुथशिले धनेशे प्रष्टा म्रियतेऽथवा विलग्नेशे ॥ 7

धनधनइत्थशाले मन्दगतिर्यत्र भावानाम् ।
तनुधनसहजादीनां प्रष्टुस्तद्वारतो लाभः ॥ 8

(இ.ள்): ப்ரச்னம் கேட்பவன் அவனுக்குத் தனம் கிடைக்குமா என்று ப்ரச்னம் (ஆரூடம்) கேட்டால் அப்பொழுது உதயமான லக்னத்துக்கதிபனுடனும், மதியுடனும் தனஸ்தானமான இரண்டாமிடத்துக்கு உடையவன் "இத்தசாலம்" என்னும் யோகத்தை யடைந்திருந்தாலும், சுபர்களுடன் சேர்ந்தோ அல்லது பார்க்கப்பட்டோ இருந்தாலும், ப்ரச்னம் கேட்பவன் தனத்தையடைவான் (தனலாபம் கிடைக்கும்)

முன் சுலோகத்தில் கூறப்பட்டபடி கோள்கள் நின்று தனஸ்தானமான இரண்டாமிடத்தில் க்ரூர கிரஹங்கள் நின்றால் ப்ரச்னம் கேட்பவனுக்கு வெகு தொலைவிலிருந்து பொருள் வரவு கிடைக்கும். விரும்பத்தகாத கெட்ட பலனும் ஏற்படலாம். க்ரூர கிரஹங்களுடன் லக்னாதிபனோ தனாதிபனோ இத்தசாலம் என்னும் யோகத்தையடைந்திருந்தால் ப்ரச்னம் கேட்பவனுக்கு மரணம் ஏற்படும்.

ப்ரச்னம் கேட்கப்பட்ட சமயம் தனஸ்தானாதிபனும் மந்தகதியையுடைய மற்றொரு பாவாதிப கிரஹத்துடன் கூடினவனாக இத்த சாலம் என்னும் யோகத்தையடைந்தவனாக இருந்தால், லக்னம், தனம், ஸஹோதரன் முதலான 12 பாவங்களுள் எந்த பாவத்தில் இந்த விதமான யோகம் ஏற்பட்டிருக்கிறதோ அந்த பாவத்திற்குரிய அல்லது ஏற்றபடி தனலாபம் கிடைக்கும். (தாஜிக ப்ரச்னதந்த்ரம் 6,7,8வது ச்லோகங்கள்)

लग्नस्थं चन्द्रजं चन्द्रः क्रूरो वा यदि पश्यति ।
धनलाभो भवत्याशु किन्त्वनर्थोऽपि पृच्छतः ॥

प्र.तन्त्रं 9 श्लोकः

चन्द्रलग्नधनाधीशा दृष्टा युक्ताः परस्परम् ।
धनकेन्द्रत्रिकोणस्थाः सद्यो लाभकराःस्मृताः ॥

- प्र.तन्त्रं. 10 श्लोकः

(இ.ள்): *ப்ரச்னம் கேட்கப்பட்ட சமயம் உதயமான லக்னத்தில் நிற்கும் புதனை மதி பாவியாக இருந்து கொண்டு பார்த்தால் ப்ரச்னம் கேட்பவனுக்கு பொருள் வரவு உண்டு. ஆனால் ப்ரச்னம் கேட்பவனுக்கு விபரீத விளைவும் ஏற்படலாம்.*

*(தாஜிகப்ரச்னதந்த்ரம் 9வது சுலோகம்)*

*ப்ரச்னம் கேட்கப்பட்ட சமயம் உதயமான லக்னத்துக்கு உடையவன், மதி, தனாதிபன் (இரண்டாம் இடத்துக்கு உடையவன்) இவர்கள் எந்த பாவத்திலாவது சேர்ந்திருந்தாலும் அல்லது வெவ்வேறு பாவங்களில் நின்றவர்களாகவும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டாலும் அப்பொழுது 1, 2, 4, 5, 7, 9 அல்லது 10மிடத்தில் நிற்கும் கிரஹங்கள் உடனடியாக ப்ரச்னம் கேட்பவனுக்குத் தனத்தை அளிப்பவர்களாக இருப்பார்கள். (தனம் விரைவில் கிடைக்கும்).*

*(தாஜிகப்ரச்னதந்த்ரம்-10வது சுலோகம்)*

शुभदस्वामिषड्वर्गे लग्ने सौम्ययुते क्षिते ।
प्रष्टुस्तात्कालिकी लब्धिरलब्धिस्तु विपर्यये ॥

– ता. प्र. तन्त्रं 11 श्लो.

चतुर्थे सप्तमे चन्द्रे खे रवौ लग्नगे शुभे ।
प्रष्टुस्सद्योऽर्थलाभः स्याल्लग्ने वा सुरमन्त्रिणि ॥ ,, 12श्लो.

इति द्वितीयभावप्रश्नविषयकः
द्वितीयोऽध्यायः ॥

(இ.ள்): *ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னத்தில் லக்னாதிபன் சுபனாக இருந்து ஷட்வர்க்கத்தை யடைந்தவனாகவும், சுபர்களால் பார்க்கப்பட்டவனாகவோ அல்லது அவர்களுடன் கூடினவனாகவோ இருந்தால் ப்ரச்னம் கேட்பவனுக்கு அவன் கேட்கும் சமயம் நிரந்தரமாக இல்லாமல் அக்காலத்திற்கு மட்டும்*

பயன்படும்படியாக தனம் கிடைக்கும். முன்கூறியபடி கிரஹங்களின் அமைப்பு இல்லாவிட்டால் தனம் கிடைக்காது.

ப்ரச்னம் கேட்கப்பட்ட சமயம் உதயமான லக்னத்துக்கு 4மிடத்திலோ அல்லது 7மிடத்திலோ மதியும் 10மிடத்தில் கதிரவனும், உதயமான லக்னத்தில் சுபகிரஹம் ஏதாவது ஒன்று அல்லது குருவோ நின்றால் ப்ரச்னம் கேட்பவனுக்கு உடனடியாக தனம் கிடைக்கும்.

-தாஜிகப்ரச்னதந்திரம் 11,12வது சுலோகம்

குறிப்பு: ஷட்வர்க்கம், லக்னம், ஹோரரை என்று கூறப்படும் ஒரு ராசியின் மூன்று பாகம், திரேஷ்காணம் எனப்படும் ஒரு ராசியின் மூன்று பங்கு, நவாம்சம் என்று கூறப்படும் ஒன்பது பங்கு, துவாதசாம்சம் எனப்படும் பன்னிரண்டு பங்கு, த்ரிம்சாம்சம் எனப்படும் 30 பங்கு ஆகிய இவ்வாறும் ஷட்வர்க்கம் எனப்படும்.

ஒரு ராசியை ஹோரை முதல் த்ரிம்சாம்சம் முடிய உள்ள ஆறுவிதமாகப் பிரித்து சூரியன் முதல் சனி வரையிலான ஏழு கிரஹங்களும், லக்னம், ஹோரரை, திரேஷ்காணம், நவாம்சம், துவாதசாம்சம், த்ரிம்சாம்சம் இவைகளில் அவைகளுக்குச் சொந்தமான ராசியில் இருப்பார்களேயானால் அவர்கள் சொந்த வர்க்கத்தை அடைந்தவர்களாவார்கள். இவ்வாறு சொந்த வர்கத்தையடைந்த கிரஹம், சுபமாயினும் அசுபமாயினும் 1, 4, 7 அல்லது 10லிருந்தால் நல்ல பலனை அளிப்பார்கள். இதையறிந்து தனலாப விஷயத்தின் பலன் கூறவேண்டும்.

இரண்டாம் அத்தியாயம் நிறைவுற்றது

# अथ तृतीयोऽध्यायः
## तृतीयभावप्रश्नः
## (सहोदरविषयकः)
### यथा ताजिकं

सहजपतिर्यदि सहजे पश्यति चेत्तद्द्वयं शुभैर्दृष्टम् ।
तद्भ्रातरो गतरुजः स्वस्थाः क्रूरेक्षणे वामम् ॥

## மூன்றாம் அத்தியாயம்
### மூன்றாம் பாவம்
### (உடன் பிறப்பு பற்றியறிதல்)

(இ.ள்): ப்ரச்னம் கேட்கப்பட்ட சமயம் உதயமான லக்னத்துக்கு மூன்றாம் வீட்டுக்குடையவன் அவன் வீட்டிலேயே நின்றாலும் அல்லது அவனால் பார்க்கப் பட்டாலும் மூன்றாம்வீடு அதற்குடையவன் இருவரையும் சுபர்கள் பார்த்தாலும் ப்ரச்னம் கேட்பவனுடைய ஸஹோதரன் நோயின்றி சுகமாக இருக்கிறான் என்று தெரிந்து கொள்ளவேண்டும். மூன்றாம் இடத்தையோ அல்லது மூன்றாமிடத்துக்கு உடையவனையோ சுபர்கள் பார்க்கா விட்டால் ஸுகமாக இருப்பான் என்று கூற இயலாது.

यदि सहजपतिः षष्ठे तत्पतिना मुथशिलेऽथ तन्मान्द्यम् ।
षष्ठेशे सहजस्थे सहजपतौ क्रूरिते वापि ॥

(இ.ள்): ப்ரச்னம் கேட்கப்பட்ட சமயம் உதயமான லக்னத்துக்கு மூன்றாமிடத்துக்குடையவன் 6ம் வீட்டில் 6ம் வீட்டுக்குடையவனுடன் இத்தசாலம் என்னும் யோகத்தை யடைந்திருந்தாலும், 6ம் வீட்டிற்கு உடையவன் மூன்றாம் வீட்டிலிருந்தாலும் மூன்றாம் வீட்டுக்கு உடையவனை பாவிகள் பார்த்தாலும் ஸஹோதரன் ஸுகமாக இல்லை என்றறிய வேண்டும்.

सूर्यस्य रश्मिसंस्थे भयावहं प्रष्टुरादेश्यम् ।

षष्ठाष्टमभावेशौ यद्धावेशेत्थशालिनौ स्याताम् ॥

(இ.ள்): ப்ரச்னம் கேட்க்கப்பட்ட சமயம் உதயமான லக்னத்துக்கு மூன்றாம் வீட்டுக்குடையவன் ஸூரியனில் அஸ்தங்கத தோஷத்தையடைந்திருந் தாலும், 6க்கும் 8க்கும் உடையவர்கள் இருவரும் (மூன்றாம் வீட்டில்) இத்தசாலம் என்னும் யோகத்தை அடைந்திருந்தாலும் ப்ரச்னம் கேட்பவனுடைய ஸஹோதரன் கொடிய பயப்படத்ததக்க நோய்வாய்ப் பட்டிருப்பான் என்றறிய வேண்டும்.

पीडां तस्य प्रवदेत्षष्ठाष्टमसंस्थिते वापि ।

एवं सर्वे भावाः पित्रोस्त्रोस्तुर्ये सुते सुता नाच्च ॥

ताजिके –तृतीयभाव प्रश्ने–13,14,15,16

इति तृतीयभावप्रश्नविषयकः

तृतीयोऽध्यायः ॥

(இ.ள்): ப்ரச்னம் கேட்கப்பட்ட சமயம் உதயமான லக்னத்துக்கதிபனும், மூன்றாமிடத்துக்குடையவனும் ஷஷ்டாஷ்ட பாவத்தையடைந்திருந்தாலும் (6க்கும் 8க்கும் உடையவர்கள் ஷஷ்டாஷ்ட பாவத்தையடைந் திருந்தால்) ப்ரச்னம் கேட்பவனுடைய ஸஹோதரன் ஸுகமாக இருக்கவில்லை என்பதை அறியவேண்டும். இதுபோல் 4ம்பாவம் 5ம் பாவங்களையும் தெரிந்து கொள்ளவேண்டும்.

*(தாஜிகம் 3ம்பாகம்-13,14,15,16வது சுலோகங்கள்).*

மூன்றாம் அத்தியாயம் நிறைவுற்றது

# अथ चतुर्थोऽध्यायः

## चतुर्थभावप्रश्नः

## (कृषिविषयकः)

### यथा ताजिके

भृत्यचतुष्पदवर्गी यास्ते स्त्रियः सुहृदो ये ।
लग्नपतीन्दुचतुर्थ यदि मुथशिलमथवा ग्रहे गमनम् ॥

## நான்காம் அத்தியாயம்

### தாஜிகநூலில் கூறப்பட்டுள்ள

### நான்காம் பாவம்

### (உழவு முதலானவையறிதல்)

(இ.ள்): வேலைக்காரர்கள், பெண்கள், நண்பர்கள் இவர்களின் ப்ரயாணத்தைப் பற்றியும், கால்நடைகளை அழைத்து வேறிடத்துக்கு செல்லுதல் தொடர்பாகவும் ப்ரச்னம் கேட்கப்பட்டபொழுது உதயமான லக்னத்தில் லக்னாதிபனும் மதியும் இத்தசாலம் என்னும் யோகத்தை அடைந்திருந்தால் பிரயாணம் சுகமாக இருக்கும். நான்காமிடம் பாபக்ரஹங்களின் தொடர்பில்லாமல் இருந்தால் ப்ரச்னம் கேட்பவனுக்கு பூமியிலிருந்து (உழவுத்தொழிலில்) லாபம் கிடைக்கும்.

प्रष्टुः पृथ्वी लाभदमसौम्यदृग्योगतो नैव ।
यदि पृच्छति कृषिको मे क्षेत्राल्लाभो भवेन्नो वा ॥

लग्नं कृषिकस्तुर्य भूमि द्यूनं च कृषिस्तरुर्दशमम् ।
लग्ने क्रूरोपगते स्थाच्चोरोपद्रवस्तु कृषिकर्तुः ॥

वक्रातिचारवर्ज्ये क्रूरे चौरस्य कृषिलाभाः ।
लग्नस्थे शुभखेटे साफल्यं कर्षकस्य कृषितस्स्यात् ॥

तुर्ये च क्रूरगते त्यक्त्वा भूमिं प्रयात्येषः ।
द्यूने च शुभोपगते शुभं कृषेस्त्वन्यथा तु विपरीतम् ॥
(ताजिकं-चतुर्थभावप्रश्नं-17,18,19,20,21 श्लोकाः)

इति चतुर्थभावप्रश्नविषयकः
चतुर्थोऽध्यायः ॥

(இ.ள்): உதயமான லக்னம் பாவிகளால் பார்க்கப்பட்டால் வேளாண்மை செய்பவனுக்கு திருடர்களால் தொந்தரவு ஏற்படும். திருடர்களுக்கு நல்ல லாபம் கிடைக்கும். லக்னத்தில் சுபர்கள் நின்றால் வேளாண்செய்பவனுக்கு நல்ல பயன் ஏற்படும். நான்காமிடத்தில் பாவிகள் நின்றால் நல்ல பலன் கிடைக்காது. வேளாண்மை செய்பவன் நிலத்தை விட்டுவிடுவான். 7மிடத்தில் சுபர்கள் நின்றால் வேளாண்மை செய்பவனுக்கு நன்மை ஏற்படும்.

நான்காம் அத்தியாயம் நிறைவுற்றது

## अथ पञ्चमोऽध्यायः

### पञ्चमप्रश्नः

### (अपत्यविषयः)

**यथा ताजिकं**

यदि पृच्छत्येतस्याः स्त्रियो भवेन्मे प्रजा न वा कश्चित् ।
लग्नेन्द्वोः सुतपतिना मुथशिलभावे प्रसूतिः स्यात् ॥ 25

सुतभावपतिर्लग्ने लग्नपचन्द्रौ सुतेऽथवा स्याताम् ।
सत्वरितमेव वाच्या सविलंबं नक्तयोगेन ॥ 26

द्विशरीरे च विलग्ने शुभयुतपुत्रे द्वयपत्ययोगोऽस्ति ।
यदि लग्नपुत्रपति पुंराशौ चेत्सायात्तदा सुतो गर्भे॥ 27

(ताजिकं - चतुर्थभावप्रश्नं-25, 26, 27 श्लोकः)

इति पञ्चमभावप्रश्नविषयकः
पञ्चमोऽध्यायः ॥

## ஐந்தாம் அத்தியாயம்

### ஐந்தாம் பாவம்
### தாஜிகநூலில் கூறப்பட்டுள்ள மகப்பேறறிய ஆரூடம்

(இ.ள்): ஒருவன் அவனுடைய மனைவியினிடத்தில் மக்கட்பேறு உண்டாகுமா என்று கேட்டால் கேட்கப் பட்ட சமயம் உதயமான லக்னத்துக்கு அதிபனும், மதியும் ஐந்தாமிடத்துக்குடையவனுடன் இத்தசாலம் என்னும் யோகத்தையடைந்திருந்தால் ப்ரச்னம் கேட்ட வனுக்கு ஸந்ததி உண்டாகும் என்றறிய வேண்டும். ஐந்தாமிடத்துக்கு உடையவன் லக்னத்திலும், லக்னாதிபனும் மதியும் ஐந்தாம் பாவத்தில் நின்றாலும் விரைவில் ஸந்ததி உண்டாகும். லக்னாதிபனுக்கும் ஐந்தாமிடத்துக்குடையவனுக்கும் நக்த யோகம் ஏற்படில் காலந்தாழ்ந்து ஸந்ததி உண்டாகும். லக்னாதிபனுக்கும் இரட்டைப்பட்ட ராசி லக்னமாக அமைந்து, ஐந்தாமிடம் சுபர்களுடன் கூடினதாக இருக்குமானால் இரண்டு குழந்தைகள் பிறக்கும். லக்னாதிபனும், ஐந்தாமிடத்துக்கு உடையவனும் புருஷ ராசியில் நின்றால் ஆண் மகவு பெறுவான்.

*(தாஜிகம் ஐந்தாம்பாவம்-25,26,27வது சுலோகங்கள்).*

ஐந்தாம் அத்தியாயம் நிறைவுற்றது

# अथ षष्ठोऽध्यायः

## षष्ठस्थान पृच्छाः

## (रोगविषयादिकः)

### यथा ताजिकं

अथ जीवसौम्यशुक्रा आकाशे उदयिनस्तथाप्येवम् ।
रोगादयमुत्थास्यति न वेत्ति लग्नं भिषक्द्यूनम् ॥

व्याधिर्दशमं रोगी हिबुकं भेषजमिहहुराचार्याः ।
क्रूरार्दिते विलग्ने वैद्यान्नगुणस्तदौषधाद्रोगः ॥

वृद्धिमुपयाति दशमे क्रूरैर्निजबुद्धितोप्यगुणः ।
अस्ते च क्रूरयुक्ते मान्द्यान्मान्द्यं तथौषधाद्वंधौ ॥

सौम्योपगतैरेतैररोगता रोगिणो भवति ।
लग्नेशेन्द्वोः सौम्येत्थशालतो रोगनाशनं वाच्यम् ॥

(ताजिकं षष्ठभावः-44, 45, 46, 47 श्लोकाः)

# ஆறாவது அத்தியாயம்

## ஆறாம் பாவம்

## (நோயைப்பற்றியது)

(இ.ள்): நோய்வாய்ப்பட்டிருக்கும் ஒருவனைப் பற்றி ப்ரச்னம்(ஆரூடம்) கேட்டால் ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னத்தைக்கொண்டு வைத்யனையும், 7மிடத்தைக்கொண்டு நோயையும், 10மிடத்தைக்கொண்டு நோயாளியையும், 4மிடத்தைக்கொண்டு மருந்தையும் ஆராய்ந்து கூறவேண்டும். ப்ரச்னம் கேட்கப்பட்ட சமயம் உதயமான லக்னத்தில் பாவிகள் நின்றால் நோயாளிக்கு வைத்யம் செய்யப்பட்டாலும் குணம் ஏற்படாது. மேலும் அவனுக்குக் கொடுக்கப்பட்ட

மருந்தினால் நோய் அதிகரித்துவிடும். 10மிடத்தில் பாவிகள் நின்றால் நோயாளி அவனுடைய தவறான செய்கையால் (பத்தியமாக இல்லாமல் தன் இஷ்டப்படி கண்டபடி சாப்பிடுவதால்) நோய் அதிகரித்துவிடும். 4மிடத்திலோ அல்லது 7மிடத்திலோ பாவிகள் நின்றால் வைத்யன், மருந்து, பந்துக்கள், நோயாளி இவர்களால் நோய் மிகவும் தாமதமாக குணமடையும். (வைத்ய னுடைய தவறுதல் காரணமாகவும். நோய்க்கேற்ற மருந்தை உண்ணாததாலும், உறவினர் ஒவ்வொருவர் ஒவ்வொன்று சொல்வதால் மாறி மாறி மருந்து உண்பதாலும், நோயாளியே தன்னிச்சைப்படி மருந்தை உண்பதாலும், ஆக இந்நான்கு காரணங்களால் நோய் விரைவில் குணமடையாது. நாளாகும் என்பது கருத்து). லக்னம் 4,7 அல்லது 10மிடத்தில் சுபர்கள் நின்றால் நோயாளி விரைவில் குணமடைவான். லக்னாதிபனும், மதியும் இத்தசாலம் என்னும் யோகத்தை அடைந்திருந்தால் நோயாளி விரைவில் நோயிலிருந்து விடுபட்டு சுகமடைவான்.

*(தாஜிகம் ஆறாம்பாவம்-44, 45, 46, 47வது சுலோகங்கள்)*

वक्रे तु तत्र खेटे भूयोऽपि गदः समुपयाति ।
भूमिस्थे लग्नस्थे द्यूनस्थे शशिमुथशिले भवेन्मृत्युः ॥
लग्नस्थे रन्ध्रपतौ लग्नपशशिनोर्विनाशे वा ।
लग्नाधिपे च सूर्ये चन्द्रः सप्तमेशमुथशिलविधायी ॥
सप्तमेशे षष्ठस्थे तन्मरणं रोगिणो वाच्यम् ।
रन्ध्रेशेन विनष्टेनास्तमितेनापि केन्द्रस्थे ॥
लग्नेशस्थमथशिले मृत्युस्स्याद्रोगपृच्छायाम् ।
अथवा तयोश्च केन्द्रे मुथशिलतः क्रूरपीडिते मरणम् ॥

(ताजिकं षष्ठभावे-48,49,50,51 श्लोकाः)

इति षष्ठभावविषयकः षष्ठमोऽध्यायः ॥

(இ.ள்): ப்ரச்ன காலத்தில் லக்னம், நான்காமிடம், ஏழாமிடம், பத்தாமிடம் இவைகளில் எந்த இடத்திலாவது கோள் வக்ரகதியையடைந்திருந்தால் நோய்வாய்ப்பட்டவன் குணமடைந்தவனாக இருந்தாலும் மீண்டும் நோய்வாய்ப்படுவான் என்றறிய வேண்டும். லக்னம் நான்காமிடம், ஏழாமிடங்களுள் ஏதேனும் ஒன்றில் மதி அந்தந்த ராசிக்குடையவனுடன் “இத்தசால”மென்னும் யோகத்தை யடைந்திருந்தால் நோயாளிக்கு மரணம் ஏற்படும். லக்னத்தில் எட்டுக்குடையவனும் அல்லது 8க்குடையவனும் மதியும் எட்டாமிடத்தில் நின்றாலும் நோயாளி மரண மடைவான். லக்னாதிபனாக சூரியன் இருந்து அவனுடன் 7க்கு உடையவனும் மதியும் இத்தசால யோகத்தையடைந்திருந்தாலும் 7க்குடையவன் 6மிடத்தை அடைந்திருந்தாலும், நோயாளி மரணம் அடைவான் 8மிடத்தில் 8க்குடையவன் 1, 4, 7 அல்லது 10க்குடையவனுடன் நின்று அஸ்தங்கததோஷத்தை அடைந்திருந்தாலும், லக்னாதிபனுடன் இத்தசால யோகத்தை அடைந்திருந்தாலும் நோயாளி மரண மடைவான். அல்லது லக்னாதிபனும் 8க்குடையவனும் 1, 4, 7 அல்லது 10மிடங்களுள் ஏதேனுமொன்றில் பாவி களுடன் சேர்ந்து இத்தசால யோகத்தை அடைந் திருந்தாலும் நோயாளி மரணமடைவான். (அதாவது பாபக்ரஹங்கள் 1, 4, 7 அல்லது 10ல் நின்றால் நோய்வாய்ப்படுவான். 8க்குடையவனும் லக்னாதிபனும் இத்தசாலயோகத்தை அடைந்திருந்தால் மரணம் உண்டாகும் என்பது கருத்து)

தாஜிகம் ஆறாம்பாவம்-48,49,50,51வது சுலோகங்கள்.

# अथ सप्तमोऽध्यायः

## सप्तमभावः(कलत्रविषयकः)

स्त्रीलाभस्य प्रश्ने स्मराधिपे लग्नपेन शशिना वा ।
कृतमुथशिले युवत्या अयाचिताया भवेल्लाभः ॥

यदि लग्नपोविधुर्वा द्यूने तद्याचितां स्त्रियं लभते ।
लग्नेशान्मूसरिफे चन्द्रेऽस्तपमुथशिले स्वयं लाभः ॥

येन समं तु मुथशिलस्तत्र विनष्टे च पापयुतदृष्टे ।
निकटौ भूय तदा किल विनश्यति स्त्रीगतं कार्यम् ॥

पापेऽत्र रन्ध्रनाथे स्त्रीजातेरेव विघटते कार्यम् ।
सहजपतौ भ्रातृभ्यस्तुर्येशे पितृत एव नान्येभ्यः ॥

सौम्यकृतयुतिदृग्भ्यां पूर्वोक्तस्थानतः शुभं वाच्यम् ॥

(ताजिके सप्तमभावे-63,64,65,66,67 श्लोकाः)

इति सप्तमभावविषयकः
सप्तमोऽध्यायः ॥

## ஏழாம் அத்தியாயம்

### ஏழாம் பாவம்

(மனைவியையடையும் விஷயம்)

(இ-ள்): ஒருவன் அவன் விரும்பிய மனைவியை அடைவதற்காக ப்ரச்னம் (ஆருடம்) கேட்டால் ப்ரச்னம் கேட்கப்பட்ட சமயம் 7மிடத்துக்குடையவனுடன் லக்னாதிபனோ அல்லது மதியோ இத்தசாலம் என்னும் யோகத்தை அடைந்திருந்தால் ப்ரச்னம் கேட்பவன் விரும்பாமலேயே (எந்த ஒரு பெண்ணைப்பற்றி நினைக்காமலிருக்கும்பொழுதே) வலுவிலே அவனுக்குப் பெண் கிடைப்பாள் என்றறிய வேண்டும். லக்னாதிபனோ

அல்லது மதியோ 7மிடத்தில் நின்றால் ப்ரச்னம் கேட்பவன் விரும்பிய பெண் கிடைப்பாள். லக்னாதிபனுடன் மதி மூஸரிபம் என்னும் யோகத்தை அடைந்திருந்தாலும் அல்லது 7மிடத்துக்குடையவனுடன் இத்தசாலம் என்னும் யோகத்தை அடைந்திருந்தாலும் ப்ரச்னம் கேட்பவனுக்கு சுலபமாக பெண் கிடைப்பாள். லக்னம் அல்லது 7மிடத்தில் எந்தக் கோளுடன் இத்தசாலம் என்னும் யோகத்தை(மதி)அடைந்திருக் கிறானோ அந்த கோள் அஸ்தங்கத தோஷத்தை அடைந் திருந்தாலும் (சூரியனில்) அல்லது பாபக் கோளுடன் தொடர்புடையதாக இருந்தாலும்(சனி, ராகு, செவ்வாய் போன்ற இயற்கையாகவே பாவிகளான கோள்களுடன்) மனைவி கிடைக்கவேண்டும் என்பதற்காக எடுத்துக் கொண்ட முயற்சி வீணாகும். பெண் கிடைக்க மாட்டாள். அதாவது ப்ரச்னம் கேட்கப்பட்டபொழுது லக்னத்திலோ அல்லது 7மிடத்திலோ (மதி, சூரியன், சனி, செவ்வாய், ராகு, சுக்கிரன் இவர்களுள் எந்த மூவராவது மதியுடன் அல்லது சுக்கிரனுடன் நின்றால் களத்ரம்(மனைவி) கிடைக்க மாட்டாள் என்பது கருத்து) ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னத்துக்கு 8மிடத்ததிபன் பாவியாக இருந்தால் பெண்கள் வழியிலுள்ளவர் களாலேயே ப்ரச்னம் கேட்பவனுடைய காரியம் (பெண் கிடைப்பது சம்பந்தமான) கெட்டுவிடும். 4ம் பாவத்தில் 3ம் பாவத்துகுடையவன் நின்றால் உடன்பிறந்தவர் களாலும் அல்லது தகப்பனாலும் ப்ரச்னம் கேட்பவ னுடைய காரியம் கெட்டுவிடும். லக்னம் 7ம்பாவம் இவ்விரண்டிடத்திலும் சுபர்கள் நின்றாலும், சுபர்களால் பார்க்கப்பட்டாலும் ப்ரச்னம் கேட்கவந்தவனுக்கு சுலபமாக பெண் கிடைப்பாள்.

(தாஜிகம் ஏழாம் பாவம்-63,64,65,66,67)

ஏழாம் அத்தியாயம் நிறைவுற்றது

# अथ अष्टमोऽध्यायः

## अष्टमस्थानप्रश्नः

## (जयपराजयमरणविषयकः)

भूपालयोर्नागरयायि नोर्द्धयो-
मर्ध्येऽनयोर्जेष्यति कोऽत्र संयुगे
युद्धं भविष्यत्यथ सन्धिरेतयोः
प्रश्ने कृते मन्त्रिभिरादिशेद्बुधः ॥

## எட்டாம் அத்தியாயம்

### எட்டாம் பாவம்

(வெற்றிவாய்ப்பு, மரணம் இவைகளைப்பற்றியது)

(இ.ள்): அண்டை நாட்டின் மேல் படையெடுத்துச் செல்கின்ற அரசனின் மந்திரிகளும், போரை எதிர் நோக்கியிருக்கும் அண்டை நாட்டரசனின் மந்திரிகளும் (இவர்களுள் எவராவது) சோதிடவல்லுநரை அணுகி போர் தவிர்க்க முடியாததுதானா ? ஒரு சமயம் போர் மூண்டால் (இவ்விருவர்களுள்) எவர் வெற்றி பெறுவர். அல்லது இவ்விருவருள் உடன்பாடு காண வாய்ப்புண்டா என்று ஆருடம் கேட்டால் அறிஞனான சோதிடன்(8ம் பாவம், 8ம் பாவத்தில் நிற்கும் கோள்கள், 8ம் பாவத்துக்குடையவன் நிற்கும் இடங்கள் முதலியவற்றை) நன்கு ஆராய்ந்து பலன் கூற வேண்டும்.

पापग्रहैर्दैत्यवरेशलग्ने
यदीत्थशालं कुरुते सुधाकरः।
सूर्योऽथवा द्वावथ पापखेटैः
कम्बूलयोगं कुरुतस्तदा रणः ॥ 2

(இ.ள்): போர் தவிர்க்க முடியாததுதானா என்பதையறிய வேண்டி ப்ரச்னம் கேட்கப்பட்ட பொழுது சுக்கிரனின் ராசியான விருஷபம் உதயமாகி அதில் மதி நின்று பாபக்ரஹங்களுடன் இத்தசாலம் என்னும் யோகத்தையடைந்திருந்தாலும், அல்லது கதிரவனும் மதியும் நின்று பாபக்ரஹங்களுடன் கம்பூல யோகத்தையடைந்திருந்தாலும் போர் ஏற்படும் என்றறிய வேண்டும்.

नृपसङ्ग्रामप्रश्ने विलग्न लग्नेश संस्थितात्खेटात् ।
शशीमूसरिफात्प्रष्टास्तास्तपसंस्थेन्दुमुथाशीलाच्छत्रु ॥

(ताजिके अष्टम भावे-86 श्लो.)

(இ.ள்): போரிடும் இரு அரசர்களுள் எவர் ஜயிப்பர் என்று அறியும் பொருட்டு எந்த ஒரு அரசனைச் சேர்ந்தவன் ப்ரச்னம் கேட்கிறானோ அவன் கேட்கும் சமயம் உதயமான லக்னத்தில் நிற்கும் கோளுடன் அல்லது லக்னாதிபதி நிற்கும் ராசிக்குடையவனுடன், மதி இத்தசாலம் என்னும் யோகத்தையடைந்திருந்தால் ப்ரச்னம் (ஆரூடம்) கேட்பவனுடைய அரசன் போரில் வெற்றி கொள்வான். லக்னத்துக்கு 7மிடத்தில் நிற்கும் கோளுடன் அல்லது 7க்குடையவன் நிற்கும் ராசிக்கு உடையவனுடன் மதி இத்தசாலம் என்னும் யோகத்தை யடைந்திருந்தால் எதிரி அரசன் போரில் வெற்றி கொள்வான் என்றறிய வேண்டும்.

(தாஜிகம் 8ம்பாவம் 86வது சுலோகம்)

वक्रेऽबरेरो प्रबलेत्ववक्रे
केन्द्रेऽर्कपुत्रेदनुजे(दशमे)रणस्स्यात् ।
स्वोच्चे स्वग्रहेऽर्कजे च चन्द्रे
महारणस्स्याद्दशमे खिलाहि ॥ 3

(இ.ள்): போர் தவிர்க்க முடியாததுதானா என்பதை அறியவேண்டி ப்ரச்னம் கேட்கப்பட்டபொழுது உதயமான லக்னத்தில் பத்துக்குடையவன் பலம் பெற்றவனாகவும் வக்ர கதியை அடைந்தவனாகவும் இருந்து லக்னம், நான்காமிடம், ஏழாமிடம் அல்லது 10மிடத்தில் சனி நின்றால் பத்து நாட்களில் போர் மூளும். சனியும், மதியும் அவரவர்களுடைய உச்ச வீட்டிலோ சனிக்கு உச்ச வீடான துலாத்தில் சனியும், மதிக்கு உச்சவீடான ரிஷபத்தில் மதியும் நின்றாலோ அல்லது சனியினுடைய சொந்த வீடான மகரத்திலோ அல்லது கும்பத்திலோ சனியும், மதியின் சொந்தவீடான கடகத்தில் மதியும் நின்றால் பத்து நாட்களில் பெரும் போர் மூளும் என்றறிய வேண்டும்.

कुजे स्थिरे केन्द्रगते रणोऽल्पो
द्विदेहगे चाल्पतरश्चरे रणः ।
राह्वित्थशालेऽथ शिखीत्थशाले
सूर्येण सन्धिः बहुशत्रुमृत्युः ॥ 4

**(இ.ள்): போர் தவிர்க்க முடியாததுதானா என்பதையறிய வேண்டி ப்ரச்னம் கேட்கப்பட்ட பொழுது உதயமான லக்னத்திற்கு லக்னம் 4, 7 அல்லது 10மிடம் ஸ்திர ராசியாக இருந்து அதில் செவ்வாய் நின்றால் பெரிய போர் எதுவும் ஏற்படாது. சாதாரணமாக சிறிய அளவில் சண்டை உண்டாகும். முன் கூறப்பட்ட நான்கு இடங்களும் உபய ராசிகளாகவோ அல்லது சரராசியாகவோ அமைந்தால் மிகவும் குறைந்த அளவில் பெயரளவில் சண்டை ஏற்படும். பெரிய போர் ஏற்படாது. முன் கூறப்பட்ட ஸ்திரம், சரம், உபயம் ஆகிய இராசிகளில் கதிரவனுடன் ராகுவுக்கோ அல்லது கேதுவுக்கோ "இத்தசாலம்" என்னும் யோகம் ஏற்பட்டால் பகைவர்கள் இருவருக்கும் உடன்பாடு ஏற்படும். ஆனால் பகைவர்கள் பலர் மடிந்து போவார்கள்.**

विलग्न लग्नाधिपतिः पुरेशो
जामित्रे जामित्रपतिश्च यायी ।
स्ववर्गराज्ञो जयदो बलीया-
न्यस्ताजिकाचार्यमते प्रदिष्टः ॥ 5

(இ.ள்): போரிடும் இரு அரசர்களுள் எவர் வெற்றிகொள்வர் என்பதையறியும் பொருட்டு எந்த ஒரு அரசனைச் சேர்ந்தவன் ப்ரச்னம் கேட்கிறானோ அவன் கேட்கும் சமயம் உதயமான லக்னத்துகுடையவன் லக்னத்திலேயே நின்று பலம் கொண்டவனாக இருந்தால் எதிரி அரசன் வெற்றி கொள்வான். 7மிடத்துக்குடையவன் 7மிடத்தில் பலம் கொண்டவனாக நின்றால் படையெடுத்துச் செல்லும் அரசன் வெற்றி கொள்வான் என்றறிய வேண்டும்.

குறிப்பு: இவர் கூறுவது தாஜிகர் கூற்றுக்கு மாறாகவிருப்பதை 2வது சுலோகத்தில் காண்க).

केन्द्रस्थितः स्वोच्चगतः स्वराशिगः
बलीत्थशाले शशिनोऽथवा रवेः ।
आपोक्लिमस्थोऽस्तमितः स्वनीचगः
स्ववर्गराज्ञः विजयाप्ति भङ्गदः ॥ 6

(இ.ள்): போரில் வெற்றிவாய்ப்பையறிய வேண்டி ப்ரச்னம் கேட்கப்பட்டபொழுது உதயமான லக்னம், 4, 7, 10மிடங்களுள் ஒன்றில் நிற்கும் கோள் அவை அவைகளின் உச்ச ராசி அல்லது அவைகளுக்குரிய ராசி இவைகளில் நிற்கும் கோள் இவைகள் மதியுடனோ அல்லது கதிரவனுடனோ இத்தசாலம் என்னும் யோகத்தையடைந்திருந்தால் ப்ரச்னம் கேட்பவனுடைய அரசன் போரில் வெற்றி கொள்வான். 3, 6, 9 அல்லது 12மிடங்களுள் ஏதேனுமொன்றில் நிற்கும் கோள்,

கதிரவனில் அஸ்தங்கததோஷத்தையடைந்ததாகவோ, நீசராசியையடைந்ததாகவோ இருக்கும் கோள் இவைகள் மதியுடனோ அல்லது கதிரவனுடனோ இத்தசாலம் என்னும் யோகத்தையடைந்திருந்தால் ப்ரச்னம் கேட்பவனுடைய அரசன் வெற்றிகொள்ள மாட்டான் என்றறிய வேண்டும்.

अथवा शनिकुजजीवाः शीघ्रेभ्यो बलयुता उपरिचराः ।
बुधसितचन्द्रास्तेभ्यश्च दुर्बलाधश्चराश्च सचिन्त्याः ॥

- ताजिके अष्टमभावे-87-श्लोकः

(இ.ள்): போரில் வெற்றி வாய்ப்பு அறியவேண்டி ப்ரச்னம் கேட்கப்பட்டபொழுது சனி, செவ்வாய், குரு இவர்கள் மற்ற வேகமான கதியையுடைய (சுக்கிரன் முதலான) கோள்களைக்காட்டிலும் பலமுடையவர்களாக அவைகளுக்கு முன் செல்பவைகளாகவுமிருந்தால் ப்ரச்னம் கேட்பவனுடைய அரசன் வெற்றிகொள்வான். புதன், சுக்கிரன் மதி இவர்கள் சனி, செவ்வாய், குரு இவர்களைக் காட்டிலும் குறைந்த பலமுடைவயவர் களாக பின்செல்பவர்களாக இருந்தால் வெற்றிகொள்ள மாட்டான். *(தாஜிகம் 8ம்பாவம் 78வது சுலோகம்)*

लग्नेश्वरोऽमन्दगतो चतुष्टये
स्वोच्चादिगे स्याद्बलवान्पुरेशः ।
जायेश्वरो वीर्ययुतोऽमन्दगो
स्वोच्चादिगे केन्द्रगते रिपुर्बली ॥

(இ.ள்): போரில் வெற்றி வாய்ப்பு அறியவேண்டி ப்ரச்னம் கேட்கப்பட்டபொழுது உதயமான லக்னத்துக்கதிபன் பலம் பொருந்தியவனாகவும் வேகமான கதியையுடையவனாகவும், 1, 4, 7 அல்லது 10மிடத்தில் நின்றாலும் அல்லது அவனுடைய உச்ச

வீட்டையடைந்திருந்தாலும், ப்ரச்னம் கேட்பவனுடைய அரசன் வெற்றிகொள்வான். 7க்குடையவன் பலம் பொருந்தியவனாகவும் வேகமான கதியையுடையவனாகவும் 1, 4, 7 அல்லது 10மிடத்தில் நின்றாலும், அவனுடைய உச்ச ராசியையடைந்திருந்தாலும் எதிரி பலம் கொண்டவனாக இருப்பான். (வெற்றிகொள்வான் என்பது கருத்து).

लग्नेशजामित्रपतीत्थशाले
सन्धिर्भवेत्स्नेहदृशा द्वयोश्च ।
केन्द्रव्ययैकादश गैश्च सौम्यैः
सन्धिर्भवेन्नृपयोर्द्वयोश्च ॥

(இ.ள்): போரில் வெற்றி வாய்ப்பு அறிய வேண்டி ப்ரச்னம் கேட்கப்பட்டபொழுது லக்னாதிபனும் 7க்குடையவனும் இத்தசாலம் என்னும் யோகத்தை அடைந்திருந்தால் போரிட முற்பட்ட இரு அரசர்களும் நட்பு முறையில் உடன்பாடு காண்பர். இதுபோல் 1, 4, 7 அல்லது 10மிடத்திலோ 11 அல்லது 12மிடத்திலோ சுபர்கள் நின்று அவர்களுடன் லக்னாதிபனோ அல்லது 7க்குடையவனோ இத்தசாலம் என்னும் யோகத்தை அடைந்திருந்தாலும் பகைவர்களான இரு அரசர்களும் நல்லமுறையில் உடன்பாடு காண்பர்.

लग्नपतावस्तपते षट्त्रिंदशायमुथशिले द्वयोः स्नेहः ।
वर्गद्वयमध्याधः पतितः सोऽन्येन बध्यः स्यात् ॥

- ताजिके अष्टमभावः-88-श्लोकः

(இ.ள்): போரில் வெற்றிவாய்ப்பறிய வேண்டி ப்ரச்னம் கேட்கப்பட்டபொழுது, லக்னாதிபனும் 7க்குடையவனும், 3, 6, 10 அல்லது 11மிடத்தில்

போரிடும் இரு அரசர்களும் நண்பர்களாகி உடன்பாடு காண்பர். லக்னத்துக்கும் 7மிடத்துக்கும் நடுவில் லக்னாதிபன் நீசபாவத்தையடைந்துவிட்டால் ப்ரச்னம் கேட்பவனின் அரசன் வேறு ஒருவனால் சிறைபிடிக்கப் படுவான் அல்லது கொல்லப்படுவான்.

*(தாஜிகம் 8ம்பாவம் 88வது சுலோகம்)*

जायेशलग्नाधिपतीसराफे
परस्परं दृष्टिनिहीनयोश्च ।
युद्धं भवेत्केन्द्रगतैश्च पापैः
क्रूरान्वितैः केन्द्रगतैर्विदेशे ॥

(இ.ள்): லக்னாதிபனும் 7மிடத்துகுடையவனும் (ஏதாவது ஒரு ராசியில்) ஈஸராபம் என்னும் யோகத்தை அடைந்திருந்தாலும், ஒருவரையொருவர் பார்த்துக் கொள்ளாவிட்டாலும் 1, 4, 7 அல்லது 10மிடத்தில் பாவிகள் நின்றாலும் வேறு தேசத்தில் (விரோதிகளாக இரு அரசர்கட்குரிய நாட்டிலில்லாமல்) போர்மூளும்.

குறிப்பு: இச்சுலோகத்தில் "केन्द्रगतैः" (கேந்த்ரகதை:) என்ற சொல் இரு இடங்களில் அமைக்கப்பட்டிருக்கிறது. நூலாசிரியர் செய்த தவறா அல்லது எழுதுவோரின் கைத்திறனா என்பது தெரியவில்லை). ஈஸாராப யோகம்:- வேகமாகச் செல்லும் ஏதாவது ஒரு கோள் (மதி, சுக்கிரன், புதன் இவர்களுள் ஒருவன்) மந்தமாகச் செல்லும் சனி, செவ்வாய் இவர்களுடைய அம்சத்தில் ஒரு பாகத்தை ஏற்று அவைகளைத் தாண்டி முன் செல்லுமானால் இதை ஈஸாராபயோகம் என்பர். இதற்கே "மூஸநிபம்" என்னும் பெயரும் உண்டு. இவ்விதமான யோகத்தில் ஆரம்பிக்கப்பட்ட எந்த காரியமும் நாசமாகிவிடும். ப்ரச்னம் கேட்கும் சமயம்

இந்தவிதமான யோகமுடையதாக கோள்கள் அமையுமானால் ப்ரச்னம் கேட்பவன் காரியம் வெற்றியடையாது என்றறிய வேண்டும்

लग्नेश्वरे सप्तमगेऽबले च
निरुद्यमीस्यादबलः पुरेशः ।
जायेश्वरे लग्नगते चरेऽथ
यायी भवेदुद्यमवीर्यवर्जितः ॥ 10

(இ.ள்): போரில் வெற்றி வாய்ப்பறிய வேண்டி ப்ரச்னம் கேட்கப்பட்டபொழுது உதயமான லக்னத்துக்கு அதிபன் 7மிடத்தை அடைந்தவனாகவும் பலமற்றவனாகவும் இருந்தால் ப்ரச்னம் கேட்பவனுடைய அரசனது மாற்றானான வேறு நாட்டரசனை பலமற்றவனாக போரிடுவதில் உற்சாகமற்றவனாக இருப்பான். 7மிடத்துக்குடையவன் சரராசியாக அமைந்த உதய லக்னத்தை அடைந்து பலமற்றவனாக இருந்தால் ப்ரச்னம் கேட்பவனுடைய அரசன் போரிடச் செல்ல ஆயத்த நிலையில் இருப்பினும் பலமற்றவனாகவும் உற்சாகமற்றவனாகவும் இருப்பான். போர் நடைபெறாது. என்றறிய வேண்டும்.

लग्नेश्वरे लग्नगतेऽथवा स्थिरे
सहायवीर्योद्यमवान्पुरेश्वरः ।
जामित्रनाथे स्मरगे स्थिरेऽथवा
यायी सहायोद्यमशक्तिमान्भवेत् ॥ 8

(இ.ள்): போரில் வெற்றி வாய்ப்பறிய வேண்டி ப்ரச்னம் கேட்கப்பட்டபொழுது உதயமான லக்னத்துக்கு உடையவன் லக்னத்திலேயே நின்றாலும் அல்லது ஸ்திர ராசியில் நின்றாலும் மாற்றானான வேறுநாட்டரசன்

பக்கபலமுடையவனாகவும் பராக்ரமம் உள்ளவனாகவும் முயற்சியுடையவனாகவும் இருப்பதாக அறிய வேண்டும். 7மிடத்துக்குடையவன் 7மிடத்திலேயே நின்றாலும் அல்லது ஸ்திர ராசியில் நின்றாலும் போரிடச் செல்லும் ப்ரச்னம் கேட்பவனின் அரசன் நல்ல பக்கபலத்துடன் கூடியவனாகவும், தெம்புடனும் போரிடுவதில் முயற்சியுடையவனாகவும் இருப்பதாக அறியவேண்டும்.

कर्मेश्वरे लग्नगते सहायवान्
बलं भवेन्नागरपार्थिवस्य ।
तयैश्वरे सप्तमगे सहायवान्
बलं प्रभूतं खलु यायिनस्स्यात् ॥ 9

(இ.ள்): போர் விஷயமாகப் ப்ரச்னம் கேட்கப்பட்ட பொழுது உதயமான லக்னத்துக்கு 4மிடத்துக்கு உடையவன் லக்னத்தில் நின்றால் மாற்றானான வேறு நாட்டரசன் நல்ல பக்கபலம் கொண்டவனாக இருப்பான். 4மிடத்துக்குடையவன் 7மிடத்தை யடைந்திருந்தால் போரிடச் செல்லும் அரசன் மிக்க பலம் கொண்டவனாக இருப்பான் (என்றறிய வேண்டும்).

लग्नेशकर्माधिपतीत्थशाले
लग्नेऽथखेऽन्यता च नागरो जयेत् ।
तुर्येशजामित्रपतीत्थशाले
सुखे स्मरेऽन्यत्र च यायिनो जयः ॥ 10

(இ.ள்): போர் விஷயமாகப் ப்ரச்னம் கேட்கப்பட்ட பொழுது உதயமான லக்னத்திலோ 10மிடத்திலோ அல்லது வேறுஎந்த இடத்திலாவது லக்னாதிபனும் 10க்குடையவனும் இத்தசாலம் என்னும் யோகத்தை

அடைந்திருந்தால் வேற்றுநாட்டரசன் வெற்றி கொள்வான். 4மிடத்திலோ, 7மிடத்திலோ அல்லது வேறு எந்த இடத்திலாவது 4மிடத்துக்குடையவனும் 7மிடத்துக்குடையவனும் இத்தசாலம் என்னும் யோகத்தை அடைந்திருந்தால் போரிடச் செல்லும் அரசன் வெற்றிகொள்வான். (என்றறியவேண்டும்).

मेषूरणात्षट्भवनेषु चन्द्र-
लग्नेश सौम्यैश्चजयेत्पुरेशः ।
रसातलात्षट्भवनेषु चन्द्र-
जायेश सौम्यैश्च जयेत्प्रयायी ॥ 11

(இ.ள்): போர் விஷயமாகப் ப்ரச்னம் கேட்கப் பட்டபொழுது உதயமான லக்னத்துக்கு 10மிடம் முதல் 3மிடம் வரையிலான (6)ஆறு ராசிகளில் மதி, லக்னாதிபன் சுபர்கள் இவர்கள் நின்றால் வேற்று நாட்டரசன் வெற்றி கொள்வான். நான்காம் வீட்டிலிருந்து 9ம் வீடுவரையிலான ஆறு ராசிகளில் மதி 7க்குடையவன். சுபர்கள் இவர்கள் நின்றால் போரிடச் செல்லும் அரசன் வெற்றி கொள்வான்.

सूर्येन्दुभौमार्कजसैंहिकेयैः
सर्वैश्चतुर्भिस्त्रिभिरेवलग्नैः ।
हन्यास्तदास्थायिनमाशुयायी
द्यूनस्तितैर्यायिनृपं पुरेश्वरः ॥ 12

(இ.ள்): போர் விஷயமாக ப்ரச்னம் கேட்கப்பட்ட பொழுது உதயமான லக்னத்தில் கதிரவன், மதி, செவ்வாய், சனி, ராகு இவர்கள் ஐவருமோ, நால்வரோ அல்லது மூவரோ சேர்ந்திருந்தால் போரிடச் செல்லும் அரசன் வேற்று நாட்டரசனைப் போரில் விரைவில் கொல்வான். கதிரவன், மதி, செவ்வாய், சனி, ராகு

இவர்கள் ஐவருமோ, நால்வரோ அல்லது மூவரோ 7மிடத்தில் நின்றால் மாற்றானான வேற்று நாட்டரசன் போரிடச் சென்ற அரசனைப் போரில் கொல்வான்.

दैत्येरावाचस्पतिसोमपुत्रैः
एकर्क्षगैर्लग्नगतैर्बलाढ्यैः ।
द्वाभ्यामथेज्ये भृगुजेऽथ लग्ने
हन्याद्रणे यायि नृपं पुरेशः ॥ 13

(இ.ள்): போரில் வெற்றி வாய்ப்பு விஷயமாகப் ப்ரச்னம் கேட்கப்பட்டபொழுது உதயமான லக்னத்தில் ஒரே நக்ஷத்திரக்காலில் சுக்கிரன், குரு, புதன், இம்மூவரும் பலம் பொருந்தியவர்களாக நின்றாலும், லக்னத்தில் (எந்த நக்ஷத்திரக்காலிலாவது) குருவும், புதனுமோ அல்லது சுக்கிரனும் புதனுமோ அல்லது குருவும், சுக்கிரனுமோ சேர்ந்து நின்றால் வேற்று நாட்டரசன் அவன் நாட்டின் மேல் படையெடுத்து சென்ற அரசனைக் கொல்வான்.

शुक्रेणशीतांशुबुधासुरैर्यैः-
स्सर्वैस्त्रिभिर्द्यूनगतैर्बलाढ्यैः ।
हन्याद्रणे स्थायिनमाशु यायी
सुखास्पदैस्तैस्सुलभस्सुसन्धिः ॥ 14

(இ.ள்): போரில் வெற்றிவாய்ப்பு விஷயமாகப் ப்ரச்னம் கேட்கப்பட்டபொழுது உதயமான லக்னத்துக்கு 7மிடத்தில் சுக்கிரனுடன் மதி, புதன், ராகு இம்மூவரும் பலம் பொருந்தியவர்களாக நின்றால் படையெடுத்துச் சென்ற அரசன் போரில் வேற்றுநாட்டரசனைக் கொல்வான். இந்நால்வரும் சுபர்களாக நான்காம் இடத்தில் நின்றால் இருவரும் சுலபமாக உடன்பாடு காண்பார்கள்.

लग्नस्थितैर्केतुमहीजसूर्यैः
जायास्थितैश्चार्कजराहचन्द्रैः ।
विपर्ययाद्वा बलिभिश्च सौम्यैः
युद्धे द्वयोर्पार्थिवयोर्विनाशः ॥ 15

(இ.ள்): போரில் வெற்றி வாய்ப்பு விஷயமாகப் ப்ரச்னம் கேட்கப்பட்டபொழுது உதயமான லக்னத்தில் கேது, செவ்வாய், சூரியன் இம்மூவர்களும் நின்று சனி, ராகு, மதி இவர்கள் ஏழாமிடத்தில் நின்றாலும் அல்லது சனி, ராகு, மதி இவர்கள் லக்னத்திலும், கேது, செவ்வாய், சூரியன் இம்மூவரும் ஏழாமிடத்தில் நின்றால் போரிடும் இரு அரசர்களும் மடிவார்கள்.

कुजेत्थशाले हिमगौ विलग्ने
बन्धश्च मृत्युर्युधि नागरस्य ।
भौमेत्थशालेऽथविधौ कलत्रे
बन्धं मृतिं वा लभतेऽत्र यायी ॥ 16

(இ.ள்): போரில் வெற்றி வாய்ப்பு விஷயமாகப் ப்ரச்னம் கேட்கப்பட்டபொழுது உதயமான லக்னத்தில் மதியும், செவ்வாயும் இத்த சாலம் என்னும் யோகத்தை அடைந்திருந்தால் வேற்று நாட்டரசன் சிறை பிடிக்கப் பட்டு கொல்லப்படுவான். ஏழாமிடத்தில் மதியும், செவ்வாயும் இத்தசாலம் என்னும் யோகத்தை அடைந் திருந்தால் படையெடுத்துச் சென்ற அரசன் வேற்று நாட்டரசனால் சிறை பிடிக்கப்படுவான் அல்லது கொல்லப்படுவான்.

मेषूरणात्षट्सु हिमांशुपापैः
भङ्गो भयं स्याद्युधि नागरस्य ।

रसातलात्षट्सु सशाङ्कपापैः
युद्धे भयं भङ्गमुपैति यायी ॥ 17

(இ.ள்): போரில் வெற்றி வாய்ப்பு விஷயமாகப் ப்ரச்னம் கேட்கப்பட்டபொழுது உதயமான லக்னத்துக்கு பத்தாமிடம் முதல் மூன்றாமிடம் வரையிலான ஆறு ராசிகளில் மதியும் பாவிகளும் நிற்பார்களேயானால் போரில் வேற்றுநாட்டு அரசன் பயம் காரணமாகப் போரில் தோல்வி அடைவான்.

स्थिरोदये केन्द्रगतैश्च सौम्यैः
स्वर्क्षोच्चगैः वीर्ययुतैरपापैः ।
वर्गे शुभे लग्नगते शशाङ्के
शुभेत्थशाले मरणं प्रविद्यात् ॥

(இ.ள்): போரில் வெற்றி வாய்ப்பு விஷயமாகப் ப்ரச்னம் கேட்கப்பட்டபொழுது உதயமான லக்னம் ஸ்திர ராசியாக அமைந்து அதற்குக் கேந்திரத்தில் 1, 4, 7 அல்லது 10மிடத்திலாவது அல்லது அவரவர்களுடைய உச்ச வீட்டிலாவது பலம் பெற்றவர்களாக சுபர்கள் நின்று, இவர்களுடன் மதியும்(சுபமான ஷட்வர்க்கத்தை அடைந் திருந்தவனாக) நின்றால் இத்தசாலம் என்னும் யோகத்தை அடைந்திருந்தாலும் ப்ரச்னம் கேட்பவனுடைய அரசனுக்கு மரணம் நேரிடும் என்றறிய வேண்டும்.

शुभेगृहे मन्दगतौ विलग्ने
लग्नेश्वरे केन्द्रपतीत्थशाले ।
केन्द्रस्थिते मन्दगतौ बलाढ्ये
चरे विलग्ने च जयेत्पुरेशः ॥

(இ.ள்): போரில் வெற்றி வாய்ப்பு விஷயமாகப் ப்ரச்னம் கேட்கப்பட்டபொழுது உதயமான லக்னம்

சுபருடைய ராசியாக அமைந்து அதில் சனி நின்று, லக்னாதிபதி கேந்திராதிபதிகளுடன் (4, 7 அல்லது 10க்குடையவன்) இத்தசாலம் என்னும் யோகத்தை அடைந்திருந்தாலும், உதயமான லக்னம் சரராசியாக அமைந்து அதிலாவது அல்லது அதற்கு 4, 7 அல்லது 10மிடத்தில் சனி பலம் பெற்றவனாக நின்றிருந்தால் வேற்று நாட்டரசன் வெற்றி கொள்வான் என்றறிய வேண்டும்.

जायेश्वरे मन्दगतौ स्थिरर्क्षे
केन्द्रस्थिते केन्द्रपतीत्थशाले ।
स्वोच्चादि संस्थेऽभ्युदिते च तस्मिन्
यायी जयेद्द्यून गतैश्च पापैः ॥

(இ.ள்): போரில் வெற்றி வாய்ப்பு விஷயமாகப் ப்ரச்னம் கேட்கப்பட்டபொழுது உதயமான லக்னம் ஸ்திரராசியாக அமைந்து அதில் 7மிடத்துக்குடையவன் நின்று, கேந்திரங்களில் 4, 7 அல்லது 10மிடத்தில் சனி நின்று கேந்திராதிபர்களுடன் சனி இத்தசாலம் என்னும் யோகத்தை அடைந்திருந்தாலும், 7மிடத்துக்கு உடையவன் அவனுடைய உச்சவீட்டையடைந்திருந்தாலும், உச்ச ராசியில் உச்ச பாவத்தை அடைந்திருந்தாலும் அல்லது அந்த ராசியையடைந்து உச்சாம்சத்தை அடையாமல் இருந்தாலும் 7ல் பாபர்கள் நின்றாலும் போரிடச்சென்ற அரசன் வெற்றிகொள்வான்.

लाभे धने सौम्ययुते क्षिते स्यात्
पुरेशराज्ञः कटकस्य वृद्धिः ।
छिद्रे सुते सौम्ययुते क्षिते स्यात्
प्रयायि राज्ञः कटकस्य वृद्धिः ॥

(இ.ள்): போரில் வெற்றி வாய்ப்பு விஷயமாகப் ப்ரச்னம் கேட்கப்பட்டபொழுது உதயமான லக்னத்துக்குப்

பதினொன்றாம் வீட்டில் அல்லது தனஸ்தானமான இரண்டாம் வீட்டில் சுபர்கள் நின்றாலும் அல்லது 2, 11மிடங்கள் சுபர்களால் பார்க்கப்பட்டாலும் வேற்று நாட்டரசனுக்கு பல ராஜ்யங்கள் வசமாகும். 8 அல்லது 5மிடத்தில் சுபர்கள் நின்றாலும் அவ்விடங்களை சுபர்கள் பார்த்தாலும் போரிடச் செல்லும் அரசன் போரில் வெற்றி பெற்று பல ராஜ்யங்களை தன் வசப்படுத்திக் கொள்வான்.

सौम्यैर्विलग्नार्थभवास्पदस्थैः
शुभैः सहायो नगराधिपस्य ।
लग्नेश्वरे द्वादशगे पुरेशो
हन्यान्नृपं स्मरपे च षष्ठगे ॥ 25

(இ.ள்): போரில் வெற்றி வாய்ப்பு விஷயமாகப் ப்ரச்னம் கேட்கப்பட்டபொழுது உதயமான லக்னம், 2ம் பாவம், 10ம் பாவம் அல்லது 11ம் பாவத்தில் சுபர்கள் நின்றால் வேற்று நாட்டரசனுக்கு நல்லோர்களின் உதவி கிடைக்கும். மேலும் லக்னாதிபன் 12ம் பாவத்தை அடைந்திருந்து 6மிடத்துக்குடையவன் 7மிடத்தை அடைந்திருந்தால் வேற்று நாட்டரசன் போரிடச்சென்ற அரசனைக் கொன்றுவிடுவான்.

लग्नेश्वरे छिद्रपतीत्थशाले
छिद्रस्थिते नागरभूपनाशः ।
जामित्रनाथे धनपेत्थशाले
धनस्थिते नश्यति चाशु यायी ॥

(இ.ள்): போரில் வெற்றி வாய்ப்பு விஷயமாகப் ப்ரச்னம் கேட்கப்பட்டபொழுது உதயமான லக்னத்துக்கதிபன் 8ல் நின்று 8க்குடையவனுடன் "இத்தசாலம்" என்னும் யோகத்தை அடைந்திருந்தால் வேற்று நாட்டரசன் போரில் மாள்வான்.

7ஆமிடத்துக்குடையவன் இரண்டாமிடத்தில் நின்று 2ஆமிடத்துக்குடையவனுடன் "இத்தசாலம்" என்னும் யோகத்தை அடைந்திருந்தால் போரிடச்சென்ற அரசன் போரில் மடிவான்.

लग्नेशजामित्रपतीत्थशाले
लग्ने सुसन्धिं कुरुते प्रयायी ।
द्यूने च सन्धौ नगरेश्वरोऽर्थी
स्वबन्धु संस्थे समता द्वयोस्स्यात् ॥ 27

(இ.ள்): போரில் வெற்றி வாய்ப்பு விஷயமாகப் ப்ரச்னம் கேட்கப்பட்டபொழுது உதயமான லக்னத்தில், லக்னாதிபன் 7மிடத்துக்குடையவனுடன் சேர்ந்து நின்று "இத்தசாலம்" என்னும் யோகத்தை அடைந்திருந்தால் போரிடச்சென்றவன் வேற்று நாட்டரசனுடன் நல்லதொரு உடன்பாட்டை ஏற்படுத்திக்கொள்வான். லக்னாதிபன் 7மிடத்தில் 7மிடத்துக்குடையவனுடன் நின்று "இத்தசாலம்" என்னும் யோகத்தை அடைந்திருந்தால் வேற்று நாட்டரசன் முன்வந்து போரிடச் சென்றவனுடன் உடன்பாடு செய்துகொள்வான். லக்னாதிபன் 4மிடத்தில் நின்று நான்காமிடத்துக்கு உடையவனுடன் "இத்தசாலம்" என்னும் யோகத்தை அடைந்திருந்தால் இருவரும் பரஸ்பரம் கேட்டுக் கொள்வதின் பேரில் உடன்பாட்டை ஏற்படுத்திக் கொள்வார்கள்.

लग्नपतावस्तपतेषट्त्रि दशायमुथशिले द्वयोःस्नेहः ।
वर्गद्वयमध्याः पतितः सोऽन्येन वध्यः स्यात् ॥
वर्गद्वयाधिपानां मूसरिफेऽस्तंगतेन रणदैर्घ्यम् ।
लग्नस्वामिनि मन्दे कम्बूले उपरिगे जयः प्रष्टुः ॥

- ताजिके. 8 भाव. 88, 89 श्लो.

(இ.ள்): போரில் வெற்றி வாய்ப்பு விஷயமாகப் ப்ரச்னம் கேட்கப்பட்டபொழுது உதயமான லக்னத்துக்கு

அதிபனும் 7மிடத்துக்குடையவனும் லக்னம் 7மிடம் இவைகட்கு மத்தியில் எந்த ராசியிலாவது அஸ்தங்கத தோஷத்தையடைந்த கோளுடன் இத்தசாலம் என்னும் யோகத்தை அடைந்திருந்தால் போர் நீண்ட நாட்கள் தொடர்ந்து நடக்குமென்றறிய வேண்டும். முன் கூறப்பட்ட இடத்தில் லக்னாதிபன் மந்தகதியையுடைய சனியுடன் "கம்பூல" யோகத்தை அடைந்திருந்தால் ப்ரச்னம் கேட்பவனுடைய அரசன் வெற்றி காண்பான் என்றறிய வேண்டும். *(தாஜிகம் 8ம் பாவம் 88வது ச்லோகம்)*

एवं गुणे तु तस्मिन्विप्रविनष्टेऽस्तपति नीचस्थे ।
केन्द्रेऽस्ते वास्तपतौ प्रष्टुर्हानिः प्रवक्तव्या ॥

- ताजिके. 8 भाव. 90 श्लो.

(இ.ள்): முன் கூறப்பட்டபடி லக்னம், 7மிடம் இவைகட்கு மத்தியில் லக்னாதிபன் (சூரியனில்) அஸ்தங்கத தோஷத்தை அடைந்து 7க்குடையவனும் நீச ராசியை அடைந்திருந்தாலும், 7க்குடையவன் 1, 4, 7 அல்லது பத்தாமிடத்தில் நின்றாலும் விசேஷமாக 7மிடத்திலேயே நின்றாலும் ப்ரச்னம் கேட்பவனுடைய அரசன் தோல்வியடைவான்.

*(தாஜிகம் 8ம் பாவம் 90வது ச்லோகம்)*

लग्नादधः शुभे सति उपरि च मन्दे शुभः सहायः स्यात् ।
लग्नपतौ रन्ध्रस्थे रन्ध्रपति मुथशिले मृतिः प्रष्टुः ॥

- ताजिके. 8 भाव. 91 श्लो.

(இ.ள்): ப்ரச்னம் கேட்கப்பட்ட சமயம் உதயமான லக்னத்துக்குப் பின்புறம் சுபனும் முன்புறம் மந்தகதியை யுடைய கோளும் நின்றால் ப்ரச்னம் கேட்பவனுடைய அரசனுக்கு நல்ல உதவி கிடைக்கும். லக்னாதிபன் 8ம்

பாவத்தை அடைந்து 8மிடத்துக்கு உடையவனுடன் "இத்தசாலம்" என்னும் யோகத்தை அடைந்திருந்தால் ப்ரச்னம் கேட்பவனுடைய அரசன் போரில் மாள்வான்.

*(தாஜிகம் 8ம் பாவம் 91வது ச்லோகம்)*

सप्तेशे धनसंस्थे धनशकृतमुथशिले रिपोर्नाशः ।
लग्नेशदशमपत्योर्मुथशिलतः पृच्छकस्य जयवीर्ये ॥

- ताजिके. 8 भाव. 92 श्लो.

(இ.ள்): ப்ரச்னம் கேட்கப்பட்ட சமயம் உதயமான லக்னத்துக்கு 7மிடத்துக்குடையவன் 2மிடத்தையடைந்து இரண்டாமிடத்துக்குடையவன் "இத்தசாலம்" என்னும் யோகத்தையடைந்திருந்தால் ப்ரச்னம் கேட்பவனுடைய அரசனது மாற்றான் மடிவான். லக்னாதிபனும் 10மிடத்துக்குடையவனும் (இரண்டாமிடத்தில்) "இத்தசாலம்" என்னும் யோகத்தை அடைந்திருந்தால் ப்ரச்னம் கேட்பவனுடைய அரசன் பலம் பெற்றவனாகவும் வெற்றி கொள்பவனாகவும் இருப்பான்.

*(தாஜிகம் 8ம் பாவம் 92வது ச்லோகம்)*

तुर्यास्तपयोरेवं शत्रोर्योगे जयो ज्ञेयः ।
उभयवर्गेऽपि केन्द्रे तत्पतिकृतमुथशिले बलं ज्ञेयम् ॥

- ताजिके. 8 भाव. 93 श्लो.

(இ.ள்): ப்ரச்னம் கேட்கப்பட்ட சமயம் உதயமான லக்னம், 7மிடம் இவைகட்கு மத்தியில் எந்த இராசியிலாவது நான்காமிடத்துக்குடையவனும் 7மிடத்துக்கு உடையவனும் சேர்ந்திருந்தால் (இத்தசாலம் என்னும் யோகத்தையடைந்திருந்தால்) ப்ரச்னம் கேட்பவனுடைய மாற்றான் வெற்றியடைவான். லக்னம் 7மிடம் இவைகளுக்கு மத்தியில் கேந்திரஸ்தானங்களான 1, 4, 7ஆமிடங்களுள் ஒன்றில் அந்தந்த ராசிக்கு

உடையவனுடன் இந்தசாலம் என்னும் யோகத்தை அடைந்திருந்தால் ப்ரச்னம் கேட்பவனுக்கு பலம் என்றறிய வேண்டும்.

*(தாஜிகம் 8ம் பாவம் 93வது ச்லோகம்)*

चरराशौ सबलघ्नं जित्वा प्रान्ते विनाशस्तु ।
लग्नपतावन्त्यस्थे प्रष्टा नश्यति परोऽस्रपे षष्ठे ॥

- ताजिके. 8 भाव. 94 श्लो.

(இ.ள்): *ப்ரச்னம் கேட்கப்பட்ட சமயம் உதயமான லக்னத்துக்கும் 7மிடத்துக்கும் நடுவில் சரராசியில் (லக்னாதிபனோ, 7மிடத்துக்குடையவனோ) நின்றால் ப்ரச்னம் கேட்பவனின் அரசன் போரில் முதலில் வெற்றி கொண்டாலும் விரைவில் மாற்றானிடம் தோல்வி அடைவான். லக்னாதிபன் 12மிடத்தில் நின்றாலும் ப்ரச்னம் கேட்பவனின் அரசன் போரில் மடிவான். 10மிடத்துக்குடையவன் 6மிடத்தில் நின்றால் ப்ரச்னம் கேட்பவனின் மாற்றான் போரில் மடிவான்.*

*(தாஜிகம் 8ம் பாவம் 94வது ச்லோகம்)*

स्वपतौ लग्ने प्रष्टुस्तुर्येरोशेस्ते रिपोः सहाय बलम् ।
यन्मुथशिलौ रवीन्दू तस्य बलं मूसरिफे हानिः ॥

- ताजिके. 8 भाव. 95 श्लो.

(இ.ள்): *ப்ரச்னம் கேட்கப்பட்ட சமயம் உதயமான லக்னத்தில் 10க்குடையவன் நின்றால் ப்ரச்னம் கேட்பவனின் அரசனுக்கு நல்ல உதவி கிடைப்பதால் பலம் பெற்றவனாக இருப்பான். நான்காமிடத்துக்கு உடையவன் 7மிடத்தில் நின்றால் பகைவன் உதவி பெற்று பலம் கொண்டவனாக இருப்பான். லக்னத்திலோ 4லோ 7லோ அல்லது 10மிடத்திலோ கதிரவனும் மதியும் "இத்தசாலம்" என்னும் யோகத்தை அடைந்திருந்தால்*

ப்ரச்னம் கேட்பவனின் அரசனின் பலம் கொண்டவனாவான். கம்பூல யோகத்தை அடைந்திருந்தால் போரில் மாள்வான்.

(தாஜிகம் 8ம் பாவம் 95வது ச்லோகம்)

**परचक्रागमनप्रश्नः**

शुक्रज्ञजीवैः हिबुकादि संस्थैः
आयाति शीघ्रं बलवानरातिः ।
चन्द्रार्कमन्दावनिजैः सुखस्थैः
प्राप्नोति भङ्गं विनिवर्ततेऽरिः ॥ 1

## வேற்று நாட்டரசனின் படையின் வருகை அறிதல்

(இ.ள்): போர் விஷயமாக ப்ரச்னம் கேட்கப்பட்ட பொழுது உதயமான லக்னத்துக்கு 4மிடம் 12மிடம் வரையிலான ராசிகளுள் எந்த ராசியிலாவது சுக்ரனும், புதனும், குருவும் சேர்ந்து நின்றால் மாற்றான் விரைவில் படையெடுத்து வருவான். 4மிடத்தில் மதி, கதிரவன், சனி, செவ்வாய் இவர்கள் நின்றால் படையெடுத்துவந்த அரசனின் சேனைகள் முறியடிக்கப்பட்டு மாற்றான் திரும்பிவிடுவான்.

स्थिरोदये जीवसितज्ञमन्दैः
कर्मेन्द्रियस्थैर्क्षसमेति शत्रुः ।
पापग्रहैः पञ्चमषष्ठसंस्थैः
तदार्धमार्गाद्विनिवर्ततेऽरिः ॥

(இ.ள்): போர் விஷயமாகப் ப்ரச்னம் கேட்கப்பட்ட பொழுது உதயமான லக்னம் ஸ்திர ராசியாக அமைந்து

அதற்கு 10மிடத்தில் குரு, சுக்கிரன், சனி, புதன் இவர்கள் நின்றால் மாற்றான் போரிட வரமாட்டான் என்றறிய வேண்டும். உதயமான லக்னத்துக்கு 5 அல்லது 6மிடத்தில் பாவிகள் நின்றால் மாற்றான், போரின் நிமித்தம் வந்தாலும் பாதி வழியிலேயே திரும்பி விடுவான் என்றறிய வேண்டும்.

केन्द्रे स्थिरर्क्षे रिपुपापयुक्ते
बलान्विते चेत्परचक्रमेति ।
लग्नेशधर्माधिपतीत्थशाले
पराभवस्स्यादपरैरयुक्ते ॥ 3

(இ.ள்): போர் விஷயமாகக் கேட்கப்பட்ட பொழுது உதயமான லக்னம் 4, 7, 10மிடங்கள் ஸ்திர ராசியாக அமைந்து அதில் சத்ருவாகவும் பாவியாகவும் உள்ள கோள்கள் மிக்க பலம் வாய்ந்தவைகளாக நின்றால் மாற்றான் படையெடுத்து வருகிறான் என்றறிய வேண்டும். உதயமான லக்னம் 4, 7 அல்லது 10மிடத்தில் லக்னாதிபன் 9க்குடையவனுடன் இத்தசாலம் என்னும் யோகத்தையடைந்து பாவிகள் சம்பந்தமில்லாமல் இருந்தால் மாற்றான் படையெடுத்து வந்தபோதிலும் போரில் தோற்றுப்போய் அவமானத்தையடைந்து திரும்பிச் சென்றுவிடுவான்.

चरोदये शीतकरे द्विदहे
पराभवः प्रष्टुररेस्समागमात् ।
लग्ने चरे शीतकरे चरस्थे
शीघ्रं समायाति बलान्वितोऽरिः ॥ 4

(இ.ள்): போர் விஷயமாகப் பரச்னம் கேட்கப்பட்ட பொழுது உதயமான லக்னம் சரராசியாக அமைந்து இரட்டைப்பட்ட ராசியில் மதியும் நின்றால் மாற்றான் படையெடுத்து வருவான். அவனை எதிர்க்கும் (ப்ரச்னம்

கேட்கப்பட்டவனுடைய) அரசன் போரில் தோற்றுப் போய் அவமதிப்பையடைவான். உதயமான லக்னம் சரராசியாக அமைந்து அதில் அல்லது வேறு சரராசியில் மதி நின்றால் விரைவில் பகைவன் தக்க பலத்துடன் படையெடுத்து வருகிறான் என்றறிய வேண்டும்.

द्वयङ्गोदये द्वयङ्गगते हिमांशौ
नश्यत्यलं लब्धबलोऽपि शत्रुः ।
स्थिरोदये शीतकरे स्थिरस्थे
नायाति नूनं सबलोप्यरातिः ॥ 5

(இ.ள்): போர் விஷயமாகப் ப்ரச்னம் கேட்கப்பட்ட பொழுது உதயமான லக்னம் இரட்டைப்பட்ட ராசியாக அமைந்து, அதில் அல்லது வேறொரு இரட்டைப்பட்ட ராசியில் மதி நின்றால் படையெடுத்து வரும் பகைவன் போதுமான அளவு படை பலம் கொண்டவனாக இருப்பினும் போரில் தோல்வியடைவான். உதயமான லக்னம் ஸ்திர ராசியாக அமைந்து அதில் அல்லது வேறொரு ஸ்திர ராசியில் மதி நின்றால் பகைவன் போதுமான அளவு படைபலம் கொண்டவனாக இருப்பினும் போரின் நிமித்தம் படையெடுத்துவர மாட்டான் என்பது உறுதி.

केन्द्रेस्थिरर्क्षेद्वितनूदयेस्या-
(द्वितनूदये शीतकरे स्थिरर्क्षे)
पराभवः भवक्षिप्रमसंशयेन ।
स्थिरोदये शीतकरे द्विदेहे
दूरा(दा)गतोप्याशु निवर्ततेऽरिः ॥ 6

(இ.ள்): போர் விஷயமாகப் ப்ரச்னம் கேட்கப்பட்ட பொழுது உதயமான லக்னம் இரட்டைப்பட்ட ராசியாக அமைந்து மதி ஸ்திர ராசியில் நின்றால் படையெடுத்துவரும் பகைவன்போரில் தோற்று அவமானத்தையடைவான். உதயமான லக்னம் ஸ்திர

ராசியாக அமைந்து இரட்டைப்பட்ட ராசியில் மதி நின்றால் வெகு தொலைவிலிருந்து பகைவன் படையெடுத்து வந்தாலும் விரைவில் திரும்பிவிடுவான்.

द्व्यङ्गोदये शीतकरे चरर्क्षे
तदार्धमार्गाद्विनिवर्तेऽरिः ।
चरोदये शीतकरे स्थिरर्क्षे
बलन्वितोप्यागमनं न शत्रोः ॥ 7

(இ.ள்): போர் விஷயமாகப் ப்ரச்னம் கேட்கப்பட்டபொழுது இரட்டைபட்ட ராசி உதயமாகி சரராசியொன்றில் மதி நின்றால் பகைவன் போர் நிமித்தம் படையெடுத்து வந்தாலும் நடுவழியிலேயே திரும்பி விடுவான். உதயமான லக்னம் சரராசியாக அமைந்து ஸ்திரராசியொன்றில் மதி நின்றால் பகைவன் மிக்க பலம் கொண்டவனாக இருப்பினும் படை யெடுத்துவரமாட்டான்.

स्थिरोदये शीतकरे चरस्थे
वीर्यान्विते चागमनं रिपूणाम् ।
पापग्रहे वीर्ययुते विलग्ने
मार्गेरिपोः मृत्युकरः कदाचित् ॥ 8

(இ.ள்): போர் விஷயமாகப் ப்ரச்னம் கேட்கப்பட்ட பொழுது உதயமான லக்னம் ஸ்திர ராசியாக அமைந்து சரராசியொன்றில் மதி பலம் பொருந்தியவனாக நின்றால் பகைவர்கள் படையெடுத்து வருவார்கள். உதயமான லக்னத்தில் பாவிகள் பலம் பொருந்தியவர் களாக நின்றால் படையெடுத்துவரும் பகை அரசனுக்கு நடுவழியில் மரணம் நேரிடலாம்.

मार्तण्डशुक्रज्ञशनैश्चराणां
एकोऽपि लग्ने स्थिरराशिगः स्यात् ।
शत्रुस्तदा नागमनं प्रकुर्या-
च्छरस्थिते चागमनं हि शत्रोः ॥ 9

(இ.ள்): போர் விஷயமாகப் ப்ரச்னம் கேட்கப்பட்ட பொழுது உதயமான லக்னம் ஸ்திர ராசியாக அமைந்து அதில் கதிரவன், சுக்கிரன் புதன், சனி இவர்கள் எவராவது ஒருவர் நின்றால் பகைவன் படையெடுத்துவர மாட்டான். உதயமான லக்னம் சரராசியாக அமைந்து அதில் கதிரவன், சுக்கிரன், புதன், சனி இவர்களுள் எவராவது ஒருவர் நின்றால் பகைவன் படையெடுத்து வருவான்.

मृगेन्द्रमीनालिवृषाश्वकुम्भ-
लग्नस्थिताः वीर्ययुताः प्रकुर्युः ।
शत्रोर्निवृत्तिं नृपतेर्विशेषा-
द्दैत्येशवाचस्पति दृष्टियुक्ताः ॥ 10

(இ.ள்): போர் விஷயமாகப் ப்ரச்னம் கேட்கப்பட்ட பொழுது உதயமான லக்னம் சிம்மம், மீனம், விருச்சிகம், விருஷபம், மேஷம், கும்பம் இவைகளுள் ஏதேனும் ஒன்றாக அமைந்து அதிக பலம் பொருந்திய கோள்கள் நின்று சிறப்பாக, சுக்கிரன், குரு இவர்களால் பார்க்கப்பட்டவர்களாகவும் இருந்தால் ப்ரச்னம் கேட்கப்பட்டவனின் அரசனுடைய பகைவன் படையெடுத்து வந்தாலும் திரும்பி சென்றுவிடுவான்.

लग्नाद्द्वितीये तनये तृतीये
शुक्रो गुरुर्वाऽपि विधुश्चतुर्थे ।
यदा तदा क्षिप्रमुपैति शत्रु-
सेनास्तथा दूरगतः प्रवासी ॥ 11

(இ.ள்): போர் விஷயமாகப் ப்ரச்னம் கேட்கப்பட்ட பொழுது உதயமான லக்னத்திலிருந்து இரண்டாமிடம், மூன்றாமிடம் அல்லது ஐந்தாமிடத்தில் சுக்கிரனோ, குருவோ நின்று, நான்காமிடத்தில் மதியும் நின்றால், பகையரசன் வேறு நாட்டுக்குச் சென்றிருக்கும்பொழுது (சென்றிருந்தாலும்) அவனுடைய சேனைகள் படையெடுத்து வருவது திண்ணம்.

## षट्पञ्चाशिकायां

मार्गान्निवर्तते शत्रुः पापैः शत्रुगृहाश्रितैः ।
चतुर्थगैरपि प्राप्तः शत्रुर्भग्नो निवर्तते ॥ 36

झषालिकुंभकर्कटा रसातले यदा स्थिताः ।
रिपोः पराजयस्तदा चतुष्पदैःपलायनम् ॥ 37

मेषधनुःसिंहवृषा यद्युदयस्तथा भवन्ति हिबुके वा ।
शत्रुर्निवर्ततेऽत्र ग्रहसहिता वा नियुक्ता वा ॥ 38

नागच्छति परचक्रं यदार्कचन्द्रौ चतुर्थभवनस्थौ ।
गुरुबुधशुक्रहिबुके यदा शीघ्रमायाति ॥ 39

स्थिरोदये जीवशनैश्चरे स्थिते गमागमौ नैव वदेत्तु पृच्छतः ।
त्रिपञ्चषष्ठा रिपुसंगमाय पापाश्चतुर्था विनिवर्तनाय ॥ 40

दशमोदयसप्तमगाः सौम्या नगराधिपस्य विजयकराः ।
आरार्किज्ञगुरुसिताः प्रभंगदा विजयदा नवमे ॥ 41

उदयर्क्षाच्चन्द्रर्क्षं भवति च यावद्दिनैश्च तावद्भिः ।
आगमनं स्याच्छत्रोर्यदि न हि मध्ये ग्रहः कश्चित् ॥ 42

## ஷட்பஞ்சாசிகையில் கூறப்பட்டிருப்பவை

(இ.ள்): போர் விஷயமாகப் ப்ரச்னம் கேட்கப்பட்ட பொழுது உதயமான லக்னத்துக்கு 6மிடமான சத்ரு வீட்டை பாபகிரஹங்கள் அடைந்திருந்தால் படையெடுத்துவந்த பகையரசன் பாதி வழியிலேயே ப்ரச்னம் கேட்போனின் அரசனது படைகளால் முறியடிக்கப்பட்டு திரும்பிவிடுவான். நான்காம் வீட்டில் பாபக்ரஹங்கள் நின்றாலும் பகையரசனின் படைகள் ஸமீபத்தில் வந்திருந்தாலும் ப்ரச்னம் கேட்போனின் அரசனின் படைகளால் முறியடிக்கப் பட்டு திரும்பிச் சென்றுவிடுவான். *36*

ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னத்துக்கு நான்காமிடம் ஜலராசியான மீனம், கர்க்கடகம், விருச்சிகம் அல்லது கும்பமாக அமைந்து அவைகளில் பாபக்ரஹங்கள் நின்றால் படையெடுத்துவந்த பகையரசன் தோற்றுப்போவான். நான்காமிடம் நாற்கால் பிராணிகளின் ராசிகளான மேஷம், விருஷபம், சிம்மம், தனுசு இவைகளுள் ஒன்று அமைந்து பாபர்கள் நின்றால் படையெடுத்துவந்த பகையரசன் போரில் தோற்றுப்போய் ஓடிவிடுவான். *37*

ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னம் க்ரஹங்க ளுடன் கூடியதாக இருந்தாலும் இல்லாவிட்டாலும், அந்த லக்னத்துக்கு நான்காமிடம் மேஷமாகவோ, விருஷப மாகவோ, சிங்கமாகவோ அல்லது தனுர் ராசியாகவோ அமைந்தால் (அவைகளிலும் க்ரஹங்கள் நின்றாலும் நிற்காவிட்டாலும்) படையெடுத்துவந்த அரசன் போரில் தோற்றுப் போய் ஓடிவிடுவான். *38*

ப்ரச்னகாலத்தில் உதயமானலக்னத்துக்கு நான்காமிடத்தில் கதிரவனும், மதியும் நின்றால் பகையரசனின் படைகள் விரைவில் வராது. நான்காமிடத்தில் குரு, புதன், சுக்கிரன் நின்றால் பகை அரசன் விரைவில் படையெடுத்துவருவான். *39*

ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னம் ஸ்திரராசியாக அமைந்து அதில் குருவும், சனியும் நின்றால் ப்ரச்னம்

கேட்பவனின் அரசனைப் போரிட செல்லுதல் கூடாது என்று கூறவேண்டும். உதயமான லக்னத்துக்கு மூன்று, ஐந்து அல்லது ஆறாமிடத்து பாபக்கிரஹங்கள் நின்றால் பகையரசர்கள் படையெடுத்து வருவான். நான்காம் இடத்தில் பாபக்கிரஹங்கள் நின்றால் பகையரசன் படை எடுத்து வந்தாலும் பின்வாங்கி ஓடிவிடுவான். 40

ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னம்,ஏழாமிடம் அல்லது பத்தாமிடத்தில் சுபர்கள் நின்றால் ப்ரச்னம் கேட்பவனுடைய அரசன் வெற்றி கொள்வான். (கடலோரத்தில் நகராதிபன் என்ற பதம் போட்டிருப்பதால் வேறு நாட்டரசர்கள் என்று கொள்ள வேண்டும் என்று தோன்றுகிறது. போரிடச் செல்பனாயின் "யாயீ" என்ற பதம் போடப்பட்டிருக்க வேண்டும்). ஒன்பதாமிடத்தில் சனியும் செவ்வாயும் நின்றால் ப்ரச்நம் கேட்பவனின் அரசன் போரில் தோல்வியடைவான். புதன், குரு, சுக்கிரன் இவர்கள் நின்றால் அரசன் போரில் வெற்றியடைவான். 41

ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னத்திலிருந்து அப்பொழுது மதி நிற்கும் இராசியை எண்ணினால் எவ்வளவு எண்ணிக்கைகள் கொண்ட ராசிகள் இருக்கின்றனவோ அவ்வளவு நாட்களில் பகையரசன் படையெடுத்து வருவான் என்றறிய வேண்டும். (அதாவது ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னம் மேஷம் என்று வைத்துக்கொண்டால் ப்ரச்னம் கேட்ட அன்று மக நக்ஷத்திரமாக இருந்து சிங்கத்தில் மதி நிற்பதால் மேஷம் முதல் சிங்கம் வரை எண்ணியுள்ள ராசிகள் ஐந்து ஆகின்றன. ஆகவே ஐந்து தினங்களில் பகையரசன் படையெடுத்து வருவான் என்றறிய வேண்டும்). ஆனால் உதயமான லக்னம் அதற்கு ஆறாமிடம் ஆகிய ராசிகளுக்கு மத்தியில் எந்த ராசியிலும் க்ரஹங்கள் நிற்கக்கூடாது. 42

दैत्येज्यवाचस्पति सोमपुत्रैरेकर्क्षगैर्लग्नगतैर्बलाढ्यैः ।
द्वाभ्यामथेज्ये भृगुजेऽथलग्ने हन्याद्रणे यायि नृपं पुरेशः ॥ 43

सूर्येन्दुभौमार्कजसैंहिकेयैः सर्वैश्चतुर्भिस्त्रिभिरेवलग्नगैः ।
हन्यात्तदास्थायिनमाशुयायी द्यूनास्थितैर्यायि नृपं पुरेशः ॥ 44

शुक्रेज्यशीतांशुबुधामरेज्यैः सर्वैस्त्रिभिर्द्यूनगतैर्बलाढ्यैः ।
हन्याद्रणे स्थायिनमाशु यायी सुखास्पदस्थैश्च शुभैस्सुसन्धिः ॥

कुजेत्थशाले हिमगौ विलग्ने बन्धोऽथ मृत्युर्युधिनागरस्य ।
भौमेत्थशाले च विधौ कलत्रे बन्धं मृतिं वा लभतेऽत्र यायी ॥ 46

लग्नेशजामित्रपयोश्च मध्ये भवेद्ग्रहो यः स्वगृहोच्चसंस्थः ।
तद्वर्गमत्यान्नृपयोश्च सन्धिः ज्ञेयो बुधे लेखकपण्डिताभ्याम् ॥ 47

## ப்ரச்னதீபிகையில் கூறப்பட்டவை

(இ.ள்): போர் விஷயமாகப் ப்ரச்னம் கேட்கப்பட்டபொழுது உதயமான லக்னத்தில் ஒரே நக்ஷத்திரத்தில் (நான்கு பாதங்களிலும்) பலம் பொருந்திய சுக்கிரன், குரு, புதன் இம்மூன்று கோள்களுமோ அல்லது இரண்டு கோள்களுமோ அல்லது ஒன்றோ நின்றால் (அதாவது லக்னத்தில் குருவும் சுக்கிரனும் நின்றாலும் சுக்கிரனும்-புதனும், குருவும்-புதனும் நின்றாலும் அல்லது குருவோ, சுக்கிரனோ அல்லது புதனோ தனியே நின்றாலும்) போர் நிமித்தம் படையெடுத்துச் சென்ற அரசனை வேற்றுநாட்டரசன் கொன்று விடுவான். 43

ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னத்தில் கதிரவன், மதி, செவ்வாய், சனி, இராகு இந்நான்கு கோள்களும் நின்றாலும் அல்லது நான்கு கோள்களோ மூன்றோ நின்றால் போரிடச்சென்ற அரசன் போர் நிமித்தம்

படையெடுத்துவந்த (வேறுநாட்டரசனை) போரில் கொல்வான். உதயமான லக்னத்துக்கு ஏழாமிடத்தில் முன்கூறப்பட்ட கோள்கள் எல்லாமோ அல்லது நான்கோ மூன்றோ நின்றால் படையெடுத்துவந்த வேறு நாட்டரசன் போரிடச்சென்ற அரசனைக் கொல்வான். *44*

ப்ரச்னம் கேட்கப்பட்ட சமயம் உதயமான லக்னத்துக்கு ஏழாமிடத்தில் பலம்பொருந்திய சுக்கிரன், குரு, மதி, புதன் இந்நால்வருமோ அல்லது மூவரோ நின்றால் போரிடச்சென்ற அரசன் போர்நிமித்தம் படையெடுத்துவந்த அரசனைக் கொல்வான். முன்கூறப் பட்ட நால்வரோ அல்லது மூவரோ சுபர்களாக நான்காமிடத்திலோ அல்லது பத்தாமிடத்திலோ நின்றால் போரிடும் இரு அரசர்களுக்கும் ஒரு நல்ல உடன்பாடு ஏற்படும். *45*

ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னத்தில் செவ்வாயும், மதியும் இத்தசாலம் என்னும் யோகத்தை அடைந்திருந்தால் போரிடவந்த மாற்றான் அரசன் சிறைபிடிக்கப்படுவான். அல்லது போரிடச்சென்ற அரசனால் கொல்லப்படுவான். *46*

ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னாதிபதி ஏழாமிடத்திற்குடையவன் இவர்களுள் எந்த க்ரஹம் (கோள்) அதனுடைய உச்சவீட்டிலோ அல்லது தனது வீட்டிலோ நிற்கின்றதோ அப்பொழுது போரிடும் இரு அரசர்களைச் சேர்ந்தவர்களால் இரு அரசர்களுக்கும் நல்லதொரு உடன்பாடு ஏற்படும். (அதாவது மதியும், கதிரவனும் நின்றால் அரசர்கள் மூலமாகவும், செவ்வாய் நின்றால் சேனைத்தலைவர்கள் மூலமாகவும், குருவும் சுக்கிரனும் நின்றால், மந்திரிகள் மூலமாகவும், சனி நின்றால் வேலைக்காரர்கள் மூலமாகவும் உடன்பாடு ஏற்படும்) புதன் நின்றால் இரு அரசர்களின் காரியஸ்தர்கள் அல்லது பண்டிதர்கள் மூலமாக உடன்பாடு ஏற்படும். *47*

क्रूरे कलत्रे ह्युदये शुभग्रहो यच्छेद्धनं यायि नृपाय नागरः ।
विपर्ययाद्यायि नृपः पुरेश्वरं दुर्गाद्धिनिष्कास्य ददाति वाऽस्पदम् ॥ 48

(இ.ள்): போர் விஷயமாகப் ப்ரச்னம் கேட்கப்பட்ட பொழுது உதயமான லக்னதில் சுபக்ரஹங்களும் ஏழாமிடத்தில் பாபக்கோள்களும் நின்றால் போர் நிமித்தம் படையெடுத்துவந்த மாற்றான் வேற்று நாட்டரசன் அவனை எதிர்த்து போரிடச்சென்ற அரசனின் பொருட்டு தனத்தைக் கொடுப்பான். (தனத்தைக் கொடுத்து சமாதானமாகப்போவான்) உதயமான லக்னத்தில் பாபக்கோள்கள் நின்று ஏழாமிடத்தில் சுபர்கள் நின்றால் போரிடச்சென்ற அரசன் மாற்றானை முற்றுகையிடப்பட்ட இடத்தி லிருந்து விரட்டிவிடுவான் அல்லது தோற்றுப்போய் தனது நாட்டை மாற்றானுக்குச் கொடுத்துவிடுவான்.

## दुर्गविषयकप्रश्नः

क्रूरैर्ग्रहैर्द्वादशवित्तसंस्थैः
यद्वेष्टितं दुर्गमराति संधैः ।
न गृह्यते तद्रिपुभिस्तृतीय-
लाभस्थितैस्तत्समयश्च पापैः ॥ 1

## நகரைச் சுற்றிலும் முற்றுகையிடப்பட்டதைப் பற்றிய ப்ரச்னம்

(இ.ள்): ஒரு நாட்டரசன் அவனுடைய பகையரசனது நாட்டின் மேற்படையெடுத்துச் சென்று அவனது நகரைச் சுற்றிலும் தன்படைகளைக்கொண்டு முற்றுகையிட்டு அந்நகரத்தரசனைப் போருக்கு அழைப்பதும், அவ்வாறு முற்றுகை இடப்பட்ட நகரத்தரசன் படையெடுத்துவந்த அரசனது படைகளால் அமைக்கப்பெற்ற முற்றுகையை முறியடித்துப்

புறங்காட்டி ஓடச்செய்வதோ அல்லது அவனிடம் தோற்று நகரைவிட்டு ஓடிப்போவதோ அல்லது சிறை பிடிக்கப்படுவதோ போரின் மரபு. அவ்வாறான சமயங்களில் முற்றுகையிடப்பட்ட நகரத்தரசனது மந்திரிகள் முதலானவர்கள் ஒருவர் சோதிடரை அணுகி முற்றுகை விஷயமாகப் பரச்னம் கேட்கப்பட்டால் அப்பொழுது உதயமான லக்னத்துக்கு இரண்டாமிடம், மூன்றாமிடம், பத்தாமிடம், பதினொன்றாமிடம் அல்லது பன்னிரண்டாமிடத்தில் பாபக்ரஹங்கள் நின்றால், முற்றுகையிடப்பட்ட நகரத்தரசன் மாற்றானால் அவனது நகரைச் சுற்றிலும் அமைக்கப் பெற்ற முற்றுகையை முறியடிக்க முடியாது. 1

पापैस्सुखव्योमगतैः पुरं यत्
प्रवेष्ठितं येन नरेश्वरेण ।
स्वयं स नश्यत्यचिरेण दुर्गं
मुक्त्वा रिपूणां भयविह्वलस्सन् ॥ 2

(இ.ள்): முற்றுகை விஷயமாகப் ப்ரச்னம் கேட்கப்பட்டபொழுது உதயமான லக்னத்துக்கு, நான்காமிடத்திலோ அல்லது பத்தாமிடத்திலோ பாவிகள் நின்றால் எந்த அரசனால் அவனுடைய பகை அரசனுடைய நகரம் முற்றுகையிடப்பட்டதோ அந்த அரசன், பகையரசனிடமிருந்து ஏற்பட்ட பயம் காரணமாக (அவனது படை பலத்தைக்கண்டு அஞ்சியவனாக) அவனால் அமைக்கப்பெற்ற முற்றுகையை விட்டு விட்டு ஓடிவிடுவதுடன் அழிந்தும் விடுவான்.

लग्ने सुते वा दशमेऽथजीवे
सैन्यं प्रभूतं परितस्त्वरातेः ।
निगृह्यते दुर्गमिहोपगम्य
पराङ्मुखं तद्भवति क्षणेन ॥ 3

(இ.ள்): முற்றுகையிடப்பட்டது தொடர்பாகப் ப்ரச்னம் கேட்கப்பட்டபொழுது உதயமான லக்னத்திலோ, ஐந்தாமிடத்திலோ அல்லது பத்தாம்மிடத்திலோ குரு நின்றால் நகரைச்சுற்றிலும் பகையரசனால் அவனுடைய பெரும் படைகளைக் கொண்டு அமைக்கப்பெற்ற முற்றுகையை, நகரத்தரசன் வெளிவந்து தனது படை பலத்தால் பகைவனது படைகளைப் பிடித்துவிடுவான் அல்லது அவனுடைய படைபலங்கண்டு உடனேயே முற்றுகையில் ஈடுபட்ட படைகள் பின்வாங்கி ஓடிவிடும். 3

लग्ने गुरौ लग्नपवीक्षितो वा
सुस्नेहदृष्ट्या रविचन्द्रशुक्रैः।
दृष्टे सुवीर्यैरुदितैश्शुभैश्च
दुर्गस्थितानां कुशलं जयश्च ॥ 4

(இ.ள்): முற்றுகையிடப்பட்டது தொடர்பாகப் ப்ரச்னம் கேட்கப்பட்டபொழுது உதயமான லக்னத்தில், குரு நின்று, அவன் லக்னாதிபனால் பார்க்கப் பட்டாலும், (ஏழாமிடத்தில் நிற்கின்ற) சூரியன், சந்திரன், சுக்கிரன் இவர்களால் நட்புடன் பார்க்கப் பட்டாலும், உச்சஸ்தானத்தையடைந்த பலம் பொருந்திய சுபர்களால் பார்க்கப்பட்டாலும், முற்றுகையில் ஈடுபட்டிருக்கும் படைகள் எந்தவித தொந்தரவுமின்றி ஸுகமாக இருப்பார்கள். வெற்றியையும் அடைவார்கள்.

குறிப்பு: இச்சுலோகத்தில் மூன்றாவது வரியில் "उदितैः" என்ற சொல்லுக்கு லக்னம் என்ற பொருள் இருந்தாலும் முதல் வரியில் "लग्ने गुरौ" என்று லக்னத்தைக் குறிப்பிட்டு அதில் குரு இருப்பதாகவும் கூறப்பட்டிருப்பதாலும், "उदितैः दृष्टे" என்று சொல்லும் பொழுது லக்னத்திலிருக்கும் சுபர்களால் பார்க்கப்

பட்டால் என்ற பொருள் கூறுவது முன்னுக்குப்பின் விரோதமாக இருக்குமென்பதால் उदितैः என்பதற்கு உச்ச பாவத்தையடைந்த என்று பொருள் கூறப் பட்டது).

लग्नस्थिते लग्नपतौ सिते वा
लाभे गुरौ दुर्गसमाश्रितानाम् ।
क्षेमं विशेषात्सुहृदशाच्च सौम्यैः
दृष्टे जयः स्वोदयगैश्च सौम्यैः ॥ 5

(இ-ள்): முற்றுகையிடப்பட்டது தொடர்பாகப் ப்ரச்னம் கேட்கப்பட்டபொழுது உதயமான லக்னத்தில் அந்த லக்னத்துக்குடையவனோ அல்லது சுக்கிரனோ நின்று பதினொன்றாமிடத்தில் குருவும் நின்று, அவரவர்களுடைய உச்சஸ்தானத்தையடைந்த சுபர்களால் நட்புடன் பார்க்கப்பட்டால் முற்றுகையில் ஈடுபட்டிருக்கும் படைவீரர்களுக்கு எந்தவித ஆபத்தும் இல்லை. ஸுகமாக இருக்கிறார்கள் என்று தெரிந்து கொள்ளவேண்டும். 5

सिंहोदये तीव्रकरेण दृष्टे
पापैर्विहीने गुरुसंयुते च ।
दुर्गेश्वरः शत्रुबलं स्ववीर्या-
न्निर्जित्य राज्यं सुचिरं करोति ॥ 7

(இ-ள்): முற்றுகையிடப்பட்டது தொடர்பாகப் ப்ரச்னம் கேட்கப்பட்டபொழுது உதயமான லக்னம் சிங்கமாக இருந்து பாவிகள் சம்பந்தமின்றி குருவுடன் சேர்ந்திருந்து கதிரவனால் பார்க்கப்பட்டதாகவும் இருந்தால் ஒரு நகரத்தை முற்றுகையிட்ட அரசன் தன்னுடைய படைபலத்தால் பகைவனின் சேனையை அழித்து பகைவனை வென்று (நாட்டைக் கைப்பற்றி) பலகாலம் அரசாள்வான்.

जलोदये सूर्यसुतेन संयुते
जलस्य नाशाद्ग्रहणं जडस्य च ।
सूर्येण भौमेन युतेन चोदये
सस्यप्रणाशादनलाच्च सङ्गरात् ॥ 7

(இ.ள்): முற்றுகை விஷயமாகப் ப்ரச்னம் கேட்கப்பட்டபொழுது ஜலராசிகளில் ஒன்று உதயமாகி அதில் சனி நின்றால் தண்ணீர் கஷ்டம் ஏற்பட்டு அதன் காரணமாக பகைவன் பிடிபடுவான். ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னத்தில் சூரியனும், செவ்வாயும் நின்றால் பயிர்கள் அழிந்துபோவதாலும், தீப்பிடித்துக் கொள்வ தாலும், போர் மூள்வதின் காரணமாகவும் பகைவன் பிடிபடுவான். 7

वित्ताधिनाथस्य यदाधिकारो
लग्ने च तं लग्नपतिः प्रपश्येत् ।
धनस्थिताः सौम्य खगास्तदा स्यात्
दुर्गेशराज्ञो बहुलस्सहायः ॥ 8

(இ.ள்): முற்றுகை விஷயமாகப் ப்ரச்னம் கேட்கப் பட்டபொழுது உதயமான லக்னத்துக்கு, இரண்டாம் இடமான தனஸ்தானாதிபதி முழுபலத்துடன் (அஸ்தங்கத தோஷம் முதலியவைகளையடையாதவனாக) உதயமான லக்னத்தில் நின்று அவனை லக்னாதிபன் பார்த்தால், இரண்டாமிடத்தில் சுபர்களும் நின்றால் முற்றுகை யிட்டிருக்கும் அரசனுக்கு மற்ற அரசர்களின் உதவி கிடைக்கும். 9

निशाकरे लग्नपतीत्थशाले
सुस्नेहदृष्ट्योदयपेन दृष्टे ।
स्थायी तदा प्रेषयति स्वदूतं
यायी नृपो मानयचिश्च सन्धिम् ॥ 10

(இ.ள்): முற்றுகை விஷயமாகப் ப்ரச்னம் கேட்கப்பட்டபொழுது உதயமான லக்னத்துக்கதிபனுடன் மதி இத்தசாலம் என்னும் யோகத்தையடைந்திருந்தால் முற்றுகையிடப்பட்ட நகரத்தரசன் உடன்படிக்கை செய்துகொள்வதற்காக தன்னுடைய தூதனை அனுப்புவான். போரிடச் சென்ற அரசனும் நகரத்தரசனின் உடன்பாட்டை ஏற்றுக்கொள்வான். 9

कुजेन मन्देन युते हिमांशौ
दूतस्य विद्यान्मृतिर्बन्धनेन ।
शुभैर्युते लग्नपराशीपाभ्यां
दृष्टे विधौ तस्य धनाम्बरासिः ॥ 10

(இ.ள்): முற்றுகை விஷயமாகப் ப்ரச்னம் கேட்கப்பட்டபொழுது உதயமான லக்னத்திலோ வேறு எந்த ராசியிலாவது மதி செவ்வாயுடனும், சனியுடனும் இணைந்திருந்தல் தூது சென்றவன் பகைவனால் சிறைவைக்கப்பட்டு மரணத்தையடைவான். மதி சுபர்களுடன் கூடினவனாகவும், உதயமான லக்னத்துக்கு அதிபனாலும், எந்த ராசியில் நிற்கின்றானோ அந்த ராசிக்கதிபனாலும் பார்க்கப்பட்டவனாக இருந்தால் தூது சென்றவனை பகை அரசன் ஆடை, தனம் இவைகளைக் கொடுத்து ஆதரிப்பான். 10

लग्नं लग्नेश्वरः क्रूरः केन्द्रस्थः पीडयेद्यतः ।
ततो दुर्गभयं विद्यात्पूर्वादिभ्यो दिशः क्रमात् ॥ 11

(இ.ள்): முற்றுகை விஷயமாகப் ப்ரச்னம் கேட்கப்பட்டபொழுது உதயமான லக்னத்துக்கதிபன் பாவியாக இருந்து, லக்னம், நான்காமிடம், ஏழாமிடம், பத்தாமிடம் இவைகளுள் ஏதேனுமொன்றில் நின்றவனாக அவன் உதயமான லக்னத்தைப் பார்ப்பதாலோ, பாவிகளுடன் நிற்பதாலோ

தொந்தரவை உண்டுபண்ணுவானாகில் அப்பொழுது நகரத்தைச் சுற்றிலும் பகையரசனால் அமைக்கப்பட்ட முற்றுகையினால் (அதில் உள்ள படைகளால்) கிழக்கு முதலான திசைகளிலிருந்து பயம் ஏற்படும். 11

## चिन्तामणौ–दुर्गप्रश्नः

प्रश्ने विलग्ने क्रूरे वा दुर्गभङ्गो न जायते ।
विशेषतो भूमिपुत्रे राहौ वा मूर्तिगे सति ॥ 50

(இ.ள்): முற்றுகை விஷயமாகப் ப்ரச்னம் கேட்கப்பட்டபொழுது உதயமான லக்னத்தில் பாவிகள் நின்றால் நகரைச் சுற்றிலும் அமைக்கப்பட்ட முற்றுகைக்கு அழிவு ஏற்படாது. மேலும் சிறப்பாக ராகுவோ, செவ்வாயோ உதய லக்னத்தில் நிற்பார்களே யானால் முற்றுகைக்கு அழிவு ஏற்படாது என்பது திண்ணம்.

सप्तमे सिंहिकासूनौ दुर्गः शीघ्रेण लभ्यते ।
जामित्रोदयगे क्रूरे रिःफगे लग्ननायके ॥

(இ.ள்): முற்றுகை விஷயமாகப் ப்ரச்னம் கேட்கப்பட்டபொழுது உதயமான லக்னத்துக்கு ஏழாமிடத்தில் ராகு நின்றால் நகரத்தைச் சுற்றிலும் பகையரசனால் அமைக்கப்பெற்ற முற்றுகையை நகரத்தரசன் விரைவில் தன் வசப்படுத்தி விடுவான். உதயமான லக்னத்தில் அல்லது ஏழாமிடத்தில் பாவிகள் நின்று லக்னாதிபன் பன்னிரண்டாமிடத்தை அடைந்து விட்டால் நகரத்தரசன் முற்றுகையைத்தன்வசப்படுத்தி விடுவான். பகையரசனால் அடைய முடியாது.

द्वितीये वाष्टमे षष्ठे तदा दुर्गं न लभ्यते ।
सक्रूरो लग्नपो वक्री युद्धदः केन्द्रसंस्थितः ॥

(இ.ள்): முற்றுகை விஷயமாகப் ப்ரச்னம் கேட்கப் பட்டபொழுது உதயமான லக்னத்துக்கு இரண்டாமிடம் ஆறாமிடம் அல்லது எட்டாமிடத்தில் பாவிகள் நின்றால் பகையரசனால் அமைக்கப்பட்ட முற்றுகையை மீண்டும் அவனால் திரும்பப் பெற முடியாது. உதயமான லக்னத்துக்கு அதிபன் பாவியாகவும் வக்ரியாகவும், *1, 4, 7* அல்லது *10*மிடத்தில் இருப்பவனாகவுமிருந்தால் போர் மூளும்.

षष्ठाधिपे द्यूनगते पापे वा युद्धमादिशेत् ।
पृच्छायां केन्द्रगैः क्रूरैः कोटे दुर्गं वधो नृणाम् ॥

(இ.ள்): முற்றுகை விஷயமாகப் ப்ரச்னம் கேட்கப்பட்டபொழுது உதயமான லக்னத்துக்கு ஏழாமிடத்தில் ஆராமிடத்துக்குடையவனோ அல்லது பாபக்ரஹங்களோ நின்றால் அரசர்கள் இருவருக்கும் போர் மூளும். *1, 4, 7* அல்லது பத்தாமிடத்திலோ அல்லது கடகம் அல்லது விருச்சிகம் இவைகளில் பாவிகள் நின்றால் முற்றுகையில் ஈடுபட்டிருக்கும் படைகள் (சேனைகள்) அழிவுறும்.

भौमोष्टमेशावेकत्र तदातिनिधनं नृणाम् ।
स्वायपुत्रस्थिते जीवे कीटमध्ये भयं नहि ॥
शनौ भौमे च केन्द्रस्थे बहूनां वधबन्धनम् ॥

(இ.ள்): முற்றுகை விஷயமாகப் ப்ரச்னம் கேட்கப்பட்டபொழுது உதயமான லக்னத்துக்கு எட்டாமிடத்துக்குடையவனும் செவ்வாயும் இணைந்து ஒரே ராசியில் நின்றால் அப்பொழுது போரில் அதிகமான அளவு காலாட்படைகளுக்கு அழிவு ஏற்படும். உதய லக்னத்துக்கு இரண்டாமிடம், ஐந்தாமிடம் அல்லது பதினொன்றாமிடத்தில் அல்லது

கடகம், விருச்சிகம் இவைகளில் குரு நின்றால் முற்றுகைக்கு பயம் இல்லை. உதய லக்னம், நான்காமிடம், ஏழாமிடம் அல்லது பத்தாமிடத்தில் சனியும் செவ்வாயும் நின்றால் முற்றுகையில் ஈடுபட்டுள்ள சேனைகளில் பலர் பிடிக்கப்பட்டு கொல்லப்படுவார்கள்.

लग्नगतो यदि पापः पापेन युते क्षितो वा स्यात् ।
लग्नात्पूर्वापरगौ पापौ युद्धं तदा घोरम् ॥

इति अष्टमभावविषयकः
अष्टमोऽध्यायः ॥

(இ.ள்): முற்றுகை விஷயமாகப் ப்ரச்னம் கேட்கப் பட்டபொழுது உதயமான லக்னத்தில், மற்றொரு பாபக்ரஹத்துடன் ஒரு பாபக்கிரஹம் நின்றாலும், மற்றொரு பாபக்கிரஹத்தினால் பார்க்கப்பட்டாலும், உதய லக்னத்துக்கு இரு புறமும் பாவிகள் நின்றாலும், அப்பொழுது மிகப்பெரிய அளவில் கோரமான போர்மூளும்.

எட்டாம் அத்தியாயம் நிறைவுற்றது

# अथ नवमोऽध्यायः

## नवमस्थानप्रश्नः

चरोदये शीतकरे चरस्थे
सौम्यैर्ग्रहैः संयुते क्षिते वा ।
यात्रा भवेत्सौख्य जयार्थसिद्धि-
र्कल्याणदात्री निरुपद्रवा च ॥

## ஒன்பதாம் அத்தியாயம்

### ஒன்பதாம் பாவம் பற்றிய ப்ரச்னம்

(இ.ள்): ஒன்பதாம் பாவத்தை(ராசியை)க்கொண்டு, நீர்நிலைகள், கோயில்கள், பிரயாணம், தர்மம் இவைகளை அறிய வேண்டும் என்று முன்பு கூறப்பட்டிருப்பதற்கிணங்க முதலில் ச்லோகத்தில் பிரயாணத்தைப் பற்றிய ஆரூடம் விசாரிக்கப்படுகிறது:- பிரயாணம் செய்ய விரும்பிய ஒருவன் தான் மேற்கொண்டுள்ள பிரயாண விஷயமாகப் ப்ரச்னம் கேட்கப்பட்ட பொழுது உதயமான லக்னம் சரராசியாக அமைந்து, அதில் மதி நின்று, சுபர்களுடன் சேர்ந்தோ அல்லது அவர்களால் பார்க்கப்பட்டவனாகவே இருந்தால் ப்ரச்னம் கேட்பவன் மேற்கொண்டுள்ள ப்ரயாணம், எந்தவித இடையூறுமின்றி சுகமாக நிறைவேறுவதுடன் எந்தக் காரியத்தின் பொருட்டு செல்கிறானோ அல்லது செல்லவிருக்கிறானோ அக்காரியத்தில் வெற்றியை அடைவதுடன் பொருளும் மேன்மேலும் நன்மைகளும் ஏற்படும் என்றறிய வேண்டும்.

स्थिरोदये शीतकरे स्थिरस्थे
सौम्यग्रहैस्संयुते क्षिते वा ।

प्रष्टुः प्रवासो न भवेत्स्वधाम्नः
स्थिरप्रतिष्ठा शुभसिद्धयः स्युः ॥ 2

(இ-ள்): *பிரயாண விஷயமாகப் ப்ரச்னம் கேட்கப் பட்டபொழுது உதயமான லக்னம் ஸ்திர ராசியாக அமைந்து அதில் மதி நின்று, சுபர்களால் பார்க்கப் பட்டோ அல்லது அவர்களுடன் சேர்ந்து இருந்தாலும் ப்ரச்னம் கேட்பவனின் பிரயாணம் நடைபெறாது. அவனுடைய இருப்பிடத்தை விட்டு நகரமாட்டான் ஸ்திரமாக இருப்பான். சுபமான காரியங்கள் நடைபெறும்.*

द्वयङ्गोदये द्वयङ्गगते हिमांशौ
पापग्रहैर्दृष्टयुते न सौम्यैः ।
प्रष्टुर्निवृत्तिः परदेशयानात्
क्लेशार्थनाशारिपराभवैः स्यात् ॥ 3

(இ-ள்): *பிரயாண விஷயமாகப் ப்ரச்னம் கேட்கப் பட்டபொழுது உதயமான லக்னம் இரட்டைப்பட்ட ராசியாக அமைந்து அதில் மதி நின்று, சுபர்களால் பார்க்கப்படாதவனாகவும் பாபர்களுடன் சேர்ந்தோ அல்லது அவர்களால் பார்க்கப்பட்டவனாகவோ இருந்தால், வெளிநாடு அல்லது வேற்றூருக்குப் பிரயாணம் செய்தவன், மிகவும் கஷ்டங்களையும், பகைவனிடமிருந்து அவமானத்தையும் அடைவதுடன் பொருளையும் இழந்தவனாகத் திரும்பிவிடுவான். 3*

केन्द्रे स्तिरर्क्षे रिपुपापयुक्ते
बलोत्कटेचेन्नगमः सविघ्नात् ।
चरोदये क्रूरयुते प्रवासः
संक्लेशयुक्त्रासभयप्रदस्स्यात् ॥ 4

(இ.ள்): பிரயாண விஷயமாக ப்ரச்னம் கேட்கப் பட்ட பொழுது உதயமான லக்னத்துக்கு 4, 7 அல்லது பத்தாமிடம் ஸ்திர ராசியாக அமைந்து பலம் பொருந்திய பாபக்ரஹங்களும் அவைகளில் நின்றால், ப்ரயாணம் இடையூறு காரணமாக நின்றுவிடும். பிரயாணம் செய்யமாட்டான். லக்னத்துக்கு 4, 7 அல்லது பத்தாமிடம் சரராசியாக அமைந்து அதில் பாவிகள் நின்றால் பயணம் செய்பவனுக்குப் பல இன்னல்கள் ஏற்படுவதுடன் (எதிரியிடமிருந்து) பயமும் நடுக்கமும் உண்டாகும். 4

द्वयंगोदये देवगुरुप्रयुक्ते
यात्रार्धमार्गाद्विनिवृत्तिदा स्यात् ।
सौम्यैर्युते वा द्वितनूदये स्यात्
यात्राल्पकार्यार्थसुखप्रसिद्ध्यै ॥ 5

(இ.ள்): பிரயாண விஷயமாகப் ப்ரச்னம் கேட்கப் பட்டபொழுது உதயமான லக்னம் இரட்டைப்பட்ட ராசியாக அமைந்து அதில் குருவும் நின்றால் பிரயாணம் செய்பவன் பாதிவழி சென்றதும் திரும்பிவிடுவான். எங்கு செல்லவேண்டுமோ அங்கு போய் சேர மாட்டான். இரட்டைப்பட்ட ராசியில் சுபர்கள் நின்றால் ஒருவர் மேற்கொண்ட பயணத்தினால் அவன் நினைத்திருந்த காரியம் சிறிதளவே நிறைவேறினதாக இருப்பதுடன் பொருளும், சுகமும் புகழும் குறைந்த அளவே கிடைக்கும். 5

குறிப்பு: "दैत्यगुरुप्रयुक्ते" इति भाव्यं इति मे मतिः ॥" இப்பாட்டில் முதல் வரியில் தேவகுருவான குரு இருந்தால் என்பதற்குப் பதில் அசுரகுருவான சுக்கிரன் இருந்தால் என்றிருத்தல் வேண்டுமென்று தோன்றுகிறது. பயணகாலத்தில் எதிர் சுக்கிரன் கூடாது. அதுபோல் சுக்கிர ஹோரையும் ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னத்தில் சுக்கிரனும் இருந்தால் பயணம் வெற்றிகரமாக நிறைவேறாது என்பர்.)

शीर्षोदये स्याद्गमनं स्थिरे तु
चिरेण नैवागमनं प्रवासात् ।
पृष्टोदये चागमनं स्थिरे तु
प्रष्टुः प्रवासो न भवेत्स्वधाम्नः ॥ 6

(இ.ள்): பிரயாண விஷயமாகப் ப்ரச்னம் கேட்கப் பட்ட பொழுது சீர்ஷோதயராசிகளான மிதுனம், சிங்கம், கன்னி, துலாம், விருச்சிகம் அல்லது தனுசு இவைகளுள் ஏதேனும் ஒரு ராசி உதயமானால் பயணம் செய்வது நலம். இவ்விராசிகளுள் ஏதேனுமொன்றில் பயணம் செய்வதுதான் உத்தமம். உதயமான லக்னம் ஸ்திர ராசிகளாக இருப்பின் (சீர்ஷோதயமான ராசியாக இருப்பினும்) பயணம் செய்தவன் விரைவில் திரும்ப மாட்டான். ப்ருஷ்டோதய ராசிகளான மேஷம், ரிஷபம், கடகம், தனுசு அல்லது மகரம் இவைகளுள் ஏதேனும் ஒரு ராசிஉதயமானால் பயணம் மேற்கொண்டவன் விரைவில் திரும்புவான். ப்ருஷ்டோதயராசியான ரிஷபம் ஸ்திர ராசி உதயமானால் பயணம் நடை பெறாது. (தனது வீட்டைவிட்டுப் புறப்பட மாட்டான் என்பது கருத்து).

पृष्टोदये स्थिरर्क्षेऽपि प्रतीपं गमनं चिरात् ।
चरेक्षिप्रं भवेद्यानं सविघ्नं द्वितनूदये ॥ 7

(இ.ள்): பிரயாண விஷயமாகப் ப்ரச்னம் கேட்கப் பட்டபொழுது உதயமான லக்னம் ப்ருஷ்டோதய ராசிகளான மேஷம், ரிஷபம், கடகம், தனுசு, மகரம் இவைகளுள் ஸ்திர ராசியான ரிஷபமாக அமையு மானால் பயணம் சென்றவன் விரைவிலேயே திரும்பி விடுவான். சரராசியாக அமையுமானால் விரைவில் பயணம் மேற்கொள்வான். இரட்டைப்பட்டராசி உதயமானால் இடையூறு காரணமாக பயணம் தடைபடும். 7

लग्नाधिनाथेन सुधाकरेण वा
यदीत्थशालं कुरुते तपोऽधिपः ।
यात्रा तदास्यादचिरेण धर्मगे
लग्नेश्वरे वा हिमगौ गतिर्भवेत् ॥ 8

(இ.ள்): *பிரயாண விஷயமாகப் ப்ரச்னம் கேட்கப் பட்டபொழுது உதயமான லக்னத்தின் அதிபனோடு அல்லது மதியோடு ஒன்பதாமிடத்ததிபன் இத்தசாலம் என்னும் யோகத்தை அடைந்திருந்தால் ப்ரச்னம் கேட்பவன் விரைவில் பயணம் மேற்கொள்வான். இதுபோல் ஒன்பதாமிடத்தில் உதயமான லக்னாதிபனோ மதியோ நின்றால் ப்ரச்னம் கேட்பவன் பயணம் மேற்கொள்வான்.* 8

धर्मेश्वरे लग्नगतेऽथ लग्नपे
केन्द्रे तृतीये गमनं तदा भवेत् ।
लग्नेऽथ लग्नेश्वरधर्मपावुभौ
यदीत्थशालं कुरुतस्तदागमः ॥ 9

(இ.ள்): *பிரயாண விஷயமாகப் ப்ரச்னம் கேட்கப் பட்டபொழுது உதயமான லக்னத்தில் ஒன்பதுக்கு உடையவனும், லக்னாதிபன் 1, 3, 4, 7 அல்லது 10மிடத்தில் நின்றால் ப்ரச்னம் கேட்பவன் உடனடியாக பயணம் மேற்கொள்வான் உதயமான லக்னத்தில் லக்னாதிபனும் ஒன்பதாமிடத்துகுடையவனும் இத்தசாலம் என்னும் யோகத்தை அடைந்திருந்தால் ப்ரச்னம் கேட்பவன் உடனடியாக பயணம் மேற்கொள்வான். (இந்த ச்லோகத்தில் நான்காம் வரியில் "तदागमः" என்று பதம் உள்ளது. இதை "तदा-गमः" என்று பொருள் கூறப்பட்டிருக்கிறது "तदा-आगमः" என்று பதம் பிரித்தால் ப்ரச்னம் கேட்பவன் பயணம் சென்றிருப்பவன் எப்பொழுது திரும்புவான் என்று கேட்டால்*

முன் கூறப்பட்டபடி கோள்களின் யோகம் இருக்குமானால் உடனே திரும்புவான் என்று கூறவேண்டும்). 9

लग्नेश्वरस्याथ तपोऽधिपस्य
यदीत्थशालं तनुगैश्च पापैः ।
केन्द्रेषु केन्द्राधिपतीत्थशाले
शीतांशुलग्ने च रवेर्नयानम् ॥ 10

(இ.ள்): பிரயாண விஷயமாகப் ப்ரச்னம் கேட்கப் பட்டபொழுது உதயமான லக்னத்தில் நிற்கின்ற பாவிகளுடன் லக்னாதிபனோ அல்லது ஒன்பதாமிடத்துக்கு உடையவனோ (சமமான) இத்தசாலம் என்னும் யோகத்தையடைந்திருந் தாலும், 1, 4, 7 அல்லது 10ஆமிடத்தில், அந்தந்த ராசிக்கு உடையவர்களுடன் அல்லது மதியின் ராசியான கடகத்தில் கதிரவன் இத்தசாலம் என்னும் யோகத்தையடைந்திருந்தாலும் ப்ரச்னம் கேட்பவன் பயணம் மேற்கொள்ளமாட்டான். 10

संपीडितौ वा विबलौ च धर्म-
नाथोदयेशौ कुरुतो न यात्राम् ।
पापेत्थशाले तनुपे न यानं
धर्मेत्यदृष्टे शशि धर्मपाभ्याम् ॥ 11

(இ.ள்): பிரயாண விஷயமாகப் ப்ரச்னம் கேட்கப் பட்டபொழுது உதயமான லக்னத்துக்கு அதிபனும், ஒன்பதுக்குடையவனும் பாவிகளால் பீடிக்கப்பட்டவர் களாகவோ பலமற்றவர்களாகவோ இருந்தால் ப்ரச்னம் கேட்பவன் பயணத்தை மேற்கொள்ளமாட்டான். (பயணம் செய்யவிடமாட்டார்கள்) ஒன்பதாம் இடத்துக்குடையவன் பாவிகளுடன் இத்தசாலம் என்னும் யோகத்தை அடைந் திருந்து ஒன்பதாமிடம் மதியினாலும், ஒன்பதாம் இடத்துக்கு உடையவனாலும் பார்க்கப்படாவிட்டால் ப்ரச்னம் கேட்பவன் பயணம் மேற்கொள்ளமாட்டான். 11

क्रूरे कलत्रे व्रजते यदर्थं
तत्कार्यनाशाद्गमनञ्च न स्यात् ।
पापग्रहैः कर्मगतैर्नयात्रा
स्याज्ज्येष्टबन्धोर्नृपतेर्निषेधात् ॥ 12

(இ.ள்): பிரயாண விஷயமாகப் ப்ரச்னம் கேட்கப் பட்டபொழுது உதயமான லக்னத்துக்கு 7மிடத்தில் பாவிகள் நின்றால் எந்த காரியத்தின் பொருட்டு பயணம் மேற்கொள்ளவதென்று நினைத்தானோ அந்த காரியம் பயனற்றதாகிவிட்டதால் பயணத்தை மேற்கொள்ள மாட்டான். பாவிகள் இரண்டாமிடத்தில் நின்றால் பந்துக்களில் வயது முதிர்ந்தோர் அல்லது அரசன் இவர்களால் தடுக்கப்படுவதால் பயணத்தை மேற்கொள்ளமாட்டான். 12

त्रिलाभषष्ठोपगतैश्च पापैः
प्रष्टुः प्रयाणाद्रिपुसंक्षयस्स्यात् ।
मार्गान्निवृत्तिश्च रसातलस्थैः
भूयोऽशुभैः केन्द्रगतैरसिद्धिः ॥ 13

(இ.ள்): பிரயாண விஷயமாகப் ப்ரச்னம் கேட்கப் பட்டபொழுது உதயமான லக்னத்துக்கு 3, 6 அல்லது 11மிடங்களில் பாவிகள் நின்றால் ப்ரச்னம் கேட்பவனுடைய பயணத்தினால் அவனுடைய பகைவனுக்கு அழிவு ஏற்படும். நான்காமிடத்தில் பாவிகள் பயணம் மேற்கொண்டவன் சற்று தூரம் சென்றவுடன் நடுமார்க்கத்திலேயே திரும்பிவிடுவான். 1, 4, 7 அல்லது 10மிடங்களில் பாவிகள் நின்றால் மறுபடியும் பயணம் மேற்கொண்டாலும் பயணம் நடைபெறாது. 13

लग्नेशधर्माधिपतीत्थशाले
शुभग्रहैः स्नेहदृशाप्रदृष्टे ।
सौख्यार्थलाभौ भवतो विशेषा-
त्पापेक्षिते शत्रुदृशाऽर्थनाशः ॥ 14

(இ.ள்): *பிரயாண விஷயமாகப் ப்ரச்னம் கேட்கப் பட்டபொழுது உதயமான லக்னத்ததிபனும் ஒன்பதாம் இடத்துக்குடையவனும் இத்தசாலம் என்னும் யோகத்தையடைந்திருந்தாலும், லக்னாதிபனையும் ஒன்பதாமிடத்துக்குடையவனையும் சுபகிரஹங்கள் நட்பு முறையில் பார்த்தாலும், ப்ரயாணம் செய்பவனுக்கு சரீரசுகமும் பொருளும் கிடைக்கும். பாவிகளால் சத்ருக்களாக நின்று பார்க்கப்பட்டால் பயணம் மேற்கொண்டவனுக்கு பொருளழிவு ஏற்படும்.* *14*

क्रूरेऽरिपेऽस्मिन्भवतीह रोगो
बन्धौ व्ययेशे च विलग्नपे मृतिः ।
जामित्रनाथेऽष्टमभावपे वा
क्रूरे प्रविद्धारिपुचोरतो भयम् ॥ 15

(இ.ள்): *பிரயாண விஷயமாகப் ப்ரச்னம் கேட்கப் பட்டபொழுது உதயமான லக்னத்துக்கு ஆறாமிடத்துக்கு உடையவன் பாவியாக இருந்து நான்காமிடத்தில் நின்றால் பயணம் மேற்கொள்ளுபவனுக்கு நோய் ஏற்படும். 12க்குடையவன் உதயமான லக்னத்தில் நின்றால் மரணம் ஏற்படும். 7க்குடையவனோ அல்லது 8மிடத்துகுடையவனோ பாவியாக இருந்து நான்காம் இடத்தில் நின்றால் பயண காலத்தில் பகைவர்களோ அல்லது திருடர்களோ பொருளை அபகரித்து விடுவார்கள். அவர்களால் பயம் ஏற்படும்.* *15*

लग्नेशधर्माधिपतीत्थशाले
केन्द्रायगे श्रेष्ठफलं प्रदानात् ।
धनस्थिते भूरि धनस्य लाभः
तुर्ये च यातुः सुखसंपदस्स्युः ॥ 16

(இ.ள்): பிரயாண விஷயமாகப் ப்ரச்னம் கேட்கப் பட்டபொழுது உதயமான லக்னத்ததிபனும், ஒன்பதாம் இடத்துக்குடையவனும் லக்னம், 4, 7 அல்லது 10ம் இடத்திலோ அல்லது 11மிடத்திலோ இத்தசாலம் என்னும் யோகத்தையடைந்திருந்தாலும் பயணம் செய்பவனுக்கு பலன்கள் சிறப்பாக இருக்கும். நல்ல பலன் கிடைக்கும். இரண்டாமிடத்தில் முன்கூறப்பட்ட இருவரும் இத்தசாலம் என்னும் யோகத்தை அடைந் திருந்தால் பயணம் மேற்கொண்டவனுக்கு சென்ற விடத்தில் தனம் அதிக அளவில் கிடைக்கும். நான்காம் இடத்தில் ஏற்பட்டால் சரீர சுகமும் ஐச்வர்யங்களும் ஏற்படும். 16

व्ययाष्टमे चोररिपोर्भयं स्यात्
लग्नेश्वरे क्रूरयुते मृतिश्च ।
शुभग्रहे लग्नगते च पापा-
द्विनिस्सृते चाभ्युदिते शुभं स्यात् ॥ 17

(இ.ள்): பிரயாண விஷயமாகப் ப்ரச்னம் கேட்கப் பட்டபொழுது உதயமான லக்னத்துக்கு 12மிடத்திலோ அல்லது எட்டாமிடத்திலோ லக்னாதிபன் நின்றால் பகைவர்களிடமிருந்தும் திருடர்களிடமிருந்தும் பயம் ஏற்படும். பாவிகளுடன் சேர்ந்திருந்தால் மரணமும் ஏற்படும். சுபர்கள் லக்னத்தையடைந்து பாவிகளுடன் சேராமலும் உச்சபாவத்தை அடைந்திருந்தால் நன்மை ஏற்படும். 17

शुभेत्थशालेऽभ्युदिते च पापा-
द्विनिस्सृते लग्नपपूर्णदृष्ट्या ।
दृष्टे हिमांशौ व्ययलग्नमृत्युः
वर्जे प्रयाणात्सुखसिद्धिलाभाः ॥ 18

(இ.ள்): *பிரயாண விஷயமாகப் ப்ரச்னம் கேட்கப் பட்டபொழுது மதி 1, 8, 12 இவ்விடங்களைத் தவிர்த்து மற்ற ராசிகளில் சுபர்களுடன் இத்தசாலம் என்னும் யோகத்தையடைந்தவனாகவும் உச்ச பாவத்தை அடைந்த வனாகவும், பாவிகளின் சேர்க்கையற்ற வனாகவும் இருந்து லக்னாதிபனால் முழுமையாகப் பார்க்கப்பட்டவனாகவு மிருந்தால் பயணம் செய்பவனுக்கு சரீரசுகம், காரியசித்தி, தனலாபம் இவைகள் கிடைக்கும்.* *18*

लग्ने शुभे देहसुखं सुभोज्य-
सौख्यार्थलाभाः शुभकार्यसिद्धिः ।
सुखस्थिते सौख्यजयार्थलाभः
सुकार्यसिद्धिः विभवांबराप्तिः ॥ 19

(இ.ள்): *பிரயாண விஷயமாகப் ப்ரச்னம் கேட்கப் பட்டபொழுது உதயமான லக்னத்தில் சுபர்கள் நின்றால், சரீர சுகம், நல்ல உணவு, பொருள் வரவு நல்ல காரியங்கள் நடைபெறுதல் இவைகள் ஏற்படும். நான்காமிடத்தில் சுபர்கள் நின்றாலும், சரீர சுகம், வெற்றி, பொருள் வரவு, நற்காரியங்கள் நிறைவேறுதல், நல்ல ஆடைகள் கிடைப்பது இவைகள் ஏற்படும்.* *19*

शुभेऽस्तगे यत्र च याति गन्ता
तत्रास्ति रम्भा धनवाहनाप्तिः ।
सौम्ये नभस्स्थे शुभकार्यसिद्धिः
कार्यात्सुखाप्तिः धनसौख्यलाभः ॥ 20

(இ.ள்): *பிரயாண விஷயமாகப் ப்ரச்னம் கேட்கப் பட்டபொழுது உதயமான லக்னத்தில் சுபர்கள் நின்றால் பயணம் செய்பவன் எங்கு செல்கிறானோ அங்கு ரம்பையை யொத்த பெண்ணையும், பொருளையும், வாஹனங்களையும் அடைவான். சுபர்கள் நின்றால்*

ப்ரயாணம் செய்தவிடத்தில் சுபமாக காரியங்கள் நடைபெறும். அவன் மேற்கொண்ட காரியத்தினால் சுகம் ஏற்படும் மேலும் பொருளும் கிடைக்கும். ஆனால் இன்பமும் ஏற்படும். 20

## ताजिके नवमस्थानप्रश्नः

मम गमनं भविता किं नवेति लग्नेश्वरे न वा केन्द्रे ।
नवमेशमुथशिले सति नवमेशे वा भवेद्गमनम् ॥ 96

लग्नस्थे नवमपतो लग्नाधिपमुथशिले च सञ्चारात् ।
रहितो याति पुनर्ना नवमदृशा वर्जिते योगे ॥ 97

लग्नपतौ केन्द्रस्थे सहजग्रहमुथशिले च विक्रूरे ।
गमनं स्यादस्मिन्वा केन्द्रे क्रूरे च नास्ति गतिः ॥ 98

अस्तिक्रूरेऽपि च यत्कार्ये निर्याति विघ्नमत एव ।
आकाशस्थे पापे राजकुलाज्ज्येष्ठतो निजाद्वापि ॥ 99

नवमेशे मुथशिलगे लग्नाधीशेन पापरिपुदृष्टे ।
गमनेऽवसानतःस्यात्प्रष्टुः कष्टं क्षयोऽर्थस्य ॥ 100

लग्नेशे नवमेशे मुथशिलकृतिरन्ध्रसप्तमे कष्टम् ।
उदये यस्मिन्यायाद्धिनिसृतिःस्यात्सुखकरः पन्थाः ॥

## தாஜிகநூலில் கூறப்பட்ட 9ம்பாவம்

(இ.ள்): பிரயாணம் செய்ய விரும்பிய ஒருவன், அவன் மேற்கொண்டுள்ள பயணம் நடைபெறுமா பெறாதா என்று ப்ரச்னம் கேட்கப்பட்டபொழுது

உதயமான லக்னத்துக்கு, லக்னம், 4, 7 அல்லது 10மிடத்தில் ஒன்பதுக்குடையவன் அல்லது பத்தாம் இடத்துக்குடையவன் லக்னாதிபனுடன் இத்தசாலம் என்னும் யோகத்தை அடைந்திருந்தால் ப்ரச்னம் கேட்பவன் பயணத்தை மேற்கொள்வான் என்பதில் ஐயமில்லை. 96

ஒன்பதாமிடத்தில் ஒன்பதுக்குடையவன் லக்னாதிபனுடன் இத்தசால யோகத்தை அடைந்திருந்தாலும் அல்லது ஒன்பதாம் பாவத்தை ஒன்பதுக்குடையவன் பார்க்காவிட்டாலும் ப்ரச்னம் கேட்பவன் பயணத்தை மேற்கொள்ளமாட்டான். 97

லக்னாதிபன் மூன்றாமிடத்துக்குடையவனுடன் 1, 4, 7 அல்லது 10மிடத்தில் இத்தசாலம் என்னும் யோகத்தை அடைந்து பாவிகளுடன் சேராமல் இருந்தால் பயணம் மேற்கொள்வான். 1, 4, 7 அல்லது 10மிடத்தில் லக்னாதிபனும் மூன்றாமிடத்துக்கு உடையவனும் பாவிகளுடன் சேர்ந்து இத்தசால யோகத்தை அடைந்திருந்தால் பயணத்தை மேற்கொள்ள மாட்டான். 98

ஏழாமிடத்தில் பாவிகள் நின்றால் எந்தக் காரியத்தின் பொருட்டு பயணம் செய்கிறானோ அந்தக் காரியம் இடையூறு காரணமாக நிறைவேறாது. பத்தாமிடத்தில் பாவிகள் நின்றால் அரசாங்கத்தாலோ, மூத்தார்களாலோ அல்லது பயணம் மேற்கொள்பவனின் உறவினராலோ தடுக்கப்பட்டவனாகப் பயணம் செய்ய மாட்டான். 99

ஒன்பதாமிடத்துக்குடையவன் லக்னாதிபனுடன் 1, 4, 7 அல்லது பத்தாமிடத்தில் இத்தசால யோகத்தை

அடைந்து பாவிகளால் பார்க்கப்பட்டும் இருந்தால் பயணம் சென்றவனுக்கு முடிவில் துன்பங்கள் நேரிடுவதுடன் பொருள் நஷ்டம் ஏற்படும். 100

லக்னாதிபனும், ஒன்பதுக்குடையவனும் 7மிடத்திலோ அல்லது 8மிடத்திலோ இத்தசால யோகத்தை அடைந்திருந்தால் பயணத்தின்போது துன்பங்கள் நேரிடும். லக்னத்திலேயே லக்னாதிபனும் ஒன்பதுக்குடையவனும் இத்தசால யோகத்தை அடைந்திருந்தால் பயணம் மேற்கொள்வான். பயணமும் சுகமாக இருக்கும். 101

लग्नान्मार्गानुभावो व्योम्नः कार्यं स्मराद्गतिस्थानम् ।

भूमेः कार्यपरिणतिरेवं लग्ने शरीरसुखम् ॥ 102

दशमे शुभे च सिद्धिः कार्यस्यास्ते प्रयाति यत्स्थाने ।

तत्र शुभश्च चतुर्थे परिणामः सुन्दरः कार्ये ॥ 103

**பிரயாணம் செய்ய வேண்டி ப்ரச்னம் கேட்கப்பட்டபொழுது லக்னம் முதலான பாவங்களிலிருந்து அறிய வேண்டியது**

(இ.ள்): பிரயாண விஷயமாகப் ப்ரச்னம் கேட்கப் பட்டபொழுது உதயமான லக்னத்தைக்கொண்டு வழியில் நேரக்கூடிய சுகம் அல்லது துக்கானுபவங் களையும், பத்தாம் பாவத்தைக்கொண்டு ப்ரயாணம் மேற்கொண்டவன் செய்ய நினைக்கும் காரியத்தையும், ஏழாம்பாவத்தைக் கொண்டு செல்லவேண்டிய இடம் பற்றியும் நான்காமிடத்தைக் கொண்டு பிரயாணி எடுத்துக்கொண்ட காரியத்தின் முடிவு எவ்வாறு இருக்கும் என்பதையும், ப்ரயாணத்திற்காக நிர்ணயிக்கப் பட்ட லக்னத்தைக் கொண்டு உடல் நலம் முதலான வற்றையும் அறிந்து கூறவேண்டும்.

பிரயாண விஷயமாகப் ப்ரச்னம் கேட்கப்பட்ட பொழுது உதயமான லக்னத்துக்கு பத்தாமிடத்தில் சுபக்ரஹங்கள் நின்றால் ப்ரயாணம் செய்பவன் மேற்கொண்ட காரியம் சுலபமாக நிறைவேறும். ஏழாம் பாவத்தில் சுபக்ரஹங்கள் நின்றால் ப்ரயாணம் சென்ற இடத்தில் நற்காரியங்கள் நடைபெறும். நான்காம் பாவத்தில் சுபகிரஹங்கள் நின்றால் பயணி மேற்கொண்ட காரியம் சுபமாக முடியும். 103

लग्नेश शशिनं वा यः क्रूरस्तुदति तत्र मनुजर्क्षे ।
मनुजत्रिराशिके वा तदा भयं द्विपदतो गन्तुः ॥ 104

जलराशौ वारिभयं चतुष्पदर्क्षे तथाश्वादेः ।
घटचापे द्रुमकंटकभयं हरौ व्याघ्रसिंहादेः ॥ 105

(இ.ள்): பிரயாணம் தொடர்பாகப் ப்ரச்னம் கேட்கப்பட்டபொழுது உதயமான லக்னம் மிதுனம், கன்னி அல்லது துலாம் இவைகளுள் ஒன்றாக இருந்து அந்த லக்னத்துக்கதிபனையோ அல்லது மதியையோ, க்ரூர க்ரஹங்கள் சேர்ந்திருந்து பீடிக்குமானால் (லக்னாதிபனும், மதியும் பாவிகளுடன் சேர்ந்திருந்தால்) இவ்விலக்னங்களில் பயணம் செய்தால் பயணம் செய்பவனுக்கு மனிதர்களிடமிருந்து பயம் உண்டாகும். ஜல ராசியான, கடகம் அல்லது மீனம் உதயமாகி இவைகளில் பாவிகள் நின்றாலும் இவ்விராசிகளில் பயணம் மேற்கொண்டாலும், நீர்வாழ் ஜந்துக்களால் பயம் நேரிடும். நாற்கால் ராசிகளான மேஷம், ரிடபம், சிங்கம் இவைகள் உதயமாகி இவைகளில் பாவிகள் நின்றாலும் அந்த ராசிகளில் பயணம் மேற்கொண்டால் குதிரை முதலிய நாற்கால் பிராணிகளிடமிருந்து பயம் நேரிடும். கும்பம் அல்லது தனுசு உதயமாக அதில் பாவிகள் நின்றாலும் அந்த ராசிகளில் பயணம்

மேற்கொண்டால் மரம், புதர் இவைகளினால் பயம் நேரிடும். சிங்க ராசி உதயமாகி அதில் பாவிகள் நின்று அந்த ராசியில் பயணம் மேற்கொண்டால் சிங்கம், புலி முதலான துஷ்ட பிராணிகளால் பயம் நேரிடும்.

नगरप्रवेशतोऽस्मात्फलमस्ति न वा प्रवेशलग्नमिह ।
तस्मिन्धनपे वक्रे नो हरणं कार्यसिद्धिर्वा ॥ 106

(இ.ள்): ஒரு குறிப்பிட்ட நகரத்துக்குச் செல்ல பயணம் மேற்கொண்டவன், அந்நகரத்தில் அவன் விரும்பிய காரியம் நிறைவேறுமா ? என்று ப்ரச்னம் கேட்கப்பட்டபொழுது உதயமான லக்னத்தில் இரண்டாமிடத்துக்குடையவன் வக்ர கதியை அடைந்து நிற்பானேயானால் பயணம் சென்றவன் அந்நகரத்தில் தங்கமாட்டான். அவன் நினைத்த காரியமும் நிறைவேறாது. *106*

अतिचरितेबहुदिवसं हरणं नो कार्यसिद्धिरीषदपि ।
नवमतृतीयगतेऽस्मिन्कार्यंकृत्वाऽऽशु निजपुरं याति ॥ 107

लग्ने कर्मण्याये धनपयुते शोभनं ज्ञेयम् ।
सक्रूरससमस्थे पथि विघ्नश्च कंटकश्चतुर्थस्ते ॥ 108

इति नवमभावविषयकः नवमोऽध्यायः ॥

(இ.ள்): *ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னத்தில் இரண்டாமிடத்துக்குடையவன் அதிசாரமாகச் சென்றிருப்பானேயானால் பயணி எந்த நகரத்துக்குச் செல்கிறானோ அங்கு பல நாட்கள் தங்க நேரிடும். காரியமும் கொஞ்சம்கூட நிறைவேறாது. இரண்டாம் இடத்துக்குடையவன் 3 அல்லது ஒன்பதாமிடத்தை அடைந்திருந்தால் விரைவில் காரியத்தை முடித்துக் கொண்டு தனது ஊருக்குத் திரும்புவான்.* *109*

இரண்டாமிடத்துக்குடையவன் 1, 10 அல்லது 11மிடத்தில் நின்றால் காரியம் சுபமாக முடியும். 7மிடத்தில் இரண்டாமித்துக்குடையவன் பாவிகளுடன் நின்றால் பயணம் தடைப்படும். நான்காமிடத்தில் நின்றால் வழியில் கலகம்(சண்டை) நேரிடும். 110

ஒன்பதாம் அத்தியாயம் நிறைவுற்றது

## अथ दशमोऽध्यायः

### दशमभावप्रश्नः

### राज्यलाभविषये - सामान्यविधिः

शुद्धात्मजातीयगजाश्वपत्ति-
कोशादि युक्तस्य तु पृच्छकस्य ।
राज्यस्य लाभो भवति प्रकर्षा
त्प्रभुत्वमन्त्रोद्यमसंयुतस्य ॥

## பத்தாம் அத்தியாயம்

### அரசனாக உலகை ஆள்பவனுக்குரிய பொதுவிதி

(இ.ள்): எந்த அரசன் குற்றமற்றவைகளும், உயர்ந்த இனத்தைச் சேர்ந்தவைகளுமான யானைப்படைகளையும், குதிரைப் படைகளையும், காலாட்படைகளையும் குறைவற்றதாகவும் மேலும் மேலும் பெருகி நிரம்பி வழியக் கூடியதான தனங்களையுடைய பொக்கிஷத்தையுமுடையவனாக இருப்பதுடன், சிறப்பாக மிக்க மதியூகிகளான மந்திரிகளையுடையவனாகவும் தான் எடுத்துக்கொண்ட காரியத்தை

முடிப்பதில் மந்திரிகளுடன் கலந்து ஆலோசித்து முடிவெடுப்பவனாகவும், முயற்சியும் தைரியமும் உடையவனாகவும் இருக்கிறானோ அவனே அரசனாக உலகை ஆள்வதற்குத் தகுதியுடையவன். மேலும் மேலும் பல இராச்சியங்களைப் பெற்று ஏக சக்ராதிபதியாக விளங்குவதற்கும் தகுதியுடையவனாகவும் இருப்பான். 1

குறிப்பு: எவனொருவன் பிறக்கும்பொழுது மூன்று கோள்களுக்குக் குறையாமல் அவரவர்களுடைய உச்சவீட்டிலிருக்கின்ற அமைப்புடன் கூடிய ஜாதகத்தையுடையவனாகப் பிறக்கின்றானோ அவன் யோககாரகன்.

## सामान्यविधिः - 2

लाभं गुरोः ज्ञस्य विलग्नमिन्दोः
तृतीयमर्कस्य तपश्शनेर्व्ययम् ।
भौमस्य षष्ठञ्च भृगोस्सुतर्क्षं
प्राहुर्ग्रहाणां स्वगृहञ्च हर्षदम् ॥

## பொதுவிதி - 2

(இ-ள்): ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னத்தில் புதனும், 11ல் குருவும், 3ல் மதியும், 9ல் சூரியனும் 12ல் சனியும் 6ல் செவ்வாயும், 5ல் சுக்கிரனும் நின்றாலும் அல்லது அவரவர்கட்குரிய ராசியில் அவரவர்கள் நின்றாலும், ப்ரச்னம் கேட்பவன் அவன் விரும்பிய காரியத்தில் வெற்றியை அடைவான். அவனுக்கு மகிழ்ச்சியை அளிப்பதாகவும், அவன் மேற்கொண்ட காரியத்தில் வெற்றியை அளிப்பதாகவும் இருக்கும் என்பதையறியலாம்.

குறிப்பு: சிறப்பாக 6ல் செவ்வாய் நின்றால் 8ம் பார்வையாக லக்னத்தைப் பார்ப்பதால் இது ராஜயோகத்தை அளிக்கவல்லது.

## सामान्यविधिः - 3

कर्मबन्धेधनश्चेन्दोस्तुर्यंज्ञस्योदयं रवेः ।
द्यूनं भौमस्य धर्मर्क्षशनेः प्रादुश्च हर्षदम् ॥

### பொதுவிதி - 3

(இ-ள்): ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னத்துக்கு 2, 4 அல்லது 10மிடத்தில் தனிமையில் மதியும் அல்லது 4ல் மதியுடன் புதனும், லக்னத்தில் சூரியனும், 7ல் செவ்வாயும் 9ல் சனியும் நின்றால் ப்ரச்னம் கேட்பவன் அவன் நினைத்த அல்லது செய்ய முற்பட்ட காரியம் வெற்றி பெறுவதாக இருக்குமாதலால் ப்ரச்னம் கேட்பவனுக்கு மகிழ்ச்சியை அளிப்பதாக இருக்கும்.

## सामान्यविधिः - 4

विलग्नलाभान्त्यसुतारिसप्तमं
नरग्रहाणां दिवसश्च हर्षदम् ।
बन्धुश्चदुश्चिक्य नभस्तपोष्टमं
योषिद्ग्रहाणां रजनी च हर्षदा ॥

### பொதுவிதி - 4

(இ-ள்): ஆண் கோள்கள் பகற்பொழுதிலும், பெண் கோள்கள் இரவு நேரத்திலும் பலமுடையவர்கள். சிறப்பாக, ப்ரச்னம் கேட்கப்பட்ட பகற்பொழுதாகில், ஆண் கோள்களான சூரியன், செவ்வாய், குரு இவர்கள் ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னம், 5, 6, 7, 11 அல்லது

12மிடங்களுள் ஏதேனுமொரு ராசியில் நின்றால் நற்பயனைத் தருபவர்களாக இருப்பார்கள். ப்ரச்னம் கேட்கப்பட்டது இரவு நேரமாகில் பெண்கோள்களான மதி, சுக்கிரன் இவர்கள் லக்னம் 3, 4, 8, 9 அல்லது 10மிடங்களுள் ஏதேனுமொரு ராசியில் நின்றால் நற்பயனைத் தருபவர்களாக இருப்பார்கள். அதாவது ப்ரச்னம் கேட்பவன் அவன் நினைத்த அல்லது செய்வதற்கு முற்பட்ட காரியம் வெற்றி பெறுவதற்கு இருக்குமாதலால் ப்ரச்னம் கேட்பவனுக்கு மகிழ்ச்சியை அளிப்பதாக இருக்கும் என்பது கருத்து. பல தலைமுறைகளாக வழிவழியாக வந்த அரச வம்சத்தில் பிறந்தவனாக ராஜபதவியையடைந்து உலகை அரசாள்வான் என்பது ப்ருஹஜ்ஜாதகத்தில் ராஜயோக அத்தியாயத்தில் கூறப்பட்டுள்ளதின் சாராம்சம். இராஜயோகங்களை, லக்னத்தையும் சந்திர லக்னத்தையும் அடிப்படையாகக் கொண்டு மொத்தம் 528 ராஜயோகங்களைக் கூறுகின்றனர். இவைகளைப் பற்றிய விபரங்கள் விரிவாக ப்ருஹஜ் ஜாதகத்தில் ராஜயோகாத்யாயத்தில் கூறப்பட்டிருக்கின்றன. ப்ருஹஜ்ஜாதகத்தில் கூறப்பட்டுள்ள ராஜயோக விஷயங்கள் ஒருவன் பிறக்கும் பொழுது ராஜயோக அமைப்புடன் அமைந்த ஜாதகத்தை உடையவர்களுக்கு மட்டிலுமே பொருந்துமென்றாலும், தற்காலத்திற்கேற்றவாறு, அரச வம்சத்தில் பிறந்தவர்களாக இல்லாவிட்டாலும், ஜனாதிபதியாகவோ பல மாநில முதல்வர்கட்கெல்லாம் முதல்வராகவோ அல்லது ஒரு மாநிலத்துக்கு மட்டில் முதல்வராகவோ தேர்ந்தெடுக்கப்பட்டு உலகை ஆள்வதற்குறிய தகுதியைப்பெற்றவர்களாக இருப்பார்கள் என்பதையும் அறிந்துகொள்ளலாம். இவ்வாறு பிறந்தகால ஜாதகத்தைக்கொண்டு அறிவது போல் ப்ரச்னம் (ஆரூடம்) கேட்கின்ற காலத்தில் அமைந்த ஜாதகத்தைக்கொண்டும் அறியலாம் என்ற காரணத்தால் 10ம் பாவத்தில் ராஜ்யலாப விஷயங்களை விரிவாகக் கூறுகிறார்.

राज्याप्तिप्रश्नलग्ने लग्नेशे शशिनि वा नभःपतिना ।
कृतमुथशिलेऽम्बरदृशा राज्यं रूपकक्रमाद्भवति ॥

- ताजिके. दशमभावे. 1 श्लो.

(இ.ள்): இராஜ்யலாபவிஷயமாகப் ப்ரச்னம் கேட்கப்பட்டபொழுது உதயமான லக்னத்தில் லக்னாதிபனோ அல்லது மதியோ 10மிடத்துக்கு உடையவனுடன் ஏதாவதொரு ராசியில் இத்தசாலம் என்னும் யோகத்தையும் 10மிடத்தையும் பார்த்தால் வம்ச பரம்பரையாக வந்த இராஜ்யத்தைப்பெறுவான்.

*(தாஜிகநூல்-10ம் பாவம் 1வது ச்லோகம்)*

लग्नेऽम्बरेशः शुभखेचरश्चेत्
शशाङ्कलग्नाधिपती नभस्थौ ।
स्ववीर्ययुक्तौ शुभवीक्षितो चे
त्प्रष्टुस्तदास्यात्खलु राज्यलाभः ॥ 5

(இ.ள்): *ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னத்தில் 10க்குடையவன் சுபனாக இருந்து 10மிடத்தில் மதியும் லக்னாதிபனும் இருந்து மிக்கபலம் பொருந்தியவர் களாகவும், சுபர்கள் பார்க்கப்பட்டவர்களாகவும் இருந்தால் ப்ரச்னம் கேட்டவன் அரசனாவான். ராஜ்யத்தைப் பெற்று அரசனாவான் என்பது கருத்து.*

குறிப்பு: *மூன்று கிரஹங்களுக்குக் குறையாமல் உச்ச நிலையை அடைந்திருந்தால் அரச வம்சத்தில் பிறந்தவர் அரச பதவியை அடைவர் என்பது எல்லா ஜாதகங்கட்கும் பொதுவிதி. இந்நூலாசிரியர் கூற்றுப்படி சுபர்கள் 10மிடத்திலிருந்து 10மிடத்தை சுபர்கள் பார்த்தால் "ராஜயோகம்" ஏற்படும் என்று தெரிகிறது. யவனர்களோ பாபக்ரஹங்கள் மட்டிலுமே அவரவர்களது உச்சவீட்டிலிருக்கப் பிறந்தவன் (ப்ரச்ன*

காலத்திய ஜாதகத்துக்கும் இது ஏற்புடையது) அரச பதவியையடைவான். ஆனால் கெட்ட செய்கையில் மனமுள்ளவனாக இருப்பான் என்று கூறுகின்றனர். மனிதரின் மதமும் இதுவே. ஆனால் ஜீவ சர்மா என்ற ஆசிரியரோவெனில் பாபக்கிரஹங்கள் உச்ச நிலையை அடைந்திருந்தால் அரசபதவியை அடைய மாட்டான். ஆனால் அரசனுக்கொப்பானவனாக பெருந்தனவந்தனாக இருப்பான் என்று கூறுகிறார். ஆதலின் ப்ரச்ன காலத்தில் அமைந்த ஜாதகப்படி எவரெவர் பாபர்கள், எவர்கள் சுபர்கள் என்பதை அறிந்து அவர்களின் உச்சநிலை முதலான எல்லா அம்சங்களையும் ஆராய்ந்து பலன் கூற வேண்டும். சுபர்கள் -பாபர்கள் பற்றிய விஷயங்களை பொதுவிதி படலத்தில் காண்க.

लग्नाधिनाथेन हिमांशुना वा
यदीत्थशालं कुरुतेऽम्बरेशः ।
शुभःस्वतुङ्गादि गतोऽबरस्थे
त्पश्येत्तदास्यात्खलु राज्यलाभः ॥ 6

(இ.ள்): **ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னத்துக்குப் பத்தாமிடத்துக்குடையவன் லக்னாதிபனுடனோ அல்லது மதியுடனோ ஏதாவதொரு ராசியில் இத்தசாலம் என்னும் யோகத்தை அடைந்திருந்தாலும், அல்லது 10க்குடையவன் சுபனாகவும் அவனது உச்சராசியை அடைந்தவனாகவுமிருந்துகொண்டு பத்தாமிடத்தைப் பார்த்தாலும் ப்ரச்னம் கேட்பவன் அரச பதவியை அடைவான் என்பது பொருள்.**

குறிப்பு: இப்பாட்டில் 3வது 4வது பாதங்கட்குக் கூறப்பட்டிருக்கும் உரைப்படி 10க்குடையவன் சுபனாகவும் அவனது உச்சராசியை அடைந்தவனாகவுமிருந்துகொண்டு 10ஆமிடத்தைப் பார்த்தால்

என்று பொருள்கொண்டால், ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னம் மிதுனம் அல்லது தனுசாக இருத்தல் வேண்டும். அப்பொழுதுதான் சுபனாக குரு அவனது உச்சராசியான கடகத்தில் நின்று 9ஆம்பார்வையாக மிதுனத்துக்குப் பத்தாமிடமான மீனத்தைப் பார்க்கமுடியும். இதுபோன்று ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னம் தனுசாக அமைந்து சுபனான சுக்கிரன் அவனது உச்சராசியான மீனத்தில் நின்று தனுசுக்குப் பத்தாமிடமான கன்னியை 7ஆம் பார்வையாகப் பார்க்க முடியும். ஆதலின் இப்பாட்டின் 3, 4வது பாதங்கட்கு ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னம் மிதுனமாக அமைந்து அதற்குப் பத்தாமிடமான மீனத்திற்கதிபனான குரு (சுபன்) கடகத்தில் நின்று 9ஆம் பார்வையாக மீனத்தைப் பார்த்தாலும் அல்லது ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னம் தனுசாக அமைந்து அதற்குப் பத்தாமிடமான கன்னியை சுபனான சுக்கிரன் மீனத்தில் நின்று 7ஆம் பார்வையாக பார்த்தால் ப்ரச்னம் கேட்பவன் அரசபதவியை அடைவான் என்று பொருள் கொள்வது உசிதம் என்று தோன்றுகிறது. குருவும், சுக்கிரனும், பாபர்களின் தொடர்பற்ற புதனும் இயற்கையில் சுபர்கள் இத்தசாலம் என்னும் யோகத்தைப் பற்றிய விபரங்களை யோகாத்தியாயத்தில் காண்க.

हिमांशु कर्माधिपलग्ननाथाः
मेषूरणस्थाः शुभवीक्षिताश्च ।
स्वोच्छादिगा वा शुभखेचराश्चे
त्प्रष्टुः प्रकुर्युर्ध्रुवं राज्यलाभम् ॥ 7

(இ.ள்): ப்ரச்ன காலத்தில் உதயமான மதியும் பத்துக்குடையவனும் லக்னாதிபனும் சுபர்களால் பார்க்கப்பட்டவர்களாக 10மிடத்தில் நின்றாலும், சுபர்கள்

அவர்களுடைய உச்சராசியில் நின்றாலும், ப்ரச்னம் கேட்பவன் விரைவிலேயே அரச பதவியை அடைவான்.

देवार्चिते वीर्ययुते शुभान्विते
सौम्येक्षिते वाऽप्यशुभैरसंयुते ।
निशाकरे मध्यबलेऽथवाऽबले
राज्यं भवेच्छत्रुभयेन पृच्छतः ॥ 8

(இ.ள்): ப்ரச்ன காலத்தில் குரு பலம் பெற்றவனாகவும், சுபரால் பார்க்கப்பட்டவனாகவும் அல்லது பாபர்களின் சம்பந்தமற்றவனாக சுபருடன் கூடினவனாகவுமிருந்தாலும், மதி நடுத்தரமான பலமுள்ளவனாகவோ அல்லது பலமற்றவனாகவோ இருந்தால் ப்ரச்னம் கேட்பவன் சத்ருவினிடமிருந்து அரசைப் பெறுகிறான். (ப்ரச்னம் கேட்பவனின் சத்ரு வலுவிலேயே இவனிடமிருக்கும் பயம் காரணமாக அவனுடைய ப்ரச்னம் கேட்பவனிடம் அரசை ஒப்படைத்துவிடுகிறான் என்பது கருத்து.

हर्ष(सुख) स्थिते कर्मपतौ शुभग्रहे
स्वतुङ्गराश्यादि गते तयोदिते ।
शुभेक्षिते केन्द्र धनत्रिकोणगे
राज्यस्य लाभोऽस्ति शुभैर्विलग्नगैः ॥ 9

(இ.ள்): ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னத்துக்கு நான்காமிடத்தில் பத்தாமிடத்துக்குரியவன் சுபனாக இருந்து நின்றாலும், உதயமான லக்னத்திலோ அல்லது அவனுடைய உச்சராசியிலோ நின்றவனாக சுபர்களால் பார்க்கப்பட்டவனாக இருந்தாலும், 1, 2, 4, 5, 7,9மிடங்களுள் ஏதேனுமொன்றில் சுபக்ரஹங்கள் நின்ற சுபர்களால் பார்க்கப்பட்டாலும் அல்லது உதயமான

**லக்னத்தில் சுபர்கள் நின்றாலும் ப்ரச்னம் கேட்பவன் ராஜ்யத்தைப் பெற்று அரசனாவான்.**

குறிப்பு: இச்செய்யுளில் முதல் வரியில் (हर्ष)ஹர்ஷ என்ற சொல்லுக்குப் பதில் (सुख)ஸுக என்ற சொல் சேர்க்கப் பட்டிருக்கிறது. ஸுக என்ற சொல் நான்காமிடத்தைக் குறிக்கும். சுபக்கிரஹம் நான்காமிடத்தில் நின்றால்தான் லக்னத்துக்குப் பத்தாமிடமான கர்ம ஸ்தானத்தை 7ம் பார்வையாக பார்க்க முடியும். பத்தாமிடமான கர்மஸ்தானம் சுபரால் பார்க்கப் பட்டால்தான் ப்ரச்னம் கேட்பவனுடைய காரியம் நிறைவேறும் என்று அறிய முடியும். கேந்திரங்களில் சுபர்கள் நிற்கவேண்டுமென்பது இச்செய்யுளின் கருத்து. ஆனால் பாபர்கள் கேந்திரங்களில் நின்றால்தான் சுபபலனைக் கொடுப்பார்கள் என்பதை சோதிட நூல்கள் கூறுகின்றன. 3, 6, 11மிடங்களில் நின்ற பாபர்கள் சுபபலனைக் கொடுப்பார்கள் என்பது ப்ருஹஜ்ஜாதகம் முதலான நூல்களில் கூறப் பட்டிருக்கின்றன. கோள்களின் சுபாசுபத்தன்மை பொதுவிதியில் கூறப்பட்டிருக்கிறது.

लग्नेश्वरस्स्वर्क्षगतो विलग्ने
स्वतुङ्गनाथेन निजोच्चगेन ।
दृष्टस्तदा प्रष्टुरभीष्टराज्य-
लाभो भवेद्भूमिपतेः क्रमेण ॥ 10

(இ.ள்): **ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னத்தில், அந்த லக்னத்துக்குரியவன் அவனுடைய நக்ஷத்திரக்காலில் நின்று, லக்னாதிபனுடைய உச்சவீட்டுக்குரியவன் அவனுடைய உச்சவீட்டில் நின்று உதயமான லக்னத்தைப் பார்த்தால் (உதயமான லக்னத்தில் நிற்கும் கோளை என்று கொள்ளல் வேண்டும்) ப்ரச்னம் கேட்கும்**

*அரசன் அவன் விரும்பிய அரசைக் காலந்தாழ்ந்து (காலக்ரமத்தில்) அடைவான்.*

குறிப்பு: *இச்சுலோகத்தில் கூறியுள்ளபடி பலனை அளிப்பனவாக அமைந்துள்ள இராசிகள் சிம்மமும் (விருச்சிக)மும் மட்டிலுமேயாகும். ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னம் சிம்மமாக அமைந்து அதற்குரிய கதிரவன் அவனுடைய நக்ஷத்திரமான உத்திரம் முகற்பாதத்தில் நின்று, அவனுடைய உச்சவீடான மேஷ ராசிக்குரியவனான செவ்வாய் அவனுடைய உச்சராசியான மகரத்தில் நின்று, 8ம் பார்வையாக சிம்மத்தை (அந்த ராசியிலுள்ள கதிரவனை)ப் பார்த்தாலும் (சூரியனும், செவ்வாயும் மித்திரர்கள் என்பது குறிப்பிடத்தக்கது) அல்லது விருச்சிகம் உதயமாகி குரு அவனுடைய நக்ஷத்திரமான விசாகம் நான்காம் பாதத்தில் நின்று, குருவுக்கு உச்சராசியான கடகத்துக்குரியவனான மதி அவனுக்குரிய உச்ச ராசியான கடகத்துக்குரியவனான மதி அவனுக்குரிய உச்சவீடான ரிஷபத்தில் நின்று 7ம் பார்வையாக குருவைப் பார்த்தாலும் என்று பொருள் கொள்வது உசிதம் எனத் தோன்றுகிறது. (குரு-சந்திர பார்வை நன்மைபயக்கும். குரு-சந்திர சேர்க்கை கூடாது). ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னாதிபன் அந்த லக்னத்திலேயே அவனுடைய நக்ஷத்திரக்காலில் நின்று என்று பொருள்கொண்டால், சிம்மம் ஒன்றுக்குத்தான் தகுதி உண்டு. விருச்சிகத்துக்கு அமையாது. விருச்சிகத்துக்குரியவன் செவ்வாய் அவனுடைய உச்சராசி மகரம். அதற்குரியவன் சனி. அவனுடைய உச்சராசி துலாம். அவனுடைய பார்வை விருச்சிகத்தில் நிற்கும் செவ்வாய்க்கு ஏற்படாது. ஆதலின் குரு லக்னாதிபனாக இல்லாவிட்டாலும் அவனது நக்ஷத்திரக்காலில் நிற்கக்கூடிய வாய்ப்பு ஏற்படுவதால் லக்னாதிபனாக குருவை ஏற்று*

அவனுடைய உச்சராசிக்குரியவனான மதி அவனது உச்சராசியான ரிஷபத்தையடைந்து விருச்சிகத்தை அதில் நிற்கும் குருவை 7ம் பார்வையாக பார்க்க வாய்ப்புண்டென்பதால் விருச்சிகத்தையும் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. மீனம் உதய லக்னமாக அமைந்து அந்த ராசிக்குரிய குரு அவனது நக்ஷத்திரக்காலில் (பூரட்டாதி 4ல்) நின்று அவனுடைய உச்சராசியான கடகத்துக்குரிய மதி அவனுடைய உச்சராசியில் நின்று மீனத்தில் நிற்கும் குருவைப் பார்க்க இயலாது. ஆதலின் சிம்மம் ஒன்றே தகுதியுடையது. கோள்களின் ராசி, உச்சவீடு, பார்வை முதலானவைகளை பொதுவிதியில் காண்க.

स्वोच्चस्थितो लग्नगतश्शुभग्रहः
शेषैस्त्रिकोणाय गतैर्बलान्वितैः ।
अचिन्तिता राज्यपदाप्तिरुन्नति-
स्स्यादल्पदास्वर्क्षगृहाद्यसंस्थिताः ॥ 11

(இ.ள்): ***ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னத்தில் சுபர்களான குருவோ அல்லது சுக்கிரனோ நின்று உதயமான லக்னமும் அவர்களின் உச்சராசிகளாக (கடகம் அல்லது மீனம்) அமைந்து ஏனைய செவ்வாய் முதலான கோள்கள் பலம் பெற்றவர்களாக (உச்சபாவத்தை அடைந்தவர்களாக அல்லது நீசபாவத்தையோ அஸ்தங்கத தோஷத்தையோ அடையாதவர்களாக) 1, 5, 9 அல்லது 11மிடங்களில் நிற்பார்களேயானால், ப்ரச்னம் கேட்கின்ற அரசன் அவன் எதிர்பார்க்காத நிலையில் பகையரசன் தானாகவே முன்வந்து அரசை இவனிடம் ஒப்படைத்து விடுவான். மேற்கூறியவாறு கோள்கள் அமையா விட்டால் பகைவனிடமிருந்து குறைந்த அளவே இராஜ்யங்கள் கிடைக்கும்.***

भानोदये भार्गवजीवसंयुते
लाभे कुजे राज्यपदाप्तिमादिशेत् ।
वृषोदये सौम्यहिमांशुभार्गवैः
केन्द्रे गुरौ स्युः खलु राज्यसम्पदः ॥ 12

(இ.ள்): *ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னம் கதிரவனின் இராசியான சிம்மமாக அமைந்து அதில் குருவும் சுக்கிரனும் நின்று 11ல் (மிதுனத்தில்) செவ்வாயும் நின்றால் ப்ரச்னம் கேட்பவன் அரச பதவியை அடைவான். சுக்கிரனின் ராசியான விருஷபம் உதயமாகி அதில் மதியும் சுக்கிரனும் நின்று, 1, 4, 7 அல்லது 10மிடங்களுள் ஒன்றில் (லக்னம் கேந்திரமாயினும் அதில் மதி சுக்கிரனுடன் குரு நிற்பது சிறப்பானதன்று என்பர். ஆனால் இந்நூலாசிரியர் கேந்திரங்களில் என்று கூறியிருப்பதால் லக்னத்தில் (வ்ருஷபத்தில்) குரு, மதி சுக்கிரன் மூவரும் நிற்பதை ஏற்றுக்கொள்கிறார்) நின்றால் ப்ச்னம் கேட்பவனுக்கு ராஜ்யபதவியும் ஐச்வர்யங்களும் கிடைக்கும்.*

शुभेत्थशालं यःकुरुते विलग्ने
राज्यप्रदस्स्वोच्चगतोऽथवा शुभः ।
लग्नेश्वरे स्वर्क्षगते विलग्ने
स्वोच्चे कुजे स्यात्खलु राज्यलाभः ॥ 13

(இ.ள்): *ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னத்தில் சுபனான ஒரு கோள் மற்றொரு சுபனுடன் "இத்தசாலம்" என்னும் யோகத்தை அடைந்திருந்தாலும் அல்லது அதனுடைய உச்சவீட்டில் நின்றாலும், ராஜ்யலாபத்தை கொடுப்பதாக இருக்கும். ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னத்துக்கதிபன் அதே லக்னத்தில் அவனுடைய நக்ஷத்திரக்காலில் நின்று செவ்வாய் அவனுடைய உச்ச ராசியில் நின்றால் ப்ரச்னம் கேட்பவன் ராஜபதவியை அடைவான். ராஜ்ய லாபம் ஏற்படும்.*

குறிப்பு: இச்சுலோகத்தில் முதல் இருவரிகளின் கருத்துப்படி லக்னத்தில் சுபனான குரு அல்லது சுக்கிரன் பரஸ்பரம் இத்தசாலம் என்னும் யோகத்தை அடைந்திருந்தாலும் அல்லது குருவோ அல்லது சுக்கிரனோ அல்லது இருவருமேயோ அவரவர்களுடைய உச்சராசியான கடகம், மீனம் இவைகளில் நின்றால் ராஜ்யலாபம் ஏற்படும் என்றறிய வேண்டும். பின் இருபாதங்கட்கும் ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னம் சிங்கமாக அமைந்து அதில் அந்த ராசிக்குரிய கதிரவன் அவனுடைய நக்ஷத்திரமான உத்தரம் முதல் பாதத்தில் நின்று செவ்வாய் அவனது உச்சவீடான மகரத்தில் நின்று 8ம் பார்வையாக கதிரவனைப் பார்த்தால் ராஜ்யலாபம் ஏற்படும் என்று கொள்ளவேண்டும். கதிரவனும், செவ்வாயும் மித்திரர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

केन्द्रे हिमांशुस्स्वगृहे स्वतुङ्गे-
ऽथवेत्थशालं कुरुते शुभेन ।
लग्नधिपेनाथ चतुष्टयस्थः
प्रष्टुस्ततदास्यात्खलु राज्यलाभः ॥ 14

(இ.ள்): ப்ரச்ன காலத்தில் மதி அவனுடைய ராசியான கடகத்திலோ, உச்சராசியான ரிஷபத்திலோ அல்லது உதயமான லக்னம் 4, 7 அல்லது பத்தாம் இடத்திலோ, வேறு ஒரு சுபனான கோளுடன் "இத்தசாலம்" என்னும் யோகத்தையடைந்திருந்தாலும் அல்லது லக்னாதிபனுடன் உதயமான லக்னத்துக்கு நான்காமிடத்தில் நின்றாலும் ப்ரச்னம் கேட்பவனுக்கு ராஜ்யலாபம் ஏற்படும். அரசபதவியை அடைவான். 14

केन्द्रेस्थिते शीतकरे बलाढ्ये
शुभैर्युते क्रूरविवर्जिते च ।

शुक्रेऽपि वा स्यात्खलु राज्यलाभः
चन्द्रेऽबले नीचगते न राज्यम् ॥ 15

(இ.ள்): ப்ரச்ன காலத்தில் மதி பலம் பெற்றவனாகவும் பாபர்களுடைய சம்பந்தமற்ற வனாகவும், சுபர்களுடன் கூடினவனாகவும் இருந்தாலும், அவ்வாறு சுக்கிரனும் இருந்தாலும் ப்ரச்னம் கேட்பவனுக்கு ராஜ்யலாபம் ஏற்படும். மதி பலமற்றவனாகவும் (க்ஷீணசந்திரனாகவும்) நீசபாவத்தை அடைந்தவனாகவுமிருந்தால் ப்ரச்னம் கேட்பவனுக்கு ராஜ்யம் கிடைக்காது. 15

कर्मलग्नयुतपाकदशायां राज्यलब्धिरथवा प्रबलस्य ।
शत्रुनीचगृहयातदशायां छिद्रसंश्रयदशापरिकल्प्या ॥

- बृहज्जातके- राज्ययोगाध्याये 19 श्लो.

(இ.ள்): இராஜயோகங்களைப்பற்றி விஸ்தாரமாகக் கூறப்பட்டிருக்கும் செய்யுள்களில் 19வது சுலோகமாக அமைந்திருக்கும் இச்சுலோகம் ராஜ்யலாபத்தைப் பற்றி கூறுகிறது. பிறக்கும்பொழுது ராஜயோகத்தைத் தருகின்ற கிரஹ அமைப்புக்களுடன் கூடியவர்கட்கே பொருந்து மாயினும் ப்ரச்ன காலத்தில் அமைந்த ராசி சக்ரத்திலிருக்கின்ற கோள்களைக்கொண்டும் பலன் சொல்வதற்கு இது பொருந்துமாதலால் இதை பொது விதியாக ஏற்று ப்ரச்னபாவ பலனாகக் கூறலாம் குழந்தை ஜனித்த காலத்தை வைத்து லக்னம் முதலானவைகளையும் கோள்களின் அமைப்பு களையும், தசைகள் அந்தந்த தசைகளையும் கண்டு பலன் கூறுவதுபோல் ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னத்தையும், ஏனைய ராசிகளில் நிற்கும் கோள்களையும் ப்ரச்ன காலத்தில் மதிநின்ற நக்ஷத்திரத்தின் செல்லான பாதம் நீக்கி மீதமுள்ள பாதங்களைக்கொண்டு, ப்ரச்ன காலத்தில் நடக்கும் தசைகளையும் அந்தந்த தசைகளையுமறிந்து ராஜ்யலாபத்தைப் பற்றி அறிந்து கூற முடியும். அதன்படி ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னம் 10மிடம் இவற்றில் நிற்கின்ற கோளின் நல்ல

பலனைத் தரும் தசையாகவோ அல்லது அந்தர தசையாகவோ இருந்தால் ராஜ்ய லாபம் உண்டு. 10மிடத்திலோ அல்லது லக்னத்திலோ நிற்கும் கோள்களும் எது அதிக பலம் பெற்றதாக இருக்கின்றதோ அதனுடைய தசை அந்தர் தசையில் ராஜ்ய லாபம் ஏற்படும். சத்ரு வீட்டையோ நீசராசியையோ அடைந்த க்ரஹத்தின் தசையாகவோ அல்லது அந்தர் தசையாகவோ இருக்குமானால் வேறு அரசனுடைய உதவியின் பேரில் ராஜ்ய லாபம் ஏற்படும்.

(ப்ருஹஜ்ஜாதகம் ராஜயோகாத்யாயம்-19வது செய்யுள்)

குறிப்பு: ப்ரச்ன காலத்தில் கணித்த ஜாதகப்படி ராஜயோகத்தைத் தரும் கோள்களுள் எது ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னத்துக்கு 10மிடத்திலிருக்கின்றதோ அல்லது லக்னத்திலிருக்கின்றதோ அந்தக் கோளின் தசை அல்லது அந்தர் தசை நடக்கும் காலத்தில் ராஜ்ய லாபம் ஏற்படும். மேலும் லக்னம், 10ஆமிடம் இவ்விரண்டிலும் கோள்கள் நின்றால், அவைகளுள் எந்தக்கோள் அதிக பலம் பெற்றதாக இருக்கிறதோ அக்கோளின் தசை அல்லது அந்தர் தசையில் ராஜ்யலாபம் ஏற்படும். உதயலக்னம், 10மிடம் இவற்றில் பல கோள்கள் நின்றால் அவற்றுள் எது அதிக பலம் பெற்றதாக இருக்கின்றதோ அதன் தசை அல்லது அந்தர் தசையில் ராஜ்யலாபம் ஏற்படும். உதய லக்னம், 10ஆமிடம் இவ்விரண்டிலும் கோள்கள் இல்லாவிட்டால், ஏனைய ராசிகளில் (4 அல்லது 7மிடத்தில் ) சுபமான கோள்கள் நின்றும் அவைகளுள் எது அதிக பலம் பெற்றதாக இருக்கின்றதோ அதனுடைய தசை அல்லது அந்தர் தசையில் ராஜ்ய லாபம் உண்டாகும் என்பதையும் அறியவேண்டும். மேலும் சந்திரன் நிற்கும் ராசியை அடிப்படையாகக் கொண்டு கணக்கிடப்படும் "கோசார ரீதியில்" கோள்களின் சுபாசுபத் தன்மையையும் அறிந்து பலன் கூற வேண்டும். தற்காலத்தில் அரசு பதவியை அடைவதற்கும் சட்டசபை முதலான அரசு சம்பந்தமான பதவிகளில் இடம்பெற முயல்வோருக்கும் ராஜயோக பாவத்தில் கூறப்பட்டவைகளை ஆய்ந்து பலன் கூறலாம்.

## नृपाभिषेचनम्

रोहिण्युत्तरफल्गुनी(त्रितय)रेवतीमृगशिर
पुष्यश्चश्रविष्टाश्विनी चित्रा ।
अर्कादितिभेषु शस्ततिथिषु
द्व्यंगस्थिरर्क्षोदये शुभेक्षिते । 16

सौम्यैः केन्द्रगतैस्त्रिलाभरिपुगैः-
क्रूरैश्शुभे वासरे शुद्धे देवगुरौ
(सितेच च स्वोच्चगेऽथवालग्नगे)
कृते नृपतेः पट्टाभिषेकः शुभः ॥ 17

## முடிசூட்டுவிழா

(இ.ள்): ரோஹிணீ, உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி, ரேவதீ, மிருகசீர்ஷம், புனர்வஸு, புஷ்யம், அவிட்டம், அசுவதி, சித்திரை, ஹஸ்தம் இவைகளுள் ஏதேனுமொரு அரசனுக்கு பொருத்தமான நக்ஷத்திரங்களிலும், வளர்பிறை, த்விதீயை, பஞ்சமி, ஸப்தமி, தசமி, ஏகாதசி, துவாதசி, த்ரயோதசி திதிகளிலும், உபய ராசிகளான மிதுனம், கன்னி, தனுசு, மீனம் அல்லது ஸ்திரராசிகளான ரிஷபம், சிம்மம் இவைகளிலோ, சுபர்களான குரு, சுக்கிரன் இவர்கள் 1, 4, 7 அல்லது 10மிடங்களில் நிற்கின்றவர்களாகவும், பாபர்கள் 3, 6 அல்லது 11மிடங்களில் நிற்பவர்களாகவும், சுக்கிரன் அவனது உச்ச வீடான மீனத்தில் நிற்கின்றவனாகவே அல்லது லக்னத்தில் நிற்பவனாகவும் இருந்து, திங்கள், புதன், வியாழன் அல்லது வெள்ளிக்கிழமைகளில் அரசனுக்கு பட்டாபிஷேகத்தை (முடிசூட்டு விழாவை) நடத்துவது நன்மை பயக்கும்.

क्रूरैर्ग्रहैः धनलग्नसंस्थैस्तु
मृत्युं वदेद्द्यूनगतैर्गदीस्यात् ।
निरुद्यमैः कर्मगतैस्सुखस्तैः
सक्लेशभागीच नृपोऽभिषेकात् ॥ 16

(இ.ள்): பாபர்கள் பட்டாபிஷேகத்துக்காக நிர்ணயிக்கப்பட்ட லக்னத்திலோ அல்லது தனஸ்தானமான இரண்டாமிடத்திலோ நிற்பார்களே யானால் பட்டாபிஷேகம் செய்துகொண்ட அரசன் மடிவான்(மரணத்தை உண்டுபண்ணும்) ஏழாமிடத்தை அடைந்திருந்தால் ரோகியாக நோயினால் பீடிக்கப் படுவான். நீசத்தன்மையையோ அல்லது அஸ்தங்கத தோஷத்தையோ அடைந்த கோள்கள் பத்தாமிடத்திலோ அல்லது நான்காமிடத்திலோ நின்றால் அரசன் துன்பங்களை அடைபவனாவான். (ஆதலின் நாட்கள், திதிகள், கோள்களின் அமைப்புகள், லக்னம் முதலானவைகளை ஆய்ந்து நிர்ணயித்து நல்ல நாட்களில் அரசனுக்கு முடிசூட்டுவிழாவை நடத்த வேண்டும்.)

हस्ततिष्याश्विनी मैत्रवैष्णवेन्दूत्तराणि च ।
रोहिण्यदितिरेवत्यः प्रशस्तोह्यभिषेचने ॥

ओजास्तु तिथयस्सर्वाः प्रशस्ता नवमीं विना ।
द्वितीया दशमी चैव युग्मास्वपि सुपूजिते ॥

तुला हि वनिता नक्रा वर्ज्याश्शेषाश्शुभावहाः ।
नैधनस्थाः ग्रहास्सर्वे वर्जनीया विशेषतः ॥

भ्रात्रायारिगताः पापाः कर्त्तुर्वित्तसुखप्रदाः ॥

- कालप्रकाशिका- XXVII अध्यायः 7 to10 श्लो.

(இ.ள்): அரசனுக்கு முடிசூட்ட அச்விநி, ரோகிணீ, மிருகசீர்ஷம், புனர்வசு, புஷ்யம், உத்தரம், உத்திராடம், உத்திரட்டாதி, ஹஸ்தம், அனுஷம் திருவோணம், ரேவதி நக்ஷத்திரங்களும், வளர்பிறை த்ருதீயை, பஞ்சமி, ஸப்தமி, ஏகாதசியும், தேய்பிறையில் துவிதீயையும், தசமியும், கன்னி, கடகம், துலாம், மிதுனம் நீங்கலான மற்ற இராசிகளும் 8மிடம் சுத்தமும் (8மிடத்தில்) எந்த ஒரு கோளும் நிற்றல்கூடாது, 3, 6, 11ல் பாபிகளும் நிற்கின்ற நிலையில் அமைந்த லக்னமும் ஏற்றதாக விருக்கும். *(காலப்ரகாசிகை 27வது அத்யாயம், 7வது பின்பத்தி முதல் 10வது ச்லோகம் முடிய)*

## दिग्विजये जयपराजयप्रश्नः

अथ प्रवक्ष्ये नृपतेर्जिगीषोः
युद्धे जयश्चाथ पराजयश्च ।
(समीक्ष्यसर्वं स्थितिमप्युडूनां
यथा वराहं ग्रहयोगचर्याम् ) ॥

### முடிசூட்டப்பட்டமன்னன் திக்விஜயம் செய்யும்பொழுது நேரிடும் போரில் எந்த அரனுக்குவெற்றிகிட்டும் என்பதைப்பற்றிய ப்ரச்னம்

(இ.ள்): முடிசூட்டப்பட்ட மன்னன், அவன் பெற்ற ராஜ்யத்தை பலப்படுத்திக்கொள்வதின் பொருட்டு திக்விஜயம் செய்வது இயல்பு. அப்பொழுது சில அரசர்கள் திக்விஜயம் செய்துவரும் அரசனின் படைபலம் முதலானவற்றைக் கண்டு பயந்து எதிர்க்க சக்தியற்றவர்களாக அவன் அடிபணிந்து சிற்றரசர்களாக இருக்கச் சம்மதித்து கப்பம் செலுத்தி வருவார்கள். சிலர் அவ்வரசனை எதிர்த்து போரிடுவார்கள். இந்நிலையில் திக்விஜயம் செய்யப்புறப்பட்ட அரசனைச் சேர்ந்தவரோ அல்லது இவ்வரசனை எதிர்க்கும் அரசனைச் சேர்ந்தவரோ சோதிடரை அணுகி போரிடும் அவ்விரு

அரசர்களுள் எவர் வெற்றி பெறுவர் என்று ப்ரச்னம் (ஆரூடம்) கேட்டால் ப்ரச்னம் கேட்ட காலத்தை அடிப்படையாகக் கொண்டு ராசி சக்கரத்தையும் லக்னத்தையுமமைத்து லக்னம் முதலான ராசிகளிலும் நிற்கும் கோள்களின் நிலையையும் பலாபலங்களையும் அறிந்து அவ்விருவருள் எவர் போரில் வெற்றி பெறுவர் என்பதை ஊஹித்து சொல்லவேண்டும் என்பதற்காக வராகரின் நூலை ஆதாரமாகக்கொண்டு திக்விஜயத்தின்பொழுது ஏற்படும் போரில் எவர் வெற்றி பெறுவர்என்பதைப்பற்றிய விஷயங்களைக் கூறப்போகிறேன்.

लग्ने भृगौ सुरगुरौ तनये सुखे ज्ञे
सूर्ये तृतीयभवने भगैश्च शेषैः ।
प्रष्टा नृपो रिपुगणांश्च विजित्य युद्धे
सिद्धार्थ आत्मभवनं समुपैति शीघ्रम् ॥ 2

(இ.ள்): [திக்விஜயத்தின் பொருட்டு சென்றிருக்கும் அரசன் வெற்றியுடன் வருவானா என்பதை அறிந்துகொள்வதின் பொருட்டு சோதிடரை அணுகி ப்ரச்னம் கேட்கப்பட்டபொழுது, ப்ரச்னம் கேட்ட காலத்தை அடிப்படையாகக்கொண்டு ராசி சக்கிரத்தையும், லக்னத்தையும் அமைத்துப் பார்க்கும் பொழுது] உதயமான லக்னத்தில் சுக்கிரனும், 5மிடத்தில் குருவும், நான்காமிடத்தில் புதனும், மூன்றாமிடத்தில் கதிரவனும், ஏனைய கோள்கள் மதி, சனி, செவ்வாய் ராகு அல்லது கேதுவோ நிற்பார்களேயானால் அரசனைச் சேர்ந்தவர் எவராவது ப்ரச்னம் கேட்டால் திக்விஜயத்தின் பொருட்டு சென்ற அரசன், அவனை எதிர்க்கும் அரசர்களைப் போரில் வென்று தான் மேற்கொண்ட திக்விஜயம் முழுமையாக பயனுடையதாக அமையப் பெற்று விரைவில் தனதரண்மனைக்கு வந்துவிடுவான் என்று கூறவேண்டும்.

குறிப்பு: [ ] இக்கட்டத்திற்குள்ளமைந்த சொற்றொடரை இனிவரும் ச்லோகங்கட்கும் பொருள் கூறுமுன் அமைத்துக்கொள்ளவேண்டும்.

मन्दारयोस्तनुगयोस्तनये सुरेज्ये
लाभेऽसुखे ज्ञसितयोस्तपने नभस्थे ।
प्रष्टुर्जयः खलुभवेत्समरे प्रकर्षा-
दास्मिन्सिते निधनगे वशमेति शत्रुः ॥ 3

(இ.ள்) ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னத்தில் சனியும், செவ்வாயும், 5ல் குருவும், 4ல் சுக்கிரனும், 11ல் புதனும் (அல்லது 4லோ அல்லது 11லோ புதனும் சுக்கிரனும் என்றும் கொள்ளலாம்) 10ல் கதிரவனும் நின்றால் ப்ரச்னம் கேட்பவனின் அரசன் போரில் வெற்றிபெறுவான். முன்கூறப்பட்டபடி 4-11மிடங் களில் இல்லாமல் சிறப்பாக 12ல் சுக்கிரன் மட்டில் நின்றால் பகைவன் அரசனுக்கு வசப்படுவான். (அரசன் மாற்றானை சிறைப்படுத்துவான்).

குறிப்பு: இச்சுலோகத்தில் 2வது வரிக்கு 4ல் சுக்கிரனும் 11ல் புதனும் அல்லது 4 அல்லது 11ல் இருவருமோ சேர்ந்து நின்றால் என்று பொருள் கொள்ளப்பட்டாலும் நான்காவது பாதத்திற்கு 12ல் சுக்கிரன் நிற்கவேண்டும் என்று கொள்ளவேண்டியிருப்பதால் 4 அல்லது 11ல் புதனும் 12ல் சுக்கிரனும் என்று பொருள் கொள்வது உசிதம் என்று தோன்றுகிறது.

लग्ने गुरौ शशिनि कर्मणि षष्ठगेऽर्के
प्रष्टुर्भवन्ति विजयेप्सितसिद्धिलाभाः ।
जीवोदये भृगुसुते रिपुगेऽष्टमस्थे-
ऽर्के विधौ विजयसिद्धिधनागमास्युः ॥ 4

(இ.ள்): ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னத்தில் குருவும், 10மிடத்தில் மதியும் 6மிடத்தில் கதிரவனும் நின்றால் ப்ரச்னம் கேட்பவனின் அரசன் திக் விஜயத்தின் போது ஏற்பட்ட போரில் வெற்றி பெறுவதுடன் அவன்

செய்ய விரும்பிய காரியங்கள் அனைத்தையும் நிறைவேற்றுபவனாக இருப்பான். இதனால் லாபங் களையும் அடைவான். உதயமான லக்னத்தில் குருவும், 6மிடத்தில் சுக்கிரனும், 8மிடத்தில் கதிரவனோ அல்லது மதியோ நின்றால் போரில் வெற்றியையும் திரண்ட செல்வங்களையும் பெறுவான்.

लाभे रवौ नभसि भूमिसुते तृतीये
मन्दे विधौ रिपुगृहे तनुगैश्च शेषैः ।
प्रष्टुर्नृपस्य सुखसिद्धिजयार्थलाभ-
साम्राज्यवाहनबलार्थसमृद्धयस्स्युः ॥ 5

(இ.ள்): ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னத்துக்கு 11மிடத்தில் கதிரவனும், 10மிடத்தில் செவ்வாயும், 3மிடத்தில் சனியும், 6மிடத்தில் மதியும் ஏனைய கோள்கள் (குரு, சுக்கிரன், புதன், ராகு அல்லது கேது) நின்றால் ப்ரச்னம் கேட்பவனின் அரசன் திக்விஜயத்தின் போது ஏற்பட்ட போரில் வெற்றி பெறுவதுடன், வாஹனங்கள், திரண்ட செல்வம், பல ராஜ்யங்கள் முதலானவைகளைப் பெற்று பேரரசனாகப்புகழுடன் சுகமாக வாழ்வான். 5

मन्दारयोर्नभसि लाभगते सुरेज्ये
लग्ने च शुक्रबुधयोर्जयसंपदौ स्तः ।
शुक्रेऽस्तगे शशधरे निधने सुखेज्ञे
केन्द्रे गुरौ च नृपतेर्जयसिद्धिलाभाः ॥6

(இ.ள்): ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னத்துக்கு 10மிடத்தில் சனியும் செவ்வாயும், 11மிடத்தில் குருவும், லக்னத்தில் சுக்கிரனும் புதனும் நின்றால் ப்ரச்னம்

கேட்பவனின் அரசன் திக்விஜயத்தின்போது ஏற்பட்ட போரில் வெற்றியும் திரண்ட ஐச்வர்யங்களையும் பெறுவான். சுக்கிரன் 7ம்மிடத்திலும், 8ல் மதியும் 4ல் புதனும், 1, 4, 7 அல்லது 10மிடங்களுள் ஏதேனும் ஒன்றில் குருவும் (7ல் சுக்கிரனுடனும் 4ல் புதனுடனும்) நின்றால் திக்விஜயத்தின்போது ஏற்பட்ட போரில் அரசன் வெற்றியையும் காரியசித்தியையும் பொருள்களையும் (லாபத்தையும்) அடைவான். 6

लग्ने गुरौ तीक्ष्णकरेऽबरस्थे
चन्द्रे कलत्रेऽथ रसातले वा
प्रष्टुर्जयस्थानसुखार्थलाभ-
राज्याप्तयस्स्युर्नियमे न शीघ्रम् ॥ 7

(இ.ள்): ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னத்தில் குருவும், 10ல் கதிரவனும், 7ல் அல்லது 4ல் மதியும் நின்றால் ப்ரச்னம் கேட்பவனின் அரசன் திக்விஜயத்தின் போது நேரிட்ட போரில் வெற்றியையும் பல ராஜ்யங்களையும் பொருளையும் பெற்று சுகமாக விரைவில் திரும்புவான். 7

लग्ने गुरुज्ञभृगुजैः शशिभौमसूर्यैः
दुश्चिक्यगैर्युधिभवेद्विजयो नृपस्य ।
लाभेऽथकर्मणि दिवाकरभौममन्दैः
लग्ने गुरावथसिते विजयो रणे स्यात् ॥ 8

(இ.ள்): ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னத்தில் புதனுடனும் சுக்கிரனுடனும் குருவும், 3மிடத்தில் மதி, செவ்வாய், கதிரவன் இவர்கள் நின்றாலும் அல்லது உதயமான லக்னத்தில் குருவோ அல்லது சுக்கிரனோ நின்று 10மிடத்திலோ அல்லது 11மிடத்திலோ கதிரவன்,

செவ்வாய், சனி இவர்கள் நின்றாலும், திக்விஜயத்தின் போது நேரிட்ட போரில் ப்ரச்னம் கேட்பவனின் அரசன் வெற்றியடைவான். 8

लग्ने सुरेशशशिनौ तपनेऽबरस्थे
मन्दारयो नृपगृहे बलयुक्तयोश्च ।
शुक्रज्ञयोर्व्ययगयोश्च भवन्ति राज्ञः
प्रष्टुर्ध्रुवं विजयसिद्धिशुभार्थलाभाः ॥ 9

(இ.ள்): ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னத்தில் குருவும் மதியும் 10ல் கதிரவனும் 6ல் சனியும் செவ்வாயும் பலம் பெற்றவர்களாகவும், 12ல் சுக்கிரனும் புதனும் நின்றால் ப்ரச்னம் கேட்பவனின் அரசன் திக்விஜயத்தின்போது நேரிட்ட போரில் வெற்றிவாகை சூடுவான். மேலும் அவன் மேற்கொண்ட செயல் அனைத்தும் முழுமையாக நிறைவேற்றப்பட்டு திரண்ட ஐச்வர்யங்களையும் பெறுவான். 9

शीर्षोदये शुभसुहृद्ग्रहयुक्तेऽदृष्टे
लग्ने शुभैश्च बलिभिः शुभवर्गसंस्थैः ।
सौम्यैर्ग्रहैश्शुभचतुष्टयधर्मसंस्थैः
प्रष्टुर्भवेद्धनजयेप्सितकार्यसिद्धिः ॥ 10

(இ.ள்): ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னத்தில் சுபர்களான கோள்கள் பலம் பெற்றவர்களாக சுபவர்கத்தில் நிற்பவர்களாகவும், சீர்ஷோதய ராசிகளான சிங்கம், கன்னி,துலாம், விருச்சிகம், கும்பம் இவைகளில் எதிலாவது சுபர்கள் அவர்களுடைய மித்ர க்ரஹங்களுடன் நின்றாலும் அல்லது அந்த ராசிகள் சுபர்களால் பார்க்கப்பட்டாலும் சுபர்கள் பாபர்கள் சம்பந்தமற்ற 4லோ அல்லது 9லோ நின்றால் ப்ரச்னம் கேட்பவனின் அரசன் திக்விஜயத்தின்போது நேரிட்ட போரில் வெற்றி அடைவான். 10

गुरौ विलग्ने रविजे तृतीये
लाभे रवौ भूमिसुते च षष्ठे ।
सुक्रज्ञयोः कर्मणि तुर्य इन्दौ
प्रष्टुर्नरेन्द्रस्य रणे जयस्स्यात् ॥ 11

(இ.ள்): ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னத்தில் குருவும், 3ல் சனியும், 11ல் கதிரவனும், 6ல் செவ்வாயும், 10ல் சுக்கிரனும் புதனும் 4ல் மதியும் நின்றால் ப்ரச்னம் கேட்பவனின் அரசன் திக்விஜயத்தின்போது நேரிட்ட போரில் வெற்றி பெறுவான். 11

लग्ने गुरौ शीतकरे कलत्रे
शुक्रज्ञयो र्व्योम्नि रसातले वा ।
त्रिलाभषष्ठाष्ट मस्थितैरशुभैः
प्रष्टुर्नरेन्द्रस्य रणे जयस्स्यात् ॥ 12

(இ.ள்): ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னத்தில் குருவும் 7ல் மதியும், 4ல் அல்லது 10ல் சுக்கிரனும் புதனும், 3, 6, 8, 11ல் ஏதேனுமொன்றில் பாபர்களும் நின்றால் ப்ரச்னம் கேட்பவனின் அரசன் திக்விஜயத்தின்போது நேரிட்ட போரில் வெற்றி பெறுவான். 12

लग्ने भृगौ चन्द्रसुते कुडुम्बे
केन्द्रेगुरौ तिग्मकरे तृतीये ।
मन्दारयोर्लाभरिपुस्थयोश्च
प्रष्टुर्नरेन्द्रस्य रणे जयस्स्यात् ॥ 13

(இ.ள்): ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னத்தில் சுக்கிரனும், 2ல் புதனும், 1ல் சுக்கிரனுடனும் 4, 7 அல்லது 10ல் தனியாக குருவும், 3ல் கதிரவனும், 6 அல்லது 11ல் சனியும்

செவ்வாயும் அல்லது 6ல் அல்லது 11ல் சனியும் செவ்வாயும் சேர்ந்து நின்றாலும், ப்ரச்னம் கேட்பவனின் அரசன் திக்விஜயத்தின்போது நேரிட்ட போரில் வெற்றி பெறுவான். 13

लग्नेगुरौ शीतकरे वियत्स्थे
शुक्रज्ञयोर्बन्धुसुतस्थयोश्च ।
षष्ठे रवौ त्र्यायगयोः कुजार्क्ययोः
प्रष्टुर्जयो भूमिपते ध्रुवं स्यात् ॥ 14

(இ-ள்): ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னத்தில் குருவும், 10ல் மதியும், சுக்கிரன் 4லும், புதன் 5லும் (அல்லது 4லோ அல்லது 5லோ சுக்கிரனும் புதனும்) 6ல் கதிரவனும், 3 அல்லது 11ல் செவ்வாயும் சனியும் நின்றாலும் ப்ரச்னம் கேட்பவனின் அரசன் திக்விஜயத்தின் போது நேரிட்ட போரில் வெற்றி பெறுவான். 14

लग्ने गुरौ कर्मगतेऽर्कपुत्रे
शुक्रज्ञयोस्तुर्यपञ्चमयोश्च ।
षष्ठे रवौ प्रष्टुरलं नृपस्य
युद्धे जयो राज्यधनाप्तयस्युः ॥ 15

(இ-ள்): ப்ரச்னகாலத்தில் உதயமான லக்னத்தில் குருவும், 10ல் சனியும், 4ல் சுக்கிரனும் 5ல் புதனும், 6ல் கதிரவனும் நின்றால் ப்ரச்னம் கேட்பவனின் அரசனுக்கு திக்விஜயத்தின் போது நேரிட்ட போரில் வெற்றியும் வேண்டிய அளவு ராஜ்யங் களும் ஐச்வர்யங்களும் கிடைக்கும். 15

लग्ने भृगौ देवगुरौ कलत्रे
षष्ठे कुजे शीतकरे चतुर्थे ।
शनिः तृतीये च नरेश्वरस्य
प्रष्टुर्जयस्स्याद्धनवाहनाप्तिः ॥

(இ.ள்): *ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னத்தில் சுக்கிரனும் 7ல் குருவும், 6ல் செவ்வாயும், 4ல் மதியும், 3ல் சனியும் நின்றால் ப்ரச்னம் கேட்பவனின் அரசன் திக்விஜயத்தின்போது நேரிட்ட போரில் வெற்றியையும் வாஹனம் பொருள் இவைகளைப் பெறுவான்.* *16*

लग्ने भृगौ चन्द्रसुते नभस्थे
षष्ठे कुजे देवगुरौ कलत्रे ।
लाभे रवौ शीतकरे कुटुम्बे
प्रष्टुः क्षितीशस्य रणे जयस्स्यात् ॥ 17

(இ.ள்): *ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னத்தில் சுக்கிரனும், 10ல் புதனும், 6ல் செவ்வாயும், 7ல் குருவும், 11ல் கதிரவனும், 2ல் மதியும் நின்றால் ப்ரச்னம் கேட்பவனின் அரசன் திக்விஜயத்தின்போது நேரிட்ட போரில் வெற்றியை அடைவான்.* *17*

लग्ने गुरौ शशधरे सहजे कलत्रे
सौम्ये रवौ रिपुगृहे गगने महीजे ।
लाभे शनौ भृगुसुते हिबुके नृपस्य
प्रष्टुर्भवन्ति जयवाहनकोशलाभाः ॥ 18

(இ.ள்): *ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னத்தில் குருவும், 3ல் மதியும், 7ல் புதனும், 6ல் கதிரவனும், 10ல் செவ்வாயும், 11ல் சனியும், 4ல் சுக்கிரனும் நின்றால் ப்ரச்னம் கேட்பவனின் அரசன் திக்விஜயத்தின் நேரிட்ட போரில் வெற்றியையும் வாஹனம் திரண்ட ஐச்வர்யங் களையும் அடைவான்.* *18*

लग्ने गुरौ भूमिसुते तृतीये
बुधे कलत्रे भृगुजेऽष्टमे च ।
षष्ठे रवौ प्रष्टुरलं नृपस्य
युद्धे जयो राज्यधनामयः स्युः ॥ 19

குருவும், 3ல் செவ்வாயும், 7ல் புதனும், 8ல் சுக்கிரனும், 6ல் கதிரவனும், நின்றால் ப்ரச்னம் கேட்பவனின் அரசன் திக்விஜயத்தின்போது நேரிட்ட போரில் வெற்றியையும் பல ராஜ்யங்களையும் மிகுந்த தனங்களையும் பெறுவான். 19

शुक्रे विलग्ने रविजे तृतीये
धर्मे गुरौ शीतकरे च षष्ठे ।
लाभे रवौ ज्ञे च कुजे नभस्थे
प्रष्टुर्नरेन्द्रस्य रणे जयस्स्यात् ॥ 20

(இ.ள்): *ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னத்தில் சுக்கிரனும், 3ல் சனியும், 9ல் குருவும், 6ல் மதியும், 11ல் கதிரவனும் புதனும், 10ல் செவ்வாயும் நின்றால் ப்ரச்னம் கேட்பவனின் அரசன் திக்விஜயத்தின்போது நேரிட்ட போரில் வெற்றி அடைவான்.* 20

सुखे विधौ देवगुरौ विलग्ने
शुक्रज्ञयोस्सप्तमसंस्थयोश्च ।
षष्ठे रवौ लाभतृतीययोश्च
सौरारयोः प्रष्टुरलं जयस्स्यात् ॥ 21

(இ.ள்): *ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னத்தில் குருவும், 4ல் மதியும், 7ல் சுக்கிரனும் புதனும், 6ல் கதிரவனும், 11ல் சனியும் 3ல் செவ்வாயும் நின்றால் ப்ரச்னம் கேட்பவனின் அரசன் திக்விஜயத்தின்போது நேரிட்ட போரில் வெற்றி பெறுவான்.* 21

गुरौ विलग्ने तपने रिपुस्थे
सुखे ज्ञ भृग्वोर्हिमगौ कलत्रे ।
मन्दारयोर्भ्रातृभवस्ययोस्स्या-
त्प्रष्टुः क्षितीशस्य जयः समाजे ॥ 22

(இ.ள்): *ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னத்தில் குருவும், 6ல் கதிரவனும், 4ல் சுக்கிரனும் புதனும், 7ல் மதியும், 3ல் சனியும், 11ல் செவ்வாயும் நின்றால் ப்ரச்னம் கேட்பவனின் அரசன் திக்விஜயத்தின்போது நேரிட்ட போரில் வெற்றி பெறுவான்.* *22*

स्वोच्चे गुरौ लग्नगते स्वतुङ्गे
सूर्यो भवस्थैश्शशिसौम्यशुक्रैः ।
मन्दारयोर्भ्रातृरिपुस्थयोस्स्या-
त्प्रष्टुस्सुसाम्राज्य मलं(लभेत् ?)नृपस्य ॥ 23

(இ.ள்): *ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னம் குருவுக்கு உச்சவீடாக அமைந்த கடகமாக இருந்து அதில் குருவும், கதிரவனுக்கு உச்சவீடான மேஷத்தில் கதிரவனும், 11ல் மதியும், புதனும், சுக்கிரனும், 3ல் சனியும், 6ல் செவ்வாயும் நின்றால் ப்ரச்னம் கேட்பவனின் அரசன் திக்விஜயத்தின்போது நேரிட்ட போரில் அரசர்களை வென்று அரசன் விரும்பிய அளவு ஸாம்ராஜ்யங்களைப் பெறுவான்.* *23*

लग्ने गुरौ शीतकरे कलत्रे
शुक्रज्ञयोः कर्मणि लाभगेऽर्के ।
मन्दारयोर्भ्रातृरिपुस्थयोस्स्या-
त्प्रष्टुर्नरेन्द्रस्य जयस्समाजे ॥ 24

(இ.ள்): *ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னத்தில் குருவும், 7ல் மதியும், 10ல் சுக்கிரனும் புதனும், 11ல் கதிரவனும், 3ல் சனியும் 6ல் செவ்வாயும் நின்றால் ப்ரச்னம் கேட்பவனின் அரசன் திக்விஜயத்தின்போது நேரிட்ட போரில் வெற்றி பெறுவான்.* *24*

लग्नेश्वरेन्द्रे स्वे शुभेत्थशाले
प्रष्टुः प्रयाणं शुभवित्तदं भवेत् ।
स्वोच्चादिगे वित्तपतौ बलान्विते
यानादि संपच्छुभकार्यसिद्धिः ॥ 25

(இ.ள்): ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னத்துக்கு அதிபன் அவனுடைய லக்னத்தில் வேறு ஒரு சுபக்கிரஹத்துடன் சுபமான "இத்தசாலம்" என்னும் யோகத்தை அடைந்திருந்தாலும், தனஸ்தானமான இரண்டுக்கு உடையவன் அல்லது சுக்கிரன் பாபர்களின் தொடர்பில்லாமல் பலம் கொண்டவனாக அவனுடைய உச்சராசியில் நின்றாலும் திக்விஜயத்தின் பொருட்டு சென்ற அரசனுக்கு அவன் மேற்கொண்ட பயணம், வாஹனம் முதலானவைகளும் திரண்ட ஐச்வர்யங்களும் கிடைப்பதுடன் நற்பணிகளும் நடைபெறும். (இத்தசால யோகத்தைப் பற்றியதைப் பொதுவிதியில் காண்க) 25

लग्नाधिपे स्वेऽशुभेत्थशाले
चित्रे भवेद्भूरिभयं महीपतेः ।
क्रूरे धनस्थे ह्यधिकारवर्जिते
भवेदनिष्टं नृपपृष्ठगानाम् ॥ 26

(இ.ள்): ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னத்துக்கு அதிபன் அவனுடைய இராசியில் பாபர்களுடன் "இத்தசாலம்" என்னும் யோகத்தை அடைந்திருந்தாலும் பாபர்கள் தனஸ்தானமான இரண்டாமிடத்தில் நின்றாலும், திக்விஜயத்தின் பொருட்டு செல்கின்ற அரசனுக்கு மனதில் மிகுந்தபயம் ஏற்படுவதுடன் அவனைத் தொடர்ந்து செல்கின்றவர்கட்கும் தொந்தரவு களும் கஷ்டமும் ஏற்படும். 26

भौमे धनस्थे ह्यधिकारहीनेष्व
रणे हुताशाच्छकटाद्भयं स्यात् ।
सौरे च चोरात्सलिलाद्भयं च
सूर्येऽग्निभीतिः नृपपृष्ठगानाम् ॥ 27

(இ.ள்): ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னத்துக்கு 2மிடமான தனஸ்தானத்தில் பலமற்ற செவ்வாய் நின்றால் திக்விஜயத்தின்போது நேரிட்ட போரில் நெருப்பினாலும் தேர் முதலான வாகனங்கள் முறிந்து போவதாலும் அரசனுக்கு பயம் ஏற்படும். 2மிடத்தில் சனி நின்றால், திருடர்களாலும், பெருவெள்ளம் ஏற்படுவதாலும், 2மிடத்தில் கதிரவன் நின்றால் நெருப்பினாலும் அரசனைப் பின்தொடர்ந்து செல்கின்றவர்களுக்கும் பயம் ஏற்படும். 27

कम्बूलयोगेत्वशुभग्रहाणां
धने भवेन्मृत्युभयं नराणाम् ।
धनाधिनाथेत्वस्तमिते च नीचे
यानह्यभद्रं विफलं च विद्यात् ॥ 28

(இ.ள்): ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னத்துக்கு தனஸ்தானமான இரண்டாமிடத்தில் பாபக்கிரஹங்கள் "கம்பூல" யோகத்தையடைந்திருந்தால் திக்விஜயத்தின் போது அரசனுடன் சென்ற காலாட்படைகளுக்கு மரணம் நேரிடும். 2மிடத்துக்குடையவன் சூரியனில் அஸ்தங்கததோஷத்தை அடைந்திருந்தாலும், நீசபாவத்தை அடைந்திருந்தாலும் (நீசராசியை அடைந் திருந்தாலும்) வாஹனங்கள் சேதப்படுவதால் பாதுகாப்பின்மையும் போரில் தோல்வியும் ஏற்படும். 28

कुजार्कचन्द्रैः सुतधर्मलग्नगैः
प्रष्टुःप्रभङ्गो युधि भूपतेर्भवेत् ।
लग्ने यमेन्द्वोः क्षितिजेन दृष्टयोः
युद्धेमृतिस्स्याद्गमनान्महीपतेः ॥ 29

(இ.ள்): ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னத்துக்கு 4ல் செவ்வாயும், 9ல் கதிரவனும் லக்னத்தில் மதியும் நின்றால் ப்ரச்னம் கேட்பவனின் அரசன் திக்விஜயத்தின் போது நேரிட்ட போரில் தோற்றுப்போவான். உதயமான லக்னத்தில் சனியும் மதியும் நின்று செவ்வாயினால் பார்க்கப்பட்டால் திக்விஜயத்திற்காகச் சென்ற அரசன் போரில் மடிவான். 29

मन्दारयोश्छिद्रगयोर्विलग्ने
सूर्ये रणे मृत्युमुपैति भूपतिः ।
अस्मिंश्च योगे व्ययमृत्युसंस्थे
चन्द्रे ससूर्येऽरणे मृतिर्भवेत् ॥ 30

(இ.ள்): ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னத்துக்கு 4ல் சனியும் செவ்வாயும், உதயமான லக்னத்தில் கதிரவனும் நின்றாலும், இவ்வாரான நிலையில் 12ல் அல்லது 8ல் சந்திரனும் கதிரவனும் நின்றாலும், திக்விஜயத்தின் பொருட்டு சென்ற அரசன் போரில் மாள்வான். 30

குறிப்பு: இச்சுலோகத்தில் எழுதப்பட்டிருக்கும் உரையில் குறைபாடு உள்ளது. காண்போர் அக்குறையை நீக்க அவர்களது கருத்தைக் கூறுவார்களேயானால் அடுத்த பதிப்பில் திருத்திக்கொள்வோம்.

शीतांशु भा मन्दुसुतैः कलत्रे
प्रष्टुर्विनाशः समरे प्रयाणात् ।
शुक्रारयोर्लग्नगयोर्नृपस्य
प्रष्टुर्भवेत्क्षुद्भयशत्रुवृद्धिः ॥ 31

(இ.ள்): ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னத்துக்கு 7ல் மதியும், செவ்வாயும், புதனும் நின்றாலும், அல்லது உதயமான லக்னத்தில் சுக்கிரனும் செவ்வாயும் நின்றாலும், திக்விஜயத்தின் பொருட்டு சென்ற அரசன், மிக அதிகமான அளவில் பகைவர்களை எதிர்க்க வேண்டிய நிலை ஏற்படுவதாலும், பசிப்பிணியும் பயமும் ஏற்பட்டு மரணமடைவான். 31

चन्द्रारयोर्लग्नगयोर्यमेन
सन्दृष्टयोस्स्यात्समरे प्रभङ्गः ।
पापग्रहैः पञ्चमलग्नसंस्थैः
प्रष्टुस्समाजे तनयस्य मृत्युः ॥ 32

(இ.ள்): ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னத்தில் மதியும், செவ்வாயும் நின்று சனியினால் பார்க்கப் பட்டாலும் லக்னம், 5இடம் இவைகளில் பாபர்கள் நின்றாலும் திக்விஜயத்தின்போது நேரிட்ட போரில் அரசன் தோல்வியடைவதுடன் அவன் மைந்தனும் மரணத்தையடைவான். 32

पापग्रहैर्द्वित्रि चतुष्टयस्थैः
सौम्यग्रहै र्वीर्यविवर्जितैश्च ।
चन्द्रेऽष्टमस्थे समरे प्रयाणात्
प्रष्टुर्भवेयुः रणबन्धघाताः ॥ 33

(இ.ள்): ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னத்துக்கு 2லோ அல்லது நான்காமிடத்திலோ பாபக்கிரஹங்கள் நின்று, 8ல் மதியுடன் சுபர்களால் பலமற்றவர்களாக அதாவது அஸ்தங்கதர்களாகவோ, நீசராசியை அடைந்தவர்களாகவோ இருந்தால் ப்ரச்னம் கேட்பவனின் அரசன் திக்விஜயத்தின்போது நேரிட்ட போரில் பகைவனால் பிடிக்கப்பட்டவனாக இரணங்கள் உண்டுபண்ணப்பட்டு கொல்லப்படுவான். *33*

लग्ने रवौ शीतकरे कलत्रे
मन्दारयोरष्टमसंस्थयोश्च ।
बुधे तृतीये समरे समन्त्री
राज्ञागृहीतस्स च हन्यतेऽरिणा ॥ 34

(இ.ள்): ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னத்தில் கதிரவனும், 7ல் மதியும், 8ல் சனியும் செவ்வாயும், 3ல் புதனும் நின்றால் ப்ரச்னம் கேட்பவனின் அரசன் திக்விஜயத்தின்போது நேரிட்ட போரில் பகையரசனால் மந்திரியுடன்கூட பிடிக்கப்பட்டவனாக அவ்வரசனால் கொல்லப் படுவான். *34*

लग्ने ज्ञभान्वोः मदने कुजेन्द्वोः
भङ्गस्स्वदेशे युधि पार्थिवस्य ।
मन्दारयो द्यूनगयोर्विलग्ने
चन्द्रार्कयोस्स्यात्समरे प्रभङ्गः ॥ 35

(இ.ள்): ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னத்தில் கதிரவனும் புதனும், 7ல் செவ்வாயும் மதியும் நின்றால் ப்ரச்னம் கேட்பவனின் அரசன் திக்விஜயத்தின் பொருட்டு புறப்படுமுன் மாற்றானால் அவனுடைய சொந்த தேசத்திலேயே அவனை முறியடிப்பான்.

*லக்னத்தில் மதியும் கதிரவனும், 7ல் செவ்வாயும் சனியும் திக்விஜயத்தின்போது நின்றால் மாற்றானின் தேசத்தில் ஏற்பட்ட போரில் தோல்வியடைவான்.* **35**

शुक्रज्ञयोष्षष्टगयोर्विलग्ने
चन्द्रारयोर्तीक्ष्णकरेऽष्टमस्थे ।
प्रष्टुर्नरेन्द्रस्य समान्त्रीणस्स्यात्
रणे विनाशस्त्वथ पार्थिवस्य ॥ 36

(இ.ள்): *ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னத்தில் சந்திரனும் செவ்வாயும், 6ல் சுக்கிரனும் புதனும், 8ல் கதிரவனும் நின்றால் ப்ரச்னம் கேட்பவனுடைய அரசன் திக்விஜயத்தின்போது நேரிட்ட போரில் மந்திரியுடன் கூட மரணத்தை அடைவான்.* **36**

मन्दार्कयोर्लग्नगयोः कुजेन
सन्दृष्टयोश्शीतकरे कलत्रे ।
सौम्यग्रहैर्वीर्ययुतै नृपस्य
सेनापतेस्स्यात्समरे प्रणाशः ॥ 37

(இ.ள்): *ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னத்தில் நின்ற சனியும் கதிரவனையும் செவ்வாய் பார்த்தால் 7ல் மதி பலம் பெற்ற சுபர்களுடன் நின்றால் திக்விஜயத்தின் பொருட்டு சென்ற அரசனின் சேனாதிபதி அப்பொழுது நேரிட்ட போரில் மாள்வான்.* **37**

## अथ राज्यं चिरं स्थिरं वा इति प्रश्नः

चन्द्रेत्थशालेऽबरपे स्वगेहे
शुभेक्षिते नास्ति स्वराज्य नाशः ।

केन्द्रे रवौ स्वौच्छगृहस्थिते वा
राज्यच्युतिर्नास्ति शुभेत्थशाले ॥ 1

*[அரசன் ராஜ்யத்தையடைந்து திக்விஜயம் செய்து பல அரசர்களை தனக்கடிபணியச் செய்து சிற்றரசர்களாக்கி எதிர்த்தவர்களை வென்று அவர்களது ராஜ்யங்களையும் தனதுடையதாக்கிய பின் தான் பெற்ற இந்த ராஜ்யமும் அரசபதவியும் எவ்வளவு காலம் நீடித்திருக்குமென்று ஐயப்பாட்டுடன் ஆரூடம் கேட்டால் அப்பொழுது உதயமான லக்னம் முதலானவைகளைக் கொண்டு பலன் கூறுதல்]*

(இ.ள்): எந்த ஒரு அரசன் ராஜபதவியை அடைந்து திக்விஜயம் செய்து வெற்றியுடன் திரும்பி ராஜ்யத்தில் அமர்ந்தபின் அரசனைச் சேர்ந்தவனோ அல்லது அரசனோ அவன் பெற்ற ராஜ்யம் நீண்ட நாட்கள் ஸ்திரமாக அவன் வசம் இருக்குமா என்று ப்ரச்னம் கேட்டால் அப்பொழுது உதயமான லக்னத்துக்கு 10மிடத்துக்குரியவன் அவனுடைய ராசியில் மதியுடன் இத்தசாலம் என்னும் யோகத்தை அடைந்திருந்தாலும், கதிரவன் லக்னம், 4, 7, அல்லது 10மிடங்களுள் ஏதேனுமொரு ராசியில் நின்றாலும், அல்லது அவனுடைய ராசியான சிங்கத்தில் சுபர்களுடன் "இத்தசாலம்" என்னும் யோகத்தையடைந்திருந்தாலும் ராஜ்யத்துக்கு அழிவு ஏற்படாது (நீண்டநாட்கள் ஸ்திரமாக இருந்து அவன் பெற்ற ராஜ்யத்தை அரசாள்வான் என்பது கருத்து).

चतुष्टये लग्नपकर्मपयोः
मन्देन साकं यदीत्थशालस्स्यात् ।
राज्यं स्थिरंस्यात्खलु पृच्छकस्य
ततोऽन्यथा स्यात्खलु तस्य राज्ञः ॥ 2

(இ.ள்): ப்ரச்னம் கேட்டபொழுது உதயமான லக்னத்துக்கு 4மிடத்தில் லக்னாதிபனுடனும் 10க்குடையவனுடனும் சனி இத்தசாலம் என்னும் யோகத்தை அடைந்திருந்தால் ப்ரச்னம் கேட்பவனின் அரசனுடைய ராஜ்யம் நீண்டகாலம் ஸ்திரமாக இருக்கும். அரசன் அவன் பெற்ற ராஜ்யத்தில் ஸ்திரமாக இருந்துகொண்டு நெடுநாட்கள் இராஜ்யபரிபாலனம் செய்வான். இவ்வாறான யோகமில்லாமல் வேறு விதமாக இருந்தால் அரசன் அவன் பெற்ற அரசை இழப்பான். 2

कर्मेशशीतांशुविलग्नपानां
कंबूलयोगे न राज्यविच्युतिः ।
भूमावमीषां इसराफयोगे
वामेन मार्गेण नृपस्य भङ्गः ॥ 3

(இ.ள்): ப்ரச்ன காலத்தில் எந்த ராசியிலாவது உதயமான லக்னத்துக்கு 10மிடத்துக்குடையவனும் லக்னாதிபனும் மதியுடன் கம்பூல யோகத்தை அடைந்திருந்தால் ராஜ்யம் ஸ்திரமாக இருக்கும் நீண்டநாட்கள் அரசாள்வான் ராஜ்யத்துக்கு அழிவு ஏற்படாது. நான்காமிடத்தில் முன்கூறப்பட்ட மதி லக்னாதிபன், 10க்குடையவன் இவர்களுக்கு "இஸராபம்" என்னும் யோகத்தை அடைந்திருந்தால் அரசனை சூழ்ச்சியினால் (நேர்வழியில்லாமல்) கொல்வார்கள் பகைவர்கள். 3

लग्नेश्वरे नीचपतीत्थशाले
राज्यच्युतिर्नीचधिया नृपस्य
स्वपेस्वनीचाधिपतीत्थशाले
स्याद्राष्ट्रमस्य क्षितिपस्य शून्यम् ॥ 4

(இ.ள்): ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னத்துக்கு அதிபன் அவனுடைய நீசஸ்தானாதிபனுடன் எந்த ராசியிலாவது இத்தசாலம் என்னும் யோகத்தை அடைந்திருந்தால் அரசனுடைய கீழ்த்தரமான புத்தியின் காரணமாக அரசை இழப்பான். உதயமான லக்னத்திலேயே லக்னாதிபன் அவனுடைய நீசஸ்தானத்துக்கதிபனுடன் "இத்தசாலம்" என்னும் யோகத்தை அடைந்திருந்தால் அரசன் அவன் பெற்ற ராஜ்யத்தை இழந்துவிடுவான். (சூன்யமாகிவிடும்) 4

पापार्दिते लग्नपतौ च चन्द्रे
देवार्चिते पापनिपीडिते च ।
दैवात्तदानीं खलु पृच्छकस्य
समीपभूपो हरतीह राज्यम् ॥ 5

इति दशमभावविषयकः दशमोऽध्यायः ॥

(இ.ள்): ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னத்துக்கு அதிபன் பாபர்களால் பீடிக்கப்பட்டவனாக இருந்தாலும், மதியோ குருவோ பாபர்களால் பீடிக்கப்பட்டிருந்தாலும், ப்ரச்னம் கேட்பவனின் அரசனுடைய ராஜ்யத்தை, ஸமீபத்திலுள்ள அரசன் திடீரென்று படையெடுத்துவந்து அபகரித்து விடுவான்.

பத்தாம் அத்தியாயம் நிறைவுற்றது

## अथैकादशोऽध्यायः

### अथैकादशभावः

### नृपदर्शनं मम भवेन्नवेति प्रश्नः

लग्नाधिपेनाऽथ दिवाकरेण
यदीत्थशालं कुरुतेऽबरेशः ।
तदा नरेन्द्रस्य गृहे प्रवेशा-
द्वित्तस्य लाभो नृपदर्शनश्च ॥ 1

### அரசனைக்காணும் வாய்ப்பு தொடர்பானப்ரச்னம்

(இ.ள்): *அரசனைக்கண்டு வெகுமானம் முதலானவைகளைப் பெற விரும்பும் ஒருவன் ப்ரச்னம் (ஆருடம்) கேட்டால் அப்பொழுது உதயமான லக்னத்துக்கதிபனுடன் அல்லது கதிரவனுடன் 10க்குடையவன் ஏதாவது ராசியில் "இத்தசாலம்" என்னும் யோகத்தை அடைந்திருந்தால் ப்ரச்னம் கேட்பவனுக்கு அரசனைப் பார்க்கும் வாய்ப்பு ஏற்படுவதுடன் கௌரவமும் தனலாபமும் கிடைக்கும்.*

लग्नेश लाभाधिपतीत्थशाले
सुस्नेहदृष्टिश्च तयोर्द्वयोश्च ।
शीघ्रं नरेन्द्राद्धनवाहनाप्तिः
स्याच्छत्रुदृष्टिर्ह्युभयोर्विनाशः ॥ 2

(இ.ள்): *ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னத்துக்கு அதிபனும் 11க்குடையவனும் எந்த ராசியிலாவது "இத்தசாலம்" என்னும் யோகத்தை அடைந்திருந்தாலும் அவ்விருவரும் மித்திரர்களாகவிருந்து பார்த்துக்*

கொண்டாலும் (லக்னாதிபனும் 11க்குடையவனும் ஸமஸப்தம ராசியில் நின்றவர்களாகவும் மித்திரர் களாகவும் இருந்து 7ம் பார்வையாகப் பார்த்துக் கொண்டால் என்று கொள்ளவேண்டும்) அரசனைக் காணச்சென்றவன் அரசனைக் காண்பதுடன் அவனிடமிருந்து வாஹனம், தனம் முதலானவைகளைப் பெறுவான். லக்னாதிபனும் 11க்குடையவனும் ஸமஸப்தம ராசியில் நின்று பகைவர்களாக ஒருவரை ஒருவர் 7ம் பார்வையாகப் பார்த்தால் அரசனைக் காண முடியாது. அவன் நினைத்தகாரியம் அனைத்தும் பயனற்றதாகிவிடும். 2

लग्नेशलाभाधिपशीतगूनां
कम्बूलयोगे स्थिरभेऽथ तुर्ये ।
नृपाच्चिराद्भूरिधनस्य लाभः
चरे सकृन्नुभये तु मध्यमः ॥ 3

(இ.ள்): ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னத்துக்கு அதிபன் 11க்குடையவன், மதி இவர்களுக்கு ஸ்திர ராசியிலோ அல்லது லக்னத்துக்கு நான்காம் இடத்திலோ "கம்பூல" யோகத்தை அடைந்திருந்தார்களேயானால் அரசனைப் பார்க்கச் சென்றவன் அரசனிடமிருந்து மிகுந்த செல்வத்தைப் பெறுவான். சரராசியில் மேற்கூறிய கோள்கள் கம்பூல யோகத்தை அடைந்திருந்தால் ஒரே ஒருதடவை மட்டில் அரசனைக் காணும் வாய்ப்பும் செல்வமும் கிடைக்கும். உபய ராசியில் ஏற்பட்டால் மிதமான தனலாபம் கிடைக்கும்.

देवार्चिते क्रूरनिपीडितेऽस्या-
दाशाप्रणाश शुभसंयुतेऽपि ।

तस्मिन्निजोच्चादि गते बलाढ्ये
केन्द्रस्थिते पूर्णफलं नृपाच्च ॥ 4

(இ.ள்): ப்ரச்ன காலத்தில் அமைந்த ராசி சக்கிரத்தில் குருபகவான் சுபர்களுடன் சேர்ந்திருந்தாலும் பாபர்களுடன் சேர்ந்து நின்றால் அரசனைக் காணச் சென்றவனின் விருப்பம் யாவும் பயனற்றதாகிவிடும் (அரசனைக்காண முடியாமல் திரும்பி விடுவான்) குருபகவான் அவருடைய உச்சராசியான கடகத்தில் நின்று பாபர்களின் தொடர்பில்லாமலும் பார்வை இல்லாமலும் பலம் பெற்றவனாக இருந்தாலும் அல்லது உதயமான லக்னம், 4, 7, அல்லது 10மிடங்களுள் ஏதேனுமொரு ராசியில் நின்றால் அரசனைக் காண விரும்பியவன் அரசனைக் கண்டு அவன் விரும்பிய யாவற்றையும் பெறுவான். 4

## ताजिके एकादशभावप्रश्नः

नृपतेर्गौरवलाभाशादि मम स्यान्न वेति च प्रश्ने ।
आयेशलग्नपत्योः स्नेहदृशा मुथशिले द्रुतं भवति ॥

- ताजिके. 11 भाव. 1 श्लो.

(இ.ள்): அரசனைக் கண்டு கௌரவம், தனம் முதலானவற்றைப் பெற விரும்பும் ஒருவன் ப்ரச்னம் கேட்டபொழுது அமைந்த லக்னத்தில் 11க்குடையவனும் லக்னாதிபனும் "இத்தசாலம்" என்னும் யோகத்தை அடைவதுடன் ஒருவருக்கொருவர் மித்ரர்களாக பார்த்துக்கொண்டால் (இருவரும் மித்ரர்களாக இருந்தால்) அரசனைக்காண விரும்பும் ஒருவன் விரைவிலேயே அரசனைக் கண்டு புகழ் கௌரவம் பொருள் முதலானவைகளைப் பெறுவான்.

रिपुदृष्ट्या बहुदिवसैः केन्द्रे यायेश चन्द्रकम्बूले ।
वाच्या पूर्णे वाशा चरस्थिद्विस्वभावगे स्वनाम फलम् ॥

इति एकादशभावप्रश्नविषयकः
एकादशोऽध्यायः ॥

(இ.ள்): ப்ரச்ன காலத்தில் லக்னம், 4, 7 அல்லது 10மிடங்களுள் ஒன்றில் 11க்குடையவனுடன் மதி கம்பூல யோகத்தை அடைவதுடன் பரஸ்பரம் சத்ருக்களாகவும் இருந்துவிட்டால் பல நாட்கள் சென்றுதான் அரசனைக் காணவியலும். லக்னம் முதலான கேந்திர ராசிகள் சரம், ஸ்திரம் அல்லது உபயம் ராசிகளுள் ஒன்றாக இருந்து கேந்திராதிபதிகளுடன் மதி இத்தசாலம் என்னும் யோகத்தையடைந்திருந்தால் ப்ரச்னம் கேட்பவன் விரைவிலேயே அரசனைக் காண்பான். ஸன்மானங் களையும் பெறுவான்.

பதினொன்றாம் அத்தியாயம் நிறைவுற்றது

---- ✤ ----

# अथ द्वादशोऽध्यायः

## द्वादशभावविषयकः प्रश्नः

### ताजिके समरसिंहे देशान्तरगतस्यागमनविषयकप्रश्नः

आगमने पृच्छायां लग्नेशे लग्नमध्यसंस्थेन ।
कृतमुथशिले समेति हि सुखमस्ततुरीयगे कष्टात् ।। 1

स्थानाच्चलितः प्रश्ने लग्नपतौ सहजनवमगृहसंस्थे ।
लग्नस्थेन मुथशिले पन्थानं वहति पथिकोऽयम् ।। 2

रन्ध्रेऽथधने तस्मिन्नाकाशस्थेन मुथशिलेप्येवम् ।
केन्द्रस्थितेत्थशाले लग्नेक्षणवर्ज्यमेति न कदापि ।। 3

लग्नाधिपतौ वक्रे लग्नं पश्यत्यमुत्र चन्द्रे वा ।
वक्रगमुथशिले सति समेति पथिकः सुखं शीघ्रम् ।। 4

लग्नाद्वापि चतुर्थाच्छुभादिद्वतीय तृतीयगा वापि ।
कथयन्ति नष्टलाभं प्रवासिनश्चागमं त्वरितम् ।। 5

**தாஜிக நூலில் ஸமரஸிம்ஹன் என்பவரால் கூறப்பட்ட வேற்றூருக்குச் சென்றவன் திரும்பிவரும் விஷயமாகக் கேட்கப்பட்ட ப்ரச்னபலன்**

(இ.ள்): வேற்றூருக்குச் சென்றவன் எப்பொழுது திரும்பிவருவான் என்று ப்ரச்னம் கேட்கப்பட்ட பொழுது உதயமான லக்னத்ததிபன் எந்த லக்னத்திலாவது பத்தாமிடத்துக்குடையவனுடன் இத்தசால யோகத்தை அடைந்திருந்தால் வேற்றூறுக்குச் சென்றிருப்பவன் சுகமாகத் திரும்பிவிடுவான் என்றறியவேண்டும். லக்னாதிபன் நான்காமிடத்திலோ ஏழாமிடத்திலோ ஏழாமிடத்துக்குடையவனுடன் இத்தசால யோகத்தை அடைந்திருந்தால் வெளியூரில் மிகவும் கஷ்டப்பட்டு பின் திரும்புவான். 1

வேற்றூருக்குச் சென்றவனைப் பற்றி ப்ரச்னம் கேட்கப்பட்டபொழுது உதயமான லக்னத்துக்கதிபன் 3 அல்லது 9மிடத்தில் லக்னாதிபனுடன் இத்தசால யோகத்தையடைந்திருந்தால் பிரயாணி இப்பொழுது பயணம் செய்துகொண்டிருக்கிறான் என்றறிய வேண்டும்.

லக்னாதிபன் இரண்டாமிடத்திலோ அல்லது எட்டாமிடத்திலோ, பத்துக்குடையவனுடன் இத்தசால யோகத்தை அடைந்திருந்தால் பிரயாணி இப்பொழுது பயணம் செய்துகொண்டிருக்கிறார் என்றறிய வேண்டும். 1, 4, 7 அல்லது 10மிடத்தில் லக்னாதிபன் பத்துக்கு உடையவனுடன் இத்தசால யோகத்தையடைந்திருந்தால் பயணி ஒரு பொழுதும் திரும்பமாட்டான் என்றறிய வேண்டும். 3

லக்னாதிபன் ஏழாமிடத்தில் நின்று, வக்ரகதியை அடைந்த லக்னத்தைப் பார்த்தாலும் அல்லது வக்ர கதியையடைந்த மதியுடன் இத்தசாலயோகத்தை அடைந்திருந்தாலும், பயணி விரைவில் சுகமாகத் திரும்புவான். 4

லக்னாதிபன் பன்னிரண்டாமிடத்தில் மதியுடன் இத்தசால யோகத்தை அடைந்திருந்தால் பயணி விரைவில் திரும்புவான். சுபக்கிரஹங்கள் லக்னத்திலோ, நான்காமிடத்திலோ அல்லது இரண்டாம் மிடத்திலோ மூன்றாமிடத்திலோ, நின்று லக்னாதிபன் அவர்களுடன் இத்தசால யோகத்தை அடைந்திருந்தால் பயணி விரைவில் திரும்பிவிடுவான் என்றறிய வேண்டும்.

## चिन्तामणौ पथिकागमनविषयकप्रश्नः

ग्रहः षष्ठेऽथ जामित्रे वाक्पतिः कंटके स्थितः ।
पथिकागमनं ब्रूते सिते ज्ञे वा त्रिकोणगे ॥ 1

षष्ठोदये पापदृष्टे शुभदृग्वर्जिते बुधः ।
लग्नात्षष्ठे यदा पापा यातुश्च निधनं वदेत् ॥ 2

यदा क्रूरास्तृतीयस्या देशाद्देशान्तरं गतः ।
चौरेणैव हृतस्वश्च पथिकः केन्द्रगा यदि ॥ 3

पापैः षष्ठत्रिलाभस्थैः कंटकस्थैः शुभग्रहैः ।
प्रवासी सुखमायाती दूरस्थोऽपि सुनिश्चितम् ॥ 4

चतुरस्रे त्रिकोणे वा पापगेहस्थितः शनिः ।
पापदृष्टश्च नियतं बन्धनं यातुरादिशेत् ॥ 5

**சிந்தாமணி என்னும் நூலில் கூறப்பட்டவை**

(இ.ள்): வேற்றூருக்கு சென்றவன் திரும்பிவரும் விஷயமாகப் ப்ரச்னம் கேட்கப்பட்டபொழுது உதயமான லக்னத்துக்கு ஆறாமிடம் அல்லது ஏழாமிடத்தில் எந்தக்கோளாவாது நின்று குரு 1, 4, 7 அல்லது 10லும் 5 அல்லது 9ல் சுக்கிரனும் புதனும் நின்றால் வேற்றூருக்குச் சென்றிருப்பவன் சுகமாகத் திரும்பிவருவான் என்றறிய வேண்டும். 1

ப்ருஷ்டோதய ராசிகளான மேஷம், விருஷபம், கடகம், தனுஸ் அல்லது மகரம் இவைகளை பாவிகளால் பார்க்கப்பட்டு சுபர்களின் பார்வையும் இல்லாமல் இருந்தாலும், ஆறாமிடத்தில் புதன் பாவிகளுடன் நின்றாலும் வேற்றூருக்குச் சென்றவன் சென்றவிடத்தில் மரணத்தை அடைவான் என்றறிய வேண்டும்.

ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னத்துக்கு மூன்றாமிடத்தில் பாவிகள் நின்றால் பயணம் மேற்கொண்டவன் ப்ரச்னம் கேட்கப்பட்ட சமயம் ஒரு

ஊரிலிருந்து வேற்றூருக்குச் சென்றுவிட்டான் என்றறிய வேண்டும். பாவிகள் 1, 4, 7 அல்லது 10மிடத்தில் நின்றால் திருடர்கள் பயணியிடமிருந்து பொருளை அபகரித்துச் சென்றுவிட்டனர் என்றறிய வேண்டும். 3

ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னத்துக்கு 3, 6, அல்லது 11மிடத்தில் பாவிகளும் 1, 4, 7 அல்லது 10மிடத்தில் சுபர்களும் நின்றால் வெகுதூரம் பயணம் சென்றிருப்பவனாயினும், சுகமாகத் திரும்பி விடுவான் என்பது நிச்சயம். 4

1, 4, 7 அல்லது 10மிடத்திலோ 5 அல்லது 9மிடத்திலோ, இவ்விடங்கள் பாவிகளின் ராசியாகவும் இருந்து அதில் சனி நின்று பாவிகளால் பார்க்கப்பட்டுமிருந்தால் வேற்றூருக்குச் சென்றவன் பகைவனால் கட்டப்பட்டவனாக இருப்பான். 5

शुभयुक्ते स्थिरे लग्ने स्थिरो बन्धश्चरेऽन्यथा ।
द्वितनौ सौम्यसंयुक्ते बन्धमोक्षौ क्रमेण तु ॥ 6

पापास्त्रिकोणजामित्रे विलग्ने षष्ठकोदये ।
शत्रुभिर्वीक्षमाणश्च यातुः कष्टं वदेत्सुधीः ॥ 7

मार्गस्थानगतैः सौम्यैर्मार्गं तस्य शुभं वदेत् ।
क्रूरैर्दुःखं विलग्नस्थैः पापैः क्लेशमवाप्नुयात् ॥ 8

चरलग्ने चरांशे वा चतुर्थे चन्द्रमाः स्थितः ।
प्रवासी सुखमायाति कृतकार्यश्च वेश्मनि ॥ 9

कंटकैः सौम्यसंयुक्तैः पापग्रहविवर्जितैः ।
प्रवासी सुखमायाति निधनस्ते सुधाकरे ॥ 10

(இ.ள்): ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னம் ஸ்திர ராசியாக அமைந்து அதில் சுபக்ரஹங்கள் நின்றால்

பகைவனால் ஸ்திரமாகக் கட்டப்பட்டவனாக இருப்பான்.(சிறையில் இருப்பான்) சரராசியாகில் விரைவில் விடுபட்டுத் திரும்புவான். இரட்டைப்பட்ட ராசியாகில் முதலில் கட்டுண்டவனாக இருப்பினும் பின்பு காலக்கிரமத்தில் விடுவிக்கப்பட்டு திரும்பி விடுவான். 6

5, 7 அல்லது 9மிடத்தில் பாவிகளும் ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னத்தில் ஆறாமிடத்துக்கு உடையவனும் நின்று, பாவிகளால் பார்க்கப்பட்டும் இருந்தால் ப்ரயாணம் மேற்கொண்டவன் இன்னல்களுக்கு ஆளாவான். 7

ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னத்துக்கு ஏழாமிடத்தில் சுபர்கள் நின்றால் ப்ரயாணம் சுபமாக இருக்கும். பாவிகள் நின்றால் துக்கம் விளையும். லக்னத்தில் பாவிகள் நின்றால் கஷ்டத்தை அனுபவிப்பான். 8

ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னம் சரராசியாக இருந்து சராம்சத்திலோ அல்லது நான்காமிடத்திலோ மதி நின்றால் பயணம் மேற்கொண்டவன் அவன் நினைத்திருந்த காரியத்தை நிறைவேற்றிக்கொண்டு சுகமாக வீட்டிற்குத் திரும்புவான். 9

1, 4, 7 அல்லது 10மிடத்தில் சுபர்கள் நின்று, பாவிகளின் சேர்க்கையும் இல்லாமலிருந்து 8மிடத்தில் மதியும் நின்றால் பயணி சுகமாகத் திரும்புவான். 10

गमागमौ तु नस्यातां योगे दुर्धराकृते ।
शुभैः शुभकृतो रोधः पापैस्तस्करतो भयम् ॥ 11

गमागमौ हि न स्यातां स्थिरराशौ विलग्नगे ।
न रोगोपशमो नाशो द्रव्याणां च पराभवः ॥ 12

विपरीतं चरे वाच्यं फलं मिश्रं द्विमूर्तिषु ।
स्थिरवत्प्रथमे खण्डे परार्धे चरराशिवत् ॥ 13

प्रवासीशीघ्रमायाति गुरुशुक्रौ त्रिवित्तगौ ।
चतुर्थस्थानगावेतौ शीघ्रमायाति कार्यकृत् ॥ 14

इन्दुः सप्तमगो लग्नात्पथिकं वक्ति मार्गगम् ।
मार्गाधिपश्च राश्यर्धात्परभागे व्यवस्थितः ॥ 15

(இ.ள்): மதிநின்ற இராசிக்கு இருபுறமும் கோள்கள் நின்றால் இது "துர்த்தரா" யோகம் எனப்படும். ப்ரச்ன காலத்தில் உதயமான ராசியில் மதி நின்று அதற்கு இருபுறமும் கோள்கள் நின்றிருக்குமானால் "துர்த்தரா யோகம்" எனப்படும் இந்த யோகத்தில் பயணம் செய்வதும் திரும்புவதும் நடைபெறாது. மதிக்கு இருபுறமும் சுபர்கள் நின்றால் சுபர்களாலும் (நல்லவர்களால் இடையூறும்) பாவிகள் நின்றால் திருடர்களால் பயமும் ஏற்படும். *11*

ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னம் ஸ்திர ராசியாகில் அதில் பயணம் மேற்கொண்டால் நோய்வாய்ப் படுவான். நோயினின்றும் விடுபடமாட்டான். பொருளும் நாசமடையும். பகைவனிடமிருந்து அவமானத்தையும் அடைவான். *12*

உதய லக்னம் சரராசியாகில் பயணம் நல்ல முறையில் ஏற்பட்டு சுகமாகத் திரும்புவான். இரட்டைப் பட்ட ராசியாகில் சுகம் துக்கம் இரண்டும் கலந்து நேரிடும். இரட்டைப்பட்ட ராசியில் முதல் பாகம் உதயமாகில் ஸ்திரராசிக்குக் கூறப்பட்ட பலன் ஏற்படும். சரராசியில் (பிற்பகுதி) சரராசிக்குரிய பலன் ஏற்படும். *13*

ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னத்துக்கு இரண்டாமிடத்திலோ அல்லது மூன்றாமிடத்திலோ குருவும் சுக்கிரனும் நின்றால் பயணி விரைவில் திரும்புவான். நான்காமிடத்தில் நின்றால் பயணி தான் மேற்கொண்ட காரியத்தை முடித்துக்கொண்டு விரைவில் திரும்புவான் என்றறிய வேண்டும். 14

ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னத்துக்கு ஏழாமிடத்தில் மதி நின்றால் ப்ரச்னம் கேட்கப்பட்ட பொழுது பயணி வழியில் சென்றுகொண்டிருக்கிறான் என்றறிய வேண்டும். மதி நின்ற இராசியின் பின்பகுதி உதயமானால் செல்லவேண்டிய மார்க்கத்தில் பாதிக்குமேல் சென்றுகொண்டிருக்கிறான் என்றறிய வேண்டும். 15

शुक्रार्कजीवसौम्यानामेकोऽपि स्याद्धरायगः ।
तदाशु गमनं ब्रूयात्प्रष्टुर्नगमनं व्यये ॥ 21

लग्नाद्यावतिथे स्थाने बली खेटो व्यवस्थितः ।
ब्रूयात्तावतिथे मासे पथिकस्य निवर्तनम् ॥ 22

एवं कालं चरांशस्थे द्विगुणं च स्थिरांशके ।
द्विस्वभावांशगे खेटे त्रिगुणं चिन्तयेत्सुधीः ॥ 23

यातुर्विलग्नाज्जामित्रिभवनाधिपतिर्यदा ।
करोति वक्रमावृत्तेः कालं तु ब्रुवते परे ॥ 24

चतुर्थे दशमे वापि यदि सौम्यग्रहो भवेत् ।
तदा न गमनं क्रूरैस्तत्रस्थैर्गमनं भवेत् ॥ 25

लग्नाद्वा लग्ननाथाद्वा यत्संख्याः क्रूरखेचराः ।
नवमे द्वादशे वापि तत्संख्यास्स्युरुपद्रवाः ॥ 26

लग्नाद्वा लग्ननाथाद्वा यावन्तस्सौम्य खेचराः ।
मार्गे तत्रोदया वाच्याः स्थाने स्थाने विचक्षणैः ॥ 27

क्रूरयुक्तेक्षितो मन्दः शुभदृग्योगवर्जितः ।
धर्मस्थस्तनुते व्याधिं प्रोषितस्याष्टगो मृतिम् ॥ 28

जामित्रस्य शुभोत्थे याता नायाति दुर्धरायोगे ।
मित्रस्वामिनिषेधात्पापोत्थे शत्रुरुक्चौरात् ॥ 29

चन्द्रार्कयोश्छिद्रगयोर्यमेन सन्दुष्टयोस्स्यात्परशस्त्रभीतिः ।
रन्ध्रे सितेज्ञेय सुखाप्तिरारे मन्दे भयं पापयुगीक्षितेऽध्वनि ॥

(இ.ள்): *ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னத்துக்கு 4 அல்லது 11மிடத்தில் சுக்கிரனோ, குருவோ, புதனோ அல்லது கதிரவனோ (அல்லது இவர்களனைவரில் எந்த இருவரோ மூவரோ அல்லது அனைவருமோ) இருந்தால் வேற்றூருக்குச் சென்றவன் விரைவில் திரும்பி வந்துவிடுவான். முன்கூறப்பட்ட கோள்களுள் எவராவது 12மிடத்திலிருந்தால் வேற்றூருக்குச் சென்றவர் திரும்பிவருவது கடினம்.* *21*

*ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னத்துக்கு எத்தனையாவது ஸ்தானத்தில் பலம் பொருந்திய கோள் நிற்கின்றதோ அவ்வளவு மாதத்தில் வேற்றூருக்குச் சென்றவன் திரும்பிவருவான். குறிப்பு : லக்னத்துக்கு 2 முதல் 12 வரையுள்ள ராசிகளில் ஏதேனுமொன்றில் பலவானான கோள் நின்றால் அவ்வளவு மாதத்தில் திரும்பி வருவான் என்று பொருள். இரண்டாமிடத்தில் நின்றால்*

இரண்டு மாதங்களிலும், 12மிடத்தில் நின்றால் 12 மாதங்களிலும் திரும்பி வருவான் என்றுகொள்ள வேண்டும்.

ப்ரச்ன காலத்தில் முன் ச்லோகத்தில் கூறப் பட்டுள்ளபடி உதயமான லக்னத்துக்கு 2மிடமுதல் 12மிடம் வரையிலான ராசிகளில், சரராசியில் 2 மாதம் என்பது நான்கு மாதங்களாகவும், ஸ்திர ராசியாகில் இரண்டு மடங்கு அதிகமாக அதாவது நான்கு மாதங்கள் என்பது எட்டு மாதங்களாகவும், இரட்டைபட்ட இராசியாகில் மூன்று மடங்காகவும் 12 மாதங்கள் எனவும் கணக்கிட வேண்டும். 23

ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னத்துக்கு ஏழாமிடத்துக்குரியவன் வக்ரகதியை அடைந்திருந்தால், 7 ஐ இரண்டு மடங்காகவும் மூன்று மடங்காகவும் கணக்கிட்டுவரும் காலத்தைக் கூறவேண்டும். (குறிப்பு : எடுத்துக்காட்டாக 7மிடத்தைக்கொண்டு, 7ஐ இரண்டு மடங்காக்கினால் 14 மாதங்கள் எனவும், மூன்று மடங்காக்கினால் 21 மாதங்களாகும் எனவும் கணக்கிட வேண்டும். 24

ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னத்துக்கு நான்காமிடத்திலோ அல்லது 10மிடத்திலோ சுபர்கள் நின்றால் வேற்றூருக்குச் சென்றவன் திரும்பி வருவது கடினம். (திரும்பி வரமாட்டான்) மேற்கூறப்பட்ட 4 அல்லது 10மிடத்தில் பாபர்கள் நின்றால் வேற்றூருக்குச் சென்றவன் திரும்பி வருவான். 25

ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னத்துக்கோ அல்லது லக்னாதிபன் நிற்கும் ராசிக்கோ ஒன்பதாம் இடத்திலோ அல்லது பன்னிரண்டாமிடத்திலோ பாவிகளான கோள்கள் எவ்வளவு பேர் நிற்கின்றனரோ அவ்வளவு நாட்கள் வேற்றூருக்குச் சென்றவனுக்குத்

தொல்லைகள் ஏற்படும். எவ்வளவு கோள்கள் நிற்கின்றனவோ அவ்வளவு எண்ணிக்கைகொண்ட தொல்லைகள் ஏற்படும் என்றும் கொள்ளவும். 26

ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னத்திலோ அல்லது லக்னாதிபன் நிற்கும் ராசியிலோ சுபர்கள் எவ்வளவு பேர் நிற்கின்றார்களோ அவ்வளவு மார்க்கங் களில் (செல்லுமிடங்களில்) இவன் மேற்கொண்ட காரியங்களனைத்தும் வெற்றி பெறுவதுடன் பயணமும் சுகமாக நடைபெறும். 27

குறிப்பு : இச்செய்யுளில் லக்னாத்வா, லக்னநாதாத் வா என்று சொற்கள் இருப்பதால் லக்னத்திலோ அல்லது லக்னாதிபன் நிற்கும் ராசியிலோ என்று பொருள் கொள்ளப்பட்டாலும் லக்னத்திற்கு 7, 9 அல்லது 12மிடங்களில் சுபர்கள் எவ்வளவு பேர் நிற்கின்றார்களோ என்று 7, 9 ,12 என்பதை முன் செய்யுள்களிலிருந்து எடுத்துப்பொருள் கூறவேண்டும்.

ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னத்துக்கு 9மிடத்தில் சனி சுபர்களுடன் கூடினவனாகவோ அல்லது சுபர்களால் பார்க்கப்பட்டவனாக இல்லாமல், பாபர்களுடன் கூடினவனாகவோ அல்லது அவர்களால் பார்க்கப்பட்டவனாகவோ இருந்தால் வேற்றூருக்குச் சென்றவன் நோய்வாய்ப்படுவான். முன்கூறப்பட்டபடி சனி 12மிடத்தில் நின்றால் வேற்றூருக்குச் சென்றவனுக்கு மரணம் நேரிடும். 28

ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னத்துக்கு 7மிடத்தில் மதி நின்று 6மிடத்திலும், 8மிடத்திலும், சுபக்ரஹங்கள் நின்று துர்த்தரா யோகத்தை அடைந்திருந்தால், வேற்றூருக்குச் சென்றவன் அவனுடைய நண்பன் எஜமானன் இவர்கள் தடுப்பதால்

தனது நகருக்குத் திரும்பமாட்டான். முன்கூறப்பட்ட 7மிடத்தில் மதி நின்று 6லும், 8லும் பாபர்கள் நின்றால் பகைவர்கள் மூலமும், நோயினாலும், திருடர்களாலும், தொந்தரவு ஏற்படும். 29

ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னத்துக்கு 8மிடத்தில், கதிரவனும், மதியும் நின்று சனியினால் பார்க்கப்பட்டால் வேற்றூருக்குச் சென்றவனை அவன் பகைவன் ஆயுதங்களால் தாக்கக்கூடிய நிலை ஏற்பட்டு பயம் உண்டாகும். 8மிடத்தில் சுக்கிரனும் புதனும் நின்றால் சுகமும், பாபர்களால் பார்க்கப்பட்ட செவ்வாயும், சனியும் நின்றால் வழியில் பயமும் ஏற்படும். 30

## दूरस्थस्य ज्ञानम्

लग्नेश्वरे शीतकरेऽथ षष्ठे तुर्येऽष्टमेवाप्यतिनीचगे वा ।
अस्तंगते छिद्रपतीत्थशालयुक्तेशुभैर्दूरं गतो मृतः स्यात् ॥ 31

भूमेरधस्थेन च वक्रगेन यदीत्थशालं कुरुते शशांकः ।
सौम्यैरदृष्टे मरणं प्रकुर्याद्दूरस्थितस्यापि विदेशगस्य ॥ 32

सौम्यैः षष्ठान्त्यरन्ध्रस्थैर्विबलैश्च शुभेक्षितैः ।
पापयुक्तौ शशांकार्कौ तदा दूरस्थितो मृतः ॥ 33

पृष्टोदये पापयुते त्रिकोणकेन्द्राष्टषष्ठोपगतैश्च पापैः ।
सौम्येदृष्टैः परदेशसंस्थो मृतो गदार्तो नवमे च सूर्ये ॥ 34

तुर्योपरिस्थितेन खगेन चन्द्रमा यदीत्थशालं कुरुते शुभेक्षितः ।
सौम्यैर्युतो वा परदेशसंस्थितः सुखी च जीवेत्पथिसौख्यमेति ॥

## வெகுதொலைவில்(வேற்றூரில்) இருப்பவரைப் பற்றியறிதல்

(இ.ள்): வேற்றூரில் இருப்பவரைப் பற்றியறிய ப்ரச்னம் கேட்கப்பட்டபொழுது உதயமான லக்னத்துக்கு 4, 6 அல்லது 8மிடத்தில் லக்னாதிபனும் மதியும் சேர்ந்து நின்றாலும், அல்லது நீசபாவத்தை(அவர்களுடைய நீசராசியை) அடைந்திருந்தாலும், அஸ்தங்கத தோஷத்தை அடைந்திருந்தாலும், அல்லது 8மிடத்துக் குரியவன் சுபருடன் இத்தசாலம் என்னும் யோகத்தை அடைந் திருந்தாலும்(ஏதாவது ஒரு ராசியில்) வெகு தொலைவில் (வேற்றூருக்குச்) சென்றிருப்பவன் இறந்திருப்பான். 31

ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னத்துக்கு 4மிடத்திற்குரியவனும் வக்ரகதியை அடைந்தவனுமான ஏதாவது ஒரு கோளுடன் மதி இத்தசாலம் என்னும் யோகத்தை அடைந்திருந்தாலும் சுபர்களால் பார்க்கப் படாமல் இருந்தாலும் தூரதேசத்தில் இருப்பவன் இறந்திருப்பான். 32

ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னத்துக்கு 6, 8 அல்லது 12மிடத்தில் சுபர்கள் நின்றாலும், அல்லது அவ்விடங்கள் பலமற்ற சுபர்களால் பார்க்கப் பட்டாலும், அல்லது அவ்விடங்களில் மதியும் சனியும் பாபர்களுடன் கூடி நின்றாலும் தூரதேசத்திலிருப்பவன் இறந்திருப்பான். 33

ப்ரச்ன காலத்தில் ப்ருஷ்டோதய ராசிகளான மேஷம், விருஷபம், கடகம், தனுஸ், மகரம் இவ்வைந்து ராசிகளுள் ஏதாவதொன்றில் பாவிகள் நின்றாலும், லக்னத்துக்கு 1, 4, 5, 6, 7, 8, அல்லது ஒன்பதாமிடத்தில் பாவிகள் நின்று சுபர்களால் பார்க்கப்படாமல் இருந்தாலும், 9ல் கதிரவன் நின்றாலும் தூரதேசத்தில்

இருப்பவன் நோய்வாய்ப்பட்டவனாக அல்லது இறந்தவனாகவோ இருப்பான். 34

ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னத்துக்கு 4மிடத்துக்கு மேலுள்ள 5, 6, 7, 8, 9, அல்லது 10மிடங்களுள் ஏதேனுமொரு ராசியில் நிற்கும் கோளுடன் மதி இத்ததாலம் என்னும் யோகத்தை அடைந்திருந்து சுபர்களால் பார்க்கப்பட்டவனாகவும் இருந்தாலும், சுபர்களுடன் கூடியவனாக இருந்தாலும் தூரதேசத்திலிருப்பவன் ஸுகமாக இருப்பான். திரும்பும்பொழுது வழியில் சுகமாகப் பயணம் செய்வான். 35

## धनलाभविषयकः

### नष्टद्रव्यलाभ प्रश्नः (प्रश्नचिन्तामणौ)

प्रश्ने चतुर्थाधिपतिस्तत्रस्थे वाऽवलोकिते ।
अवश्यं वर्तते तत्र धनं चन्द्रेऽथवा वदेत् ॥ 76

वित्तपे धनगे बन्धौ वाऽस्ति तत्र धनं बहु ।
पापे तुर्यगते द्रव्यं स्थितं तूर्णं न लभ्यते ॥ 77

भौमे सप्ताष्टराशिस्थे धनमन्यत्र नाप्यते ।
लग्ने तमो रविश्छिद्रे तदा द्रव्यं न लभ्यते ।
सप्ताष्टदशपातालेशो विधुर्धनदो गुरुः ॥ 78

लग्नेश्वरे द्यूनगते विलग्ने जायेश्वरे नष्टधनस्य लाभः ।
जायेशलग्नाधिपतीत्थशाले द्यूने विनष्टं धनमेति मर्त्यः ॥ 79

लग्नेश जायाधिपतीत्थशाले लग्नेश्वरं यच्छति तस्करोऽर्थम् ।
सूर्ये विलग्नेऽस्तमिते शशाङ्के न लभ्यते यद्द्रविणं विनष्टम् ॥

कर्मेश लग्नाधिपतीत्थशाले चौरस्स्वमादाय पुरात्पलायते ॥
चन्द्रेऽस्तपे चार्क्ककरप्रणष्टे तल्लभ्यते नष्टधनं सतस्करम् ।

अस्तेश्वरे केन्द्रगतेऽस्ति चौरस्तत्रैव वाऽन्यत्र पुराद्विनिर्गतः।
धर्मेशदुश्चिक्यपतीत्थशाले जायेश्वरेऽन्यत्र गतः स चोरः ॥

कर्मेशलग्नाधिपतीत्थशाले यल्लभ्यते राजकुलाच्च चौर्यम् ।
त्रिधर्म द्यूनपतीत्थशाले त्वन्यत्प्रदेशाद्गमने तदाप्तिः ॥ 83

शुभेत्थशाले हिमगौ विलग्ने स्वस्थेऽथवा नष्टधनस्य लाभः ।
सुस्नेह दृष्ट्या रविणा शुभेन दृष्टे विलग्ने हिमगौ च लाभः ॥

### இழந்துபோன பொருள் கிடைப்பது பற்றியறிதல்

(இ.ள்): பொருளை இழந்த ஒருவன் அந்தப் பொருள் அவனுக்குக் கிடைக்க வாய்ப்புண்டா என்பது முதலான வினாக்களுக்குப் பதில் சொல்லும்பொழுது ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னத்துக்கு 4மிடத்துக்கு உரியவன் 4மிடத்திலேயே நின்றாலும் அல்லது 4மிடத்தைப் பார்த்தாலும் ப்ரச்னம் கேட்பவனின் பொருள் அவன் வீட்டிலேயே இருக்கிறதென்றறிய வேண்டும். நான்காமிடத்துக்குரியவன் மதியாக இருந்து அவன் 4மிடத்திலேயே நின்றாலும், அல்லது 4மிடத்தைப் பார்த்தாலும், ப்ரச்னம் கேட்பவனின் பொருள் அவன் ஸந்தேஹிக்கத் தகுந்த இடத்தில் அந்தப் பொருள் (பணம் முதலானவைகள்) இருப்பதாக அறியவேண்டும்.

குறிப்பு: மதி நான்காமிடத்தில் நின்றால் என்று கூறும்பொழுது உதயமான லக்னம் மேஷமாக இருத்தல் வேண்டும். நான்காமிடத்தை அவன் பார்ப்பதாக இருந்தால் மதி மகரத்தில் மேஷத்துக்குப் பத்தாமிடத்தில் நிற்பதாக இருக்கவேண்டும். 76

தனாதிபதியான சுக்கிரன் 2 அல்லது 4மிடத்தில் நின்றால் தனத்தை இழந்தவனது தனம் பல இடங்களில் மறைத்து வைக்கப்பட்டிருக்கும். அவை மிகவும் அதிக அளவில் இருக்கும். 4மிடத்தில் பாவிகள் நின்றால் கெட்டுப்போன தனம் கிடைப்பதரிது. (கிடைக்காது).

செவ்வாய் 7 அல்லது 8மிடத்தில் நின்றால் இழந்த தனம் வேறிடத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டுவிட்டதால் கிடைக்காது. இதுபோன்று உதயமான லக்னத்தில் ராகுவும், 8ல் கதிரவனும் நின்றாலும் கெட்டுப்போன பொருள் கிடைக்காது. ஆனால் குரு, 7, 8, 10 அல்லது நான்காமிடத்தில் நின்றால் இழந்த பொருள் (தனம்) கிடைத்துவிடும். 78

உதய லக்னத்திற்கு 7ல் லக்னாதிபனும் லக்னத்தில் 7க்குடையவனும் நின்றால் இழந்த பொருள் (தனம்) கிடைத்துவிடும். 7ல் 7க்குடையவனும் லக்னாதிபதியும் இத்தசாலம் என்னும் யோகத்தை அடைந்திருந்தால் இழந்த பொருள் (தனம்) கிடைத்துவிடும். 79

(உதயமான லக்னத்திலோ அல்லது 7மிடத்திலோ) லக்னாதிபனும் 7க்குடையவனும் இத்தசாலம் என்னும் யோகத்தை அடைந்திருந்தாலும், ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டாலும் (வேறு எந்த ராசிகளிலாவது நின்றவர்களாக ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டாலும் என்றும் கொள்ளலாம்). தனத்தைத் திருடியவன் அவனே வலுவில் வந்து தனத்தைக் கொடுத்துவிடுவான். (இது சாத்யமா என்பது யோசிக்கத்

தகுந்தது) உதய லக்னத்தில் கதிரவன் நின்று மதி அஸ்தங்கதனாகிவிட்டால் கெட்டுப்போன பொருள் (தனம்) கிடைக்காது. *80*

உதயலக்னத்துக்குடையவனும், லக்னாதிபதியும், (லக்னத்திலோ அல்லது 10மிடத்திலோ) இத்தசாலம் என்னும் யோகத்தை அடைந்திருந்தால் திருடன் தனத்தை எடுத்துக்கொண்டு வேற்றூருக்குச் சென்றுவிட்டான் என்றறிய வேண்டும் *81*

ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னத்துக்கு 1, 4, 7 அல்லது 10மிடத்தில் 7க்குடையவன் நின்றால் தனத்தைத் திருடியவன் அவ்வூரிலேயே இருக்கிறான் (அல்லது பொருளை இழந்தவன் வீட்டிலேயே இருப்பான்) உறவினரில் ஒருவனாக இருக்கவும் கூடும். 7க்குடையவன் முன்கூறப்பட்ட இடங்களில் நிற்காமல் வேறிடங்களில் நின்றால் தனத்துடன் வேற்றூருக்குச் சென்றுவிட்டான் என்றறிய வேண்டும். *82*

ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னத்துக்கு 10க்குடையவனும் லக்னாதிபனும் (லக்னத்திலோ அல்லது 10மிடத்திலோ இத்தசாலம் என்னும் யோகத்தை அடைந்திருந்தால் கோர்ட்டு மூலம் இழந்த பொருளை அடையலாம். (அரண்மனையில் நடந்த திருட்டாகவும் இருக்கும்). இதுபோன்று 3, 9, 7க்குடையவர்கள் (3லோ, 7லோ அல்லது 9லோ) இத்தசாலம் என்னும் யோகத்தை அடைந்திருந்தால் திருடன் வேற்றூருக்குச் சென்று இருந்தாலும் அவன் கண்டுபிடிக்கப்பட்டு தனம் மீண்டும் அவனிடமிருந்து கிடைக்கப்பெறும். *83*

மதி உதய லக்னத்தில் சுபர்களுடன் இத்தசாலம் என்னும் யோகத்தை அடைந்திருந்தாலும், பாபர்களின் சம்பந்தமற்றவனாக இருந்தாலும், இழந்த பொருள் (தனம்) கிடைத்துவிடும். உதய லக்னத்தில் தனிமையில்

மதி நின்றாலும் அல்லது கதிரவனும் அல்லது சுபர்களாலும் பார்க்கப்பட்டாலும் இழந்த பொருள் (தனம்) சுலபமாகக் கிடைத்துவிடும். 84

## षट्पञ्चाशिकायाम्

स्थिरोदये स्थिरांशे वा वर्गोत्तमगतेऽपि वा ।
स्थितं तत्रैव तद्द्रव्यं स्वकीयेनैव चोरितम् ॥ 85

आदिमध्यावसानेषु द्रेष्काणेषु विलग्नतः ।
द्वारदेशे तथा मध्ये गृहान्ते च वदेद्धनम् ॥ 86

## ஷட்பஞ்சாசிகை என்னும் நூலில் கூறப்பட்டவை

(இ.ள்): ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னம் ஸ்திர லக்னமாக இருந்து அவ்விராசிக்குய நவாம்சராசியும் ஸ்திர ராசிக்குரியவன் அல்லது ஸ்திராம்ச ராசிக்குரியவன் வர்க்கோத்தமத்தை அடைந்திருந்தாலும், திருடப்பட்ட பொருள் அவ்வீட்டிலேயே இருக்கும். அதைத் திருடியவன் உறவினனாகவே இருப்பான். 85

(ஸ்திரராசிக்குரியவன்) லக்னத்துக்கு முதல் த்ரேஷ்காணத்தில் நின்றாலும் 2வது திரேஷ்காணத்தில் நின்றாலும் அல்லது 3வது திரேஷ்காணத்தில் நின்றாலும் திருடப்பட்ட பொருள் (தனம்) முறையே வாயிற்புறம், வீட்டின் உட்புறம் அல்லது வீட்டின் கொல்லைப்புறம் இவற்றில் மறைத்து வைக்கப்பட்டிருக்கும். 86

## प्रश्न तन्त्रे

पतित धनस्थ प्रश्ने मिथो गृहस्थौ विलिग्न सप्तेशौ ।
यदि मुथशिलं तयोः स्यात्तदाशु तत्रैव वदति धनम् ॥ 87

नष्टं क्वेति प्राप्तं पृच्छायां लग्नगे विधौ प्राच्याम् ।
तत्स्थाने याम्यायामस्ते वारुण्यां वा भुव्युदीच्याम् ॥ 88

इति द्वादशभावप्रश्नविषयकः
द्वादशोऽध्यायः ॥

(இ-ள்): ஒருவன் தான் இழந்த பொருளை அடைவதற்கு ஆரூடம் கேட்கப்பட்ட சமயம் லக்னாதிபனும் 7க்குடையவனும், லக்னத்திலோ அல்லது 7லோ இத்தசாலம் என்னும் யோகத்தை அடைந்திருந்தால் திருடப்பட்ட பொருள் (தனம்) அவ்வீட்டிலேயே இருக்கிறது என்றறியவேண்டும். 87

இழந்த பொருள் எந்த திசையில் திருடன் கொண்டு சென்றிருப்பான் என்று கேட்டால், உதயமான லக்னத்தில் மதி நின்றால் கிழக்கு திக்கிலும், 10மிடத்தில் நின்றால் தெற்கிலும், 7ல் நின்றால் மேற்கிலும், 4மிடத்தில் நின்றால் வடக்கு திக்கிலும் திருடன் எடுத்துச் சென்றிருப்பான் என்றறியவேண்டும். 88

इति श्रीब्रह्मदासतनयनारायणसिद्धिविरचितं
प्रश्नतन्त्रं समाप्तम् ।

ப்ரும்மதாஸரின் மகனான
நாராயண ஸித்தரால் இயற்றப்பட்ட
ஆரூடநூல் (ப்ரச்ன தந்தரம்) முற்றிற்று